

கூவேர் புரம் போலிஸ் ஸ்டேஷன்

எண்டமூரி வீரேந்திரநாத்

ஸ்டூவர்ட்புரம் போலீஸ் ஸ்டேஷன்

எண்டமூரி வீரேந்திரநாத்

தமிழில்

கௌரி கிருபாநந்தன்

அறிவே விளக்கு

அல்லயன்ஸ்

அல்லயன்ஸ்

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ் புத்தக நிறுவனம்)

முன்னுரை

தெலுங்கில் திரு எண்டமூரி வீரேந்திரநாத் அவர்கள் எழுதிய ''ஸ்டுவர்ட்புரம் போலீஸ் ஸ்டேஷன்'' என்ற நாவலை அதே தலைப்பில் தமிழாக்கம் செய்து வாசகர்களின் முன்னால் வைத்துள்ளேன். இந்த நாவல் 'தண்டனை' என்ற தலைப்பில் ஏற்கனவே வேறு ஒரு மொழிபெயர்ப்பாளர் மூலமாக தமிழ் வாசகர்களுக்கு அறிமுகமான படைப்புத்தான். என்றாலும், மூலக் கதையில் உள்ள சுவையை மொழி பெயர்ப்பிலும் வாசகர்கள் உணரவேண்டும் என்ற தவிப்புத்தான் இந்தப் படைப்பு உருவாக காரணமாக இருந்தது.

தெலுங்கில் இந்த நாவல் திரைப்படமாகவும் வெளிவந்து ரசிகர்களின் வரவேற்பை பெற்றுள்ளது.

சமுதாயத்தில் இருக்கும் தில்லுமுல்லுகளை வலை போல் பின்னி, குறுக்கே வந்தவர்களை சாகும் வரையில் வேட்டையாடி தம்முடைய வயிற்றை நிரப்பிக் கொள்வது எப்படி என்று சிலந்திப் பூச்சியைப்போல சில மனிதர்களுக்குத் தெரியும்.

அவர்கள் பின்னிய வலை வியாபார ரீதியானதாக இருக்கலாம்;

பாதுகாப்புக்காக ஏற்பட்ட காவல்துறையாக இருக்கலாம்;

அரசியலாகவும் இருக்கலாம்.

இந்த மூன்றும் சமுதாயத்தின் சிலந்தி வலையை அழகாக பற்றி இருக்கும் விஷக் கயிறுகள்!!!

மொழிபெயர்ப்புக்கு அனுமதி வழங்கிய எண்டமூரி வீரேந்திரநாத் அவர்களுக்கும், அவருடைய நாவல்களைத் தொடர்ந்து வெளியிட்டு வரும் **அல்லயன்ஸ்** நிறுவனத்தாருக்கும் எனது நன்றி என்றும் உரியது.

கௌரி கிருபானந்தன்

சென்னை-78

tkgowri@gmail.com

எந்தப் பிராணியாக இருந்தாலும் பயணம் செய்வது வாழ்க்கையின் விதிகளில் ஒன்று.

புழுப் பூச்சியாக இருந்தால் உணவுக்காக, மனிதனாக இருந்தால் வயிற்றுப் பாட்டுடன் புகழுக்காக, கொஞ்சம் சந்தோஷமாக இருப்பதற்காக ஓடுவது அவசியம்.

சமுதாயத்தில் உள்ள குறைகளை வலைபோல் பின்னி, குறுக்கே வந்தவர்களை சாகும் வரையில் வேட்டையாடி, தம் வயிறுகளை எப்படி நிரப்பிக் கொள்வதென்று சிலந்தி போன்ற சில மனிதர்களுக்குத் தெரியும்.

அவர்கள் பின்னிய வலைகள்...

வியாபார, பொருளாதார பந்தங்களாக இருக்கலாம்.

பாதுக்காப்புக்காக உருவாக்கப்பட்ட காவல்துறையாக இருக்கலாம்.

கடைசியாக...

அரசியலாகவும் இருக்கலாம்.

இந்த மூன்றும்... சமுதாயம் என்ற சிலந்திக்கூட்டை அழகாக பின்னியிருக்கும் விஷக்கயிறுகள்.

1

இன்றைக்கு வருடப் பிறப்பு.

அதனால் ரயிலில் கூட்டம் அதிகமாக இல்லை. ரயில் காற்றைக் கிழித்துக் கொண்டு வேகமாகப் போய்க் கொண்டிருந்தது.

அவன் ஜன்னல் வழியாய் வெளியே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் வயது இருபத்தைந்திலிருந்து முப்பதிற்குள் இருக்கக்கூடும். கூரிய கண்களும், இறுக்கமான உதடுகளும் உறுதியை வெளிப்படுத்திக் கொண்டிருந்தன. நெற்றியில் குறும்புத்தனமாக வந்து விழுந்து கொண்டிருந்த கேசமும், வளைந்த கீழுதடும் விளையாட்டுத்தனத்தை எடுத்துக் காட்டிக் கொண்டிருந்தன. ஒரு மனவியல் நிபுணர் மட்டும் அவனைப் பார்த்தால் ஒரு கலப்படமான குணாதிசயங்களை உடையவனாக சித்தரித்திருப்பார்.

ரயில் இன்னும் வேகத்தை கூட்டிக் கொண்டது.

அவர் ஜேபியிலிருந்து காகிதத்தை வெளியே எடுத்து இன்னொரு முறை படித்தான். மாற்றல் உத்தரவு.

அவன் கண்களுக்கு முன்னால் லாட்டிகள் அசைந்து கொண்டிருந்தன. ரயில் சத்தத்திற்குப் பதில் கலகமும் கூச்சலும் கேட்டுக் கொண்டிருந்தன.

''அங்கிள்! இந்தாங்க சாக்லேட்.''

அவன் திரும்பிப் பார்த்தான். எதிரே பன்னிரண்டு வயதுச் சிறுமி முறுவலுடன் நின்றிருந்தாள். எதிர்ப்பக்கத்தில் உட்கார்ந்திருந்த சிறுமியின் தாய் இந்தப் பக்கமாகவே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''இன்றைக்கு என் பிறந்த நாள்.''

''ஓஹோ... அப்படியா! வருடப் பிறப்பன்றைக்குப் பிறந்தாய் என்று சொல்லு. மெனி ரிடர்ன்ஸ் ஆஃப் தி டே!'' சாக்லேட்டை வாங்கிக் கொண்டே சொன்னான். ''பிறந்த நாளன்றைக்கு ஃபிரண்ட்ஸுடன் விளையாடிக் கொண்டிருக்காமல் ரயிலில் பிரயாணம் செய்கிறாயே ஏன்?''

சிறுமி அதற்குப் பதில் சொல்லாமல் ''பின்னே பண்டிகை நாளன்றைக்கு நீங்க மட்டும் ஏன் சுற்றிக் கொண்டிருக்கீங்க?'' என்று எதிர்க் கேள்வி கேட்டாள். அவன் பெரிதாகச் சிரித்துவிட்டு ''நாங்கள் வேலை பார்க்கிறவங்களாச்சே. பந்தைப்போல் எந்தப் பக்கம் அடிக்கிறாங்களோ அங்கே போகணும். ட்ரான்ஸ்ஃபர் ஆகியிருக்கு. போய்க் கொண்டிருக்கிறேன்'' என்றான்.

''நீங்க எங்கே வேலை பார்க்கிறீங்க அங்கிள்?''

''நான் போலீஸ் இன்ஸ்பெக்டராக இருக்கிறேன் குழந்தாய்.''

காதைப் பிளக்கும்படியாய்க் கூவிவிட்டு ரயில் வேகமாகப் போய்க்கொண்டிருந்தது. அச்சிறுமியின் முகம் மாறிப் போய் விட்டது. தன்னையறியாமல் தொலைவுக்கு நகர்ந்து கொண்ட சிறுமியைப் பார்த்து, ''ஏன் இவ்வளவு பயம்?'' என்று கேட்டான்.

ஒரு சிறுவன் மோர் டம்ளர்களை ட்ரேயில் வைத்து விற்றபடி வந்து கொண்டிருந்தான்.

''எனக்கு போலீஸ் என்றாலே பயம்'' என்றாள் சிறுமி. அவனுக்கு வருத்தமாக இருந்தது. இந்தப் பெரியவர்கள் சின்ன வயதிலிருந்தே குழந்தைகளின் மனதில் பயத்தைத் தோற்றுவித்து விடுகிறார்கள். அந்தச் சிறுமியைப் பார்த்து, ''போலீஸார்கூட நல்லவர்கள்தாம்மா. திருடர்களைப் பிடித்து ஜெயிலில் போடுவார்கள். அவ்வளவுதான். வேண்டுமானால் உங்க அப்பாவைக் கேட்டுப்பாரு'' என்றான்.

''எங்க அப்பா ஜெயிலில் இருக்கிறார் அங்கிள்.''

ஏறக்குறைய அவன் ஜன்னலை உராய்ந்து கொண்டு போனாற்போல் பக்கத்து தண்டவாளத்தில் ரயில் வேகமாகப் போயிற்று. சிறுமியின் தாய் தலை குனிந்தபடி உட்கார்ந்திருந்தாள்.

''அப்பாவுக்குப் பிறந்த நாள் சாக்லேட் கொடுப்பதற்காகப் போய்க் கொண்டிருக்கிறேன் அங்கிள். எங்க அப்பா ரொம்ப நல்லவர் அங்கிள். உங்க போலீஸ்காரங்கதான் ஜெயிலில் போட்டுட்டாங்க.''

அவன் சிறுமியின் தாயைப் பார்த்தான். அவள் கண்களிலிருந்து கண்ணீர் உதிர்ந்து கை மேல் விழுந்தது. அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. ''பிறந்த நாளன்றைக்குப் பிரயாணமா?'' என்று தான் கேட்டது குற்ற உணர்வை ஏற்படுத்தியது.

''உன் பெயர் என்னம்மா?''

''அபிராமி''

''உங்க அப்பா எந்த ஜெயிலில் இருக்கிறார்?''

தாய் குறுக்கிட்டு ''ஜெயிலில் இல்லைங்க. காவல் நிலையத்தில் லாக்கப்பில் இருக்கிறார். நான்கு நாட்களுக்கு முன்னால் அரெஸ்ட் செய்தார்கள்'' என்றாள்.

அவன் அபிராமியின் பக்கம் திரும்பி ''இதோ பார் குழந்தாய்! தவறு செய்யாத மனிதனைக் கடவுளால் கூடத் தண்டிக்க முடியாது. உங்க அப்பா எந்த தவறுமே செய்ய வில்லை என்றால் அவர் போலீஸ் ஸ்டேஷனிலிருந்து வெளியே வந்து விடுவார்'' என்றான்.

சிறுமியின் முகத்தில் சந்தோஷம் தென்பட்டது. ஒருக்கால் அந்த அளவிற்குக்கூட யாரும் ஆறுதல் சொல்லி யிருக்கமாட்டார்கள். தாயும் நன்றியோடு பார்த்தாள்.

அவன் கண்களை மூடிக்கொண்டான். ரயிலின் வேகம் குறைந்தது. அவன் வார்த்தைகள் அவனுக்கே கர்ண கடூரமாக ஒலிப்பதுபோலிருந்தது. ''தவறு செய்யாத மனிதனைக் கடவுளால்கூடத் தண்டிக்க முடியாது.''

தவறு செய்யாத மனிதனைக் கடவுளால்கூடத் தண்டிக்க முடியாது.

உண்மையா? உண்மைதானா?

தொலைவிலிருந்து மோர் டம்ளர்களை ட்ரேயில் வைத்துக்கொண்டு ''மோர்...மோர்...'' என்று கூவி விற்றுக் கொண்டிருந்தான் சிறுவன். அவன் பார்வை அந்த டம்ளர்களின்மேல் பட்டது. கண்ணாடி டம்ளர், வெண்மையான திரவம்... ஜன்னல் வழியாக வந்து விழுந்த வெண்மையான சூரிய ஒளிக்குச் சிவப்பாய் மாறி, ரயிலின் ஆட்டத்திற்கு அலையலையாய் மாறிக் கொண்டிருந்தது.

சரியாய் ஒரு வாரத்திற்கு முன்னால் இதே போன்ற ஒரு காட்சிதான் அவன் மாற்றலுக்குக் காரணமாயிற்று.

அவன் தந்தை தேசபக்தர். அதனால்தானோ என்னவோ மகனுக்கு ராணாபிரதாப் என்று பெயரைச் சூட்டியிருந்தார். ராணா சிறுவயதிலிருந்தே கட்டு திட்டங்களோடு வளர்ந்தான். அந்த நாட்களில் மகாத்மாகாந்தி நாட்டை ஒரே கோட்டுக்குள் கொண்டு வந்தாற்போல் ராணாவின் தந்தை அந்த வீட்டை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டார். கதராடைதான் உடுத்த வேண்டும். யாரும் பொய் சொல்லக்கூடாது. நான்வெஜ் சாப்பிடக் கூடாது... இதுபோன்றவை.

ராணா தன் பதினாறாவது வயதில் முதல் முறையாய் சிகரெட் குடித்தான். அந்த விஷயம் தந்தைக்கு மறுநாளே தெரிந்து விட்டது. சாதாரணமாக மகன்கள் சிகரெட் குடிக்கிறார்கள் என்ற விஷயம் தந்தைமார்களுக்கு சில மாதங்களுக்குப் பிறகோ அல்லது சில வருடங்கள் கழித்தோ தெரியவரும். ஆனால் ராணா இதை ரகசியமாக வைக்க எந்த முயற்சியும் செய்யவில்லை. நட்டநடுத் தெருவிலேயே சிகரெட் பிடித்தான். இந்த விஷயத்தை யாரோ முதல் காரியமாக அவன் தந்தையிடம் போய் சொன்னார்கள். அவர் ஏற்கனவே கொல்லன் வீட்டு பட்டறையில் இருக்கும் தீயைப்போல் தகித்துக் கொண்டிருந்தார். மகன் வந்ததுமே கையைப் பிடித்து இழுத்து ''ஏண்டா, சிகரெட் பிடித்தாயா?'' என்றார் பெல்டை உறுவிக்கொண்டே.

''ஆமாம். பிடித்தேன்'' என்றான் ராணா. அப்படிச் சொன்னதற்கு அவன் முதுகு அன்று பிளந்து போயிருக்

கும். ஆனால் மகன் முகத்தில் தென்பட்ட நேர்மையும், துணிச்சலும் அவரைத் தடுத்து நிறுத்தி விட்டது. ஆனாலும் ஆவேசத்தை அடக்க முடியாதவராக ''அயோக்கியப் பயலே! சிகரெட் பிடித்ததும் இல்லாமல் அந்த விஷயத்தை வெட்கமில்லாமல் சொல்லவும் செய்கிறாயா?'' என்று கத்தினார்.

''நீங்கதானே அப்பா, எந்த வேலை செய்தாலும் தைரியமாகச் செய்யணும் என்று சொன்னீங்க? அதோடு பொய் சொல்லக்கூடாது என்று காந்தி சொன்னார் என்று சொன்னீங்க?''

''பொய் சொல்லக்கூடாது என்று சொன்னாரே ஒழிய சிகரெட் பிடி என்று சொல்லவில்லையடா அந்த மகான்.''

''சிகரெட் பிடி என்று சொல்லவில்லை. பிடிக்காதே என்றும் சொல்லவில்லை. உண்மையில் மகாத்மா காந்திக்கு நாம் சிகரெட் பிடிப்பது இஷ்டமில்லை என்றால் வெளிநாட்டுச் சரக்கு வேண்டாம் என்று சத்யா கிரகம் செய்ததுபோலவே சுதந்திரம் வந்ததுமே நாட்டில் சிகரெட் ஃபாக்டரிகளே இருக்கக்கூடாது என்று சத்யா கிரகம் செய்திருப்பார் இல்லையா?''

மகனுடைய தர்க்கம் விதண்டாவாதமாக இருந்தாலும் அந்தச் சமயத்தில் தந்தையை உலுக்கியெடுத்து விட்டது. இந்த விதண்டாவாதம்தான் பெரியவனாக வளர்ந்த பிறகு தொழில் ரீதியாக ராணாவை பல சிக்கல்களில் ஆழ்த்தி விட்டது.

ராணாவை இஞ்ஜினியராக்க வேண்டும் என்பது அவனுடைய தந்தையின் விருப்பம். ''ஏண்டா! பி.இ. படிக்கிறாயா?'' என்று கேட்டார் தந்தை.

''ஊஹூம். பி.ஏ. படிக்கிறேன்.''

அவர் வியப்படைந்து ''பி.ஏ.வா? எதுக்கு?'' என்றார்.

''ஐ.பி.எஸ். ஆகணும் என்று விருப்பம் அப்பா எனக்கு'' என்றான் ராணா.

காக்கி உடை அணிந்து கொண்டு மிடுக்குடன் ஜீப்பிலிருந்து இறங்கும் டி.எஸ்.பி.க்களைப் பார்க்கும்போது ராணாவுக்குச் சிறு வயதிலிருந்தே ஒரு ஈர்ப்பு இருந்து வந்தது.

மகன் பிடிவாதம் பிடித்ததால் தந்தைக்கு வேறு வழியிருக்கவில்லை. அந்த விதமாக ராணா பி.ஏ. பட்டம் பெற்றான். ஆனால் அதற்குமேல் அவனால் படிக்க முடியவில்லை. மூளையில் ஏற மறுத்தது. சுமாரான மதிப்பெண்கள் பெற்று பாஸான மகனைப் பார்த்து விட்டு ''பி.ஏ. பாஸாவதற்கே இவ்வளவு கஷ்டப்பட்டாய். நாளைக்கு எப்படி ஆகப் போகிறாய்?'' என்று கேட்டார் தந்தை.

''ஆமாம் அப்பா... அந்த விஷயம் இப்பொழுதுதான் எனக்கும் புரிந்தது. அதனால்தான் சப்-இன்ஸ்பெக்டர் வேலைக்கு மனு போட்டிருக்கிறேன்.''

அந்தக் கிழவரின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கத் தொடங்கியது. ''இன்ஜினியர் ஆவாய் என்று நினைத்தேன். அல்லது ஐ.பி.எஸ். ஆவாய் என்று நினைத்தேன். போயும் போயும் சப்-இன்ஸ்பெக்டராகப் போகிறாயா?''

''எட்டாத கனிக்கு ஆசைப்படக்கூடாது என்று காந்தியே சொன்னார் இல்லையா அப்பா?''

''டேய்... உன்னை...''

''சின்னச்சின்ன விஷயங்களுக்கு அனாவசியமாக கோபம் கொள்ளக்கூடாது என்று அவர் சொன்னதாக நினைவு.''

அவர் என்ன செய்வதென்று தெரியாமல் மகனையே பார்த்தபடி உட்கார்ந்து விட்டார். அந்த விதமாக ராணா சப்-இன்ஸ்பெக்டர் ஆனான்.

ராணா மனவியல் சாஸ்திரத்தைப் படிக்கவில்லை. ராபர்ட் லிங்கர், டாக்டர் மாக்ஸ் போன்றவர்கள் யார் என்று கூடத் தெரியாது. ஆனாலும் அவனுக்கு எப்படித்தான் படிந்ததோ தெரியாது. வாழ்க்கையை எப்பொழுதும் அமைதியாக வைத்துக்கொள்ளப் பழக்கப்படுத்திக் கொண்டு இருந்தான்.

இந்த அமைதி என்பது மனிதனுக்கு, தான் நம்பிய கொள்கையை நேர்மையாக கடைப்பிடிப்பதன் மூலமாய் மட்டுமே வரும். அந்தக் கொள்கை எதுவாயிருந்தாலும், எவ்வளவு பேர் விரோதிகள் ஏற்பட்டாலும், அந்தச் சந்தோஷம் மட்டும் அவன் கண்களில் சதா பிரதிபலித்துக் கொண்டேயிருக்கும். ஆச்சரியப்படும் அளவிற்கு சிறு வயதிலிருந்தே ராணாவிடம் இந்த சுபாவம் படிந்திருந் தது. மிகச் சிறு வயதிலிருந்தபோதே அவன் தாய் கதைகள் சொல்லுவாள். அக்கதைகள் ராமரைப் பற்றியோ கிருஷ்ண ரைப் பற்றியோ அல்ல. அவன் தந்தையைப் பற்றி.

கற்பனைக் கதைகளைவிட உண்மைக் கதைகள் இளம் உள்ளத்தின் மீது நல்ல பாதிப்பை ஏற்படுத்தும். மகாத்மா காந்தி தம் வீட்டிற்கு வந்தார் என்பது நம்ப முடியாத ஒரு அபூர்வமான உண்மை.

தந்தையை டீஸ் செய்வதற்காக காந்தியை ஒரு உதாரணமாக எடுத்துக் கொள்வானே தவிர, அவனுக்குத் தந்தையிடம் ரொம்ப மதிப்பு இருந்து வந்தது. தாய் இறந்த ஒரு வருடத்திற்குள்ளேயே தந்தையும் இறந்து விட்டார். ஒரு நண்பனிடம் விடைபெற்றுக் கொள்வதுபோல் அவர் மகனிடம் விடைபெற்றுக் கொண்டு போய்விட்டார். ''அக்கா ஜாக்கிரதை... தம்பியை நன்றாகப் பார்த்துக் கொள்'' போன்ற ஒப்படைப்புகள் எதுவும் இல்லை.

புன்முறுவல் ''போய் வருகிறேன்'' என்றது. அவனுடைய கண்ணீர்த் துளி ''போய் வா'' என்றது.

தந்தை இறந்த சமயத்தில் தம்பி ஒன்பதாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தான். அக்கா பிரசவத்திற்காக வீட்டுக்கு வந்தாள். செய்வதோ சப்-இன்ஸ்பெக்டர் வேலை. வரும் சம்பளம் எதற்குமே போதாது. தான் வேலை பார்த்துக் கொண்டிருப்பது தங்கச் சுரங்கத்தில் என்று அவனுக்குத் தெரியும்.

நேர்மையோடு யோசிப்பது வேறு. நேர்மையுடன் வாழ்வது வேறு. நிறைய பேர் மிக உயர்வாக யோசித்துக் கொண்டே சாதாரணமாக வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

அக்காவிற்கு சிசேரியன் செய்ய வேண்டியிருந்தது. அவசரமாய் ஐயாயிரம் தேவைப்பட்டது. முதல் முதலாக அவன் லஞ்சம் வாங்கினான். ஒரு கள்ளச் சாராயக் கடைக்காரனிடம் அவன் கையை நீட்டினான்.

ராணாவுக்கு அந்த அனுபவம் சந்தோஷத்தைத் தரவில்லை. அன்றிரவெல்லாம் தந்தை கனவில் வந்து கொண்டே இருந்தார். தூக்கம் இல்லாமல் அவன் கண்கள் சிவந்து விட்டன. ஆஸ்பத்திரியிலிருந்து அக்கா மகனுடன்

வீட்டிற்கு வந்து விட்டாள். ''டேய்... உன் மருமகனுக்கு அப்பாவின் பெயரை வைக்கப் போகிறேன்'' என்றபோது அவன் மேலும் குற்ற உணர்ச்சியால் தவித்தான். அக்காவின் கூரிய பார்வையில் அது படாமல் இல்லை. கணவன் வீட்டிற்குக் கிளம்பும்போது அவன் கையில் ஐயாயிரத்தை வைத்தாள். அவன் ஆச்சரியமடைந்தவனாய் ''என்ன அக்கா இது?'' என்று கேட்டான்.

அவள் வறட்சியாகச் சிரித்துவிட்டு ''எனக்காக நீ செலவழித்த பணம்டா'' என்றாள். அவன் திகைத்துப் போனவனாய் ''அதைத் திருப்பிக் கொடுக்கிறாயா?'' என்றான். ''அத்தானுக்குத் தெரியாமல் உன்னிடம் இவ்வளவு பணம் எங்கிருந்து வந்தது?''

''இவ்வளவு பணத்தை நீ எப்படி சம்பாதித்தாய் என்று சொல் முதலில்?''

அவனிடமிருந்து பதில் இல்லை. அவள் அவனிடம் நெருங்கி வந்து ''டேய் தம்பீ... சின்ன வயதில் அம்மா சொன்ன கதைகளை நீ மட்டுமே இல்லை, நானும் கேட்டிருக்கிறேன். உன் வேதனையை என்னால் ஊகிக்க முடியாது என்று நினைத்தாயா? என் நகைகளை அடமானம் வைத்தேன்'' என்றாள்.

பலமான காரணம் இல்லை என்றாலும் அவன் கண்களில் நீர் சுழன்றது. அன்றைக்கே எடுத்துச் சென்று கான்ட்ராக்டரிடம் பணத்தைத் திருப்பித் தந்து விட்டு ''நாளையிலிருந்து இந்த வியாபாரத்தைச் செய்யக் கூடாது'' என்று எச்சரித்தான்.

காண்ட்ராக்டர் திகைப்படைந்தவராய் ''இந்த இன்ஸ்பெக்டர் கொஞ்சம் பைத்தியம் போலும்''

என்றெண்ணிக் கொண்டார். கொடுத்த லஞ்சத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டு வேண்டாம் என்று சொல்வது அவருக்கு அதுதான் முதல்முறை. ''சரி. போகட்டும். ஐந்தாயிரம் பணம் மிச்சம்'' என்றெண்ணிக் கொண்டார். அதுதான் அவர் செய்த தவறு. மறுநாள் அவர் கடையில் ரெய்டிங் நடந்தது. இருபது பேரை ராணா அரெஸ்ட் செய்தான். பிறகு யார் யார் தம் செல்வாக்கைப் பயன் படுத்திக்கொண்டு வெளியே வந்தார்கள், ராணாவுக்கு ஏன் மாற்றல் ஆயிற்று என்பது வேறு விஷயம். ஆனால் ஒன்று மட்டும் உண்மை.

முந்தைய நாள் அனுபவித்த வருத்தம், பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்ட பிறகு இல்லை. நிம்மதியான தூக்கம் வந்தது. நிம்மதியாகத் தூங்குவதைப் போன்ற வரம் மனிதனுக்கு வேறு இல்லை என்ற விஷயம் அப்பொழுதுதான் புரிந்தது அவனுக்கு. அந்த விதமாக அவன் வாழ்க்கைப் புத்தகத்தில் ஒரு புது அத்தியாயத்தை அவனுடைய அக்கா திறந்து விட்டாள். அதற்குப் பிறகு அவன் மிகப் பெரிய பிரச்னையில் சிக்கிக் கொண்ட பொழுதுகூட அக்காதான் அவனுக்குத் தேவையான பலத்தை மனரீதியாகத் தந்தாள்.

வேலையில் சேர்ந்த நான்கு வருடங்களுக்குப் பிறகு அவனுக்கு இன்ஸ்பெக்டராகப் பிரமோஷன் கிடைத்தது. அதற்குள் ராணாவின் குணாதிசயங்களில் பரிபூரணத்துவம் ஏற்பட்டிருந்தது. காவல்துறையிலுள்ள நெளிவு சுளிவு களை எல்லாம் நன்றாகத் தெரிந்து கொண்டு விட்டான். ஆனால் அவன் கொள்கையில் மாறுதல் இல்லை. கண்டிப்பான அதிகாரியாக பெயர் பெற்றான். அவனோடு நகராறு வைத்துக் கொள்வதற்கு மேலதிகாரிகள்கூட கொஞ்சம் தயங்குவார்கள்.

ஆனால் அவன் உத்யோக வாழ்க்கை மலர்ப்படுக்கையாய் இருக்கவில்லை. அவன் சொன்னதுபோலவே மாநிலத்தில் நான்கு மூலைகளிலும் பந்தாடப் பட்டான். இந்தக் கடைசி ''பெனால்டீ கிக்'' மட்டும் கொஞ்சம் பலமாகத் தாக்கி விட்டது. இதைப்பற்றி தெரிந்து கொள்ள வேண்டுமானால் ஒரு வாரம் பின் நோக்கிச் செல்ல வேண்டும்.

எப்பொழுதும் ஆளரவமில்லாமல் சந்தடியின்றி இருக்கும் அரசாங்கத்தைச் சேர்ந்த ஓய்வு விடுதி, அன்றைக்குக் கலகலப்பாக இருந்தது. புதிதாக சுண்ணாம்பு அடித்ததால் அதற்கு மறுபடியும் களை வந்தது. போலீசாரும், அரசியல்வாதிகளும் அங்கே பரபரப்புடன் அலைந்து கொண்டிருந்தார்கள்.

மண்டை காயும் அளவிற்கு உச்சி வெயில். இருந்தாலும் அங்கிருந்த உஷ்ணத்தோடு ஒப்பிட்டால் அது அவ்வளவு அதிகமில்லை. வந்து கொண்டிருப்பது ஹோம் மினிஸ்டராயிற்றே.

வரிசையாய் நான்கு கார்களும், இரண்டு ஜீப்புகளும் அந்தக் காம்பவுண்டிற்குள் நுழைந்தன. அங்கிருந்த மக்கள் எல்லோரும் அவற்றைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டார்கள். சரியாக அங்கிருந்து ஒரு பர்லாங்கு தூரத்திலிருந்த சின்னக் கடைவீதியில், கடைகளுக்குக் கொஞ்சம் அந்தப் பக்கமாக தட்டிகளால் குடிசையைப் போல் அமைக்கப்பட்டிருந்த ஒரு கடையில் கிழவி ஒருத்தி உட்கார்ந்திருந்தாள். அவளுக்கு முன்னால் நாலைந்து பானைகள் இருந்தன.

ஒரு பலகையில் ''மோர்- பெரிய டம்ளர் இருபத்தைந்து பைசா- சின்ன டம்ளர் பதினைந்து பைசா'' என்று எழுதியிருந்தது. கடைகளில் நடந்து கொண்டிருந்த தடபுடலைப் பார்த்து விட்டுக் கிழவி பக்கத்திலிருந்த திண்ணையில் முறுக்கு விற்றுக்கொண்டிருந்த சிறுவனைப் பார்த்து ''என்னடா? என்ன கலாட்டா?'' என்று கேட்டாள்.

''இன்னிக்கு பந்த் பாட்டி. கடைகளை எல்லாம் மூடிவிட வேண்டும்'' என்றான்.

அதற்குள் அங்கே ஒரு மோட்டார் சைக்கிள் வந்து நின்றது.

''ஒரு டம்ளர் மோர் கொடு.''

''பெரிய கிளாஸா? சின்ன கிளாஸா தம்பீ?''

''வெயில் மண்டையைப் பிளக்கிறது. பெரிய கிளாஸாகவே கொடு'' டம்ளரை வாங்கிக் கொண்டவன் குடித்து விட்டு நாலணாவைத்தான் தந்தான்.

''பணமா? வேண்டாம் தம்பீ.''

அவன் வியப்படைந்தவனாய் ''வேண்டாமா? நீ பணத்திற்குத்தானே விற்கிறாய்?'' தான் வந்தது ஒருக்கால் இலவசமாய் தாகத்தைத் தீர்த்துக் கொள்ளும் இடத்திற்கோ என்ற சந்தேகத்துடன் கேட்டான். கிழவி தயங்கினாள்.

''எடுத்துக்கொள் பாட்டீ.''

அவள் பணத்தை வாங்கிக் கொண்டே, ''இவ்வளவு நாளில் மோரைக் குடித்து விட்டுப் பணம் தந்த முதல் போலீஸ்காரன் நீதாம்ப்பா'' என்றாள். ராணாவுக்கு அதைக் கேட்டுச் சிரிப்பதா, வருத்தப்படுவதா என்று தெரியவில்லை.

அதற்குள் கிழவி கேட்டாள். ''கடைகளை அடைக்கச் சொல்றாங்களே? எதுக்கு தம்பீ? எதுக்காக இந்தக் கடை அடைப்பு?''

அவனுக்கு எப்படி விவரித்துச் சொல்வதென்று புரியவில்லை. ''டில்லியில் அரசாங்கம் சரியாக வேலை செய்வதில்லைன்னு தமிழ்நாட்டில் உள்ள அரசாங்கம் பந்த் செய்யச் சொல்லியிருக்கிறது'' என்றான்.

''எல்லா அரசாங்கமும் ஒன்றுதானே தம்பீ?''

ரொம்ப அப்பாவித்தனமான சின்னக் கேள்விதான். ராணாவிடம் பதில் இல்லை. சரியாய் அதே சமயத்தில் ஓய்வு விடுதிக்கு முன்னால் லாரி ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து இருபது குண்டர்கள் இறங்கினார்கள். வேட்டி பனியனுடன் சிலர், பேண்ட் சட்டையுடன் சிலரும் இருந்தார்கள். கையிலிருந்த ஆயுதங்களை மறைத்து வைத்துக் கொள்ள எந்த முயற்சியும் அவர்கள் செய்யவில்லை.

முன்னால் வந்த காரிலிருந்து இறங்கிக் கொண்டிருந்த ஹோம் மினிஸ்டரிடம் ஓடி வந்தார் டி.ஐ.ஜி. எலும்புக் கூட்டிற்கு உடை அணிவித்தாற்போலிருந்தது அவர் தோற்றம். பக்கத்தில் யாராவது பலமாக தும்மினாலும் பயந்துபோய் ஆஞ்சநேய தண்டகத்தை முணுமுணுத்துக் கொள்வார் போலிருந்தது. ஹோம் மினிஸ்டர் உயரமாக இருந்தார். நேர் வகிடு, நெளி நெளியான கேசங்கள். தொள தொளவென்று பைஜாமாவும் ஜிப்பாவும் அணிந்திருந் தார். கொஞ்சம் மேக்கப் பண்ணி விட்டால்போதும், நட்டுவனாரைப்போல் தோற்றமளிப்பார். டி.ஐ.ஜி. என்றால் ஆஜானுபாகுவான உடம்பும், ஹோம் மினிஸ்டர் என்றால் பெரிய ரௌடியைப் போலவும் இருப்பார்கள் என்றெண்ணியிருந்தால், அது தவறு என்று அவ்விருவரும் நிரூபித்துக் கொண்டிருந்தார்கள்.

அவர் ஹோம் மினிஸ்டர் ஆவதற்குக் காரண கர்த்தாவான பெண்மணி மெதுவாகக் காரிலிருந்து இறங்கினாள். எல்லோரின் பார்வையும் அவள் மேல் படிந்தது. காக்கிச்சட்டைக்காரர்களும், கதர் சொக்காய்க் காரர்களும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவள் ஒய்யாரமாக காரிலிருந்து இறங்கி அங்கிருந்தவர் களை எல்லாம் பார்த்து முறுவலுடன் வணங்கினாள்.

ஹோம் மினிஸ்டரின் மனைவி அவள்!

அவரை ஹோம் மினிஸ்டராக்கியது அவள்தான்.

அவள் பெயர் காமினி. அவள் ஒரு காலத்தில் தமிழ் நாட்டையே ஒரு கலக்குக் கலக்கிக் கொண்டிருந்த சினிமா நடிகை. அவள் நடித்த படங்கள் பொன்மழை பெய்து கொண்டிருந்தன. அதற்குப் பிறகு அவள் அரசியலை நோக்கிக் கவரப்பட்டாள். ஆனால் தானே பங்கெடுத்துக் கொள்ளவில்லை. கட்சி சார்பில் பிரசாரம் செய்தாள். அவள் சொற்பொழிவு ஆற்றினால் மக்கள் லட்சக் கணக்கில் கூடுவார்கள். அவள் பிரசாரம் செய்த கட்சி பதவிக்கு வந்தது. அவளுக்கு எந்தப் பதவி வேண்டுமானாலும் தருவதற்கு கட்சி தயாராக இருந்தது. ஆனால் அவள் மறுத்து விட்டாள்.

அவள் கணவனின் பெயர் டி.கே.நாயுடு. அவனுடைய முழுப்பெயர் யாருக்குமே தெரியாது. காமினி சினிமா துறையில் காலூன்றிக் கொண்டிருந்த காலத்தில், அவளுக்குத் தபாலில் ஒரு நோட்டீஸ் வந்தது. அதற்குள் அவள் நடித்திருந்த இரு படங்கள் சூப்பர் ஹிட் ஆகியிருந்தன.

மேட்டுப் பாளையத்திற்குப் பத்து கி.மீ. தொலை விலிருந்த ஒரு பட்டிக்காட்டிலிருந்து வந்திருந்த அந்த நோட்டீஸின் சாராம்சம் என்னவென்றால், காமினி என்ற காமேஸ்வரி தன் பதினைந்தாவது வயதில் கண்ணன் நாயுடு என்ற நபரைத் திருமணம் செய்து கொண்டாள் என்றும், வயலில் கூலி வேலை செய்து வந்த (தற்சமயம் இறந்து போன) காமேஸ்வரியின் தந்தை இத்திரு மணத்தை நடத்தியதற்கு சாட்சியங்கள் உள்ளன என்றும்...

காமினி கலங்கி விடவில்லை. கண்ணனை வரவழைத்தாள். அவன் இரண்டு மூன்று பெரிய மனிதர்களை உடன் அழைத்துக் கொண்டு மேட்டுப் பாளையத்திலிருந்து வந்தான்.

''இதோ பாரும்மா... லட்சணமாக குடித்தனம் நடத்து. நீ இப்படி வீட்டை விட்டு ஓடி வந்த விஷயத்தை நாங்கள் மறந்து விடுகிறோம். இந்தக் கோர்ட்டு, கேசு தொல்லை களை எல்லாம் உன்னால் தாங்கிக் கொள்ள முடியாது'' என்றார்கள் அவர்கள்.

காமினி சிரித்தாள். ''பத்து வருடங்களுக்கு முன்னால் ஓடிப்போன என்னைப்பற்றி இப்பொழுதுதான் நினைப்பு வந்ததா? அல்லது என் அந்தஸ்துதான் என்னை ஞாபகப் படுத்தியதா?'' என்று கேட்டாள்.

அவர்கள் பதில் பேசவில்லை. கண்ணனை உள்ளே அழைத்துச் சென்று தனிமையில் பேசினாள்.

''இதோ பார்! நான் உன்னைக் கல்யாணம் செய்து கொண்ட பொழுது எவ்வளவு அப்பாவியாக இருந்தாயோ, இன்றும் அதேபோல்தான் அப்பாவியாய் இருக்கிறாய். இதற்குப் பின்னால் யார் இருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியும். அது யாரென்று நீ சரியாகச் சொல்லி விட்டால் நான் உன்னை வைத்துக் கொள்கிறேன். இல்லை என்றால்... பார்த்து விடலாம். நீ என் பக்கமா இல்லை அவர்கள் பக்கமா என்று தெரிந்து கொள்வதற்கு இது ஒரு சோதனை'' என்றாள்.

கண்ணன் பெரிய ஹீரோவைப்போல் ''நானும் ஒரு லாயருமாகச் சேர்ந்து இதையெல்லாம் செய்கிறோம். இரண்டு லட்சம் தந்து விட்டால், உன் விஷயத்தை மறந்துபோய் விடுகிறோம்'' என்றான்.

''அதில் அந்த லாயருக்கு எவ்வளவு தரணும்?''

''அது உனக்குத் தேவையில்லை.''

அவள் பாத்ரூம் கதவைத் திறந்து ''இவர்தானா உன் லாயர்?'' என்றாள்.

உள்ளே தென்பட்ட காட்சியை டி.கே.நாயுடுவால் வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாமல் போயிற்று. (அப்படி மறக்க முடியாமல் போனது அவனுக்கு லாபத்தையும் தந்தது) உள்ளே தரையில் விழுந்து கிடந்தான் இளம் வயதில் இருந்த அந்த லாயர். இரவில் நன்றாக அடித்துப் போட்டிருப்பார்கள் போலும். காயங்களிலிருந்து இன்னும் ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. இன்னும் அரை மணி நேரம் அப்படியே விட்டு விட்டால் உயிர் போவது நிச்சயம்.

பாத்ரூம் கதவைச் சாத்தாமலேயே அவள் நாயுடுவை இழுத்து முத்தமிட்டு ''நீ என்னுடனேயே தங்கிக் கொள்ளலாம். மாலையில் பீச்சுக்குப் போவோம். மற்ற விஷயங்களை எல்லாம் அங்கே பேசுவோம்'' என்றாள். அவள் விரல்கள் அவன் முதுகில் விளையாடிக் கொண்டிருந்தன.

இருவரும் வெளியே வந்தார்கள். ''காமினி என்னை இங்கேயே இருக்கச் சொன்னாள். நீங்கள் இனி போகலாம்'' என்றான் நாயுடு. உடன் வந்த பெரிய மனிதர்களின் முகம் தொங்கிப் போயிற்று. காமினி அழுது ஆர்ப்பாட்டம் செய்வாள் என்று நினைத்தார்கள். அல்லது பெரிய ரகளை ஏற்பட்டால் இடையில் புகுந்து சமாதானம் செய்வோம் என்று எதிர்பார்த்தார்கள். குறைந்த பட்சம் ஒரு லட்சமாவது கிடைக்கும் என்றெண்ணிக் கொண்டிருந்தார்கள். இது அவர்கள் எதிர் பார்க்காத திருப்பம். தலைகுனிந்தபடி போய்விட்டார்கள்.

அன்றிரவு காமினியை அருகில் இழுத்துக் கொண்டு அணைத்துக் கொள்ளப்போனான் நாயுடு. ''எனக்கு இந்த மாதிரி எல்லாம் பிடிக்காது. என் உடல் கட்டு குலைந்து போய்விடும்'' என்றாள். மாலையில் இருந்த குழைவு இப்பொழுது அவள் குரலில் இல்லை.

''பின்னே எதற்காக இருக்கச் சொன்னாய்?''

''எனக்கு நம்பிக்கையான செகரெட்ரி கிடைக்கவில்லை. என் கால்ஷீட்டுகளைக் கவனித்துக் கொள்வதற்கும், என் ரெம்யுனரேஷன் விஷயத்தைப் பற்றிப் பேசுவதற்கும் ஒரு ஆள் இருந்தால் நன்றாக இருக்கும் என்று ரொம்ப நாளாக நினைத்துக் கொண்டிருந்தேன்.''

''அப்படி என்றால் நான் உன்னுடைய புருஷன் இல்லையா?''

''தற்போதைக்கு என்னுடன் இரு. தேவை வரும்போது தெரியப்படுத்துகிறேன். கல்யாணம் ஆகிவிட்டது என்று வெளியே தெரிந்தால் ஹீரோயின் வாய்ப்புகள் கிடைக்காது.''

''நடுவில் நீ என்னை விரட்டி விட்டால்?''

''வேண்டுமென்றால் அந்தக் காரியத்தை இப்பொழுதே செய்திருக்க மாட்டேனா?''

''நமக்குக் கல்யாணம் ஆனதற்கு என்னிடம் சாட்சியங்கள் உள்ளன.''

''மாலையில் கடலில் அந்தப் பிணத்தை வீசியெறிந்த போது எடுக்கப்பட்ட போட்டோக்கள் என்னிடம் உள்ளன.''

நாயுடு அதிர்ந்து விட்டான். அவள் சிரித்தாள்.

''நீயும் ஒரு லாயர் பையனும் என்னிடம் வந்து பிளாக்மெயில் செய்தீங்க. நான் இரண்டு லட்சம் தந்தேன். அதைப் பங்கிட்டுக் கொள்வதில் இருவருக்கும் தகராறு வந்தது. நீ அவனைக் கொன்று கடலில் போட்டு விட்டாய். எப்படி இருக்கிறது கதை?''

கையில் பாம்பைப் பிடித்துக் கொண்டிருந்தாற்போல் பயந்து அவன் அவளை விட்டு விட்டான். அதற்குப் பிறகு

ஒருநாளும் அவளை நெருங்குவதற்கு அவன் துணிய வில்லை.

அந்த விதமாக அவள் சல்லிக்காசு செலவில்லாமல் செகரட்ரியைச் சம்பாதித்துக் கொண்டு விட்டாள்.

சினிமாத்துறையில் உச்சியில் இருக்கும்போதே அவள் கவனம் அரசியல் பக்கம் திரும்பியது. அவள் மைக்கைப் பிடித்துக்கொண்டு பேசினால் மக்கள் மந்திரத்திற்குக் கட்டுண்டவர்களாய்க் கேட்கத் தொடங்கினார்கள். எல்லாக் கட்சிகளும் அவளைத் தம்மோடு இணைத்துக் கொள்ள முயற்சித்தன.

அவள் யோசித்தாள்.

உயர்ந்து கொண்டே போகும் விலைவாசி, கஷ்டமாகிக் கொண்டிருக்கும் வாழ்க்கை முறை, மக்களிடம் தீவிரமான அதிருப்தியை வளர்த்துக் கொண்டிருந்தன. ஐந்தாண்டு களாக ஆட்சியில் இருக்கும் கட்சியைப் பதவியிலிருந்து இறக்குவது ஒன்றுதான் அவர்களால் செய்ய முடியும். அதைத்தான் செய்வார்கள் என்றும் அவள் ஊகித்து, எதிர்க்கட்சிகளுக்குள் முக்கியமான கட்சியில் சேர்ந்து கொண்டாள். ஆனால் தேர்தல் வந்தபோது தான் நிற்க வில்லை. கணவனை நிற்க வைத்தாள். அவள் ஊகித்தது போலவே எதிர்க்கட்சி பதவிக்கு வந்தது. நாயுடு எம்.எல்.ஏ. ஆன பிறகு அமைச்சராக வேண்டும் என்று விரும்பினாள். கிடைக்கவில்லை. கட்சியில் சம்மதிக்க வில்லை. கொஞ்சம்கூட அரசியல் அனுபவம் இல்லாத வனுக்கு அமைச்சர் பதவி எப்படித் தருவது என்றார்கள். அவள் ஏமாற்றமடையவில்லை. டில்லியில் அவள் யார் யாரைச் சந்தித்தாளோ, என்ன செய்தாளோ தெரியாது, நினைத்ததைச் சாதித்தாள்.

சென்னைக்குத் திரும்பி வருவதற்குள் நாயுடுவுக்கு அமைச்சர் பதவியைத் தந்து விட்டார்கள். டில்லியில்

இருந்த பிரமுகர்களுடன் அவளுக்கு இருந்த செல்வாக்கு அதன் மூலம் நிரூபணமாயிற்று. அவள் இன்னும் உயர்ந்து விட்டாள்.

காமினியின் அந்தரங்க வாழ்க்கையைப்பற்றிப் பெரிதாக வதந்திகள் எதுவும் இருக்கவில்லை. சாதாரணமாக இதுபோன்ற காரியங்களை அனாயாசமாகச் செய்யக்கூடிய ஒருத்தியின் அந்தரங்க வாழ்க்கையைப் பற்றிப் பலவிதமாக கதைகள் பிரசாரமாகியிருக்க வேண்டும். ஆனால் அப்படி இல்லை. பெரிய பெரிய மனிதர்களோடுதான் அவள் இருப்பாள் என்று சிலரும், அவளை அடைவது ரொம்பக் கஷ்டம் என்று சிலரும் சொல்லிக் கொள்வார்கள். பெரிய மனிதர்கள் சிலர் உண்மையிலேயே அவளுக்காக முயன்று தோற்றுப் போனார்கள். அவள் மனதில் ஆண் வேட்கை எந்த அளவுக்கு இருந்தது என்று யாருக்குமே தெரியாது. அவள் கணவன் உள்பட.

தான் அரசியலில் நுழையாமல் கணவனை நிற்க வைத்தது காமினியின் புத்திசாலித்தனத்திற்கு எடுத்துக் காட்டு. வெள்ளித்திரையில் அவள் ஆதிக்கம் தொடர்ந்து கொண்டே இருந்தது. அரசியலிலும் அவள் கை ஓங்கியிருந்தது.

போலீஸ் அதிகாரிகள் எல்லோரும் ட்ராவலர்ஸ் பங்களாவில் கூடினார்கள். ஹோம் மினிஸ்டர் சொல்லத் தொடங்கினார்.

''இங்கே நான் ஏன் வந்தேன் என்று எல்லோருக்கும் தெரியும் இல்லையா? டில்லியில் அரசாங்கம் சரியாக வேலை செய்யவில்லை. அதை எதிர்த்து மாநிலத்தில் எங்கள் கட்சி கடையடைப்பு நடத்துகிறது. இந்தக் கடை அடைப்பை எப்படியாவது முறியடிக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறது டில்லி அரசாங்கம். மாநிலத்தில் எங்கள் கட்சி அதிகாரத்தில் இருப்பது டில்லி அரசாங்கத்திற்கு வயிற்றெரிச்சலாக இருக்கிறது. இந்த

ஊரில் வானொலி நிலையம் இருக்கிறது. ஆனால் அது டில்லி அரசைச் சேர்ந்தது. அங்கிருந்து தொடங்க வேண்டும் கடையடைப்பை.''

ராணா கண்ணிமைக்காமல் டி.கே.நாயுடுவைப் பார்த்துக் கொண்டிருந்தான். நாயுடுவின் நேர் வகிடு அவனுக்குச் சிரிப்பை வரவழைத்தது. நாயுடு மட்டும் சாலையில் தென்பட்டால், ஹோம் மினிஸ்டர் என்று நினைக்கமாட்டார்கள். யாரோ யாசகம் வாங்கும் ஆள் என்றுதான் நினைப்பார்கள். படிப்பறிவு, பண்பு இருக்கட்டும். குறைந்தபட்சம் புன்முறுவல், தைரியம், மிடுக்கு போன்றவைகூட அவனிடம் தென்படவில்லை. எப்பொழுது பார்த்தாலும் ஏதோ பதற்றத்தில் இருப்பது போல் பேந்தப் பேந்த விழித்துக் கொண்டிருப்பான்.

''இந்தப் பந்த் சரியாக நடக்கும்படி பார்த்துக் கொள்ளச் சொல்லி நம் முதலமைச்சர் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அமைச்சர்களை அனுப்பி வைத்திருக்கிறார். அதனால் தான் நான் இங்கே வந்தேன். புரிந்ததா? உங்க போலீஸ் காரங்களுக்கு என்ன சொன்னாலும் சரியாகப் புரியாதுன்னு முதலமைச்சர் சொன்னார்.''

பின்னாலிருந்த எம்.எல்.ஏ.க்கள் அத்தனை பேரும் அந்த ஜோக்கைக் கேட்டுச் சிரித்தார்கள்.

ராணாவுக்கு வருத்தமாக இருந்தது. தன்னைப் பற்றி யில்லை. யார் மீது என்றே தெரியாத வருத்தம். அவனுக்கு கிழவியின் வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. ''ரெண்டு அரசாங்கமும் ஒன்றுதானே தம்பீ?'' என்ற அப்பாவித் தனமான கேள்வி. இங்கே இந்த அரசு அந்த அரசுக்கு எதிராக கடைகளை மூடச் செய்கிறது. போக்குவரத்தை நிறுத்தச் செய்கிறது. காரியாலயங்களில் வேலை செய்ய வேண்டாம் என்று தன் ஊழியர்களுக்கே உத்தரவு போடுகிறது.

ராணாவுக்குத் தன் தந்தையைப்பற்றி நினைவுக்கு வந்தது. மகாத்மா காந்தி தம் வீட்டிற்கு வந்தாராமே?

இதென்ன அர்த்தமில்லாத யோசனைகள்? இங்கே ஹோம் மினிஸ்டர் கடை அடைப்பைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும்போது இதென்னது? தான் எதையோ யோசித்துக் கொண்டிருப்பதாவது?

ஹோம் மினிஸ்டர் மேலும் சொல்லத் தொடங்கினார். ''இப்பொழுது உங்கள் எல்லோரையும் ஏன் வரவழைத் தேன் என்றால், இந்த நகரத்தின் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்து இருக்கிறார்கள். அதனால் நகரத்தில் பந்த் நன்றாக நடக்கும்படி நீங்கள் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும்.''

டி.ஐ.ஜி. நரஹரி தொண்டையைக் கனைத்துக் கொண்டார். ராணா அவரையே பார்த்தான். ஐந்தடி இரண்டங்குலம் உயரத்தில், மார்பின் சுற்றளவு இருபத்தெட்டு அங்குலம் மட்டுமே கொண்ட இந்த ஆள் எப்படித்தான் டி.ஐ.ஜி. ஆனார் என்பது பதில் கிடைக்காத கேள்வி.

நரஹரி பணிவாகப் பதிலளித்தார். ''சார்... இந்த பந்த் மூலமாக எந்த ரகளையும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது எங்கள் பொறுப்பு. அதை எங்களிடம் விடுங்கள்.''

''இதுக்குத்தான் ஐயா உங்க போலீஸ்காரங்களுக்கே புத்தி கிடையாது என்று சொன்னார் முதலமைச்சர். ரகளை நடக்கவில்லை என்றால் பந்த் என்ற வார்த்தைக்கு அர்த்தம் ஏது? நன்றாக ரகளை நடக்க வேண்டும். இதையெல்லாம் டில்லி அரசுதான் செய்ய வைத்ததுன்னு நாங்கள் சொல்லணும். அதனால்தான் எங்க ஆட்களை ஒரு லாரி நிறைய வரவழைத்திருக்கிறேன். ரகளை விஷயத்தை அவர்கள் பார்த்துக் கொள்வார்கள். இப்போ உங்களை

எல்லாம் இங்கே கூப்பிட்டதற்குக் காரணம் என்ன வென்றால், நீங்கள் எல்லோரும் இதைக் கண்டும் காணாததுபோல் சும்மாயிருக்க வேண்டும். நகரத்தில் கொஞ்சம் அமைதி அதிகமாகி விட்டாலும்போதும், என் மந்திரிப் பதவி கவிழ்ந்து விடும்.''

காவல் அதிகாரிகள் எல்லோரும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள்.

பிற்பகல் ஒரு மணிக்கு நடந்தது அந்தச் சம்பவம்.

பன்னிரண்டு மணி வரையிலும் எல்லாம் அமைதி யாகத்தான் இருந்தது. புயல் வருவதற்கு முன்னால் தோன்றும் அமைதி. ஒரு மணியளவில் ரேடியோக் கடை ஒன்று திறந்திருப்பதாய்ச் செய்தி எட்டியது. எல்லோரும் அங்கே போனார்கள்.

அதில் ஒருத்தன் டிரான்ஸிஸ்டரைப் பிடுங்கிக் கொண்டதால் ரகளை தொடங்கி விட்டது. அடுத்த நிமிடம் பெரிய கலகம் உருவாகி விட்டது. எங்கிருந்து வந்தார்களோ, புற்றிலிருந்து ஈசலாய் வந்து சேர்ந்து விட்டார்கள், சமுதாயத்திற்கு எதிராகச் செயல்படு பவர்கள். அடுத்த அரை மணியில் வீடுகள் பற்றியெரியத் தொடங்கின.

என்ன நடந்தாலும் கண்டும் காணாததுபோல் இருந்து கொள்ளச் சொல்லி ஆணை கிடைத்த காவல் அதிகாரிகள் பார்வையாளராகி விட்டார்கள். டி.ஐ.ஜி. நரஹரியின் மாமனார் முதலமைச்சருக்கு நெருங்கிய நண்பர். நரஹரிக்கு தன் பர்சனாலிடிக்கும், பர்சனல் ரிக்கார்டிற்கும் தான் டி.ஐ.ஜி. என்ன? நைட் வாட்ச்மேனாகக்கூட லாயக்கு இல்லை என்றும், எல்லாம் தன் மாமனாரின் தயவுதான் என்றும் தெரியும்.

பிரதான கடைவீதியை ஒட்டியிருந்த சந்திலிருந்து பாணா ஓடிவந்து கொண்டிருந்தான். அங்கே நின்று

கொண்டிருந்த போலீசார் அவனுக்கு சல்யூட் செய்து விட்டு ''சார்... செங்கய்யாவின் கடைப் பூட்டை உடைச்சிக்கிட்டு இருக்காங்க'' என்றார்கள்.

செங்கய்யாவின் கடை நகரத்திலிருந்த பெரிய ஜவுளிக் கடைகளில் ஒன்று.

''கமான்... ஃபாலோ மீ'' என்று சொல்லி விட்டு, வேகமாக பிரதான கடைத்தெருவுக்கு வந்தான். செங்கய்யா கடைக்கு முன்னால் ரௌடிகள் கும்பலாக நின்று கொண்டிருந்தார்கள். சற்று தொலைவில் குடிசை ஒன்று எரிந்து கொண்டிருந்தது. எங்கிருந்தோ தீயணைக் கும் வண்டியின் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. தெரு முழுவதும் கற்கள், பேப்பர் குப்பைகள், கண்ணாடித் துண்டுகள் சிதறிக் கிடந்தன. கடை கொள்ளையடிக்கப் பட்டால் கைக்கு அகப்பட்டதை சுருட்டிக் கொண்டு போகலாம் என்ற ஆசையுடன் அப்பாவி ஜனங்கள் தொலைவில் நின்று கொண்டிருந்தார்கள். பக்கத்துத் தெருக்களிலிருந்து மக்களின் இரைச்சல் கேட்டுக் கொண்டிருந்தது. நிலைமை எப்பொழுதோ கைவிட்டுப் போய்விட்டது. தெரு முனையிலிருந்த சினிமா தியேட்டர் இருந்த இடம் தெரியாமல் நாசமடைந்து விட்டது. தொலைவில் யாரோ இதயத்தைக் கசக்கிப் பிழிவதுபோல் அழுது கொண்டிருந்தார்கள்.

''சார்ஜ்...'' என்றான் ராணா.

அவனுக்குப் பின்னால் இருந்த போலீசார் ஒரு பட்டாளத்தைப் போல் முன்னால் பாய்ந்தார்கள். ஏற்கனவே அவர்கள் வயிறு பற்றியெரியத் தொடங்கி யிருந்தது. தம் கண் முன்னால் இத்தனைக் கொடுமை நடந்து கொண்டிருந்தபோதிலும், கைகளைக் கட்டிப் போட்டாற் போலிருந்தது இதுவரை. தம் மேலதிகாரி யிடமிருந்து உத்தரவு வந்ததுமே அவர்கள் ஆத்திரத்துடன் குண்டர்களின் மேல் பாய்ந்தார்கள்.

அதற்குள் தெருவிற்கு அந்தப் பக்கத்திலிருந்து அலறல்கள் கேட்டன. ராணா அந்தப் பக்கமாகப் போனான். அந்த இடத்தில் சின்னச் சின்ன குடிசைகளும், கடைகளும் இருந்தன. அவற்றிற்கு யாரோ நெருப்பு வைத்து விட்டார்கள். தினமும் பத்தோ பதினைந்தோ சம்பாதித்துக் கொண்டிருந்த சின்ன பெட்டிக்கடைக்காரர்கள் அவர்கள். இனி வாழ்க்கையில் முன்னுக்கு வர முடியாதபடி அவர்கள் ஜீவனாதாரங்கள் எரிந்து போய்க் கொண்டிருந்தன. ராணாவின் முகம் அந்தத் தீயை விடச் சிவப்பாக மாறியது.

''அரசாங்கம்... பிளடி அரசாங்கம்...'' என்று நினைத்துக் கொண்டான்.

செங்கய்யாவின் கடையின் முன்னால் நிலைமை ரொம்ப மோசமாக இருந்தது. போலீசார் சாதாரணமாக மக்களுக்கிடையே லத்தி சார்ஜ் செய்து கும்பலை கலைப்பார்கள். ஆனால் ஒரு போலீஸ் தன் வேலை ரீதியாய் பெறும் பயிற்சியைவிட ஒரு புரொபஷனல் போல் இதுபோன்ற காரியங்களில் நன்றாய் அனுபவம் பெற்றிருப்பான். அவர்களிடம் உள்ள ஆயுதங்களுக்கு முன்னால் போலீசாரின் துப்பாக்கிகள் நிற்க முடியாது. சுடலாம் என்பதற்கு மேலிடத்திலிருந்து உத்தரவு இல்லை. குண்டர்களுடைய கைதான் ஓங்கியிருந்தது. வெற்றி முழக்கம் செய்து கொண்டே அவர்கள் ஜீப்பில் ஏறினார்கள். சிலர் மக்களோடு கலந்துபோய் இன்னொரு கடைத் தெரு பக்கம் போவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள்.

அந்த நேரத்தில் குடிசைகளுக்கிடையே நடந்து கொண்டிருந்த ராணாவின் காலடியில் ஈரம் படவே குனிந்து பார்த்தான். மோர்...

அவன் தலையைத் திருப்பிப் பார்த்தான்.

பானை உடைந்து மோர் ஒழுகிக் கொண்டிருந்தது. அந்த வெண்மையான மோரோடு சேர்ந்து சிவப்பாய்... ரத்தம்!

கிழவி விழுந்து கிடந்தாள்.

அவளிடமிருந்த பத்து ரூபாய் சில்லரைக்காக எந்த ரவுடி தலையில் அடித்து உயிரை எடுத்தானோ தெரியாது. தேசியக் கொடியின் சிவப்பு வெள்ளை நிறத்திற்கிடையே ஆதரவில்லாமல் சிக்கிக் கொண்டிருந்த அசோகச் சக்கரத்தைப் போல் கிழவியின் உடல் உயிரற்று விழுந்து கிடந்தது.

விழுந்து கிடந்த அவள் உடல் உடைந்த ராட்டினத்தைப் போல் இருந்தது. தளர்ந்து போயிருந்த அந்த உடல் ஜனநாயகத்தை சவால் விட்டாற்போலிருந்தது.

''எனக்குப் பணம் தந்த முதல் போலீஸ்காரன் நீதான் தம்பீ'' என்ற வார்த்தைகள் பாதுகாப்பு ஸ்தாபனத்தையே உலுக்கியெடுப்பது போலிருந்தது.

ராணா நகர்ந்தான். அவனுக்கு போட்டோ கிராபிக் மூளை. ஒவ்வொரு குண்டாவையும் அவன் மூளை படம் பிடித்துக் கொண்டு விட்டது. மக்களை விலக்கிக் கொண்டு புகுந்து ஓடினான். அவன் கை மின்னலைவிட வேகமாக செயல்பட்டுக் கொண்டிருந்தது. துப்பாக்கிக்கூட தேவையாக இருக்கவில்லை. எதிரிகள்கூட சாதாரண மானவர்கள் இல்லை. ஆனாலும் சிங்கம்போல் சீறிப் பாய்ந்து வந்த அந்த இன்ஸ்பெக்டருக்கு முன்னால் நிற்க முடியவில்லை அவர்களால். சட்டம்... சட்டத்தின் எல்லைகள்... எதைப் பற்றியுமே அவன் யோசிக்க வில்லை. கண்ணில் தென்பட்டவர்களை எல்லாம்

அடித்தான். அவர்களை வேனுக்குள் இழுத்துத் தள்ளுவதுதான் மற்ற போலீசாரின் வேலையாக இருந்தது.

இருபது குண்டர்கள் பிணமாக மாறினார்கள். அரை மணி நேரத்திற்குள் நிலைமை கட்டுக்குள் வந்தது.

எம்.எல்.ஏ. நரசிம்மன் ரொம்ப சந்தோஷமாக ஆறாவது ரவுண்டில் இருந்தான். பிற்பகலுக்கெல்லாம் கடையடைப்பு வெற்றியடைந்ததாகத் தெரிய வந்தது. அப்பொழுதிலிருந்து குடித்துக் கொண்டேயிருந்தான்.

நரசிம்மன் அவ்வளவு சந்தோஷமாக இருந்ததற்குக் காரணம் இருக்கிறது. முதலமைச்சரின் பக்தன் அவன். அவருடைய ஆசிகளை எப்போதும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பான். நகரத்தில் பந்த் முற்றிலும் வெற்றி பெறுவதற்கான பொறுப்பைத் தன் தலைமேல் போட்டுக் கொண்டிருந்தான். அதோடு கண்காணிப்பதற்காக ஹோம்மினிஸ்டர் வரப்போகிறார் என்று தெரிந்ததும் மேலும் தீவிரமாக செயல்பட்டான். தன் செல்வாக்கைக் காட்டிக் கொள்வதற்காக லாரி நிறைய பெயர் பெற்ற குண்டர்களை கொண்டு வந்து குவித்தான்.

மாலை நாலு மணிக்குத்தான் தெரிந்தது குண்டர்கள் குற்றுயிராக அடிபட்டு அரெஸ்ட் ஆன விஷயம். கள்ளுக் குடித்த குரங்காய் குதித்தான். ஜீப்பைத் தானே ஓட்டிக் கொண்டு மணிக்கு நூறு கி.மீ. வேகத்தில் டிராவலர்ஸ் பங்களாவை நோக்கிப் பறந்தான். அவனுடைய ஆவேசத்தைக் கண்டு அவனுடைய கையாட்களே பயந்து போனார்கள். இது தன்னுடைய செல்வாக்கிற்கு சம்பந்தப்பட்ட விஷயமாக பாவித்து ஆவேசத்தால் கொதித்தெழுந்தான். ஆளும் கட்சியே பந்த் செய்வதற்கு அழைப்பு விடுத்திருக்க, ஹோம் மினிஸ்டரே நேரில் வந்து சொல்லியிருக்கும்போது, தன் பகுதியிலேயே அது தோற்றுவிட்டதென்றால், தன் நிலை என்னவாவது?

நாளைக்கு முதலமைச்சரின் முகத்தில் எப்படி விழிப்பது?

குண்டர்களுக்கும், குண்டுகளுக்கும் பெயர் பெற்ற தன் பகுதியிலேயே இப்படி நடந்ததாக பேப்பர்களில் வந்து விட்டால் நாளைக்கு சக எம்.எல்.ஏ.க்கள் அத்தனை பேரும் சிரிக்கமாட்டார்களா?

அவன் கால் ஆக்ஸிலேட்டரைப் பலமாக அழுத்தியது. ஜீப் ட்ராவலர்ஸ் பங்களாவுக்குள் அம்பாய் நுழைந்தது.

அப்பொழுது எதிர்பாராத ஒரு சம்பவம் நடந்தது. காலையிலிருந்து ட்யூட்டி செய்து களைத்துப் போயிருந்த போலீசாரும், அலைந்து திரிந்து வந்த ஹோம் கார்டுகளும் அந்த வளாகத்தில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார்கள். நரசிம்மனின் ஜீப் ஓரிருவரை மோதித் தள்ளி விட்டுச் சரேலென்று திரும்பி படிகளின் முன்னால் வந்து நின்றது. அவர்களுடைய ஓலங்கள் பிரேக் சத்தத்தோடு கலந்து விகாரமாக ஒலித்தன.

ஜீப்பை விட்டு இறங்கியதுமே நரசிம்மன் கத்தினான். ''எவண்டா அவன்? எவன் அரெஸ்ட் பண்ணினான்?''

அந்தச் சமயத்தில் ராணா உள்ளேயிருந்து வெளியே வந்து கொண்டிருந்தான். அதற்குள் குண்டர்களை விடுதலை செய்யும் விஷயமாக அரை மணி நேரமாக ஹோம் மினிஸ்டருடன் வாதாடி விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தான். நரசிம்மனின் கத்தலைக் கேட்டு விட்டு, ''நான்தான். ஏன்?'' என்று கேட்டான் எரிச்சலுடன்.

''அவங்களை உடனே வெளியில் விடுடா அயோக்கியப் பயலே! இல்லாவிட்டால் உன்னை ஒரு கை பார்த்து விடுகிறேன்'' என்று கத்தினான் நரசிம்மன்.

ராணா ஏற்கனவே எரிச்சலில் இருந்தான். வாதாடி வாதாடி சோர்ந்து போயிருந்தான் அவன். நரசிம்மனின் வார்த்தைகள் வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சினாற் போலிருந்தன. அதற்குள் அவன் பார்வை காயமடைந்த போலீசார் மீது விழுந்தது. அவனுடைய பொறுமை நசிந்து போய் விட்டது. எவ்வளவு நாட்களுக்குத்தான் இப்படி? என்றாவது இதற்கு ஒரு முடிவு ஏற்பட வேண் டும். போலீசார் நேரடி சாட்சிகளாக இருக்கிறார்கள்.

சட்டென்று விலங்கை வெளியே எடுத்து நரசிம்மனின் கையில் மாட்டி விட்டு ''அலட்சியமாக ஜீப்பை ஓட்டி விபத்தை ஏற்படுத்தியதற்கு உன்னை அரெஸ்ட் செய்கிறேன்'' என்றான். எதிர்பாராத இந்தச் சம்பவத்தால் நரசிம்மன் விக்கித்துப் போய்விட்டான்.

போலீசாரின் முகத்தில் ஆனந்தம் தென்பட்டது. ஒரு பெரிய வெடிப்பிற்கு ஆரம்பமாகி திரி பற்றிக் கொண்டு விட்டது. அது வெடிக்குமோ பிசுபிசுத்துப் போகுமோ காலம்தான் முடிவு செய்ய வேண்டும். அந்த விதமாக ஒரு விநோதமான சரித்திரத்திற்கு ஆரம்ப அத்தியாயம் தொடங்கி விட்டது.

போலீஸ், வயர்லெஸ், பாலிடிக்ஸ்.

சொற்ப நேரத்திற்குள் அங்கே நிலைமை மோசமாகி விட்டது. நரசிம்மன் ஐந்தே நிமிடங்களில் பெயிலில் விடுதலையானான். அங்கே பிரச்னை அது இல்லை. அரசியலில் புதைந்துபோய் நகரத்திலேயே பெரும் புள்ளியாய் இருந்த ஆள் நரசிம்மன். அவன் எந்தக் கட்சியை ஆதரித்தாலும் அது பதவிக்கு வருவது நிச்சயம். அப்படிப்பட்டவனை அரெஸ்ட் செய்வது என்றால்?

அரசியல் தலைவர்கள் எல்லோரும் இதைத் தமக்கே நிகழ்ந்த அவமானமாகப் பாவித்தார்கள். போன்கள் பறந்தன. ராணாவை சஸ்பென்ட் செய்ய வேண்டுமென்று முதலமைச்சர் மீது பிரஷர் கொண்டு வந்தார்கள்.

முதலமைச்சரும் அந்தக் காரியத்தைச் செய்திருப்பார். சாதாரண இன்ஸ்பெக்டருக்காக தலைவர்களை விரோதித்துக் கொள்வதில் அவருக்கு விருப்பம் இல்லை. ஆனால் காவல்துறையிலிருந்தும் அதே அளவுக்கு பிரஷர் வந்தது. ஜீப் ஆக்ஸிடெண்டில் காயமுற்ற போலீசாரின் நிலைமை அவ்வளவு ஆபத்தாக இல்லை என்றாலும், அந்தக் காட்சியைப் பார்த்த சாட்சிகள் நிறையபேர் இருந்ததால் ராணாவுக்கு சப்போர்ட் அதிகமாகி விட்டது.

தான் ஜீப்பை வேகமாக ஓட்டவில்லை என்றும், போலீசார்தான் குறுக்கே வந்தார்கள் என்றும் நரசிம்மன் வாதம் புரிந்தான். அடுத்த நிமிஷமே அதற்குச் சாட்சிகள் தயாராகி விட்டன.

போலீசாரை கொடுமையாகத் தாக்கிய எம்.எல்.ஏ. தப்பித்துக் கொண்டு விடக்கூடாது என்றும், கோர்ட் வரைக்கும்கூட இந்த விவகாரம் போகாமல் நாங்களே முடிவெடுத்துக் கொள்கிறோம் என்றும் சொல்லிப் போலீசார் ட்ராவலர்ஸ் பங்களாவை முற்றுகையிட்டார்கள். வெள்ளமாக வந்து மோதிய போலீசாரைப் பார்த்துப் பயந்துபோன அரசியல் தலைவர்கள் உள்ளே ஓடினார்கள்.

படிகளுக்கு அருகிலேயே ராணா அவர்களைத் தடுத்து விட்டான். பிஸ்டலை எடுத்து நெற்றிப் பொட்டில் குறி வைத்துக்கொண்டு ''நீங்கள் இங்கிருந்து போகவில்லை என்றால் பிஸ்டலால் சுட்டுக்கொண்டு இங்கேயே இறந்து போகிறேன். என் மீதும் சட்டத்தின் மீதும் கொஞ்சமாவது நம்பிக்கை இருந்தால் திரும்பிப் போய்விடுங்கள்'' என்றான். அவன் மீது அவர்களுக்கு மதிப்பு இருந்தது. வேறு வழியில்லாமல் பின்னால் நகர்ந்தார்கள்.

ஒருமுறை போலீசார் பின்வாங்கத் தொடங்கி விட்டார்கள் என்று தெரிந்ததுமே தலைவர்கள் இன்னும் உச்சிக்குப் போனார்கள். சமுதாயத்தைக் காப்பாற்ற வேண்டிய போலீசாரே இப்படி முற்றுகையிட்டதை பயங்கரமான விஷயமாக உருவகப்படுத்தினார்கள். மத்திய அரசுக்கு சொந்தமான வானொலி நிலையத்தின் முன்னால் அமைதியாகக் கூடி மறியல் நடத்த முனைந்தபோது போலீசார் தடுத்ததாக வாதாடத் தொடங்கினார்கள்.

முதலமைச்சருக்கு என்ன செய்வதென்று புரிய வில்லை. இந்தப் பக்கம் தன் கட்சித் தோழர்களையும் அவரால் விட்டுக் கொடுக்க முடியவில்லை. அந்தப் பக்கம் போலீசாரோடு தகராறு ஏற்படுத்திக் கொண்டு மக்களின் அன்பை இழக்கவும் முடியாது. இந்தப் பிரச்னைக்கு உடனடியாய் தீர்வு காணச் சொல்லி ஹோம் மினிஸ்டருக்கு உத்தரவு பிறப்பித்தார்.

ஹோம் மினிஸ்டரின் நிலைமை பாக்கு வெட்டிக்கு நடுவில் அகப்பட்டது போலாயிற்று. இப்படிப்பட்ட நிலைமையில் அவர் செய்வது ஒன்றுதான்.

மனைவியின் கைகளைப் பிடித்துக் கொள்வது. அந்த வேலையைத்தான் செய்தார். ''நீ எப்படியாவது இதைச் சரி செய்தாக வேண்டும்'' என்றார். காமினி மனோகரமாகச் சிரித்து விட்டு ''நரசிம்மனைக் கூப்பிடுங்கள். பேசுவோம்'' என்றாள்.

நரசிம்மன் ஒப்புக் கொள்ளவில்லை. ''காயமடைந்த ஒவ்வொரு போலீஸ்காரருக்கும் லட்சம் ரூபாய் நஷ்ட ஈடு தருகிறேன். அவர்களைக் கேசை வாபஸ் வாங்கச்

சொல்லுங்கள். அந்த ராணா மட்டும் எது எப்படி போனாலும் சஸ்பென்ட் ஆகித் தீரணும்.''

''அவனை சஸ்பென்ட் செய்தால் போலீசார் சமாதானத்திற்கு ஒப்புக்கொள்ளமாட்டார்கள்'' என்றார் ஹோம் மினிஸ்டர்.

காமினி சொன்னாள். ''லட்சம் ரூபாய் தந்தாலும் அவர்கள் சமாதானத்திற்கு ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்றால், போலீஸ்காரர்களுக்கு அவன்மேல் அவ்வளவு மதிப்பும் அன்பும் இருக்கும் என்று தோன்றுகிறது.''

''ஆமாம். அவன் ரொம்ப நேர்மையானவன்'' என்றான் நாயுடு.

''என்னதான் நேர்மையானவனாக இருந்தாலும் அவனைக் கொன்று குழி தோண்டி புதைக்காமல் விடக் கூடாது'' என்றான் நரசிம்மன்.

''பாவம்... அந்த இன்ஸ்பெக்டர் தானே துப்பாக்கியை நெற்றிப்பொட்டில் குறி வைத்துக் கொண்டு, நம்மைக் காப்பாற்றினான். இல்லாவிட்டால் போலீசார் உங்கள் மீது பாய்ந்திருப்பார்கள்.''

''ஆமாம். அதனால்தானே நம்ப வண்டவாளமெல்லாம் மக்களுக்குத் தெரிந்து போய் விட்டது. என்னதான் சென்சார் பண்ணியும் செய்தி எல்லாப் பேப்பர்களிலும் வெளியாகி விட்டது. என் கைகளுக்கு விலங்கிட்டவன் உயிரோடு இருக்கக் கூடாது.''

''உங்கள் எண்ணம்தான் என்ன? சரியாகச் சொல்லுங்கள். அந்த ராணா சாகணுமா? அல்லது சஸ்பென்ட் ஆகணுமா? எது வேண்டும் உங்களுக்கு?''

காமினி கேட்ட கேள்விக்கு நரசிம்மனால் உடனே பதில் சொல்ல முடியவில்லை. தடுமாறினான்.

நிசப்தத்தை தமக்கு அனுகூலமாக மாற்றிக் கொள்வது தான் புத்திசாலிகளின் லட்சணம். காமினி சொன்னாள்.

''நீங்கள் அவனைச் சஸ்பென்ட் செய்ய வைத்தீங்க என்று வையுங்கள். அதோடு எல்லோரும் உங்கள் பகை குளிர்ந்து விட்டது என்றெண்ணிக் கொள்வார்கள். போலீசார் தகராறு செய்தால் கொஞ்ச நாள் கழித்து அவன் சஸ்பென்ஷனைக் கேன்சல் செய்து விடுவார்கள். அப்போது உங்களைப் பார்த்து எல்லோரும் சிரிப்பார்கள். அதற்குப் பிறகு அவனைக் கொலை செய்ய வைக்கிறீங்க என்று வையுங்கள். அந்தக் கொலையை நீங்கதான் பண்ண வைத்திருப்பீர்கள் என்றும், உங்கள் பழியைத் தீர்த்துக் கொண்டு இருப்பீங்க என்றும் யாரும் நினைக்க மாட்டார்கள். இதனால் உங்கள் மதிப்பு கொஞ்சம்கூட அதிகரிக்கப்போவதில்லை. இதைவிட நல்ல வழி வேறு ஒன்று இருக்கிறது. நீங்கள் அவனை இங்கிருந்து டிரான்ஸ்ஃபர் செய்ய வைத்தீங்கன்னு வையுங்கள், அவன் சஸ்பென்ட் ஆகாததால் நீங்கள் தோற்றுப் போய்விட்ட தாக நினைத்துக் கொள்வார்கள். இரண்டு மாதங்களுக்கு அப்புறமாக நீங்கள் அவனைக் கொலை செய்ய வைக்கிறீங்கன்னு வையுங்கள், ''நரசிம்மனின் பழி என்றால் இப்படித்தான் இருக்கும்'' என்று எல்லோரும் நினைத்துக் கொள்வார்கள். உங்க ஆட்களுக்கிடையே உங்கள் மதிப்பு பெருகும். போலீசாருக்கு உண்மை தெரிந்தாலும் உங்கள் மேல் எந்தக் கேசும் போட முடியாது. எப்படி இருக்கிறது யோசனை?''

''அம்மாடி என் பெண்டாட்டியே'' என்று அசந்து போனான் டி.கே.நாயுடு தன் மனைவியைப் பார்த்து. நரசிம்மன் எழுந்துகொண்டு ''சரி, அப்படியே செய்து விடுவோம். ஆனால் அவனை ஒரு மாதத்திற்கு மேல் உயிரோடு விட்டு வைக்கமாட்டேன்'' என்றான். ''இந்த ஒரு மாதம்கூட அவன் நிம்மதியாக இருக்கக் கூடாது. திருடர்கள், குண்டர்கள் அதிகமாக இருக்கும் ஊருக்கு டிரான்ஸ்ஃபர் செய்யணும்.''

''ஸ்டுவர்ட்புரத்திற்கு அனுப்பி விடுவோம்'' என்றார் ஹோம் மினிஸ்டர்.

''ஸ்டுவர்ட்புரத்தில் போலீஸ் ஸ்டேஷன் இருக்கோ இல்லையோ?'' என்றாள் காமினி. நாயுடு நாக்கைக் கடித்துக் கொண்டான். தன் அறிவீனத்தை மூடி மறைப்பதற்காக ''என்ன? அப்படிப்பட்ட ஊரில் போலீஸ் ஸ்டேஷன் இல்லையா?'' என்றான் வியப்புடன்.

ஜெயிலிலிருந்து விடுதலையானவர்களுக்கு மறு வாழ்க்கை அமைத்துத் தருவதற்காக முன்பு இந்த ஊருக்கு அனுப்பி வைப்பார்கள். இதை செட்டில்மென்ட் ஏரியா என்பார்கள். பெரிய திருடர்களைப் பற்றியாவது, கைதேர்ந்த குண்டர்களைப் பற்றியாவது பேச நேர்ந்தால் ''ஸ்டுவர்ட்புரம் கேசா?'' என்பார்கள். திருடர்களுக்கு அந்த ஊர் பெயர் பெற்றிருப்பதாக வெளியார் நினைத்துக் கொண்டிருந்தார்கள். அப்படிப்பட்ட ஊரில் போலீஸ் ஸ்டேஷன் இல்லை என்றால், நாயுடுவுக்கு ஆச்சரியம் ஏற்பட்டதில் வியப்பு எதுவும் இல்லை.

''இந்த நாட்டில் எல்லா ஊர்களுமே ஸ்டுவர்ட்புரங்கள் தான். எங்கே போட்டாலும் அதே கஷ்டங்கள்தான்'' என்றாள் காமினி.

நரசிம்மன் போய்விட்டான் திருப்தியடைந்தவனாய்.

நாயுடு மனைவியிடம் ஓடி வந்து அவள் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

''உண்மையில் உன் யோசனை ரொம்ப அற்புதம் காமினி. நரசிம்மன் தன் பிடிவாதத்தையும் தளர்த்திக் கொண்டு விட்டான் என்றால் நம் முதலமைச்சருக்கு பெரிய நிம்மதி. அதற்குப் பிறகு அவர்கள் எப்படி வேண்டுமானாலும் ஒழியட்டும். முதலில் பிரச்னை தீர்ந்து விட்டது. அது சரி, அந்த இன்ஸ்பெக்டரின் மாற்றல் விஷயம் ஒன்று இருக்கிறது இல்லையா? ஆனாலும் நரசிம்மன் போன்ற பழம் தின்று கொட்டை போட்ட அரசியல் தலைவனையே நிமிஷத்தில் அடக்கி விட்ட உனக்கு இது ஒரு விஷயமா?''

அவள் அதே முறுவலுடன் ''அந்த இன்ஸ்பெக்டரைக் கூப்பிடுங்கள்'' என்றாள்.

ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு ராணா கதவைத் தள்ளிக் கொண்டே ''மே ஐ கமின் சார்'' என்றான்.

சரியாய் அந்தச் சமயத்தில் காமினி காபி கோப்பையை வாயில் வைக்கப் போனாள். அவனைப் பார்த்ததுமே அவளிடம் ஒருவிதமான படபடப்பு ஏற்பட்டது. அந்தப் படபடப்பு அவள் உடலை சிலிர்க்கச் செய்தது. ராணா பெரிய அழகன் ஒன்றுமில்லை. ஆனால் அவன் தோற்றத்தில் இருந்த ஆண்மை, மிடுக்கு அவளைக் கவர்ந்து விட்டது. அவளுடைய அந்தரங்க வாழ்க்கை யைப் பற்றி வெளியில் தெரியாமல் இருக்கலாம். ஆனால் நிச்சயமாக அவளுக்கு சினிமாத் துறையிலும் சரி, அரசியல் துறையிலும் சரி பல பேருடன் நெருக்கம் இருந்தது.

ஆனால் யாருமே அவளை இந்த விதமாய் நிலை தடுமாறச் செய்ததில்லை.

மனைவி திடீரென்று மௌனம் சாதித்ததை நாயுடு கவனித்தான். ஆனால் அவனுக்கு பெண்களில் உள் மனதில் இருப்பதைப் புரிந்து கொள்ளக்கூடிய பக்குவம் இல்லை. இது ரொம்ப சின்ன விஷயம் இல்லையா? அதனால் தன்னையே கவனித்துக் கொள்ளச் சொல்லி மனைவி விட்டு விட்டாள் போலும் என்றெண்ணிக் கொண்டான்.

''இதோ பார் ராணா! நம்ப எம்.எல்.ஏ.வை நீ செய்த காரியத்திற்கு கஷ்டப்பட்டு ஜாமீனில் வெளியே கொண்டு வந்துட்டோம் என்று வைத்துக்கொள். ஆனாலும் அவர் ரொம்பக் கோபமாக இருக்கிறார்'' என்றான்.

தன்னை வரச்சொல்லி அழைத்திருக்கிறார்கள் என்றதுமே விஷயம் ஏதோ இருக்கிறது என்று ராணா நினைத்துக் கொண்டான். ஹோம் மினிஸ்டர் இப்படிச் சொன்னதுமே ''அதற்கென்ன வந்தது சார்! அரெஸ்ட் என்றால் மனம் வருத்தப்படத்தானே செய்யும்? நாளைக்குப் பேப்பர்களில் இந்தச் செய்தி வந்து விட்டால் இன்னும் அவமானம். நான்கூட ரொம்ப வருத்தப்படு கிறேன்'' என்றான்.

ராணா இவ்வாறு சொன்னதுமே நாயுடுவின் முகம் மலர்ந்தது. ''நடந்தது என்னவோ நடந்து விட்டது. இனிமேல் நடக்க வேண்டியதைக் கவனி. நடந்ததை எண்ணி வருத்தப்படுவதில் என்ன பிரயோஜனம்?'' என்றான்.

''நான் வருத்தப்படுவதுகூட நடக்கப் போவதை நினைத்துத்தான் சார்! போலீசார் மீது செய்த தாக்குதலில் அவர் கஷ்டப்பட்டு ஜாமீன் வாங்கிக் கொண்டு விட்டார். இப்பொழுது லாக்கப்பில் இருக்கும் குண்டர்களைச் செம்மையாய் உதைத்தபோது அவர்கள் உண்மையைச் சொல்லி விட்டார்கள். எம்.எல்.ஏ. நரசிம்மன்தான் தங்களை அழைத்துக்கொண்டு வந்ததாய் ஒப்புக் கொண்டார்கள். அதனால் இப்பொழுது இங்கிருந்து வெளியேறியதுமே அவசரமாக அவரை வேறு செக்ஷனில், மறுபடியும் அரெஸ்ட் செய்யணும். அதுதான் வருத்தமாக இருக்கிறது'' என்றான்.

நாயுடுவின் முகம் வெளிறிவிட்டது. ''இன்னொரு தடவை அவரை அரெஸ்ட் செய்யப் போகிறாயா? உன்னை சஸ்பென்ட் செய்யாமல் விட்டுவிடச் சொன்னது அவர்தான் தெரியுமா?'' என்றான், தன் அரசியல் ஞானத்தால் சமாதானத்திற்கு முதல் படியாய்.

''அவருக்கு என் நன்றியைத் தெரிவியுங்கள். உண்மையில் என்னை சஸ்பென்ட் செய்திருந்தால் அந்த அவமானத்தைத் தாங்கிக் கொள்ள முடியாது என்னால். இந்தக் காக்கிச் சட்டை என்னை ரொம்பவும் தொந்தரவு செய்கிறது.''

நாயுடு முகம் மலர ''பார்த்தாயா!'' என்றார்.

''இருங்க. நான் சொல்ல வந்ததை நீங்க முழுவதுமாக கேட்கவில்லை. இந்தக் காக்கிச் சட்டை என்னை ரொம்பவும் தொந்தரவு படுத்துகிறது. அவர் சஸ்பென்ட் செய்ய வைத்தால், நான் சாதாரண சட்டையைப் போட்டுக் கொண்டு அவரை நடுத்தெருவில் நிர்வாணமாக நிற்க வைத்து அடித்திருப்பேன்'' என்றான் சர்வ சாதாரணமாக.

டி.கே.நாயுடுவிற்குத் தலை சுற்றியது. இதற்கு முன்னால் என்னவோ தெரியாது. ஆனால் ஹோம் மினிஸ்டர் ஆன பிறகு அவனோடு யாரும் இதுபோல் பேசியதில்லை. கோபத்தால் முகம் சிவக்க '' நீ யாருடன் பேசுகிறாய் தெரியுமா?'' என்று கத்தினார்.

ராணா சிரித்தான். ''தெரியும் சார்! மத்திய அரசுக்கு எதிராக பந்த் ஏற்பாடு செய்த மாநில அரசை சேர்ந்த ஆளும் கட்சியின் பிரமுகருடன். வானொலி நிலையம் மத்திய அரசை சேர்ந்தது என்பதால் அதை நிர்மூலம் செய்து விடணும் என்று நினைத்த மாநில அரசியல் பிரதி நிதியோடு... பந்தை ஏற்பாடு செய்வதற்காக அரசாங்கச் செலவில் ஊரெல்லாம் சுற்றிக்கொண்டு, முகாமிட்ட அரசியல் தலைவர் ஒருத்தரோடு... எந்த அரசின் கீழே வேலை செய்வது என்று தெரியாமல் மக்களின் சொத்தைக் காப்பாற்ற முனைந்த போலீசார் மீது ஜீப்பை ஏற்றிய ஒரு குண்டர் தலைவனை அரெஸ்ட் செய்தால், அந்த குண்டர் தலைவனின் தயவு தாட்சண்யத்தை வேண்டி என்னை சஸ்பென்ட் செய்வதா வேண்டாமா என்று யோசிக்கும் மதிப்பிற்குரிய ஹோம் மினிஸ்டரோடு...''

அவன் வார்த்தைகளை இடைமறித்து ''ராணா!'' என்றாள் காமினி. வீணையின் தந்தியை இழுத்து விரலால் மீட்டினாற்போன்ற குரலைக் கேட்டு அவன் அவள் பக்கம் திரும்பினான்.

அவள் சொன்னாள்.

''நாயுடு ரொம்பத் தொல்லையில் மாட்டிக் கொண்டி ருக்கிறார் ராணா! முதலமைச்சர் அவர் மீது பெரிய பொறுப்பைச் சுமத்தியிருக்கிறார். இந்தப் பிரச்னையை எப்படித் தீர்த்து வைப்பது என்றுதான் புரியவில்லை'' என்று கொஞ்ச நேரம் நிறுத்தி விட்டுத் தொடர்ந்தாள்.

''நரசிம்மனுக்கு ஊரில் ரொம்பச் செல்வாக்கு இருக்கிறது. அவரை பகைத்துக் கொண்டு எங்கள் கட்சி நீடித்து இருக்க முடியாது. அப்படிப்பட்ட ஆளை நீ நேர்மையோடு அரெஸ்ட் செய்திருக்கிறாய். ஹேட்ஸ் ஆஃப் டு யூ. ஆனால் இவ்வளவு அவமானத்தை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. உன்னை சஸ்பென்ட் செய்வது எங்களுக்கு கஷ்டமான காரியம் இல்லை. ஆனால் அப்படிச் செய்தால் போலீஸ்படை உடனே எதிர்ப்பு தெரிவிக்கும். இதையெல்லாம் உன்மீது இரக்கப்பட்டோ அல்லது போலீசுக்குப் பயந்தோ நாங்கள் தடுக்கவில்லை. உண்மையாகச் சொல்லணும் என்றால் பத்திரிகைகளுக்குப் பயந்து, மக்களின் ஆதரவை எங்கள் கட்சி இழக்க நேருமோ என்று பயந்து, உன்னை சஸ்பென்ட் செய்ய முடியாத நிலையில் இருக்கிறோம். அரசியல் பற்றி உனக்குத் தெரியாதா என்ன? அதனால் இப்பொழுதுதான் நரசிம்மனுடன் பேசினோம். உன்னை சஸ்பென்ட் செய்யாமல் டிரான்ஸ்ஃபர் செய்து விட்டால் போதும் என்று அரும்பாடுபட்டு அவரை சம்மதிக்க வைத்தோம். நாங்கள் ஏதோ உனக்கு உதவி செய்து விட்டதாக எண்ணி விடாதே. எங்களுக்கு நாங்கள் செய்து கொண்ட உதவி இது. பந்து இப்போது உன் கோட்டில் இருக்கிறது. நெற்றிப்பொட்டில் துப்பாக்கியை குறி வைத்துக் கொண்டு போலீசாரைத் தடுத்தாய். இப்பொழுதுகூட அதேபோன்று தியாகத்தைச் செய். உன்னை நாங்கள் டிரான்ஸ்ஃபர் செய்வது உன்னுடைய விருப்பத்தின் பெயரில்தான் என்று போலீசாருக்கும் பத்திரிகைக்காரர்களுக்கும் சொல்லு. அவர்கள் பக்கத்திலிருந்து எந்த ரகளையும் வராமல் பார்த்துக் கொள். ''உன் உதவிக்கு அரசு கட்டாயம் நன்றி செலுத்தும்'' போன்ற ஆசை வார்த்தைகளுக்கெல்லாம் நீ

மசியமாட்டாய் என்று எனக்குத் தெரியும். இதை எல்லாம் உன் மீது பிரஷர் கொண்டு வருவதற்காக இல்லை. எங்களுடைய வேண்டு கோள்! அவ்வளவுதான். சம்மதிக்கிறாயா?''

அவள் குரலில் லாஜிக் இருந்தது.

ராணா தலையை அசைத்து விட்டு ''அதனால் என்ன? அப்படியே ஆகட்டும்'' என்றான்.

கணவன் மனைவி இருவரும் ஆச்சரியமடைந்து விட்டார்கள். அவன் இவ்வளவு சுலபமாக ஒப்புக் கொள்வான் என்று கனவிலும் நினைக்கவில்லை. ''தாங்க்ஸ்! உண்மையிலேயே தாங்க்ஸ். என்னைவிட சின்னவனாக இருந்தாலும் உனக்கு தாங்க்ஸ் சொல்லிக் கொள்கிறேன். ரொம்ப இக்கட்டான நிலைமையிலிருந்து என்னைக் காப்பாற்றினாய்'' என்றான் நாயுடு.

ராணா பதில் சொல்லவில்லை. கதவை நோக்கி நடந்தான். நாயுடு மறுபடியும் சொன்னான். ''உன்னைப் போன்ற நல்லவனும், நிலைமையைப் புரிந்து கொள்ளக் கூடியவனும் இன்னொருத்தன் இருப்பான்னு நான் நினைக்கவில்லை. உன்னைப்பற்றி எங்க ஆட்களிடம் நல்லவிதமாக சொல்கிறேன்.''

அப்பொழுது ராணா கதவுக்கு அருகில் நின்று திரும்பிப் பார்த்தான். ''எந்த விதமாக சொல்வீங்கன்னு எனக்கு நன்றாகத் தெரியும் சார். அவ்வளவு ஏன்? நான் இந்தப் பக்கமாக வெளியே போனதுமே என்னைப்பற்றி என்ன பேசிக் கொள்வீங்கன்னும்கூட எனக்குத் தெரியும். நீங்கள் சந்தோஷமாய் ஓடிப்போய் உங்கள் மனைவியின் கையைப் பிடித்துக் கொண்டு ''எவ்வளவு நன்றாக அந்த இன்ஸ்பெக்டரை வலையில் வீழ்த்தி விட்டாய். காமினி!

உன் நடிப்பைப் பார்த்தால் எனக்கே மதி மயங்கி விட்டது. நீ ரொம்ப உயர்ந்தவன் என்று அந்த இன்ஸ்பெக்டரை வானளவிற்குப் புகழ்ந்து, காரியத்தைச் சாதித்துக் கொண்டு விட்டாய். நீ கேட்க வேண்டுமே தவிர இல்லை என்று சொல்லக்கூடிய ஆண்தான் இந்த உலகத்தில் உண்டா?'' என்பீங்க. உங்க மனைவி பெருமையுடன் சிரிப்பாள். அதற்குப் பிறகு முதலமைச்சரிடம் போய் ''பாம்பும் சாகாமல், தடியும் உடைந்து போகாமல் காரியத்தைச் சாதித்துக் கொண்டு வந்து விட்டோம் சார்'' என்பீங்க. சார்! எங்க டிபார்ட்மென்டிற்கு மிக உயர்வான பதவியில் இருக்கிற ஹோம் மினிஸ்டர் நீங்கள், டிபார்ட்மென்ட் என்கிற இயந்திரத்தில் உள்ள சிறிய போல்ட் போன்ற இன்ஸ்பெக்டர் நான். இப்படிப்பட்ட என்னிடமிருந்து காரியத்தை சாதித்துக் கொள்வதற்காக நீங்கள் உங்கள் மனைவியைப் பயன்படுத்திக் கொண்டீங்க என்றால்...'' கொஞ்சம் நிறுத்தி விட்டுச் சொன்னான். ''எனக்கு இரக்கமாக இருக்கிறது சார். அந்த இரக்கத்தால்தான் டிரான்ஸ்பருக்கு ஒப்புக் கொண்டேனே தவிர, உங்க மனைவியின் மனோகரமான சிரிப்பிற்கோ, பேச்சுக்கோ இல்லை.''

நாயுடுவின் முகம் சிவந்து விட்டது. மினிஸ்டரான பிறகு அவனை யாரும் இந்த அளவிற்கு தாக்கியதில்லை.

ராணா கதவைச் சாத்தும் முன் காமினியைப் பார்த்துச் சிரித்தான். ''உங்க சினிமா என்றால் என் தம்பிக்கு ரொம்பப் பிடிக்கும் மேடம். அது ஏன் என்று இப்பொழுதுதான் எனக்குத் தெரிந்தது. நீங்க ரொம்ப நன்றாக நடிக்கிறீங்க. கங்கிராட்ஸ்!''

கணவன் மனைவி இருவரும் வாயடைத்துப் போய் உட்கார்ந்திருந்தார்கள்.

ராணா சாமான்களை மூட்டை கட்டிக் கொண்டிருந்தான்.

அவனுக்குத் தம்பியைத் தவிர யாருமே இல்லை. அக்கா திருமணம் ஆகிக் கணவனோடு குடித்தனம் நடத்திக் கொண்டிருந்தாள். மறுநாள் வருஷப் பிறப்பு. ஆனாலும் உடனே அவன் அந்த ஊரை விட்டுப் போய்விடத் தீர்மானித்துக் கொண்டு விட்டான். அவன் ஊழியர்கள் போக வேண்டாம் என்றார்கள். ஆனால் அவன் கேட்டுக் கொள்ளவில்லை. ''இங்கே இருந்தால் தினமும் நரசிம்மனோடு தகராறுதான். அதற்கு நான் பயப்படவில்லை. ஆனால் எத்தனையோ குற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டிய ஒரு இன்ஸ்பெக்டரின் நேரம் இந்த விதமாக ஒரு நபருக்காக வீணாவதை நான் விரும்பவில்லை. இன்னொரு இடத்தில் இன்னொரு நரசிம்மனைப் பிடிக்கப்போய்க் கொண்டிருக்கிறேன். அவ்வளவுதான்.''

அவன் போக வேண்டிய ஊரில் அவனுக்கு யாரையுமே தெரியாது. அதனால் எல்லா சாமான்களையும் எடுத்துச் செல்லவில்லை அவன். வீடு பார்த்துக் கொண்ட பிறகு எஞ்சிய சாமான்களை எடுத்துப் போகலாம் என்று நினைத்தான். அவன் போக வேண்டிய ரயில் நள்ளிரவு ஒரு மணிக்குத்தான். அப்பொழுது நேரம் பதினொன்றரை. இன்னும் நிறைய நேரம் இருந்ததால், அவன் பெட்டியின் மீது சாய்ந்தாற்போல் படுத்துக் கொண்டு புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தான்.

ஊர் முழுவதும் உறக்கத்தில் ஆழ்ந்துபோய் ரொம்ப நேரமாகியிருந்தது.

நிசப்தத்தைச் சிதறடித்துக் கொண்டு வெளியே லேசாக சந்தடி கேட்டது. கதவு திறந்துதான் இருந்தது. அவன் சட்டென்று எழுந்து உட்கார்ந்து கொண்டான். தன்னை யறியாமல் அவன் கை துப்பாக்கியின் மேல் படிந்தது.

வெளியே காலடியோசை நெருங்கியது.

கதவு அருகில் ஒரு உருவம் வந்து நின்றது.

மின்னல் வேகத்தில் நகரப் போனவன் சிவப்பு விளக்கைப் பார்த்தவன்போல் அப்படியே நின்று விட்டான்.

எதிரே காமினி நின்று கொண்டிருந்தாள்.

அந்த இரவு வேளையில் அவள் அங்கே வருவாள் என்று எதிர்பார்த்திருக்கவில்லை அவன்.

''உள்ளே வரச் சொல்றீங்களா? அல்லது இங்கேயே நின்று கொண்டு பேசச் சொல்றீங்களா?'' முறுவலுடன் கேட்டான்.

''வாங்க'' என்றான்.

''வேண்டாம். போய் விடுகிறேன். நல்ல வேளையாக அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் எல்லோரும் தூங்க றாங்க. யாராவது அடையாளம் புரிந்து கொண்டு விட்டால் ஆபத்து.''

''அப்படிப்பட்ட ஆபத்து உங்களுக்கு ஒன்றும் வராது.''

''ஆபத்து எனக்கு இல்லை, உங்களுக்கு'' என்றாள் அவள்.

அவனால் பதில் பேச முடியவில்லை.

''ஆமாம் ராணா! நரசிம்மனோடு எங்கள் ஒப்பந்தம் உங்களை டிரான்ஸ்ஃபர் பண்ணும் வரையில்தான் என்று உங்களிடம் சொன்னோம். ஒரு மாதத்திற்குப் பிறகு உங்களைக் கொலை செய்வதும் அந்த ஒப்பந்தத்தில் ஒரு பாகம் என்று சொல்லவில்லை. அதைச் சொல்லத்தான் வந்தேன்.''

ராணா இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. அவள் சொன்னாள், ''எப்படியாவது எங்களுடைய காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் முயற்சியில், உங்களிருவருக்குமிடையே சமாதானத்தை ஏற்படுத்தணும் என்றுதான் இந்த முடிவிற்கு வந்தோமே தவிர, கேவலம் உங்கள் டிரான்ஸ்ஃபர் மூலமாய் நரசிம்மனின் ஆத்திரம் தணிந்து போய்விடுமா என்ன? உங்கள் மேல் அவன் ரொம்ப பழியுணர்வோடு இருக்கிறான். இங்கே இல்லாமல் வேறு ஊரில் உங்களைக் கொல்லுவது சுலபம் என்று யோசனை சொன்னது நான்தான்.''

அவன் வியப்படைந்து அவளை நம்ப முடியாதவனாகப் பார்த்து, ''அவ்வளவு நல்ல யோசனை சொன்ன நீங்கள் இப்பொழுது இங்கே வந்து எனக்கு இந்த விஷயத்தை ஏன் சொல்றீங்க?''

''நான் அந்த யோசனை சொன்ன சமயத்தில் உங்களைப் பார்த்திருக்கவில்லை என்பதால்.''

மிகச்சிறிய வார்த்தை அது. அம்பாய்த் தாக்கியது. அவன் சரேலன்று நிமிர்ந்தான்.

அவள் வாசல் பக்கம் திரும்பிக் கொண்டே சொன்னாள். ''நான் ஒரு திறமையான நடிகை என்று உங்க தம்பி போன்றவர்கள் சொல்லலாம். தத்ரூபமாக நடிப்பேன் என்று எல்லோருக்கும் தெரியும். மனம் லயித்து நடிப்பேனே தவிர மனதுடன் நடிக்க மாட்டேன் என்று யாருக்கும் தெரியாது.''

அவள் நிழல் இருட்டில் கலந்து விட்டது. அப்படியே உட்கார்ந்து விட்டான் அவன். அன்று பிற்பகல் தான் பேசிய பேச்சுக்கள் நினைவிற்கு வந்தன. அந்த உரையாடலுக்கு கமாதான் ஏற்பட்டதே தவிர முற்றுப்புள்ளி ஏற்பட்டதாகத் தோன்றவில்லை.

வேகமாக வெளியே வந்தான். பேச வேண்டியது அப்படியே பாக்கியிருந்தது.

டிரைவர் இல்லை. அவள்தான் ஸ்டீரிங்கிற்கு முன்னால் உட்கார்ந்திருந்தாள்.

அவன் வருவதைப் பார்த்தவள், காரைக் கிளப்பி நிறுத்தி விட்டு ''தேங்க்ஸ் சொல்ல வந்தீங்களா?'' என்றாள்.

''இல்லை. ஸ்டேஷன் வரையிலும் லிஃப்ட் தருவீங்களான்னு கேட்கத்தான் வந்தேன். நீங்கள் ஒன்றும் பயப்படமாட்டீங்க இல்லையா?'' என்றான், அவள் தடுமாறியதைப் பார்த்து விட்டுச் சீண்டுவதுபோல்.

''அப்படி எல்லாம் எதுவும் இல்லை. ஏறிக் கொள்ளுங்கள்.''

அவன் உள்ளே போய் பெட்டி படுக்கையை கொண்டு வந்து காரில் வைத்தான். அவள் காரை ஸ்டார்ட் செய்தபடி ''உங்களைக் கூட்டிச் செல்வதற்கு உங்கள் ஜீப் வராதா?'' என்று கேட்டாள்.

''பன்னிரெண்டரைக்கு வரச்சொல்லியிருந்தேன். ஆனாலும் இவ்வளவு நல்ல கம்பெனி இருக்கும்போது இனி அந்த ஜீப் எதுக்கு?''

அவள் சட்டென்று திரும்பி அவனைப் பார்த்தாள்.

அவன் சிரித்தான். கார் நகர்ந்தது.

அவன் சொன்னான், ''நரசிம்மனின் கையில் விலங்கைப் பூட்டியது பத்துபேர் பார்த்துக் கொண்டிருந்த போது. அவ்வளவு அவமானத்தை அவன் மென்று விழுங்கிக் கொண்டு சும்மாயிருக்கமாட்டான் என்று தெரியும் எனக்கு. அதற்குத் தண்டனையாய் நீங்கள் டிரான்ஸ்ஃபர் என்று சொன்னதுமே எனக்குச் சந்தேகம் வந்தது. நீங்க அப்போ சொல்லாததால் நானும் சொல்ல

வில்லை. இப்போ நீங்க சொன்னதால் நானும் சொல்கிறேன்.''

அவள் சந்தேகத்துடன் ''என்ன?'' என்றாள்.

''ஃபிரெஞ்சு மொழியில் ஒரு பழமொழி இருக்கிறது. உன் எதிரியை ரொம்ப நேரம் அடக்கி வைத்திருக்க வேண்டும் என்றால், அவ்வளவு நேரம் நீயும் தலைகுனிந்தபடி இருக்கணும்'' என்று. அதாவது அவ்வளவு நேரம் நமக்கு வீண்தான் என்று அர்த்தம். எங்க ஆட்களிடம் நானும் அதைத்தான் சொன்னேன். டிரான்ஸ்ஃபருக்கு நான் ஒப்புக்கொண்டதுகூட அதற்காகத் தான். என்னை எப்படி கொலை செய்வது என்று நரசிம்மன் இவ்வளவு நாளாக யோசித்து நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறான். அவன் கைக்கு விலங்கை பூட்டிய அடுத்த நிமிடமே நான் களத்தில் இறங்கி விட்டேன். அவனைப்பற்றி துப்புத் துலக்கினேன். ஒரு காலத்தில் அனாமத்தாய் இருந்த நரசிம்மன், இப்பொழுது எப்படி இவ்வளவு பணக்காரன் ஆனான்? அவன் எதற்காகப் பத்து நாட்களுக்கு ஒருமுறை ஸ்டூவர்ட்புரம் போகிறான்? போன போதெல்லாம் எதற்காக அரவிந்த் சௌரஸியாவைச் சந்திக்கிறான்?''

அவள் கைகள் ஸ்டீரிங்கின் மீது முறுக்கேறிக் கொண்டன. முகம் முழுவதும் வியர்த்துக் கொட்டியது. ஒரு காலத்தில் அவள் கணவன் அவளை நாகப்பாம்பு என்றெண்ணிக் கொண்டிருந்தான். அவளும் தன் பெயருக்கு ஏற்றாற்போலவே எத்தனையோ பேரை ஆட்டிப்படைத்தாள். ஆனால், இப்பொழுது தனக்குப் பக்கத்திலிருந்த இன்ஸ்பெக்டரைப் பார்த்து முதல் முறையாய் பயந்தாள். நரசிம்மனைப் பற்றிய சம்பவம் நிகழ்ந்து ஒருவாரம்கூட ஆகவில்லை. அதற்குள் இந்த

இன்ஸ்பெக்டர் இவ்வளவு விஷயங்களைக் கண்டு பிடித்திருக்கிறானே? முக்கியமாக அரவிந்த் சௌரஸியாவைப் பற்றிச் சொல்கிறான்.

அ...ர...வி...ந்...த்... சௌ...ர...ஸி...யா

அவள் தன் முகத்தில் உள்ள உணர்ச்சிகளை மறைத்துக் கொள்ள முயற்சித்தாள். ராணா சொல்லிக்கொண்டே போனான்.

''என் அதிர்ஷ்டம் நன்றாக இருக்கிறது. என்னை நீங்கள் சரியாய் அந்த அரவிந்த் சௌரஸியா இருக்கும் ஊருக்கே டிரான்ஸ்ஃபர் செய்திருக்கீங்க. தாங்க்ஸ்... நரசிம்மன் என்னைக் கொல்வதற்கு ஒரு மாத காலம் கெடு வைத்துக் கொண்டிருக்கிறான். ஆனால் நான் இன்னும் இருபத் தொன்பது நாட்களுக்குள்ளேயே அவனை ஒரு கை பார்த்து விடுகிறேன். தாங்க்ஸ்... ஸ்டேஷன் வந்து விட்டது. இனி காரை நிறுத்தறீங்களா?''

அவள் தன்னையறியாமலேயே காரை நிறுத்தினாள். அவன் சாமான்களை இறக்கிக் கொண்டே சொன்னான்.

''ஒவ்வொரு யுத்தத்திலும் ஒரு ராஜநீதி இருக்கும். இரண்டு பக்கத்தைச் சேர்ந்தவர்களும் அதைப் பின்பற்ற வேண்டும். என் கொலை பற்றிய விஷயத்தை நீங்கள் எனக்குச் சொன்னீங்க. அதை நான் ரகசியமாக வைத்துக் கொள்கிறேன். அதேபோல் நான் செய்யப்போகும் விசாரணை விஷயம்கூட நம்மிருவருக்குமிடையே இருக்கணும். இந்த ராஜநீதியை நீங்களும் பின்பற்று வீங்கன்னு நம்புகிறேன். உங்களுக்கு மற்றொரு முறை என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் ''

அவன் போய் விட்டான்.

தொலைவில் ரயில் கூவிய சத்தம் கேட்டது. ரயில் வந்து ஸ்டேஷனில் நின்றது. அவனை ஏற்றிக் கொண்டு நகர்ந்தது.

அவள் இன்னும் அப்படியே காரிலேயே உட்கார்ந் திருந்தாள். அவள் உடலில் உள்ள ரத்தமெல்லாம் வற்றி விட்டாற்போல் வெளிறிவிட்டது.

நாளை பிற்பகல் நேரத்துக்கு அந்த ரயில் சேர வேண்டிய இடத்திற்குப் போய்ச் சேர்ந்து விடும்.

அவளாகவே அவனை ''தன்'' ஊருக்கு டிரான்ஸ்ஃபர் செய்ய வைத்தாள். வாழ்க்கையில் முதல் முறையாக ஒரு ஆணைப் பார்த்து தன் வசமிழந்து விட்டாள். அதுதான் அவள் செய்த தவறா?

அதற்கு நஷ்டஈடு செலுத்த வேண்டியிருக்குமா? அவன் இறங்கியதுமே அரவிந்த் சௌரசியாவைப் பற்றி துப்புத் துலக்கத் தொடங்கி விடுவான்.

அவன் விசாரணை நரசிம்மனோடு முடிந்து விட்டால் நல்லது.

நிற்கா... விட்டால்?

தன் சாம்ராஜ்ஜியத்திற்குள் தன் அதிகாரத்தை மீறி ஈ ஒன்று புகுந்து விட்டாலும் அரவிந்த் சௌரசியாவால் மன்னிக்க முடியாது. ராணா நரசிம்மன் என்ற கயிற்றைப் பிடித்துக்கொண்டு போய்க் கொண்டிருக்கிறான். தும்பை நோக்கி அல்ல. அக்டோபஸ்ஸை நோக்கி.

2

"மோர் குடிக்கிறீங்களா சார்?" என்ற வார்த்தைகளைக் கேட்டு யோசனையிலிருந்து மீண்டு வந்த ராணா வேண்டாம் என்பதுபோல் தலையை அசைத்தான்.

ரயில் வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. அவன் இறங்க வேண்டிய ஊர் வருவதற்கு இன்னும் ஒரு மணி நேரம் இருந்தது. தான் இன்ஸ்பெக்டர் என்று சொன்ன பிறகு சிறுமி தாய்க்குப் பக்கத்தில் போய் உட்கார்ந்து கொண்டாள். அந்தத் தாய் தன்னையே வேண்டுகோளுடன் பார்த்துக் கொண்டிருந்ததைக் கவனித்து "அவரை எதற்காக லாக்கப்பில் போட்டாங்க?" என்று கேட்டான்.

"தெரியாதுங்க."

"அவர் என்ன வேலை செய்கிறார்?"

"ஜர்னலிஸ்ட்."

''எந்த ஊரில்?''

அவள் சொன்னாள். அவன் வியப்படைந்து ''பின்னே இந்த ஊரில் அரெஸ்ட் செய்திருப்பதாகச் சொன்னீங்களே?'' என்றான்.

''அவர் ஏதோ காரியமாக இந்த ஊருக்கு வந்தார். இங்கே அரெஸ்ட் செய்து விட்டார்களாம்.''

''எந்தக் காரியமாய்?'' போலீசுக்கே உரிய தோரணையில் கேள்விகளைக் கேட்டான் அவன்.

''தெரியாது. ஏதோ கட்டுரை எழுதுகிறார் அவர். அந்த வேலையாக இந்த ஊருக்குப் போவதாகவும் நான்கு நாட்களில் திரும்பி வந்து விடுவதாகவும் சொன்னார். நடுவில் இப்படி நடந்து விட்டது. அவருடைய அப்பாவுக்கு இந்த ஊர்தான். அவர் தந்தி கொடுத்ததால், நாங்கள் புறப்பட்டுப் போய்க் கொண்டிருக்கிறோம்.''

''அவர் எதைப் பற்றிக் கட்டுரை எழுதிக் கொண்டிருக்கிறார்?''

''சரியாக ஞாபகம் இல்லை. நடைபாதையில் வசிப்பவர்களைப் பற்றி என்று நினைக்கிறேன்.''

''அதற்காக இந்த ஊருக்கு வருவானேன்?'' வியப்புடன் கேட்டான்.

''தெரியாது. ஆனால் அவர் கிளம்புவதற்கு முதல் நாள் மட்டும் ரொம்பவும் யோசனையில் ஆழ்ந்து போனவராகத் தென்பட்டார்.''

ராணாவுக்கு ராஜா சந்திரன் என்ற சிறுவனைப் பற்றி நினைவுக்கு வந்தது. தான் முதலில் வேலை செய்து வந்த

ஊரில் தினந்தோறும் காலையிலேயே போலீஸ் ஸ்டேஷனுக்கு காபியும், டிபனும் கொண்டு வந்து கொடுப்பான். இரவு ஒரு மணி வரையிலும் ஹோட்டலில் வேலை செய்து விட்டு, ஹோட்டலுக்கு வெளியே இருக்கும் நடைபாதையிலேயே படுத்துக் கொள்வான். திடீரென்று கண்ணில் படாமல் போய் விட்டான். ஹோட்டல் முதலாளியைக் கேட்டபோது ''அவர்கள் அப்படித்தான் சார்! காற்றாடி போன்றவர்கள். வேறு இடத்தில் கொஞ்சம் நல்ல சம்பளம் கிடைத்தால் போதும், சொல்லாமல் கொள்ளாமல் போய் விடுவார்கள்'' என்றார். உண்மைதான் போலும். நள்ளிரவு வரையில் வேலை, திரும்பவும் விடிந்ததுமே எழுந்து பாத்திரங்களைக் கழுவுவதிலிருந்து தினப்படி காரியம் தொடங்கி விடும். பனியில், மழையில், புயலில்கூட ஹோட்டலுக்கு வெளியே திண்ணையில்தான் படுத்துக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்டவர்களின் வாழ்க்கையைப் பற்றி கட்டுரை!

அவன் அவர்களுக்கு ஆறுதல் சொல்வதற்காக ''நான் போவது அந்த போலீஸ் ஸ்டேஷனுக்குத்தான். விஷயம் என்னவென்று விசாரித்து விடுவிக்கிறேன்'' என்றான். அந்த அளவுக்கு உத்திரவாதம் கொடுத்ததற்கே அவள் கண்களில் நீர் சுழன்றது.

''அவர் பெயர் என்ன?'' என்று கேட்டான்.

''பரத்!''

ரயிலை விட்டு இறங்கி, ரிக்ஷாவில் ஏறி உட்கார்ந்து கொண்டு நல்ல லாட்ஜிக்கு அழைத்துப் போகும்படி சொன்னான். ரிக்ஷா போய்க் கொண்டிருந்தபோது

உரையாடலைத் தொடர்ந்தான். அந்த ஐந்து நிமிடங்களுக்குள் ரிக்ஷாக்காரன் லாட்ஜுகளில் நடக்கும் விபச்சாரத்திலிருந்து வேதாந்தம் வரையிலும் பேசித் தீர்த்து விட்டான்.

அந்த ஊரில் இரண்டே கட்சிகள்தான் இருந்தன. புலிராஜுவும், நரசிம்மனும் அந்த இரு கட்சிகளின் பிரதிநிதிகள். நரசிம்மன்தான் எம்.எல்.ஏ. அவன் கட்சிதான் தற்சமயம் நாட்டில் ஆளும் கட்சியாக இருக்கிறது. புலிராஜுவும் சளைத்தவன் இல்லை. அவன் நாடாளுமன்றத்தில் மெம்பர். அந்தக் கட்சி மத்திய அரசில் அதிகாரத்தில் இருந்து வருகிறது.

ரொம்ப காஷுவலாக அந்த சம்பவம் நடந்து முடிந்து விட்டது. பெட்டிக்கடைக்கு அருகில் சுமார் நாற்பது வயது மதிக்கத் தக்க ஒருவன் சிகரெட் வாங்கிக் கொண்டு வந்து கொண்டிருந்தான். ஒரு வீட்டில் பக்கத்திலிருந்து இருவரும், இன்னொரு சந்திலிருந்து இருவருமாகக் கழிகளுடன் அவனை நோக்கி ஓடி வந்து தடுத்து நிறுத்தினார்கள். அவன் வேகமாக ஓட்டமெடுத்தான்.

அவர்களும் அவனைப் பின் தொடர்ந்து ஓடினார்கள்.

ராணா ரிக்ஷாவை விட்டு இறங்கிப் போவதற்குள் அந்த ஆளின் மீது கம்பால் அடிகள் விழுந்தன. ரத்த வெள்ளத்தில் சாய்ந்தான் அவன். அடுத்த நிமிடமே தெரு நிர்மானுஷ்யமாகி விட்டது.

• பெட்டிக்கடைக்காரன் கதவை இழுத்து மூடிவிட்டான். இருபக்கங்களில் இருந்த வீடுகளில் வசிப்பவர்கள் கதவுகளைச் சாத்திக் கொண்டார்கள். ரிக்ஷாக்காரன் எப்பொழுதோ போய்ச் சேர்ந்து விட்டான். தொலைவில்

திருப்பத்தில் வண்டி ஒன்று தென்பட்டது. அந்த பக்கமாக ஓடி ''சீக்கிரமாக அந்தத் தெருவுக்கு ஓட்டிக் கொண்டு போ'' என்றான்.

''எதுக்கு தம்பி?''

''ஆஸ்பத்திரிக்குப் போகணும். சீக்கிரமாக'' ராணாவின் குரலில் தென்பட்ட அதிகாரத்திற்குப் பயந்து வண்டியை அந்தப் பக்கமாகத் திருப்பினான். அவர்கள் திரும்பி வந்தபோது அங்கே காயமடைந்த மனிதனைக் காணவில்லை.

ராணா வாயடைத்துப் போனவனாய் நின்று விட்டான். அவனைப் பார்த்துப் பரிகாசம் செய்வதுபோல் தெரு ஆளரவமில்லாமல் இருந்தது.

வண்டிக்காரன் முணுமுணுத்துக் கொண்டே அங்கிருந்து போய் விட்டான். அங்கிருந்த காந்தி சிலையின் நிழல் அவன்மேல் பட்டுக் கொண்டிருந்தது. அவன் சுற்றிலும் பார்த்தான். அவன் பார்வை ஒரு வீட்டில் மாடியின் மீது விழுந்தது. வெளியிலிருந்து படிகள் இருந்தன. மேலே சின்ன வராண்டா இருந்தது. அதற்கு மரத்தினால் ரெயிலிங் இருந்தது. அந்த ரெயிலிங்கின் மேல் கைகளை ஊன்றியபடி நின்றிருந்தான் ஒருவன்.

அவனும் சலனமில்லாமல் சிலையாகத்தான் நின்றிருந்தான். ராணா படியேறி அவனிடம் போனான். அவனுக்கு எழுபது வயதிருக்கலாம். ஆனாலும் வயதுக்கு மீறித் திடமாகவே இருந்தான்.

''இங்கே நடந்ததை எல்லாம் நீங்கள் பார்த்தீங்களா?''

''யாரு தம்பீ நீ?''

ராணா அதற்குள் சலிப்படைந்திருந்தான். அதிகாரம் நிரம்பிய குரலில் ''நீங்க பார்த்தீங்களா இல்லையா? அதைச் சொல்லுங்கள்'' என்றான் கடுமையாக.

''பார்த்தேன்.''

''அவர்கள் யாருன்னு உங்களுக்குத் தெரியுமா?''

''யாரு? அடித்தவர்களையா? கீழே விழுந்தவனையா?''

''இருவரையும்தான்.''

''அடித்தவன் மஸ்தான். விழுந்தவன் புலிராஜுவின் ஆள்.''

''யார் அந்த மஸ்தான்?''

''நீ இந்த ஊருக்குப் புதுசா தம்பீ?''

''ஆமாம்'' என்றான்.

''மஸ்தான் நரசிம்மனின் ஆள்.''

''நரசிம்மன் யார்?''

கிழவன் ஆச்சரியமடைந்து ''நரசிம்மனைத் தெரியாதா? இந்த ஊர் எம்.எல்.ஏ.'' என்றான்.

ராணாவுக்கு நிலைமை புரிந்து விட்டது. ''அந்த மஸ்தானைப் பற்றி நான் விசாரித்துத் தெரிந்து கொள்கிறேன். நாளைக்கு மறுபடியும் வருகிறேன். உங்களிடமிருந்து ஸ்டேட்மென்ட் ரிகார்ட் செய்து கொள்கிறேன். உங்கள் பெயர்?''

''வராக மூர்த்தி. நீ யாருன்னு சொல்லவேயில்லையே தம்பீ?''

''நான் இந்த ஊருக்குப் புதிதாக வந்திருக்கும் இன்ஸ்பெக்டர்'' என்று சொல்லி விட்டு நகர்ந்தான் ராணா. அவன் படியேறிப்போய்ப் பேசியதை வண்டிக்காரன் பார்த்தான். இன்னும் நிறையப்பேர் பார்த்தார்கள். ராணா போன பிறகு பெட்டிக்கடைக்காரன் படியேறி மேலே வந்தான்.

''யார் சார் அந்த ஆள்?''

''புதிதாக வந்திருக்கும் இன்ஸ்பெக்டராம்'' என்றான் கிழவன். சரியாக இரண்டே நிமிடத்தில் அந்தச் செய்தி மஸ்தானுக்குத் தெரிந்து விட்டது.

''ஐம்பது ரூபாய் அட்வான்ஸ்'' என்றான் ரிசப்ஷனிஸ்ட். பணத்தைத் தந்து விட்டு அறையை எடுத்துக் கொண்டான் ராணா. பக்கத்தில் குறுகலான படிகள். கீழே இருந்த அறையில் பத்துப்பேர் சீட்டாடிக் கொண்டிருந்தார்கள். குடிசை ஒன்று எரிந்து கொண்டிருப்பதுபோல் சிகரெட் புகை வெளியேறிக் கொண்டிருந்தது.

படிகளுக்குப் பக்கத்திலேயே சிகரெட் துண்டுகள், வாடிய மல்லிகைச் சரங்கள் குப்பையாய்க் கிடந்தன.

அறை ரொம்பவுமே அருவருப்பாக இருந்தது. வெற்றிலை துப்பிய கறைகளும், கிழிந்த போர்வைகளும், வெளிவராண்டாவில் காலி சோடா பாட்டில்களும்... ஜன்னலுக்கு அப்பால் இரண்டு பெண்கள் உரத்தக் குரலில் சிரித்துப் பேசிக் கொண்டே போனார்கள்.

ராணாவுக்கு அங்கே இருக்கப் பிடிக்கவில்லை. போலீஸ் ஸ்டேஷனுக்குப் பக்கத்திலேயேதான் அபிராமியின் வீடு இருப்பதாக சொல்லியிருந்தார்கள். இரண்டை

யும் பார்த்தாற்போல் இருக்கும் என்று எண்ணிக் கொண்டு புறப்பட்டான்.

மஸ்தான் படியேறி வராண்டாவில் நின்றபடி பார்த்தான். வராக மூர்த்தி பேப்பர் படித்துக் கொண்டி ருந்தார். அவர் மருமகள் அரிசியில் கல்லைப் பொறுக்கிக் கொண்டிருந்தாள். சின்ன மகனும், பதினாலு வயது மகளும் படித்துக் கொண்டிருந்தார்கள். பெரிய மகள் உள்ளே சமையல் செய்து கொண்டிருந்தாள்.

சந்தடி கேட்டு நிமிர்ந்து பார்த்தார் வராக மூர்த்தி. மஸ்தான் உள்ளே வந்தான். திடீரென்று அங்கே நிசப்தம் சூழ்ந்து கொண்டது. சிறுமியின் கையிலிருந்த புத்தகம் நழுவி விழுந்தது. மஸ்தான் எல்லோரையும் ஒருமுறை பார்த்தான். வராக மூர்த்தியிடம் வந்து நின்றான். மூத்த மகள் சமையலறை வாசலுக்கு வரப்போனவள் நின்று விட்டாள்.

''என்ன? ஏதோ ஸ்டேட்மென்ட் தரேன்னு சொன்னாயாமே?''

நிசப்தம்...

''தர மாட்டாய் அல்லவா?''

மூர்த்தி பதில் பேசவில்லை.

''ஞாபகம் வைத்துக் கொள்'' என்று சொல்லி விட்டுப் போகத் திரும்பிய மஸ்தான் நின்றான். அவன் பார்வை பதினாலு வயது பெண் மீது படிந்தது. அருகில் சென்றான்.

''உன் இரண்டாவது மகளா?''

யாருமே பதில் சொல்லவில்லை. மஸ்தான் அந்தப் பெண்ணின் முகவாயைப் பிடித்துத் தூக்கப் போனான். பக்கத்தில் இருந்த சிறுவன் அதைப் பார்த்ததும் விருட்டென்று எழுந்து கொள்ளப் போனான். தந்தை

அவன் தோளைப் பிடித்துத் தடுத்து நிறுத்தினார். மஸ்தான் சிறுவனைப் பார்த்துச் சிரித்தான். சிறுமியை விட்டு விட்டு ஜன்னலை நோக்கி நடந்தவன், அங்கிருந்தபடியே எச்சிலைக் காரித் துப்பினான் வெளியே. வாசலை நோக்கிப் போனவன் மூர்த்தியிடம் நின்று ''வளர்ந்த குழந்தைகள் இருக்காங்க. ஜாக்கிரதையாக இருந்து கொள்'' என்று திரும்பினான்.

வாசலில் ராணா நின்று கொண்டிருந்தான்.

அவன் அவ்வளவு கிட்டத்தில் இருந்ததை மஸ்தான் கவனிக்கவில்லை.

ஒரே ஒரு அடி!

ராணா உள்ளங்கையை மடக்கிக் கொண்டு அடித்த அடிக்கு அந்த இடத்தில் சூழ்ந்து கொண்டிருந்த நிசப்தம் சிதறி விட்டது. இருவரும் அடித்துக் கொண்டே படிகளில் உருண்டு விழுந்தார்கள். மக்கள் கூடி விட்டார்கள். ராணா சாமி வந்தவன் போல் ஆவேசமடைந்தான்.

மஸ்தானும் சளைக்கவில்லை. விவரம் தெரிந்த பிறகு முதல் முதலாக தன்னை ஒருவன் அடித்தது...

சாலையோரமாக சாக்கடைக்குப் பக்கத்தில் மாறி மாறி அடித்துக் கொண்டிருக்கையில் போலீஸ்வேனின் விசில் சத்தம் கேட்டது. போலீசார் நான்குபேர் மளமளவென்று வந்து அவர்களை விடுவித்தார்கள். மஸ்தான் முன்சீட்டில் டிரைவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான். ராணாவைப் போலீஸாருக்கு நடுவில் பின் சீட்டில் உட்கார வைத்தார்கள்.

வராகமூர்த்தி பீதியோடு பார்த்துக் கொண்டிருந்த போதே வேன் புறப்பட்டது. அவர் ஏதோ சொன்னதை யாரும் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

''சிகரெட் இருந்தால் கொடுடா?'' என்றான் மஸ்தான். ஹெட்கான்ஸ்டபிள் சட்டைப் பையிலிருந்து எடுத்துக் கொடுத்தான்.

''எந்த ஊருடா உனக்கு?'' கேட்டான் மஸ்தான் ராணாவைப் பார்த்து. ராணா பதில் சொல்லவில்லை.

வேன் போலீஸ் ஸ்டேஷனுக்கு முன்னால் வந்து நின்றது. மஸ்தான் போய் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான்.

''இப்போ சொல்லுடா... அயோக்கியப் பயலே... யார் நீ?''

ராணா சுற்றும் முற்றும் பார்த்தான். அது போலீஸ் ஸ்டேஷனாய் இருக்கவில்லை. பாழடைந்த சத்திரம் போல் இருந்தது. போலீஸ்காரர்கள் நான்கு பேர்தான் இருந்தார்கள்.

''இவனை லாக்கப்பில் போடுங்கள். இன்றிரவு வந்து இவன் விஷயத்தைக் கவனித்துக் கொள்கிறேன்'' என்றான் மஸ்தான்.

''தேநீர் குடிக்கிறாயா அண்ணாச்சி?'' கேட்டான் பாலகிருஷ்ணன் - ஹெட் கான்ஸ்டபிள். அதற்குள் போன் மணியடித்தது. ஹெட் குவார்ட்டர்சிலிருந்து போன் என்றதுமே அட்டென்ஷனுக்கு வந்தான் பாலகிருஷ்ணன்.

''இன்ஸ்பெக்டர் அய்யா வந்து ஜாயின் ஆகி விட்டாரா?''

பாலகிருஷ்ணன் போனில் ''இல்லை சார்! அவரைத் தான் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம்'' என்றான்.

3

''எஸ். புரம் போலீஸ் ஸ்டேஷன்!''

போன் மணியடித்ததுமே, ரிசீவரை எடுத்து எரிச்சலுடன் பதிலளித்தான் பிரம்மானந்தம்.

''வனஜா இருக்கிறாளா?''

''யார்?''

''வனஜா இல்லாவிட்டால் சுமதி யாவது, அனசூயாவாவது...''

''எந்த நம்பர் வேண்டும் உங்களுக்கு?''

''சீதா லாட்ஜி தானே?''

''இல்லை. இது போலீஸ் ஸ்டேஷன்.''

மறுமுனையில் போன் கட் ஆகி விட்டது. பிரம்மானந்தம் நாற் காலியில் பின்னுக்குச் சாய்ந்து உட்கார்ந்து கொண்டான். நேரம் பதினொன்றரை ஆகி விட்டது. இன்னும் சப்-இன்ஸ்பெக்டர் வரவில்லை.

மறுபடியும் போன் மணி அடித்தது.

''ஹலோ!''

''என்னடா ராமமூர்த்தி! யார் யார் இருக்காங்க?'' கட்டைக் குரலில் மறுமுனையிலிருந்து கேட்டது.

''ராமமூர்த்தி யார்?''

''புரோக்கர்டா! உன் பெயரைக்கூட மறந்து போய் விட்டாயா?''

''நாக்கை அறுத்து விடுவேன். இது போலீஸ் ஸ்டேஷன். நான் பிரம்மானந்தம் பேசுகிறேன்.''

அடுத்த நிமிடமே மறுமுனையில் போனை வைத்து விட்ட சத்தம் கேட்டது. பிரம்மானந்தம் போனை எரிச்சலுடன் பார்த்தான். தொலைவில் இன்னொரு கான்ஸ்டபிள் சர்மா ரைஃபிலைத் துடைத்துக் கொண்டி ருந்தான். சர்மாவுக்கு ஐம்பது வயது இருக்கும். பல ஆண்டுகளாக அந்தப் போலீஸ் ஸ்டேஷனில் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு பைசாகூட லஞ்சம் வாங்க மாட்டான். நேர்மையானவன் என்று பெயர் பெற்றிருந்தான்.

''சர்மா சார்! அந்தத் துப்பாக்கியை கிரோசின் ஊற்றிக் கொளுத்தினால்தான் உண்டு. அதை க்ளீன் செய்வது சுத்த வேஸ்ட்.''

''என்னவோப்பா. ஆபீஸ் என்றால் எல்லாவற்றையும் சுத்தமாக வைத்திருக்கணும்.''

''நீங்க இந்த கான்ஸ்டேபிள் வேலைக்கு எப்படி வந்தீங்களோன்னு ஆச்சரியமாயிருக்கு எனக்கு.''

''அவங்கவங்க வேலையை அவங்கவங்க செய்து கொள்வதில் தவறு ஒன்றுமில்லையே?''

''உங்களைப் போன்றவர்கள் இருப்பதால்தான் வேலைக்காரியின் சம்பளத்துக்குக்கூட நமக்கு சாங்ஷன் கிடையாது. அவ்வளவு ஏன்? பெயருக்குத்தான் போலீஸ் ஸ்டேஷனே தவிர லாக்கப்பிற்குப் பூட்ட வேண்டிய பூட்டுக்குக்கூட பட்ஜெட் சாங்ஷன் கிடையாது'' என்று இன்னும் ஏதோ சொல்லப்போனபோது, போன் மணியடித்தது.

''ஹலோ...''

''டேய் ராமமூர்த்தி! ராணி ஓய்வாய் இருக்காளா?''

''சினிமாவுக்குப் போயிருக்கிறாள்.'' பிரம்மானந்தம் பதில் சொன்னான்.

''அனசூயா இருக்காளா?''

''இரவு கதாகாலட்சேபத்திற்குப் போனவள் இன்னும் வரவில்லை.''

''அபிலாஷா?''

''இப்பத்தான் மார்னிங் ஷோவுக்குப் போனாள். நீங்க யாருங்க?''

''அடப்பாவி! என்னையே மறந்து விட்டாயா? மரக்கடை பாபுராவின் மகன்.''

''அடேயப்பா! அதற்குள் லாட்ஜுகளுக்குப் போன் செய்யும் அளவுக்கு பெரிய மனுஷனாகி விட்டாயா நீ?''

''எவன்டா பேசறது?''

''ஹெட் கான்ஸ்டபிள் பிரம்மானந்தம். மாலையில் அந்தப் பக்கம் வருகிறேன். நூறு ரூபாய் எடுத்து வை! நீ இல்லாவிட்டால் உங்கப்பாவைப் பார்க்கிறேன்'' என்று போனை வைத்து விட்டு உரத்தக் குரலில் சிரித்தான். சர்மாவிடம் ''பெரிய லாட்டரி அடிச்சுட்டேன் சர்மா சார்'' என்றான்.

''என்ன தம்பி அது?''

''நம்ப ஸ்டேஷன் நம்பர் மாறி, சீதா லாட்ஜின் நம்பர் நமக்கு வந்திருக்கு. இனி பார்த்துக் கொள்ளுங்கள். இந்த ஊரில் இருக்கிற ஒவ்வொரு ஆளின் விவரமும் ஜாதகத்துடன் வெளிப்படப் போகிறது. மாலையாவதற்குள் நமக்கு ஐநூறு கலக்ஷன் சேர்ந்து விடும்'' என்று சொல்லிக் கொண்டிருந்தபோதே மணி அடித்தது. போனை எடுத்து ''சீதா லாட்ஜ் சார்'' என்றான்.

''ராமாபாயம்மா இருக்கிறாளா?''

''இல்லை சார். இன்னும் இளமையான சரக்கு இருக்கிறது.''

''ஓல்ட் ஈஸ் கோல்ட் ராமமூர்த்தி! நம்ப டேஸ்டைப் பற்றித் தெரிந்திருந்தும் இப்படிச் சொல்கிறாயே?''

''யாரு தம்பி பேசறது?''

''நான்தான் சுப்பாராவ்''

''எந்த சுப்பாராவ்?''

''கான்ஸ்டபிள் பிரம்மானந்தனின் மகன்.''

லேசாக சத்தம் கேட்டதால், துப்பாக்கியைத் துடைத்துக் கொண்டிருந்த சர்மா நிமிர்ந்து பார்த்தான். பிரம்மானந்தம் போனுக்குப் பக்கத்தில் தொப்பென்று சரிந்து விழுந்திருந்தான்.

''என்ன நடந்தது பிரம்மானந்தம்?'' கேட்டான் சர்மா.

''அவன்... அவன் என் மகன்தான்.'' கிணற்றுக்குள்ளிருந்து கேட்டாற்போல் வெளி வந்தது பிரம்மானந்தத்தின் குரல். அதற்குள் காலடி சத்தம் கேட்டது. எஸ்.ஐ. கழி உள்ளே வந்தான். அவன் லாட்டி எப்பொழுது பார்த்தாலும் குற்றவாளிகளின் முதுகைப் பதம் பார்த்துக்

கொண்டிருக்கும். அதனால் அவனுக்கு எல்லோருமாக சூட்டியிருந்த பெயர் அது.

கழி வந்த ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு மூன்று பேட்ச் சீடர்களும் வந்தார்கள். அந்த ஊரில் பிரபலமான மூன்று க்ரூப்புகள் இருந்தன. சோடா பேட்ச், செயின் பேட்ச், பிளேட் பேட்ச். மூவரும் வாரத்திற்கு ஒருமுறை போலீசாருக்கு லஞ்சத்தை ஸ்டேஷனுக்கே கொண்டு வந்து தருவார்கள். இந்த மூன்று க்ரூப்புகளும் வீரதாஸ் கண்ட்ரோல் செய்வான்.

வீரதாஸ் றெம் லோக்கல் லீடர் மட்டுமே இல்லை. அந்த ஊரிலேயே முக்கியமானவன். எம்.எல்.ஏ. நரசிம்ம னுக்கு அவன் வலதுகரம். வீரதாஸிடம் நரசிம்மனுக்குப் பிடித்த விஷயம் என்னவென்றால், அவனுக்கு அரசியலில் ஆசை கிடையாது. தன் வலதுக்கையாக இருப்பவனுக்கு தன் துறையில் ஆர்வம் இல்லாததைக் காட்டிலும் அவனுக்கு வேறு என்ன வேண்டும்? அதனால்தான் நரசிம்மன் - வீரதாஸ் இருவரின் நட்பும் பல ஆண்டு களாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

ஸ்டூவர்ட்புரம் போலீஸ் ஸ்டேஷனுக்கு ''கோல்டன் ஸ்டேஷன்'' என்ற செல்லப் பெயர் உண்டு. அங்கிருந்து கிளம்பிய திருடர்கள் இந்த மாநிலத்தில் மட்டுமின்றி, அண்டை மாநிலங்களிலும் கூடத் திருடுவார்கள். தங்கத்தைத் திருடியதுமே துண்டுகளாக்கி உருவத்தை முதலில் மாற்றி விடுவார்கள். கடைசித் துண்டை போலீசாருக்குக் காணிக்கையாகத் தந்து விடுவார்கள். அதனால்தான் அதை கோல்டன் ஸ்டேஷன் என்பார்கள்.

ஸ்டூவர்ட்புரம் போலீஸ் ஸ்டேஷனுக்கு டிரான்ஸ்ஃபர் செய்து கொள்ள வேண்டும் என்று அதிகாரிகள் துடித்துக் கொண்டிருப்பார்கள். அது ஒரு ஜாக்பாட் ஸ்டேஷன்.

ஆனால் சில நேர்மையான அதிகாரிகள் அங்கே மாற்றலாகி வந்தாலும் அங்கு அதிக நாள் தொடர்ந்து இருக்க வேண்டும் என்றால் வீரதாஸுடன் நல்ல உறவை ஏற்படுத்திக் கொண்டால்தான் முடியும். இல்லாவிட்டால் நரசிம்மனின் செல்வாக்கு மூலம் அவர்கள் பந்தாடப் படுவது உறுதி.

ஸ்டூவர்ட்புரத்திற்குப் பத்து மைல் தொலைவில், ஒரு டவுன் இருந்தது. அங்கே நான்கு தங்க புரோக்கர்கள் இருந்தார்கள். அவர்களில் முக்கியமானவன் ராமாச்சாரி. திருடர்களிடமிருந்து தங்க நகைகளைப் பாதி விலைக்கு வாங்கி, உருக்கி விற்பது அவன் தொழில். தமக்குத் தங்கத்தை விற்ற திருடர்களின் இருப்பிடத்தைச் சொல்லாமல் இருப்பதும், தங்கத்தைக் கடத்துவதும் இவர்களுடைய பொறுப்புதான். அவ்வப்பொழுது இந்தத் திருடர்கள் பிரமுகர்களின் வீடுகளில் கொள்ளையடித்து விட்டு சரக்கைக் கொண்டு வருவார்கள்.

அப்பொழுது போலீசாரின் வலைவீச்சு அதிகமாக இருக்கும். அப்படிப்பட்ட சமயங்களில் போலீசார் இந்த புரோக்கர்களின் மீது ரெயிட் செய்து, பேச்சுவார்த்தை நடத்துவார்கள். தொலைந்த நகைகள் கிடைத்து விட்டால் சரி. இல்லாவிட்டால் விலை மதிப்பு வாய்ந்த மற்றொரு ஆபரணத்தைத் தர வேண்டியிருக்கும். அவ்வளவு ரிஸ்க் இருப்பதால்தான், தங்கத்தின் விலையில் பாதிதான் திருடர்களுக்குக் கொடுப்பார்கள்.

ஆயுள் தண்டனை அனுபவித்து விட்டு வெளியே வந்தவர்களுக்கும், மிகக் கொடுமையான குற்றங்களைச் செய்து விட்டு சமுதாயத்தில் சுயமதிப்பை இழந்தவர் களுக்கும் அரசாங்கமே நிரந்தரமாக குடியிருப்புகளைத் தந்திருக்கிறது. நிலத்தை வழங்கி உழுது சாகுபடி செய்ய

வழி வகுத்துத் தருகிறது. இவர்களை செட்டில்மென்ட் கும்பல் என்பார்கள். இவர்கள் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து ரிஜிஸ்டரில் கையொப்பமிட வேண்டும். தாம் ஊரை விட்டு போகவில்லை என்று நிரூபிக்க வேண்டும்.

எங்கேயாவது ஏதாவது பெரிய அளவில் திருட்டு நடந்தாலும், பஸ்ஸில் பிக்பாக்கெட் நடந்தாலும் சரி, போலீசாரின் பார்வை இவர்கள் மீது படும். ஆனால் அவர்களை அந்தப் பகுதியில் எதிர்த்து நிற்பது கஷ்டம். கண்களில் மிளகாய்த் தூளைத் தூவி, ஈட்டிகளால் தாக்குவார்கள்.

இந்த செட்டில்மென்ட் கும்பல் பௌர்ணமி நாட்களில் விழா கொண்டாடி விட்டு, அமாவாசை நாட்களில் வேலைக்குப் புறப்படுவார்கள். நல்ல வேட்டை கிடைத்தால் ஆடு வெட்டி விருந்து கொண்டாடுவார்கள். சாராயம் ஆறாக ஓடும்.

இந்தக் கும்பலில் சில நேர்மையானவர்கள் இல்லாமல் போகவில்லை. எப்பொழுதோ செய்த குற்றத்திற்கு தண்டனையை அனுபவித்து விட்டு, அரசாங்கம் தரும் மறுவாழ்வைப் பயன்படுத்திக் கொண்டு, நிலத்தை உழுது, நல்ல வழியில் வாழ்வைத் தொடர நினைப்பார்கள்.

இவர்களின் வாழ்க்கை துர்லபமானது.

பிளேட் பேட்சுகளும், சோடா பேட்சுகளும் செய்யும் அக்கிரமங்களுக்கும், வீரதாஸின் அராஜகங்களுக்கும் செட்டில்மென்ட் கும்பலில் உள்ள மற்றவர்கள் செய்யும் திருட்டுக்கும் இவர்கள்தான் ஜவாப்தாரியாகிறார்கள். போலீசார் உண்மையை வெளியில் கொண்டு வரவேண்டும் என்று இவர்களை அடித்து நொறுக்கு வார்கள்.

அப்படிப்பட்ட ஒரு நடை பிணத்தின் சரித்திரம்தான் இந்தக் கதையில் மூலக்கரு.

திரும்பவும் போன் மணி அடித்தது.

அந்தச் சமயத்தில் எஸ்.ஐ.கழி இரண்டு பேட்சுகளைச் சேர்ந்தவர்களிடமிருந்து கமிஷனை வசூலித்தபடி கணக்குப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''டேய் பாலகிருஷ்ணா! அந்த போனை கவனி'' என்றான்.

பிரம்மானந்தம் (பிரம்மானந்தம் பாலகிருஷ்ணன் என்பது அவனுடைய முழுப்பெயர்) உரத்தக் குரலில் சிரித்து விட்டு ''சீதா லாட்ஜின் நம்பர் நமக்கு வந்திருக்கு சார். அனசூயா இருக்காளா, சாவித்திரி இருக்காளா என்று கேட்டுக் கொண்டே இருக்காங்க'' என்று ரிசீவரை எடுத்து ''யார் வேண்டும்? ரங்கநாயகியா? ராஜகுமாரியா?'' என்று கேட்டான் மிடுக்காக.

''நான் டி.எஸ்.பி. பேசுகிறேன். யாரு? நீதான் பாலகிருஷ்ணனா?''

பாலகிருஷ்ணன் துள்ளி விழப்போய் சமாளித்துக் கொண்டு ''சார்... ஆமாம் சார்'' என்றான்.

டி.எஸ்.பி. எப்போதும் இந்த கோல்டன் ஸ்டேஷனைச் சுற்றித் திரிந்து கொண்டே இருப்பார். அதனால் போலீஸ் காரர்கள் அத்தனை பேரின் பெயர்களும் நன்றாகவே தெரியும். அவர் அவசரம் அவருக்கு. அதனால்தான் அரை மணிக்கு ஒரு தடவை இன்ஸ்பெக்டர் வந்து விட்டாரா என்று கேட்டுக் கொண்டிருந்தார்.

''இன்னும் வரவில்லை சார்!''

''வரவில்லையா? அவசர ஜோலி ஒன்று இருக்கே?''

''அவசர ஜோலி என்றால் வந்ததும் சொல்கிறேன் சார்.''

அவசர ஜோலி என்றதுமே, இனியும் சஸ்பென்ஸைத் தொடர்ந்தால் நன்றாக இருக்காது என்றெண்ணி லாக்கப்பில் இருந்த ராணா, ''அந்த போனை இப்படிக் கொடு பிரம்மானந்தம் பாலகிருஷ்ணன்! நான்தான் இன்ஸ்பெக்டர் ராணா'' என்றான்.

திடீரென்று அந்த அறையில் நிசப்தம் சூழ்ந்து கொண்டது. பணத்தை எண்ணிக் கொண்டிருந்த கழி நிமிர்ந்து பார்த்தான். சென்ட்ரிகளோட சேர்ந்து போலீஸ் காரர்கள் அத்தனைபேரும் சிலையாகி விட்டார்கள். ராணா வெளியே வந்து டி.எஸ்.பி.யோடு பேசினான். நடந்த விஷயம் எதையும் சொல்லவில்லை. தான் சார்ஜ் எடுத்துக்கொள்ள தாமதமாகி விட்டது என்று மட்டும் சொன்னான். அவன் போனை வைத்து விட்டு எல்லோரை யும் நோக்கித் திரும்பினான். எல்லோர் முகமும் வாடிப் போயிருந்தது. என்ன நடக்குமோ என்று பதற்றத்தில் இருந்தார்கள். அவன் லேசாக சிரித்துவிட்டு ''தவறு ஏற்படுவது யாருக்குமே சகஜம்தானே? என் வாழ்க்கையில் இவ்வளவு ஜோக் பிராக்டிகலாக நடந்து என்றுமே பார்த்தது இல்லை'' என்றான். இன்ஸ்பெக்டர் இதை ரொம்ப சாதாரணமாக எடுத்துக் கொண்டதும் எல்லோருக்கும் நிம்மதி ஏற்பட்டது.

இறுக்கமாக இருந்த சூழ்நிலை இளகியது.

''இந்தப் போலீஸ் ஸ்டேஷன் மீது மஸ்தானின் நாட்டாமை ரொம்பத்தான் இருக்கு போலிருக்கே?'' என்றான் ராணா.

''மஸ்தானின் நாட்டாமை எங்கே சார்? எல்லாம் வீரதாஸின் அதிகாரம்தான்.''

''அம்மாடி! மஸ்தானே என்னை இப்படி அடித்தான் என்றால் அந்த வீரதாஸ் இன்னும் எவ்வளவு பலசாலியாக இருப்பான்?'' முகவாயில் விரலால் தட்டிக் கொண்டே சொன்னான் ராணா.

தன் பாஸ் வீரதாஸைப் பற்றி இன்ஸ்பெக்டர் அவ்வாறு புகழ்ந்ததும் பெருமையோடு சிரித்துக் கொண்டே பேட்சுகளிடமிருந்து பணத்தை வாங்கிக் கொண்டு வந்தவர்கள் அதைக் கழியிடம் கொடுத்துவிட்டு, ராணாவை வணங்கி விட்டுப் போய்விட்டார்கள்.

ராணா சார்ஜ் எடுத்துக் கொண்டான். போலீஸ் ஸ்டேஷன் ரொம்ப மோசமான நிலையில் இருந்தது. லாக்கப் அறையில் கரப்பான்பூச்சித் தொல்லை. லாக்கப் அறைகளுக்கு பூட்டு இல்லை. குச்சியைத்தான் குறுக்கே வைத்திருந்தார்கள். தண்ணீர் இல்லை. கைதிகளைக் கொண்டுதான் பெருக்கச் செய்தார்கள்.

ராணா இன்னொரு விஷயத்தையும் கவனித்தான். அந்த ஸ்டேஷனில் போலீஸ்காரர்கள் ரொம்பக் கம்மி. அவர்களில் நிறைய பேருக்குத் தைரியம் இல்லை. கைக்குக் கிடைத்த திருடனை புரட்டி புரட்டி அடிப்பார்களே தவிர திருடர்களிடம் ஆயுதம் இருப்பதாகத் தெரிந்தால் துணிச்சலோடு இருட்டுக்குள் ஊடுருவிச் செல்லமாட்டார்கள். புலித்தோல் போர்த்திய பசுவாகத் தான் அவர்களின் கம்பீரம் இருந்து வந்தது.

அவர்களுக்குள் கான்ஸ்டபிள் சர்மா மட்டும்தான் நேர்மையானவனாகத் தோன்றினான். சில மாதங்களில் ரிடையராகப் போகிறான்.

ராணா பெண்டிங் கேசுகளின் ஃபைலைப் பரிசோதித்துக் கொண்டிருந்தபோது சீட்டுக்குப் பக்கத்தில் கழி வந்து நின்றான்.

''வீடு கிடைத்து விட்டதா சார்?''

''இன்னும் இல்லை.''

பக்கத்திலேயே நின்று கொண்டிருந்த சர்மா ''எங்கள் வீட்டில் போர்ஷன் காலியாக இருக்கு சார். உங்களுக்கு முன்னால் இருந்த இன்ஸ்பெக்டர் அங்கேதான் குடியிருந்தார்'' என்றான்.

''நான் ஒண்டியாள். எனக்கு எதுக்குப்பா போர்ஷன்? அறையே போதும்.''

''வாடகை ரொம்பக் கம்மிதான் சார்.''

கழி குறுக்கிட்டு ''அப்படி என்றால் இன்ஸ்பெக்டர் சார் பணத்துக்குப் பின் வாங்கிப் போர்ஷன் வேண்டாம் என்கிறார் என்று சொல்கிறாயாடா? தே... மகனே!'' என்றான்.

சர்மாவின் முகம் சிறுத்து விட்டது. மௌனமாக அங்கிருந்து போய்விட்டான்.

ராணாவுக்கு வருத்தமாக இருந்தது. டிபார்ட்மென்டில் திருடர்களுக்கிடையே அதுபோன்ற வசவுகள் பழக்க மானவைதான். ஆனால் மேலதிகாரி தனக்குக் கீழே வேலை செய்பவனை இந்த அளவுக்கு தரக்குறைவாக விளிப்பதை முதல் முதலாக இப்பொழுதுதான் பார்க்கிறான். அதுவும் வயதில் பெரியவனை.

கான்ஸ்டபிள் போன பிறகு கழி விஷயத்தை ஆரம்பித்தான். ''வரும் பணத்தில் பத்து சதவீதம் இன்ஸ்பெக்டரைச் சேர்ந்தது. வாரா வாரம் செட்டில் மென்ட் நடக்கும்.''

''சாதாரணமாக எவ்வளவு வரும்?''

''சொல்ல முடியாது. ஏதாவது பெரிய திருட்டு நடந்தால் நிறைய வரும். இல்லா விட்டால் பேட்சுகளின்

கமிஷன்தான். இப்போ அவங்க கொண்டு வந்து கொடுத்தாங்க. தரட்டுமா?''

''எவ்வளவு?''

''உங்கள் பங்கு ஆயிரத்தி இருநூறு'' என்று எடுத்துத் தந்தான். ராணா வாங்கி ஜேப்பில் வைத்துக் கொண்டான். எஸ்.ஐ. இன்னும் நகராமல் போகவே என்ன என்பதுபோல் பார்த்தான்.

''நடந்ததற்கு மஸ்தான் ரொம்ப வருத்தப்படுகிறான். நீங்க யாரோ புதிதாக வந்திருக்கும் ரவுடி என்று நினைத்து சண்டை போட்டானாம்.''

''என்ன இது சுதாகர்? இந்த நாட்டில் ஒவ்வொரு குடிமகனுக்கும் சண்டை போட உரிமை இருக்கிறது. என்னை அடித்து, போலீஸ் வேனில் போட்டு, ஸ்டேஷனுக்கு அழைத்து வந்து, தானே சுயமாக லாக்கப்பில் தள்ளியிருக்கிறான் என்றால், ஒரு குடி மகனின் பொறுப்பைக் கண்டு நாம் பெருமைப்பட வேண்டாமா?''

அதில் ஏதாவது குத்தல் வார்த்தை இருக்குமோ என்று கழி ஓரக்கண்ணால் ராணாவைப் பார்த்துவிட்டு, அப்படிப் பட்டது எதுவும் தென்படாததால் நிம்மதியாக மூச்சு விட்டுக் கொண்டு அங்கிருந்து நகர்ந்தான்.

நரசிம்மன் அரசியல் ரீதியாக தன்னை எப்படிப்பட்ட இடத்தில் சிக்க வைத்து விட்டான் என்று புரிந்தது. லஞ்ச ஊழல், பட்டுக் கொள்ளாத தன்மை, சோம்பேறித்தனம், பயம்... இவைதான் இந்த இடத்தின் அடிகற்கள். நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் இருப்பதுபோலவே போலீஸ் படையில்கூட இரண்டு பிரிவுகள் இருந்தன. ஒரு அமைச்சரைக் கொலை செய்வதற்குத் தைரியமாக துப்பாக்கியை எடுத்த போலீசாரும் இருந்தார்கள்.

திருடர்களிடமிருந்து தங்களுடைய பங்கை வசூலித்துக் கொள்பவர்களும் இருந்தார்கள்.

தனக்கு மீது நிறைய பொறுப்புகள் இருக்கின்றன. நரசிம்மனை வீழ்த்த வேண்டும் என்றால் முதலில் இவர்களைச் சீர்திருத்த வேண்டும்.

அவன் பிற்பகலில் சர்மாவின் வீட்டிற்குப் போய், போர்ஷனைப் பார்த்து விட்டு வந்தான். மாலையில் வந்து விடுவதாகச் சொன்னான். சர்மா வராகமூர்த்தியின் தம்பி.

மாலை ஐந்து மணியளவில் ஒரு சம்பவம் நடந்தது.

ஊருக்குக் கிழக்கே இருந்த ஆசிரியர் காலனியிலிருந்து ஐந்துபேர் வந்தார்கள். காலனியில் நடக்கும் அக்கிரமங்களைப் பற்றிச் சொன்னார்கள். பெண்களைத் துன்புறுத்துவதிலிருந்து ஆரம்பித்தார்கள். ஸ்ரீராம நவமிக்கு வலுக்கட்டாயமாக சந்தாக்களை வசூலித்தார் கள். காலனியில் காலியாக இடம் இருந்தால் ஆக்ரமித்துக் கொண்டு கடைகளை வைத்தார்கள். தட்டிக் கேட்டபோது தலைவர்கள் வந்து இறங்கினார்கள். கடைசியில் அவர்களுடைய தயவு தாட்சணியத்தின் மீதுதான் காலனி யில் இருந்தவர்கள் வாழவேண்டிய நிலைமை.

ராணா எல்லாவற்றையும் பொறுமையாக கேட்டுக் கொண்டான். ''இதற்குப் பின்னால் யார் இருக்கிறார்கள்?'' என்று கேட்டான் கடைசியாக.

போலீஸ் ஸ்டேஷனில் தம் குறைகளை அவ்வளவு தூரம் கேட்டவர்கள் இதுவரை யாருமில்லை.

அவர்கள் மேலும் உற்சாகத்தோடு ''வீரதாஸ் சார்'' என்றார்கள். அவர்களுக்குள் ஒருத்தன் ''எங்கள் காலனிக்கு வருபவன் மஸ்தான் சார். இரவு நேரங்களில் சுவரேறிக் குதித்து உள்ளே வருவான். டிரைனேஜ் இரும்பு சாமான்கள், வாளிகள், இன்னும் ஏதாவது சாமான்கள் இருந்தால்

திருடிக்கொண்டு போய்விடுவான். ஒருநாள் காத்திருந்து அவர்கள் சார்பிலிருந்து வந்த சிறுவன் ஒருவனைப் பிடித்து விட்டோம். ஒரு மணி நேரத்திற்குள் மஸ்தான் வந்து விடுவித்துக் கொண்டு போய்விட்டான். இந்தச் சிறுவர்களின் பேட்சுக்கு அவன்தான் லீடர். பகல் வேளையில் வீட்டைப் பூட்டிக் கொண்டு வெளியே போகவும் பயமாக இருக்கிறது'' என்றான்.

''பின்னே இதுக்கு முன்பு இந்த விஷயத்தைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து சொல்லவில்லையா?''

''நாலைந்து தடவை சொன்னோம் சார். ரிபோர்ட்டை எடுத்துக் கொண்டு போகச் சொல்லி விட்டார்கள்.''

''பின்னே வேறு என்ன செய்ய முடியும்? அந்தக் கும்பலைச் சேர்ந்தவங்கதான் வாரத்திற்கு ஒருமுறை எங்களுக்குத் தரவேண்டிய மாமூலை தந்து விடுகிறார்கள் இல்லையா?''

அதுவரை சாதாரணமாக அந்த உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த எஸ்.ஐ.யும் மற்றவர்களும் திடுக் கிட்டார்கள்.

ராணா நிதானமாகச் சொன்னான். ''ஆமாம், ஒவ்வொரு கும்பலுக்கும் ஒவ்வொரு லீடர். அந்த லீடர்கள் அத்தனை பேருக்கும் வீரதாஸ்தான் தலைவன். அவனுக்கு மேல் எம்.எல்.ஏ. நரசிம்மன். எங்களுக்கு நாய்க்கு வீசுவதுபோல் பிஸ்கெட்டுகளைப் போடுவான். இதோ இன்றைக்கு என் பங்கு ஆயிரத்து இருநூறு ரூபாயை என்னிடம் தந்து விட்டான். இப்போ என்ன செய்வது? நீங்களே சொல்லுங்கள்.''

எதிர்பாராத இந்த சூழ்நிலைக்கு அவர்கள் வாயடைத்துப் போய்விட்டார்கள். ஊசி கீழே விழுந்தாலும் கேட்கும் அளவுக்கு நிசப்தம்.

''நாங்கள் இதுபோல் திருடர்களுக்கும், ரவுடிகளுக்கும் பயந்து கொண்டே வாழ்ந்து வரவேண்டியதுதானா?''

''அதை முடிவு செய்ய வேண்டியது நான் இல்லை. நீங்கள்.''

''பின்னே அரசாங்கம் உங்களுக்கு எதற்காகச் சம்பளம் தருகிறது?''

''அதைக் கேட்க வேண்டியது என்னை இல்லை, அரசாங்கத்தை...''

''நீங்கள் இடக்கு மடக்காகப் பேசறீங்க.''

ராணா விருட்டென்று நாற்காலியை விட்டு எழுந்தான். ''நான் இல்லை. நீங்கள்... நீங்கள்தான் தவறாக யோசிக்கிறீங்க. ஆசிரியர் காலனி என்று பெயரை வைத்துக் கொண்டு விட்டால் மட்டும் போதாது. பிரச்னையை அலசி ஆராய்ந்து பார்க்கணும். அந்த ரவுடி களிடம் இருக்கும் ஒற்றுமை உங்களிடம் இல்லை. ஒரு சின்னப் பையன் திருடி விட்டுப் பிடிபட்டு விட்டால், அவனை விடுவிப்பதற்கு பெரிய ரவுடி வருவான். அவனுக்குப் பின்னாலிருக்கும் அரசியல் தலைவன் எங்களைக் கண்ட்ரோல் பண்ணுவான். எங்களுக்கு லஞ்சம் தருவான். இல்லாவிட்டால் டிரான்ஸ்ஃபர் செய்வான். போங்கள்... நீங்கள் கேட்க வேண்டியது எங்களை அல்ல. அரசியல் தலைவரை! நரசிம்மனை என்னிடம் ஒரு வார்த்தை சொல்லச் சொல்லுங்கள். அந்த வீரதாஸையும் இன்னும் அத்தனை பேரையும் ஒரு கை பார்த்து விடுகிறேன்.''

''இன்ஸ்பெக்டருக்கு நான் சொல்லித்தான் தெரியணுமா? எனக்கு எதுவும் தெரியாது என்பார் தலைவர்.''

''நீங்கள் பத்திரிகைகளில் புகார் கொடுங்கள்.''

''அவர்கள் என்ன செய்து விடுவார்கள்?''

''அரசியல் தலைவர்கள் பயப்படுவது பத்திரிகைகளுக்கு மட்டும்தானே.''

''நாங்கள் பத்திரிகைக்குப் போனோம் என்று தெரிந்தால் அந்த ரவுடிகள் எங்கள் வீடுகளை நோக்கிப் படையெடுக்கத் தொடங்கி விடுவார்கள்.''

''குறைந்தபட்சம் உங்களிடம் அந்த மாதிரி ஒரு சலனம் ஏற்பட்டால் உங்களுடன் நானும் இருப்பேன்.''

''எம்.எல்.ஏ. நரசிம்மன் தனக்கு அந்த ரகளையில் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொல்லி விட்டால்?''

''அதற்கு வேண்டிய ருசுக்களை நான் சம்பாதித்துக் கொள்கிறேன்.''

எஸ்.ஐ. கழியின் விரல்கள் நடுங்கின. மற்ற அத்தனை பேரும் ஏதோ உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தாற் போல் விநோதமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அதே சமயத்தில் மஸ்தான் உள்ளே வந்தான். ராணாவைப் பார்த்து மலர்ந்த முகத்துடன் சிரித்தான். ''இன்ஸ்பெக்டர் சார்! நீங்கள் என்னை மன்னிக்கணும் சார்... நீங்கள் இன்ஸ்பெக்டர் என்று நினைத்திருக்கவில்லை.''

அவன் வார்த்தைகள் முடியக்கூட இல்லை. ராணா எழுந்து அவன் கன்னத்தில் பளாரென்று அடித்து, கையை பின்னுக்கு இழுத்துப் பிடித்துக் கொண்டு, ஒரே தள்ளலில் செல்லுக்குள் தள்ளி விட்டான். கண் மூடி திறப்பதற்குள் நிகழ்ந்து முடிந்து விட்டது.

திகைப்புடன் நின்று கொண்டிருந்த காலனி வாசிகளைப் பார்த்து ராணா சொன்னான், ''பார்த்தீங்க இல்லையா? உங்களுக்கு முன்னாடியே அவனை அடித்து உள்ளே தள்ளினேன். நீங்கள் எல்லோரும் கம்பிளைன்ட்

தந்தால், நாளைக்கே கோர்ட்டில் ஆஜராக்குவேன். அதற்குள் நரசிம்மன் இந்த விஷயத்தில் தலையிடாமல் நீங்கள் அவன் வீட்டிற்கு முன்னால் மறியல்தான் செய்வீர்களோ அல்லது உங்கள் செல்வாக்கைத்தான் பயன்படுத்துவீங்களோ... உங்கள் விருப்பம். நான் டிரான்ஸ்ஃபர் ஆகாமல் பார்த்துக் கொள்கிற பொறுப்பு உங்களைச் சேர்ந்தது.''

''இதெல்லாம் நடக்கிற காரியம்தானா?''

''அதுதான் சொல்லிவிட்டேனே. நீங்கள் தேர்ந்தெடுத்த தலைவர் எங்கள் காரியங்களில் குறுக்கிடுகிறார். எங்கள் மூலமாக உங்கள் காரியத்தை நிறைவேற்றிக் கொள்ளணும் என்றால் அவரிடம் நீங்கள்தான் நல்லவிதமாக எடுத்துச் சொல்லணும். என் வேலையை நான் செய்து முடித்தேன். உங்களுக்குத் தேவையில்லை என்று நினைத்தால் எனக்கு எப்படியும் டிரான்ஸ்ஃபர் ஆகி விடும். கிளம்பிப் போய் விடுவேன்.''

அவர்கள் ரொம்ப நேரம் மௌனமாக இருந்து விட்டுப் பிறகு எழுந்தார்கள். அவர்களிடம் ஏதோ மாற்றம் தென்பட்டது. ''சரி சார்! இது எப்படி நடக்கிறது, எவ்வளவு தூரத்திற்கு வருகிறது என்று பார்ப்போம். எங்கள் பிரண்ட் ஒருத்தர் இருக்கிறார். ஜர்னலிஸ்ட்! நாங்கள் சந்தாக்களை வசூல் செய்தாவது சரி, ஒரு சங்கத்தைத் தொடங்குகிறோம். ஏதாவது திருட்டு நடந்தால், பொருள் போய் விட்டது என்று சும்மாயிருந்து விடுவோமே தவிர, இதற்குப் பின்னால் இவ்வளவு ரகளையும், பங்குகளும் இருக்கும் என்று எங்களுக்குத் தெரியாது.''

ராணா மேஜை மேலிருந்த பணத்தை அவர்களை நோக்கித் தள்ளி விட்டான். ''இதோ என் பங்கு ஆயிரத்தி இருநூறு ரூபாய். இதிலிருந்து தொடங்குங்கள்.'' ஓரக்கண்ணால் எஸ்.ஐ.யைப் பார்த்துக் கொண்டே

சொன்னான். எஸ்.ஐ. தன் முகத்தில் தோன்றிய உணர்ச்சிகளை மறைக்க அரும்பாடுபட்டான். ஆனாலும் வெளிப்பட்டுவிட்டது. அவர்கள் போன பிறகு எழுந்து மஸ்தானிடம் வந்தான் ராணா. கூண்டுக்குள் அடைபட்ட புலியைப் போல் இருந்தான் மஸ்தான்.

''நான் உங்கள் வீரதாஸைச் சந்திக்கப் போய்க் கொண்டு இருக்கிறேன். உன் சார்பில் ஏதாவது சொல்லணுமா?'' என்று கேட்டான்.

மஸ்தான் பதில் சொல்லவில்லை.

''ஒரு மணி நேரத்தில் திரும்பி வருகிறேன்'' என்று பொதுவாகச் சொல்லிவிட்டு வெளியே வந்தான் ராணா.

அவன் மோட்டார் சைக்கிள் புறப்பட்டதைத் தெரிந்து கொண்டதும் எஸ்.ஐ. போன் அருகில் வேகமாக சென்று நம்பரைச் சுழற்றி ''நரசிம்மன் இருக்கிறாரா?'' என்று கேட்டான்.

''எம்.எல்.ஏ. நரசிம்மனா?''

''ஆமாம்'' எரிச்சலுடன் சொன்னான்.

''அவர் இங்கே எதுக்குத் தம்பீ வரப் போகிறார்? அதான் சரக்கை அவரிடமே நாங்க அனுப்பி வைக்கிறோமே.''

''அவர் வீடு இல்லையா இது?''

''நம்பர் மாறி விட்டது. இது சீதா லாட்ஜ்.''

எஸ்.ஐ. போனை வீசியெறிந்து விட்டு நாற்காலியில் சரிந்தான்.

4

ராணா உடனே வேலைக்குப் புறப்பட்டு விடவில்லை. வீட்டிற்குப் போய் குளித்து விட்டு மஃப்டியில் கிளம்பினான். ராணா வீரதாஸ் இருந்த இடத்திற்குப் போய்ச் சேர்ந்தபோது நன்றாக இருட்டி விட்டது.

வீட்டிற்கு முன்பக்கத்திலேயே படிகள் இருந்தன. மரத்தினால் செய்யப்பட்ட படிகள். வெளியே வேப்பமரம், சுற்றிலும் சிமெண்டால் திண்ணை போடப்பட்டிருந்தது. மரத்தின் நிழலில் நான்குபேர் உட்கார்ந்து கேரம் போர்ட் ஆடிக் கொண்டிருந்தார்கள். மரப்படிகளின் கீழே இருந்த தூண்களில் சாய்ந்தவாறு இருவர் சிகரெட் புகைத்துக் கொண்டிருந்தார்கள். வீட்டிற்கு முன்னால்

இரண்டு மூன்று ஸ்கூட்டர்களும், சைக்கிள்களும் நிறுத்தி வைக்கப் பட்டிருந்தன. வேப்ப மரத்திற்குச் சற்று தொலைவில் சின்ன ஆஞ்சனேயர் கோவில் இருந்தது. அதற்குப் பக்கத்திலேயே உடற்பயிற்சிக் கூடம் இருந்தது.

தொலைவிலிருந்து குழந்தையின் அழுகை குரல் விடாமல் கேட்டுக் கொண்டிருந்தது. ராணா மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு இரண்டடிகள் எடுத்து வைப்பதற்குள் படிக்கட்டிற்குக் கீழே நின்றிருந்த இருவர் அவனிடம் வந்தார்கள்.

''யார் வேண்டும்?''

''வீரதாஸ்!''

''நீ யார்?'' கொஞ்சம் ஏளனமாக கேட்டார்கள்.

''ராணா... இன்ஸ்பெக்டர் ராணா.''

இருவரும் சட்டென்று அடென்ஷனுக்கு வந்தார்கள்.

''வணக்கம் சார்'' என்றான் அவர்களுக்குள் பெரியவனாகத் தோன்றியவன். ''போய்ச் சொல்லி விட்டு வா'' என்று பக்கத்தில் இருந்தவனைப் பார்த்து அதட்டினான்.

அவன் மாடிக்கு ஓடினான்.

''உன் பெயர்?'' ராணா கேட்டான்.

''சிங்கன்.''

''முழுப் பெயரையும் சொல்லு.'' அதிகாரத்துடன் கேட்டான்.

''வீரசிங்கன் சார்.''

அதற்குள் மாடிக்குப் போனவன் ஓட்டமாய் வந்து ''வரச் சொல்றாங்க சார்'' என்றான். ராணா படியேறி உள்ளே போனான். முன்னறையில் ஒரு மூலையில் ஆறேழுபேர் சீட்டாடிக் கொண்டிருந்தார்கள். ஒரே ரகளையாக இருந்தது. ''இஸ்பேட் ராஜா'' என்று சொன்னார்கள் யாரோ. ''அரைமணியாய் கார்ட் ஷோ தலைவா'' என்று சொன்னான் ஒருத்தன். ராணா முன் நோக்கி நடந்தான். அடுத்த அறையில் வெளிறிப் போன திரைச்சீலை தொங்கிக் கொண்டிருந்தது. காரை பெயர்ந்து விட்ட சுவர்கள் கருப்பாக, அழுக்காக இருந்தன. உள் அறையில் மேஜைக்கு எதிரே வீரதாஸ் உட்கார்ந்திருந்தான்.

ஓரங்குலம் நீளத்திற்கு மேல் வளராத கேசம், கன்னத்தில் பரவலாகப் படர்ந்திருந்த தாடி, லூசான ஜிப்பா, கட்டம் போட்ட கைலி.

ராணா அவனையே பார்த்துக் கொண்டிருந்தான்.

வீரதாஸ் ராணாவைத் திரும்பியும் பார்க்கவில்லை. தன் வேலையில் மூழ்கியிருந்தான். வேலை என்றால் பெரிய வேலை ஒன்றுமில்லை. தனியாய் சீட்டாடிக் கொண்டிருந்தான். பக்கத்தில் இன்னொரு ஆள்கூட இருந்தான். ஆனால் அந்தப் பக்கமாகத் திரும்பி விழுந்து கிடந்தான்.

கண்ணாடி டம்ளர் மட்டும் மேஜை மேல்தான் இருந்தது. வீரதாஸ் நடுநடுவில் டம்ளரிலிருந்த மதுவை உறிஞ்சிக் குடித்துக் கொண்டே சீட்டாடிக் கொண்டிருந்தான். பத்து நிமிஷங்களுக்குப் பிறகு நிமிர்ந்து பார்த்து விட்டு சிரித்தவன் ''ஹலோ இன்ஸ்பெக்டர் சார்! வாருங்கள்'' என்றான், நாற்காலியை விட்டு எழுந்து கொள்ளாமலேயே.

தான் உள்ளே வரப்போகும் விஷயம் அவனுக்குத் தெரியும். முன்கூட்டியே ஆள் வந்து விஷயத்தைச் சொல்லி விட்டான். ஆனாலும் தான் வந்ததுமே அவன் நிமிர்ந்து பார்க்கவில்லை. ஏதோ வேலையில் ஆழ்ந்திருந்தாற்போல் அலட்சியமாக, தன் வரவைக் கவனிக்காதது போல் நடந்து கொண்டான். இப்படிப்பட்ட சின்ன விஷயங்கள்தான் எதிராளியின் மனதின் மீது பாதிப்பை ஏற்படுத்தும். ''நீ என்னைவிட மதிப்பில் தாழ்ந்தவன்'' என்று சொல்லாமல் சொல்வது அது.

''நானே வந்து உங்களைச் சந்திக்கலாம் என்று இருந்தேன் சார். வீணாக நீங்களே சிரமம் எடுத்துக் கொண்டிருக்கீங்க.''

''சிரமம் என்ன? இத எங்கள் ட்யூட்டி இல்லையா? சார்ஜ் எடுத்துக் கொண்டதுமே அந்த ஊர் பிரமுகர்களைச் சந்திப்பது...'' என்று நாற்காலியில் உட்கார்ந்து கொண்டே மேஜை மீது இருந்த விஸ்கி டம்ளரை லேசாகத் தள்ளினான்.

அது உருண்டு வீரதாஸின் மேல் பட்டு, கீழே விழுந்து உடைந்து விட்டது.

''அடடா! சாரி வீரதாஸ்!'' துடைக்கப்போனான்.

''பரவாயில்லை'' வீரதாஸ் லுங்கியில் பட்ட விஸ்கியைத் துடைத்துக் கொண்டான். அவனுடைய போலி அமைதி குலைந்து விட்டது. ராணாவுக்கு வேண்டியது அதுதான்.

''சொல்லுங்கள் சார். என்ன சாப்பிடுறீங்க? விஸ்கி, பீர், வெளிநாட்டுச் சரக்கும் இருக்கு.''

''தாங்க்யு. ட்யூட்டியில் இருக்கும்போது குடிக்க மாட்டேன்.''

''முதல் முறையாக இந்த ஏழையின் குடிசைக்கு வந்திருக்கீங்க. எதுவும் வேண்டாம் என்றால் எப்படி? மேரி, பியாரி யாரையாவது வரவழைக்கட்டுமா?''

''சாரி, ட்யூட்டியில் இருக்கும்போது விபசாரம் செய்ய மாட்டேன்.'' ராணா நேர்மையுடன் சொன்னான்.

அதில் கிண்டல் ஏதாவது இருக்குமோ என்று பார்த்தான் வீரதாஸ். அப்படி எதுவும் தென்படவில்லை. மறுபடியும் சிரித்தான். ''ஸ்டூவர்ட்புரம் ஸ்டேஷனுக்கு எந்த இன்ஸ்பெக்டர் வந்தாலும் சந்திப்பது எனக்குப் பழக்கம் சார். ஃபிரண்ட்ஷிப்! ஃபிரண்ட்ஷிப்பிற்கு நான் உயிரே கொடுப்பேன். நீங்க என்னவோ வந்ததும் வராததுமாக எங்கள் ஆள் மஸ்தானை உள்ளே தள்ளிட்டீங்க. ட்யூட்டி

செய்யணும் சார். ரொம்ப கரெக்டாக செய்திருக்கீங்க. வந்ததுமே நம் கைவரிசையைக் காட்டிவிட வேண்டும் இல்லையா?'' அவன் குரலில் மாறுபாடு வந்தது. ''உங்களைப் பற்றி நிறைய கேள்விப் பட்டிருக்கிறேன் சார். நரசிம்மன் சார் சொன்னார்.''

''என்ன சொன்னார்? அவரையும் உள்ளே தள்ளி விட்டதாகச் சொன்னாரா?''

அவன் கண்ணிமைக்காமல் பார்த்தான். ராணாவும் நேராக நிமிர்ந்து பார்த்தான் அவனை. அவன் சிரித்தான்.

''என்ன குடிக்கிறீங்க சார்? லெமன் சோடாவாவது குடித்து விட்டுப் போங்கள்.''

''தாங்க்ஸ். அப்புறமாக சந்திப்போம்'' ராணா திரும்பிப் போக முயன்றபோது சொன்னான் அவன்.

''திரும்பவும் சந்திப்பதா? அம்மாடியோவ்! போலீஸ்காரர்கள் திரும்பவும் சந்திப்போம் என்று சொன்னாலே ஆபத்து.''

ராணா நின்றான். ''யாருக்கு? உனக்காக? போலீசாருக்காக?''

''எங்களுக்குத்தான் சார்.''

''அப்படிச் சந்திக்காமல் இருக்கணும் என்றால், உன் ஆட்களை ஆசிரியர் காலனி பக்கம் போக வேண்டாம்னு சொல்லு.''

வீரதாஸ் சட்டென்று நிமிர்ந்து பார்த்தான். ராணா சொன்னான். ''அப்படிப் போனால் என்ன நடக்கும் என்று நாளைக்கு மஸ்தான் வெளியே வந்ததும் கேட்டுக்கொள்.''

''அப்படி என்றால்?'' சந்தேகத்துடன் பார்த்தான் வீரதாஸ்.

''சமூகத்தில் மதிப்புடன் வாழ்ந்து கொண்டிருப்பவர்களின் ஜோலிக்குப் போகாமலிருப்பதற்காக ஓரிரண்டு பாடங்களை இன்றைக்கு மஸ்தானுக்குச் சொல்லித் தரப் போகிறேன்.''

வீரதாஸ் உடனே பதில் சொல்லவில்லை. ஒரு வினாடி நிதானித்து விட்டுப் பிறகு சொன்னான். ''மஸ்தான் ஐந்து நிமிடங்களுக்கு முன்னால்தான் செல்லிலிருந்து வெளியே வந்து விட்டான் சார்.''

குளிர்ந்த நீரை முகத்தில் வாரியிறைத்தாற்போல் இருந்தது ராணாவுக்கு. வீரதாஸ் அந்த சங்கடமான நிலையிலிருந்து ராணாவைத் தேற்றுவதுபோல் ''நாமெல்லாம் ஒன்றுதான் சார். ஒருத்தருக்கொருத்தர் உதவி செய்து கொள்ளாவிட்டால் வேலைகள் எல்லாம் எப்படி நடக்கும் சார்? முதல் முறையாக வந்திருக்கீங்க. இந்த ஏழையின் வீட்டில் டீகூட குடிக்காமல் போறீங்களே? ஏதாவது தேவையாய் இருந்தால் சொல்லுங்கள் சார். என்னிடம் கத்தியைப் போன்ற இளைஞர்கள் இருக்காங்க சார். என்னை வரச் சொன்னால் நானே கூட வருகிறேன். சிநேகம் என்றால் உயிரையும் கொடுப்பேன் சார் நான்.''

அவன் வார்த்தைகளை இடையிலேயே கத்தரித்து விட்டு ''மஸ்தானை விடுதலை செய்யச் சொல்லி சொன்னது யாரு?'' கடுமையாகக் கேட்டான் ராணா.

''டி.எஸ்.பி. சார். நமக்கு பர்சனல் ஃபிரண்ட்.''

ராணா கோபத்தை அடக்கிக் கொண்டு ''அவரிடம் நான் பேசுகிறேன்'' என்றான்.

''அவர் இப்பொழுது பேசும் நிலையில் இல்லை சார்.''

''உனக்கு எப்படித் தெரியும்?'' சந்தேகத்தோடு கேட்டான்.

''பார்த்தால் தெரியவில்லையா சார்?''

ராணா வீரதாஸ் காட்டிய பக்கம் திரும்பினான். மயக்கம் கொஞ்சம் குறைந்து இன்னொரு டம்ளர் மதுவுக்காக இந்தப் பக்கமாகத் திரும்பிக் கொண்டிருந்தார், அந்த ஏரியாவின் டிப்யூடி சூப்பரிண்டெண்ட் ஆஃப் போலீஸ்.

5

ராணாவுக்கு அந்த வீடும், வீட்டிலிருந்தவர்களையும் மிகவும் பிடித்து விட்டது. சர்மாவுக்கு ஒரு மகன், ஒரு மகள். மனைவி ரொம்ப சாந்தமானவள். மகன் பத்தாம் வகுப்பில் மாநிலத்திலேயே முதலாவதாக வந்தான். இப்பொழுது பிளஸ் டு தேர்வுகளை எழுதியிருந்தான். அவன் பெயர் ஸ்ரீநிவாசன். சுட்டியான பையன். பார்த்ததுமே ராணாவுக்கு அந்தப் பையனைப் பிடித்து விட்டது. மாணவப் பருவத்தில் தான் என்றுமே அவ்வளவு சுட்டியாக, துடிப்பாக இருந்ததில்லை.

முதல் முதலாக தன் போர்ஷனுக்குள் நுழைந்தபோது ராணா மிகவும் ஆச்சரியமடைந்து விட்டான். அறைக்கு நடுவில் கோலம் போடப்பட்டிருந்தது. கூரையிலிருந்து பூசணிக்காய் தொங்கவிடப் பட்டிருந்தது. ஜன்னலில் ஆறு எலுமிச்சம்

பழங்கள் இருந்தன. சுவரில் விதவிதமான தெய்வங்களின் படங்கள் மாட்டியிருந்தன.

''என்ன இது? எனக்கு முன்னால் இந்தப் போர்ஷனில் மந்திரவாதி யாராவது இருந்தார்களா?'' வியப்புடன் கேட்டான்.

''எங்க அக்காவுக்கு பக்தி அதிகம். சனியை விரட்டியடிக்க இப்படிச் செய்யணும் என்று பூசாரி சொன்னாராம்'' என்றான் ஸ்ரீநிவாசன்.

''உங்க அக்காவுக்கு எத்தனை குழந்தைகள்?''

''குழந்தைகளா? நல்லாச் சொன்னீங்க. அவளுக்கு இன்னும் கல்யாணமே ஆகவில்லை.''

''வீட்டில் கண்ணிலேயே படவில்லையே?''

''நவராத்திரி இல்லையா? கதாகாலட்சேபத்திற்குப் போயிருப்பாள்.''

''உங்க அக்காவின் பெயர் என்ன?''

''அலக்நந்தா!''

ராணாவுக்கு இதெல்லாம் வித்தியாசமாக இருந்தது. ஆனால் அதிகமாக கேள்வி கேட்கவில்லை.

அவன் போர்ஷனுக்கு வெளியேயிருந்து உள்ளே வருவதற்கு வாசல் தனியாக இருந்தது. கொல்லைப்புரம் குளியலறை மட்டும் பொது.

அவன் சில சாமான்களை எடுத்துக் கொண்டு திரும்பி வெளியே வந்தான்.

அங்கிருந்து இருபது கிலோ மீட்டர் தூரத்தில் டவுன் ஒன்று இருந்தது. அங்கிருந்த இன்ஸ்பெக்டரைச் சந்தித்தான்.

''பரத் என்ற ஜர்னலிஸ்ட்டை லாக்கப்பில் வைத்திருக்கீங்க இல்லையா? அவனுக்காக வந்திருக்கிறேன்.''

''உங்க போலீஸ் ஸ்டேஷனைச் சேர்ந்தவங்கதானே அவன் இருக்குமிடம் யாருக்கும் தெரியாமல் ரகசியமாக வைத்திருக்கச் சொல்லி இங்கே என்னிடம் கொண்டு வந்து ஒப்படைத்தாங்க?''

''ஆமாம். இப்போ நான் ட்யூட்டியில் சேர்ந்து விட்டேன் இல்லையா? நான் அழைத்துக் கொண்டு போகிறேன் அவனை.''

''ஜாக்கிரதை! அவன் ரொம்ப ஆபத்தான ஆள் என்று எஸ்.ஐ.சுதாகர் சொன்னான்.''

ராணா கோபத்தையும் எரிச்சலையும் கட்டுப்படுத்திக் கொண்டு ''பரவாயில்லை. நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்றான். பரத்தை அழைத்துக் கொண்டு அவன் திரும்பி தன் ஊருக்குப் புறப்பட்டான்.

''யார் நீங்க?'' பரத் கேட்டான்.

''போலீஸ் டிபார்ட்மென்டைச் சேர்ந்தவன் என்று சொல்லிக் கொள்வதற்கு வெட்கப்படுகிறவன். என் பெயர் ராணா'' என்று ரயிலில் அவன் மனைவியையும், மகளையும் பார்த்த விஷயத்தைச் சொன்னான். எல்லாவற்றையும் சொல்லிவிட்டு ''இப்போ சொல்லுங்கள். உங்களை எங்க ஆட்கள் ஏன் அரெஸ்ட் செய்தாங்க?'' என்று கேட்டான்.

''எனக்குத் தெரியாது'' என்றான் பரத் சிரித்துக் கொண்டே. ''நான் இன்வெஸ்டிகேட்டிவ் ஜர்னலிஸ்ட். விதவிதமான கட்டுரைகளை எழுதுவதற்காக ஆராய்ச்சி செய்து கொண்டே இருப்பேன். அது யாருக்காவது துன்பத்தை விளைவித்திருக்கலாம்.''

''தற்சமயம் நீங்க எந்த டாபிக் பற்றி எழுதிக் கொண்டிருக்கீங்க?''

''நடைபாதை வாழ்க்கையைப் பற்றி எழுதிக் கொண்டிருக்கிறேன். கடவுளின் செல்வம் என்று இன்னொரு கட்டுரையை எழுதி வருகிறேன்.''

''கடவுளின் செல்வமா? அப்படி என்றால்?''

''நம் ஊரில் விஷ்ணு கோவிலில் உள்ள விக்கிரகத்தின் ஆபரணங்களைப் பற்றித் தெரியும் இல்லையா? சுமார் ஐம்பது லட்சம் விலை மதிப்புக் கொண்ட ஆபரணங்கள் அவை. புராதன காலத்திலிருந்து இருக்கின்றன. அவற்றின் பின்னணி, விலை மதிப்பு போன்ற விவரங்களை சேகரித்துக் கட்டுரை எழுத வேண்டும் என்பது என் எண்ணம்.''

''அது யாருக்கும் தீங்கு விளைவிக்காதே?''

''இன்னொன்று நடைபாதை வாழ்க்கையைப் பற்றி.''

''அதுகூட யாருக்குமே தீங்கு இழைக்காதே?''

''அப்படிச் சொல்லாதீங்க. இதில் ஒரு விநோதமான முடிச்சு இருக்கிறது. நள்ளிரவு வரையில் ஹோட்டலில் காப்பிக் கோப்பைகளைக் கழுவி குளிரிலும், மழையிலும் நடைபாதையில் படுத்து உறங்கும் பையன்களின் வாழ்க்கை இது.''

''அதனால் என்ன?''

''கொஞ்சம் நல்ல வாழ்க்கையை ருசிகாட்டி, வசதிகளை ஏற்படுத்தித் தந்தோமானால் நாம் எதைச் சொன்னாலும் செய்வதற்கு தயாராக இருக்கும்

அல்சேஷன் நாய்களைப்போல் தயாராவார்கள். ஆட்டம் பாமை விடவும், ஹைட்ரஜன் பாமையும் விட பயங்கரமானவன் மனிதன். குறி தவறாமல் வேலையை முடிக்கும் அணுவாயுதம் அவன்.''

ராணா புரியாமல் பார்த்தான்.

''நடைபாதையில் வாழ்கிறவர்களுக்கு வாழ்க்கை சாரமில்லாமல் போய்க் கொண்டிருக்கும். எதிர்காலம் எப்படியிருக்குமோ தெரியாது. எல்லாம் ஃபிரஸ்ட்ரேஷன்தான். அப்படிப்பட்ட இளைஞர்களைப் பிடித்து, அவர்களைத் தூண்டிவிட்டு பயிற்சியைத் தந்தால்...'' பரத் நிறுத்தி நிதானமாகச் சொன்னான், ''நல்ல குண்டர்களாகத் தயாராவார்கள். சாதாரண மனிதனை பயமுறுத்துவதில் உள்ள சந்தோஷத்தைக் கொஞ்சம் ருசி காட்டி விட்டால் போதும். அந்த த்ரில்லில் இருக்கிற ஆனந்தம் வேறு எதிலும் இல்லை. சிறுவயதில் தாம் அனுபவித்த நகரம் அவர்களை அரக்கர்களாக மாற்றி விடுகிறது. அது மட்டுமில்லை. அந்த நகரத்திலிருந்து தம்மை விடுவித்த யஜமானர்களிடம் அவர்கள் நன்றியோடு இருப்பார்கள். அவனுக்காக அவர்கள் எந்தக் காரியம் வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருப்பார்கள். அதற்கு ஈடாக அந்த யஜமானர்களும் அவர்களுக்கு நிறைய பணம் தருவார்கள்.''

ராணாவுக்கு தான் இதற்கு முன்னால் வேலை பார்த்து வந்த போலீஸ் ஸ்டேஷனில் காபி கொண்டு வந்து கொடுக்கும் ராஜா சந்திரனைப் பற்றிய நினைவு வந்தது. திடீரென்று ஒருநாள் அவன் மாயமாகி விட்டான். யாருமே

அவன் காணாமல் போனதைப் பற்றிப் பொருட்படுத்த வில்லை. பொருட்படுத்த வேண்டிய தேவையும் இல்லை.

பரத் சொன்னான். ''இந்த இளைஞர்கள் எல்லோரும் என்னவானார்கள்? யாரோ புத்திசாலித்தன காபிடலிஸ்ட். தன்னுடைய முதலீடாக இவர்களுக்கு ஆதரவு தந்து தன் கைக்குள் வைத்திருக்கிறான் என்பது உண்மை. அவன் யாரென்று தெரிந்து கொள்வதற்கு நான் கொஞ்சம் முயற்சி செய்தேன். அதற்குள் போலீசார் என்னை அரெஸ்ட் செய்து விட்டார்கள்.''

''இந்த இளைஞர்களுக்கு அடைக்கலம் தருவது யாரென்று எனக்குத் தெரியும் பரத்...''

''யார்?''

''அரவிந்த் சௌரஸியா...''

பரத் சட்டென்று நிமிர்ந்து பார்த்தான்.

''ஆமாம் பரத். நீ செய்தாற்போலவே நானும் விசாரணை செய்தேன், ஆனால் வேறு கோணத்திலிருந்து. இப்போ எனக்கு விஷயம் தெளிவாகப் புரிந்து விட்டது. கடந்த சில ஆண்டுகளாகக் கல்லுக்கடியில் நீராய் இருந்து வரும் இருட்டுலக ராக்கெட் இது. உனக்குக் கீழே நூறு ஆட்கள் இருக்கிறார்கள் என்று வைத்துக் கொள். ஒரு ஊரையே ஆட்டிப் படைப்பதற்கு அவர்கள் போதும். அவர்கள் உயிரையும் பொருட்படுத்த மாட்டார்கள். ஜெயிலுக்கு அஞ்ச மாட்டார்கள். அவர்கள்தான் உன் மூலதனம். உனக்காக அவர்கள் சந்தாக்களை வசூல் செய்வார்கள். காலியான இடங்களை ஆக்கிரமித்துக் கொள்வார்கள். யாராவது அரசியல்வாதி தேர்தலுக்காக

தஞ்சமடைந்தால், உன் சார்பில் இவர்கள் ரிக்கிங் செய்வார்கள். அந்த அரசியல்வாதி பதவிக்கு வருவான். உன்னிடம் நன்றியுடன் இருப்பான். அதற்குப் பிறகு ஆட்டோ மேட்டிக்காக போலீஸாரும் உன் கட்டுப் பாட்டிற்குள் வந்து விடுவார்கள். சுற்று வட்டாரத்தில் உன் செல்வாக்கும், புகழும் பரவும். மெல்ல மெல்ல ஒரு ஸ்டேஜ் வந்ததும் பாராளுமன்றத்தில்கூட உன் ஆட்களே இருப்பார்கள். முதலமைச்சரை உன்னால் ஆணையிட முடியும். மாநிலம் முழுவதும் உன் கைக்குள் வந்து விடும். சாதாரண கூலியாய் இருப்பதைவிட உன் கீழே வேலை பார்ப்பது சுகமாகத் தோன்றும். தேர்தலிலும் ஒவ்வொரு எம்.எல்.ஏ.வை ஜெயிக்க வைப்பதற்காக இருபத்தைந்து லட்சம் வசூல் பண்ணுவாய்.

ஒரு லைசென்ஸிற்குப் பத்து லட்சம் கேட்பாய். உன் வருட வருமானம் சர்வ சாதாரணமாக ஐந்தாறு கோடிகள் இருக்கும். உன் கீழே வேலை செய்யும் ஆட்களுக்குத் தனியாய் வெளியே கிடைப்பதோடு, உன்னிடமிருந்தும் மாதத்திற்கு ஐயாயிரமோ ஆறாயிரமோ கிடைக்கும். உன் ஆட்களுக்கு தாதா என்ற பெயரும், உனக்குச் சமூகத்தில் செல்வாக்கும், எங்கே போனாலும் நொடிப் பொழுதில் வேலை முடிந்து விடுவதும்... இதைவிட வேறு என்ன வேண்டும்?''

பரத் மூச்சு விடவும் மறந்தவனாக ராணாவையே பார்த்துக் கொண்டிருந்தான். இறுதியில் ஒருவாறு வாயைத் திறந்து ''நான் எழுதிக் கொண்டிருக்கும் நடைபாதை வாழ்க்கைப் பற்றிய கட்டுரைக்குப் பின்னால் இவ்வளவு கதை இருக்கிறதா?'' என்றான்.

''அரவிந்த் சௌரஸியா அனாவசியமாக தன் நிழலைப் பார்த்துத்தானே பயந்து விட்டான். அவர்கள் பயப்படுவது பத்திரிகைகளுக்கு மட்டும்தான். இப்போது நான் சொன்னதை எல்லாம் நீங்க விசாரணை செய்து எழுது றீங்களோ என்னவோன்னு ஒருக்கால் சின்ன எச்சரிக் கையைத் திரைமறைவிலிருந்து தந்திருப்பான்.''

''இப்பொழுது நிச்சயமாக எழுதுவேன்.''

''அதற்கு முன்னால் நீங்க ஒரு காரியம் செய்யுங்கள். ஆசிரியர் காலனியைச் சேர்ந்தவர்களைச் சந்தியுங்கள். அவர்கள் மூலம் பத்திரிகைக்காரர்களுக்கு சேர வேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கின்றன.''

''கண்டிப்பாகச் செய்கிறேன்.''

இருவரும் வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள். பரத்தைப் பார்த்ததுமே வீட்டில் சந்தடி ஏற்பட்டது. அபிராமி ஓட்டமாக ஓடிவந்து தந்தையைக் கட்டிக் கொண்டாள். பரத்தின் மனைவி ஆனந்தக் கண்ணீர் விட்டாள்.

ராணாவுக்கு ஏனோ வருத்தமாக இருந்தது. போலீஸார் எத்தனையோ பேரைக் காரணம் சொல்லாமல் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்வது அவனுக்குத் தெரியும். அவர்கள் திரும்பி வந்து சேர்ந்து விட்டால் வீட்டில் இருப்பவர்கள் எவ்வளவு மகிழ்ச்சி அடைவார் கள் என்பதை இப்பொழுதுதான் கண்கூடாகப் பார்க்கிறான்.

அதற்குமேல் அங்கே இருக்கப் பிடிக்காமல் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து விட்டான்.

அவன் ஸ்டேஷனுக்கு வந்தபோது அங்கே காலனியைச் சேர்ந்தவர்கள் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தார்கள்.

''என்ன விஷயம்?'' என்று கேட்டான்.

''ஒரு மணி நேரத்திற்கு முன்னால் எம்.எல்.ஏ. நரசிம்மன் வந்தார் சார். விஷயத்தை எல்லாம் தெரிந்து கொண்டு எங்களை ஸ்டேஷனுக்குப் போய் இருக்கச் சொல்லி விட்டு அவர் போய் விட்டார்.''

''எங்கே?''

''தெரியாது.''

''எந்த விஷயத்தை எல்லாம் தெரிந்து கொண்டு போனார்?''

அவர்கள் ஏதோ சொல்ல வந்தபோது படிகளில் சந்தடி கேட்டது. நரசிம்மன் மஸ்தானைக் கழுத்தைப் பிடித்து இழுத்து வந்து கொண்டிருந்தான்.

மஸ்தானை ராணாவுக்கு முன்னால் தள்ளி விட்டு ''இவன் ஏதோ ரகளை செய்தானாமே? இந்த யோக்கியப் பசங்களை ஏன் விட்டு வைத்திருக்கீங்க?'' என்றான்.

ராணா ஏதோ சொல்ல வந்தபோது ''முதலில் இவனை லாக்கப்பில் தள்ளுங்க. அப்புறமாக பேசுவோம்'' என்று தானே சுயமாக மஸ்தானை செல்லுக்குள் தள்ளி விட்டு வந்து உட்கார்ந்து கொண்டான்.

''இந்த அயோக்கியப் பசங்கள் அரசியல் செல்வாக்கை நன்றாகப் பயன்படுத்திக் கொள்வார்கள் சார். பெரிய மனிதர்களின் பெயரைச் சொல்லிக் கொள்வது இவர்களுக்கு நன்றாகப் பழக்கமாகி விட்டது. இவனை விட்டு

விடச் சொல்லி டி.எஸ்.பி. சாருக்கு என் பெயரைச் சொல்லி யார் கேட்டுக் கொண்டார்களோ தெரியாது. இந்தக் காலனிக்காரர்கள் வந்து இவன் கும்பல் செய்த அக்கிரமங்களை எல்லாம் எடுத்துச் சொன்னபோது ஆச்சரியப்பட்டு விட்டேன். நான் மக்களைச் சேர்ந்தவன். என் பெயரைச் சொல்லி இன்னொருத்தர் காரியத்தைச் சாதித்துக் கொள்வதைச் சகித்துக் கொள்ள முடியாமல், இவனைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்தேன். யாருடைய செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டாலும், இன்னும் சொல்லப்போனால் முதலமைச்சரின் சிபாரிசாக இருந்தாலும் சரி, இவனை விட்டு விடாதீங்க. உங்களுக்குப் பின்னால் நான் இருக்கிறேன்.''

ராணா இன்னும் ஆச்சரியத்திலிருந்து மீளவில்லை. ஆசிரியர் காலனியைச் சேர்ந்தவர்களின் முகம் மலர்ந்தது. நரசிம்மனிடம் அவர்களுக்கு மதிப்பு கூடியதை அவர்கள் முகமே எடுத்துக் காட்டியது.

''தாங்க்ஸ்!'' என்றான் சுருக்கமாக.

காலனியைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் எழுந்து நின்று ''போய் வருகிறோம் சார்'' என்றார்கள் நரசிம்மனைப் பார்த்து. அவர்கள் குரலில் ''உங்களை அனாவசியமாகத் தவறாக புரிந்து கொண்டு விட்டோம்'' என்ற உணர்வு வெளிப்பட்டது.

அந்த நேரத்தில் ஒயர்லெஸ்ஸில் செய்தி வந்தது. கான்ஸ்டபிள் பரபரப்புடன் சொன்னான். ''சார்! ரவுடிகள் ஆசிரியர் காலனியைச் சின்னாபின்னம் செய்து விட்டார்கள். அங்கிருந்துதான் பேசுகிறேன்.''

ராணா கலவரத்துடன் எழுந்து கொண்டான். விஷயம் தெரிந்து நரசிம்மன் ''அப்படியா? கிளம்புங்க. இவர்கள் என் காரிலேயே வரட்டும்'' என்று சொல்லி விட்டுப் புறப்பட்டான். நரசிம்மனின் மாருதியில் சிலரும், போலீஸ் ஜீப்பில் சிலருமாகக் காலனிக்குப் புறப் பட்டார்கள்.

அதற்குள் நடக்க வேண்டியதெல்லாம் நடந்து முடிந்து விட்டது. குண்டர்கள் காலனியைத் துவம்சம் செய்திருந் தார்கள். சிலர் வீடுகளில் சாமான்களை எடுத்து வெளியே வீசியெறிந்திருந்தார்கள். குறுக்கிட்டவர்களை அடித்தார் கள். ''எங்க தாதாவைப் போலீசில் பிடித்துக் கொடுத் தீர்களா?'' என்று வாய்க்கு வந்தபடி பேசியிருக்கிறார்கள். நிறைய பொருள் சேதம் ஏற்பட்டிருந்தது புரிந்தது.

நரசிம்மன் சொன்னான். ''இவர்கள் நிச்சயமாக அந்த மஸ்தானின் ஆட்களாகத்தான் இருப்பார்கள். யாரையும் விடாதே. எல்லோரையும் பிடித்து எலும்புகள் உடையும் அளவுக்கு உதைத்துத் தள்ளு'' என்று சொல்லி விட்டு காலனிவாசிகளை நோக்கித் திரும்பி ''நீங்கள் ஒன்றும் பயப்படாதீங்க'' என்று கொஞ்ச நேரம் தைரியம் சொல்லி விட்டு அங்கிருந்து போய் விட்டான்.

இன்னும் ஒரு மணி நேரத்திற்குள் கட்சியின் பெண் தொண்டர்கள் வந்து காலனியைச் சேர்ந்த பெண்களுக்குத் தைரியம் சொல்லுவார்கள் என்றும் சொன்னான். ராணாவுக்கு நரசிம்மனின் உபாயம் புரிந்து விட்டது. இதற்குப் பின்னால் இருந்தது அவன்தான் என்று சொன்னால் காலனிவாசிகள் இப்பொழுது நம்பும் நிலையில் இல்லை. அவ்வளவு தூரம் நாடகமாடி

யிருக்கிறான். இப்பொழுது இந்த ரகளை எல்லாம் மஸ்தானை அரெஸ்ட் செய்ததற்கு அவன் ஆட்களே செய்தாற்போல் பிரமையை ஏற்படுத்தி விட்டான். அவர்களைப் பிடிக்க வேண்டிய பொறுப்பை அவன் மீது சுமத்தி விட்டு அவன் நழுவி விட்டான்.

ராணாவுக்கு வெறுப்பாக இருந்தது. யார் மீதென்றே தெரியாத வெறுப்பு.

''உங்கள் காலனியில் புகுந்து அட்டூழியத்தைச் செய்த ரவுடிகளைப் பிடித்து உள்ளே தள்ளுகிறேன்'' என்றான்.

''வேண்டாம் சார்'' என்றான் காலனிவாசிகளில் ஒருத்தன். ''எங்களை இப்படியே வாழ விடுங்கள். உங்கள் ரகளைகளுக்கிடையே எங்களைச் சிக்க வைத்து விடாதீங்க.''

ராணா ஏதோ சொல்லப்போனவன் நிறுத்திக் கொண்டான். எல்லோர் முகத்திலும் அதே உணர்வு தென்பட்டது. ''அவர்கள் நல்லவர்களாக இருந்ததால் எங்க வீட்டுப் பெண்களின் மீது கை வைக்க வில்லை. வேண்டுமானால் சந்தாக்களைக் கொடுத்துக் கொள் கிறோம். எங்களை மேலும் தொல்லைகளுக்கு ஆளாக்கா தீங்க'' என்ற உணர்வு.

அவர்கள் போய் விட்டார்கள்.

காலனியிலிருந்து யாரோ ஒரு சிறுவனின் அழுகுரல் கேட்டுக் கொண்டிருந்தது.

ராணா மட்டும் தனித்து நின்றான். ''நரசிம்மா! இரு, உனக்குப் பாடம் கற்பிக்கிறேன்'' என்று எண்ணிக் கொண்டான்.

அவன் போலீஸ் ஸ்டேஷனுக்கு போவதற்குள் லாயர் தயாராக இருந்தார். ''எந்தக் குற்றத்தின் பெயரில் மஸ்தானை அரெஸ்ட் செய்திங்கன்னு தெரிந்து கொள்ளலாமா சார்?'' என்று பணிவாகவே கேட்டார்.

''ஒரு போலீஸ் அதிகாரியை அடித்ததற்காக.''

''இப்படிக் கேட்பதற்கு மன்னித்துக் கொள்ளுங்கள். நீங்க அப்பொழுது யூனிஃபாரத்தில் இருந்தீங்களா?''

''இல்லை.''

''மஃப்டியில் நீங்களே அவனை முதலில் அடித்ததால் அவன் உங்களைச் சாதாரண ஆளாகத் தவறாகப் புரிந்து கொண்டு விட்டான்.''

''நாளைக்கு கோர்ட்டில் நான் இதுபோல்தான் வாதாடப் போகிறேன். நீ வீணாக கஷ்டத்தில் மாட்டிக் கொள்ளப் போகிறாய் இன்ஸ்பெக்டர்!'' என்ற எச்சரிக்கை இருந்தது லாயரின் குரலில்.

''நாம் மஸ்தானை விட்டு விட்டு சமாதானமாகப் போவதுதான் நல்லது என்று தோன்றுகிறது சார்'' என்றான் எஸ்.ஐ. கழி.

ராணா தலையை அசைத்தான். வேறு வழியில்லை. இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள் மேஜிஸ்ட்ரேட்டுக்கு முன்னால் ஆஜராக்க வேண்டும். கேசு நிற்காது. வீணாக போட்டி போட்டுக் கொண்டு மஸ்தான் மேல் கேசு போடுவதால் பிரயோஜனம் இல்லை. மஸ்தானை அழைத்துக் கொண்டு லாயர் போய் விட்டார்.

இரவு எட்டு மணியாகி விட்டது.

நாளைகாலையில் இந்த விஷயம் காலனிவாசிகளுக்குத் தெரிந்து விடும்.

இப்பொழுதே அவர்கள் கொதித்தெழுந்து கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது தான் மஸ்தானை விட்டு விட்டதாகத் தெரிந்தால், இனி தன்னை மன்னிக்க மாட்டார்கள். தன் நிலைமையைப் புரிந்து கொள்ளவும் மாட்டார்கள். அங்கே காலனியில் ரவுடிகள் ரகளை செய்ததற்குத் தானே காரணமாகி விட்டான். மஸ்தானைத் தானே விட்டு விட்டான். அவர்கள் கண்ணோட்டத்தில் நரசிம்மன் கருணைவள்ளல். ''என் அரசியலுக்கு முன்னால் நீ வெறும் துரும்பு'' என்று நிரூபித்து விட்டான்.

உண்மையில் அவன் துரும்புதானா?

அன்றிரவு சாப்பிடும்போது அதைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தான்.

பதினோரு மணிக்கு உடை மாற்றிக் கொண்டு புறப்பட்டான். போலீஸ் ஸ்டேஷனுக்கு இல்லை, நரசிம்மன் வீட்டிற்கு.

மோட்டார் சைக்கிளை தொலைவில் நிறுத்தி விட்டுச் சுவரேறிக் குதித்துப் பின்பக்கமாக போர்ட்டிகோவிற்கு வந்தான். புதிய மாருதி கார். இன்னும் ரிஜிஸ்ட்டேஷனோ இன்ஷ்யூரன்ஸோகூட ஆகவில்லை.

பெட்ரோல் டேங்கிற்குள் சிறிய துணியை நனைத்துப் பற்ற வைத்து விட்டு அங்கிருந்து வெளியேறினான். அவன் மோட்டார் சைக்கிளை ஸ்டார்ட் செய்து கொண்டிருந்த போது நெருப்பு ஆள் உயரத்திற்கு கிளம்பியதைப் பார்த்தான்.

கண்ணும் மண்ணும் தெரியாத அளவுக்கு வேகமாக ஓட்டிக் கொண்டு வந்து போலீஸ் ஸ்டேஷனுக்கு முன்னால் நின்றான். சரியாக பத்து வினாடிகளுக்குப் பிறகு போன் வந்தது.

''என் மாருதி காரை யாரோ நெருப்புப் பற்ற வைத்து விட்டார்கள்'' என்று கத்தினான் நரசிம்மன்.

''எது சார்? அந்தப் புதுக் காரா?''

''ஆமாம். அதுதான்'' என்று எரிச்சலும், கோபமும் கலந்த குரலில் சொன்னான்.

''நான் இதோ வருகிறேன்.''

அவன் போனபோது அங்கே மக்கள் கூட்டமாகக் கூடியிருந்தார்கள். காலனி வாசிகளும் இருந்தார்கள். கார் ஏறக்குறைய சாம்பலாகி விட்டிருந்தது. ஒன்றரை லட்சம் விலை மதிப்புடைய கார் சாம்பல்.

''இதை யார் செய்திருப்பாங்கன்னு நினைக்கிறீங்க?''

யாரோ கேட்டதற்கு ராணா பதில் சொன்னான்.

''இது நிச்சயமாக மஸ்தானின் காரியமாகத்தான் இருக்கும். மாலையில் லாயர் வந்து அவனை விடுதலை செய்து அழைத்துக் கொண்டு போனார். நீங்க என்னவோ கழுத்தைப் பிடித்து போலீஸ் ஸ்டேஷனுக்குத் தள்ளிக் கொண்டு வந்தீங்க. அந்த ஆத்திரத்தை மனதில் வைத்துக் கொண்டு காரை எரித்துச் சாம்பலாக்கியிருப்பான்.''

நரசிம்மனின் முகம் நிறம் மாறியது. ஏதோ முடிச்சு விடுபட்டாற்போல் ராணாவைப் பார்த்தான். அவன் பார்வையை ராணா பொருட்படுத்தவில்லை.

''அவன் மேல் கேசு போடணும் சார். இரண்டு வருடங்களுக்குக் குறையாமல் ஜெயிலில் தள்ளணும்.''

அதற்குள் போலீசார் வேனில் மஸ்தானைப் பிடித்துக் கொண்டு வந்தார்கள்.

''இவனை உண்மையைக் கக்க வைத்து விடுகிறேன். நீங்க ஒண்ணும் கலங்க வேண்டியதில்லை.''

''ஒன்றரை லட்சம் விலை மதிப்புடைய கார் சாம்பலாகி விட்டது... கலங்காமல் இருக்க முடியுமா?'' யாரோ முணுமுணுத்தார்கள்.

''மக்களுக்காக பாடுபடும் ஆள் நரசிம்மன்! மக்களுக்கு சிம்மசொப்பனமாக மாறி விட்ட ஒரு ரவுடியை போலீசார் கையில் பிடித்துக் கொடுத்ததற்காகத் தன் காரைத் தியாகம் செய்ய வேண்டியிருந்தாலும் அவர் கலங்க மாட்டார்'' என்றவன் மஸ்தானை நோக்கித் திரும்பி பளீரென்று அவன் கன்னத்தில் அறைந்து விட்டு ''ஏண்டா! காலனி வாசிகள் உன்மேல் புகார் கொடுத்தாங்கன்னு அவர்கள் மீது ரவுடிகளை ஏவி விட்டாயா? இப்போ நரசிம்மனே புகார் கொடுத்திருக்கிறார். என்ன செய்து விடுவாய் அவரை? மறுபடியும் ரவுடிக்களை அனுப்பி வைப்பாயா? வா... ஜெயிலில் உட்கார்ந்து கொண்டு நன்றாக யோசி'' என்று தள்ளிக்கொண்டே வேனுக்குள் ஏற்றினான்.

காலனிவாசிகளின் முகத்தில் நிம்மதி தென்பட்டது.

நரசிம்மனின் முகத்தில் மட்டும் செம்மை ஏறியிருந்தது. நடந்ததெல்லாம் அவனுக்கு இப்பொழுது நன்றாகப் புரிந்து விட்டது.

6

ராணா வீடு திரும்பியபோது மணி ஒன்று. மின்சாரம் போயிருந்தது. அவன் உடை மாற்றிக்கொண்டு பாத்ரூமிற்குள் நுழைந்தான்.

கதவைத் திறந்தவன் மேல் உருவம் ஒன்று சரிந்து விழுந்தது. வேறு யாராக இருந்திருந்தாலும் வீலென்று அலறியிருப்பார்கள். அவனாக இருக்கக் கொண்டு, அழுத்தமாகப் பிடித்துக்கொண்டே மெதுவாக கீழே இறக்கினான்.

வெளியே காரிருள்... நிசப்தம்.

ராணா ப்ரொஃபெஷனலிஸ்ட். அதோடு போலீஸ் துறையில் பல ஆண்டுகளாக வேலை செய்து வருகிறான். இருட்டில் ஒரு உருவம் மேலே வந்து விழுந்தால் பீதியடைந்து போகக்கூடிய ஆள் இல்லை.

அந்த உடலை அப்படியே சுவரோடு சாய்த்து வைத்தான்.

முதலில் மூச்சு இருக்கிறதா இல்லையா என்று மூக்கிற்கு அருகில் விரல் வைத்துப் பார்த்தான். மூச்சு பலவீனமாக வந்து கொண்டிருந்தது. ஏதாவது கத்திக் குத்து தென்படு கிறதா என்று கழுத்திற்கு அருகிலும், முதுகிலும் தடவிப் பார்த்தான். இடுப்பில் புடவைக்கும் ஜாக்கெட்டுக்கும் நடுவில் கையை வைத்துப் பார்த்தான். எதுவுமே தட்டுப்பட வில்லை. அவன் கை இன்னும் கீழே இறங்கப்போனபோது...

''நான் நன்றாகத்தான் இருக்கிறேன். எனக்கு ஒன்றும் ஆகவில்லை'' என்ற வார்த்தைகள் காதில் விழுந்தன.

அவன் அதிர்ந்தவனாக கையை பின்னால் இழுத்துக் கொண்டு ''யார் நீ? எங்க பாத்ரூமுக்குள் எப்படி வந்தாய்?'' என்று கேட்டான்.

''என் பெயர் அலக்நந்தா'' என்றாள் அவள்.

அவன் தன்னறியாமல் கையை இழுத்துக் கொண்டே ''நீயா?'' என்றான். ''நம் இருவருக்குமிடையே இப்படி பாத்ரூம் தரையில் முதல் முதலாக அறிமுகம் ஏற்பட்டிருப்பது யதேச்சையாக இருந்தாலும் சந்தோஷ மாக இருக்கிறது. அப்படி நினைவு தப்பி விழுந்து விட்டாயே? ஒருக்கால் எதையாவது பார்த்து பயந்து விட்டாயா?''

அவள் ஏதோ பதில் சொல்லப் போனாள். அதற்குள் ''யாரது? அலகா'' என்று தாயின் குரல் கேட்டது.

ராணா ஓரடி பின் வாங்கினான். ''இப்படி நள்ளிரவு நேரத்தில் நம்மிருவரையும் சேர்த்து இருட்டில் பாத்ரூமில் உங்க அம்மா பார்த்து விட்டால் தவறாகப் புரிந்து கொள்ள வாய்ப்பு இருக்கிறது. உள்ளே போ'' என்றான்.

குழப்பத்துடன் பார்த்தாள் ராணாவை.

''ச்சே ச்சே... உன் மனதில் தவறான யோசனைகளை ஏற்படுத்தும் எண்ணம் இல்லை எனக்கு'' என்று அவன் இன்னும் ஏதோ சொல்ல முயன்றபோது, அலக்நந்தாவின் தாய் அங்கே வந்தாள்.

''என்ன? என்ன நடந்தது?'' என்று கேட்டாள் சுவரில் சாய்ந்து உட்கார்ந்திருந்த மகளைப் பார்த்துப் பதற்ற மடைந்து.

ராணா மேலும் பதற்றமடைந்து போய் ''இன்னும் எதுவும் ஆகிவிடவில்லை'' என்றான்.

மகளின் தோளைப்பிடித்து எழுப்பி நிறுத்தியவள் ''இப்படி உபவாசம் இருக்க வேண்டாம்னு சொன்னேனே, கேட்டாயா?'' என்றாள்.

''உபவாசமா?'' என்றான் ராணா வியப்புடன்.

''ஆமாம்ப்பா. முந்தாநாள் சனிக்கிழமை. நேற்றைக்கு ஏகாதசி. இன்றைக்கு கார்த்திகை திங்கள்.''

அவன் அலக்நந்தாவை விநோதமாகப் பார்த்தான். ''இந்த வயதில் இந்தப் பெண் இப்படி அடிக்கடி சாப்பாட்டைத் தவிர்ப்பதற்கு என்ன காரணம்? ஏதாவது ஜீரணக் கோளாறா?'' என்று கேட்டான்.

அலக்நந்தா அவனைக் கோபமாகப் பார்த்தாள்.

அவன் கேள்வியைக் கொஞ்சம் மாற்றி ''இவளுக்கு உபவாசத்தின் மேல் இவ்வளவு ஈடுபாடு ஏன்?'' என்றான்.

''பக்தி'' என்றாள் தாய்.

''பக்தியா? இந்த வயதில் இவ்வளவு பக்தி இருந்தால் நாற்பது வயதாவதற்குள் கண்டிப்பாக சாமியாராகி விடுவாள். அப்புறமாக உங்கள் ஜென்மம் சாபல்யமானாற் போல்தான். ஒருமுறை சாமியாராகி விட்டால் ஏகப்பட்ட பணம். அதோடு பெண் சாமியார்கள் இப்பொழுது ரொம்பக் குறைவு.''

அலக்நந்தாவின் முகம் சிவந்தது. ''பணம் சம்பாதிப் பதற்காகவும், சாமியாராவதற்காகவும் நான் உபவாசம் இல்லை. மனதைத் தூய்மையாக, அமைதியாக வைத்துக் கொள்வதற்காகத்தான் இப்படி உபவாசம் இருக்கிறேன்.''

''மனதை அமைதியாக வைத்துக் கொள்வதற்கு உபவாசம்தான் உபாயம் என்றால் இந்த நாட்டில் முக்கால் வாசிப்பேர் அமைதியாக வாழ்ந்து கொண்டிருக்கணுமே'' என்றான்.

''அவரவர்களின் அபிப்பிராயம் அவரவர்களுக்கு'' என்றாள் அலக்நந்தா சுருக்கமாக.

''அபிப்பிராயம் எதுவாக இருந்தாலும் ஒன்றை மட்டும் உன்னால் மறுக்க முடியாது அலக்நந்தா...''

''அது என்ன?''

''நள்ளிரவு தாண்டி செவ்வாய்க்கிழமை வந்து விட்டது. நீ இனி சாப்பிடலாம்.''

அவள் கண்களைத் தாழ்த்திக்கொண்டு ''செவ்வாய்க் கிழமை அனுமாருக்கு வேண்டிக் கொண்டு இருக்கிறேன். சாப்பிட மாட்டேன்'' என்றாள்.

''அவர் பிரம்மச்சாரி. அவரை வேண்டிக் கொண்டால் வாழ்நாள் முழுவதும் கன்னிப் பெண்ணாகவே இருக்க வேண்டியதுதான்.'' பயமுறுத்தினான்.

''அதுதான் எனக்கும் வேண்டியது'' என்று சொல்லி விட்டு அங்கிருந்து போய் விட்டாள் அலக்நந்தா.

''உங்கள் மகளைப் பார்த்தால் ரொம்ப இன்ட்ரஸ்டிங் காக இருக்கு அத்தை'' என்றான் அவள் போன பக்கமே பார்த்தபடி.

''என்ன இன்ட்ரஸ்டோப்பா! இவளைப் பார்த்தால் கல்யாணம் கார்த்திகை நடக்கிற அதிர்ஷ்டம் இருக்கிற தாகத் தோன்றவில்லை. அவள் வாழ்க்கை அப்படியாகி விட்டது. அந்தக் கிளி ஜோதிடன் சொன்னது போலவே நடக்கிறது.''

''அதென்ன ஃபிளாஷ்பேக்? அதென்ன கதை?''

''பெரிய கதை ஒன்றுமில்லை. அவளோட பதிமூன்றாம் வயதில் ஒரு கிளி ஜோதிடன் அவளுக்கு ஜோசியம் சொன்னான். கன்னி கண்டம் இருக்கிறது என்றும், கன்னிக் கழிந்த அடுத்த நிமிடமே அவளுக்கு மரணம் உறுதி என்றும் சொன்னான். அது அவள் மனதில் ஆழமாகப் பதிந்துபோய்

விட்டது. அப்பொழுதிலிருந்து இப்படி பூஜை புனஸ்காரம் என்று தொடங்கி விட்டாள்.''

''இந்தப் பூஜைகள் எல்லாம் கல்யாணத்திலிருந்து தன் மனதைத் திருப்பிக் கொள்வதற்காகவா? அல்லது கண்டத் திலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவா?''

''கல்யாணம் என்றாலே பயப்படுகிறாள் தம்பீ! பார்த்தாலே தெரியவில்லையா?''

''உங்கள் மகளின் உடற்கட்டைப் பார்த்தால் உங்கள் அபிப்பிராயம் தவறோ என்று தோன்றுகிறது. இப்படிச் சொன்னதற்கு தவறாக நினைத்துக் கொள்ளாதீங்க அத்தை! உங்கள் மகள் கன்னிக் கண்டத்திலிருந்து தப்பித்துக் கொள்ளணும் என்றுதான் இந்தப் பூஜையெல்லாம் செய்து வருவதாக நான் நினைக்கிறேன். சில பெண்கள் முதலிரவைப் பற்றியெல்லாம் யோசித்துக் கொண்டே ரொம்ப அழுத்தமாக இருப்பாங்க. யாராவது பெரிய ஜோதிடரிடம் காட்டி அந்தக் கிளி ஜோதிடன் சொன்னது பொய் என்று சொல்ல வைத்திருக்கலாமே.''

''எத்தனைபேர் எத்தனை விதமாக எடுத்துச் சொன்னாலும் அவள் பயம் போகவில்லை தம்பீ.''

''நான் முயற்சி செய்து பார்க்கட்டுமா?'' என்றான் ஆர்வத்தோடு.

அவள் முகம் நிறம்மாறியது. அவனைச் சந்தேகத்தோடு பார்த்துக் கொண்டே ''என்ன முயற்சி செய்வாய் நீ?'' என்றாள்.

''தவறாக நினைக்காதீங்க. வெறுமே பயத்தைப் போக்கடிப்பேன். அவ்வளவுதான்.''

அந்தம்மாள் பதில் சொல்லவில்லை.

அவளைப் பரிவோடு பார்த்து விட்டு ''முதல் முதலாக உங்களைப் பார்த்ததுமே நம்மிருவருக்கும் ஜென்மம் ஜென்மமாக தொடர்பு இருந்து வந்திருக்கும்னு தோன்றியது'' என்றான்.

அவள் பயந்து போய் வீரென்று அலறப் போனாள்.

''நில்லுங்கள். தொடர்பு என்றதுமே தவறாக புரிந்து கொள்ளாதீங்க. அது மாமியார், மாப்பிள்ளையின் தொடர்பு. அவ்வளவுதான். உங்கள் மகளைப் பார்த்ததுமே என் இதயத்தில் ஏதோ நெகிழ்ச்சி ஏற்பட்டு உங்களை அத்தை என்று கூப்பிடத் தோன்றியது.''

அவளுக்கு ஏதோ புரிந்தாற்போல் இருந்தது. அவன் சிரித்தான்.

''நீங்கள் இந்த விஷயத்தில் எந்த சந்தேகத்தையும் வைத்துக் கொள்ளாமல் எனக்கு உதவி செய்வதாகச் சொன்னால்தான் என்னால் உங்கள் மகளின் கன்னித் தன்மையைப் போக்கடிக்க முடியும். சாரி... கன்னிக் கண்டம் பற்றிய பயத்தைப் போக்கடிக்க முடியும்.''

''உன் இஷ்டம் தம்பி... என்னால் என்ன சொல்ல முடியும்?'' என்றாள் அவள்.

காடிலாக் கார் அந்த தெரு முனையில் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய ஆள் பக்கத்திலேயே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பிளிமத்தில் ஏறிக் கொண்டான்.

இரவு பன்னிரெண்டைத் தாண்டி விட்டது. தெரு ஆளரவமற்று இருந்தது.

ப்ளிமத் ஒரு பங்களாவுக்குள் நுழைந்தது. கூர்க்காவுக்கு உள்ளேயிருந்த ஆள் யாரென்று தெரியாது. அவன் சுமார் ஆறேழு வருடங்களாக அந்த வீட்டிற்குக் காவலாளியாக இருந்து வருகிறான். அது ஒரு கெஸ்ட் ஹவுஸ் என்று மட்டுமே அவன் அறிவான். வாரத்திற்கு அல்லது பத்து நாட்களுக்கு ஒருமுறை நள்ளிரவைத் தாண்டிய பிறகு அங்கே இரண்டு கார்கள் வரும். பத்து நிமிட இடைவெளியில் அவ்விரண்டு கார்களும் அவ்விடத்திற்கு வந்து சேரும். விடியற்காலையில் போய் விடும். பகல் வேளையில் வேலைக்காரர்களும், தோட்டக்காரனும் தம் வேலைகளைத் தாம் செய்வார்கள்.

பிரிஸ்மா ஏஜென்ஸியின் கெஸ்ட் ஹவுஸ் அது. அந்தக் கம்பெனியின் சார்பில்தான் அவர்களுக்குச் சம்பளம் வழங்கப்பட்டு வந்தது. அவ்வளவுதான் தெரியும் வேலைக்காரர்களுக்கு. கூர்க்கா என்றுமே காருக்குள் எட்டிப் பார்த்ததில்லை. பிரிஸ்மா ஏஜென்ஸியின் செகரெட்ரி பகல் வேளையில் வந்து போய்க்கொண்டிருப்பான். இரவு நேரத்தில் ப்ளிமத் காரை ஓட்டிக் கொண்டிருப்பான்.

அந்த ப்ளிமத் காரிலிருந்து இறங்கிய ஆள் அரவிந்த் சௌரஸியா!

ஹால் நடுவில் உட்கார்ந்திருந்த காமினி அவனை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தாள். அவனைப்

பார்த்ததுமே எழுந்து அருகில் வந்து தோளில் கையைப் போட்டு, முத்தம் பதித்துவிட்டு, பிரிஜ்ஜிற்கு அருகில் சென்று இரண்டு கண்ணாடி டம்ளர்களில் மதுவை ஊற்றிக் கொண்டு வந்து, ஒன்றை அவனிடம் தந்து விட்டுப் பக்கத்தில் இருந்த சோபாவில் உட்கார்ந்து கொண்டாள்.

''நீ வந்து எவ்வளவு நேரமாச்சு?'' என்று கேட்டான்.

''பத்து நிமிஷம்.''

சௌரஸியா கண்ணாடி டம்ளரிலிருந்ததைக் குடித்து முடித்துவிட்டு, அவளைக் கட்டியணைத்துக் கொண்டே படுக்கையறைக்கு அழைத்துச் சென்றான்.

காமினிக்கு அது ரொம்பவும் வியப்பாக இருக்கும் எப்போதுமே.

கடந்த ஆறேழு வருடங்களாக அந்த வீட்டில் அவள் அவனைச் சந்தித்துக் கொண்டிருக்கிறாள். அவள் தன் காரைத் தானே ஓட்டிக் கொண்டு வந்து ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிறுத்துவாள். சௌரஸியாவின் செகரட்ரி அங்கே வந்து அவளைக் காரில் ஏற்றிக்கொண்டு அந்த வீட்டிற்கு அழைத்து வருவான். விடியற்காலையில் பிரிந்து போய் விடுவார்கள். அந்த ரகசியம் நான்கு பேருக்கு மட்டும்தான் தெரியும். சௌரஸியாவிற்கு, அவளுக்கு, அவன் செகரெட்ரிக்கு, அவள் கணவனுக்கு!

அவள் கணவனுக்கு அவள் பத்து நாட்களுக்கு ஒருமுறை எங்கேயோ போவது தெரியுமே தவிர, எங்கே போகிறாள் என்று மட்டும் தெரியாது. அவன் அதை

அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. புதிதாக கிடைத்திருந்த ஹோம் மினிஸ்டர் பதவியால் அவன் மிகவும் பூரித்துப் போயிருந்தான்.

காமினிக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்திய விஷயம் அது இல்லை.

இவ்வளவு நாட்களாக இந்த விஷயத்தை சௌரஸியாவால் இவ்வளவு ரகசியமாக எப்படி வைத்துக் கொள்ள முடிந்தது என்றுதான்.

அவள் கணவன் ஒரு அமைச்சர். அதோடு ஒரு நடிகையாக அவளை எல்லோரும் அடையாளம் தெரிந்து கொண்டு விடுவார்கள். இந்த விஷயம் பத்திரிகை களுக்கோ, மஞ்சள் பத்திரிகைகளுக்கோ சிறிய துப்பு கிடைத்தாலும்போதும், வெடிகுண்டாக வெடித்து விடும். ஆனால் அவ்வாறு நிகழவில்லை. சௌரஸியா அதற்கு வேண்டிய ஜாக்கிரதைகளை மேற்கொண்டான். அவனால் மட்டுமே அதுபோன்ற காரியங்களை செய்ய முடியும் என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை.

ஒருமுறை சின்ன பிசகு ஏற்பட்டு விட்டது.

நள்ளிரவு வேளையில் அவள் பிரிஸ்மா ஏஜென்ஸியின் வீட்டிற்குள் நுழைந்ததை டேவிட் என்ற ஆள் பார்த்து விட்டான். டேவிட் அவள் கணவனின் கார் டிரைவர். காமினி ஷுட்டிங் சமயங்களில் நள்ளிரவு நேரங்களிலும், விடியற்காலை வரையிலும் ஸ்டுடியோவில் கழிப்பது வழக்கம்தான். ஆனால் இப்படிப்பட்ட இடத்தில் ஏன் இருக்கிறாள் என்ற ஆர்வத்தில் கூர்க்காவிடம் ''அது

யாருடைய வீடு?'' என்று கேட்டான். அதே சமயத்தில் அங்கே நுழைந்த சௌரஸியா அந்த விஷயத்தைக் கவனித்து விட்டான். அடுத்த நாளிலிருந்து டேவிட் காணாமல் போனதற்குக் காரணம் மூவருக்கும் மட்டுமே தெரியும்.

அவ்வளவு ஜாக்கிரதையாக அந்த விஷயத்தை ரகசியமாக பாதுகாத்து வந்தான் சௌரஸியா. அப்படிப் பட்ட அபாரமான புத்திசாதுரியத்தைக் கண்டுதான் காமினி அசந்து போய் அவனுக்கு நெருக்கமானாள்.

விடி விளக்கைப் போட்டு விட்டு அவளை அணைத்துக் கொண்டான் அவன்.

நல்லதோ கெட்டதோ, கொலையோ வியாபாரமோ காலையிலிருந்து மாலை வரை சதா வேலைகளில் மூழ்கியிருப்பவன் சௌரஸியா. அவனுக்கு அவள் தரும் ரிலாக்ஸேஷன் பெரிது. ஆணை முற்றிலுமாக சந்தோஷத் தில் திளைக்கச் செய்யும் கலை பெண்களில் ரொம்பச் சிலருக்குத்தான் தெரியும். அந்தக் கலையில் அவள் திறமை மிகுந்தவள்.

அவளுடைய லவ் மேக்கிங் ஸ்தாயிகளில் இருக்கும். தான் திருப்தி அடைவதும், தன் திருப்தியை அவனுக்குத் தெரியப்படுத்தி அதன் மூலம் அவன் ஈகோவைத் திருப்தியுறச் செய்வதும், அவனுக்கு விருப்பமான காரியங்களை நாளுக்குநாள் அதிக சிரத்தை எடுத்துக் கொண்டு நிறைவேற்றுவதும்தான் அவை. எப்போதும் அவள் அவனுக்கு புதிதாக காட்சி தருவாள்.

அவளிடம் அவ்வளவு கலை இருந்ததால்தான் நூற்றுக்கு நூறு சதவீதம் மெடிரியலிஸ்ட்டான சௌரஸியா வால்கூட அவளை விட்டு விலக முடியவில்லை. அவள்பால் அளவுக்கு மீறிய கவர்ச்சியும், அன்பும் ஏற்பட்டிருந்தது அவனுக்கு. கவர்ச்சி எங்கே இருக்குமோ அங்கே அசூயையும் இல்லாமல் இருக்காது. என்னதான் சினிமா நடிகையாக இருந்தாலும், இவ்வளவு பேருடன் அறிமுகம் ஏற்பட்டிருந்தாலும் காமினிக்குத் தன்னோடு ஏற்பட்டிருந்த இந்தவிதமான நெருக்கம் வேறு யாருடனும் இல்லை என்று அறிவான் அவன். அப்படிப் பட்டது ஏதாவது இருந்தால் அவன் உயிரோடு விட மாட்டான் என்றும் அவளுக்கும் தெரியும். அப்படிப்பட்ட தேவை அவளுக்கு இதுவரை வரவில்லை.

அவன் அவள் மீது படர்ந்தான். அவன் தோள்களின் மீது அவள் விரல்கள் இயந்திரகதியில் பிணைத்துக் கொண்டன.

''முந்தாநாள் உன் கணவருடன் சேர்ந்து பந்த் நடந்த இடத்திற்கு போனாயாமே?'' என்றான்.

''ஆமாம்'' என்றாள் அவள் சுருக்கமாக.

''யாரோ இன்ஸ்பெக்டர் ரொம்ப ரகளை செய்தானாமே?''

''ஆமாம்.''

''அவன் பெயர் என்ன?''

''ஏதோ பெயர்... சரியாக நினைவில் இல்லை.''

அரை மணிக்குப் பிறகு அவன் காரில் வீட்டிற்குப் போய்க்கொண்டிருந்தான். இரவு மணி இரண்டைத்தாண்டி விட்டது.

சில நாட்களாக காமினி படுக்கையில் வேறு சிந்தனையுடன் இருந்து வந்ததைக் கவனித்தான் அவன். காதல் விஷயத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் வித்தியாசம் உண்டு. மனம் அங்கே இல்லாவிட்டாலும் ஒரு ஆணால் உற்காகமாக ஈடுபட முடியும். பெண் அவ்வாறு இல்லை. அவள் கைகளுக்கிடையே உள்ள ஆணை அவளால் மனதார விரும்ப முடியாமல் போனால் சலனமில்லாமல் இருந்து விடுவாள்.

சௌரஸியா விஷயத்திலும் அதேதான் நடந்தது.

கடந்த சில நாட்களாக காமினி அந்த நேரத்தில் வேறு யோசனையுடன் இருந்து வந்ததையும், சலனமற்று இருந்து வந்ததையும் கவனித்தான். அவள் மனம் அங்கே லயிக்கவில்லை என்றும் உணர்ந்து கொண்டான். சுபாவத்திலேயே பொறாமை கொண்ட அவன் யோசனை உடனே வேறு ஆண்களின் பக்கம் போயிற்று. சினிமாத் துறையில் உள்ள கதாநாயகர்கள் யாராவது அறிமுகமாகியிருப்பார்களோ என்று நினைத்தான்.

அப்பொழுதுதான் தெரிந்தது இந்த பந்த் சம்பவம். இரண்டு நாட்களுக்கு முன்னால் அவள் யாரையோ விசாரித்துக் கொண்டிருந்தாள், ராணா ஸ்டுவர்ட்புரத்தில் வேலைக்குச் சேர்ந்து விட்டானா என்று. அந்த விஷயம்கூட சௌரஸியாவுக்குத் தெரிந்து விட்டது.

இன்று...

ரொம்ப சாதாரணமாக கேட்பதுபோல் ''அவன் பெயர் உனக்குத் தெரியுமா?'' என்று கேட்ட கேள்விக்கு அவள் ''ஏதோ பெயர்... சரியாக நினைவில் இல்லை'' என்று சொன்ன பதில் அவனுக்கு அதுவரை இருந்து வந்த சந்தேகத்தை உண்மையாக்கியது.

தனக்குப் பக்கத்தில் படுத்துக் கொண்டு...

தன்னைச் சுற்றிலும் கைகளைப் பிணைத்துக் கொண்டு...

தான் அனுபவித்துக் கொண்டிருக்கும்போது...

அந்த மயக்கத்தில்...

அந்த மெய்மறப்பில்...

பெண் இன்னொரு ஆணைப்பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறாள் என்று தெரிய நேர்ந்தால் அதைவிட அவமானம் வேறு இல்லை. எந்த ஆணாலுமே அதைச் சகித்துக் கொள்ள முடியாது.

சௌரஸியாவைப் போன்றவர்கள் கொஞ்சமும் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள்.

7

விசாலமான வளாகத்தில் புனிதத்திற்கு அடையாளமாக கோவில். தொலைவில் சின்னக் குளம். படித்துறைக்குப் பக்கத்தில் அரளிச் செடிகள்.

அந்த இடத்தில் சூழ்நிலை அமைதியாக இருந்தது.

''இந்த இடமெல்லாம் உனக்கு நன்றாக அத்துபடியாகி இருக்கணும்'' என்றான் ராணா அலக்நந்தாவிடம்.

''கடந்த பத்தாண்டுகளாக காலையிலும் மாலையிலும் தவறாமல் வந்து கொண்டிருக்கிறேன் இங்கே'' என்றாள் பக்தியோடு.

''மதியத்திலும் வந்திருக்கலாமே?'' என்றான் எரிச்சலோடு.

''நிஜமாகவா?'' என்றாள் கண்களை அகல விரித்துக் கொண்டு. இருவரும் கோவில் படிகளில் ஏறிக் கொண்டிருந்தார்கள்.

''உனக்குத் தெரியுமோ தெரியாதோ, மதிய வேளையில் படுத்து உருண்டால் நிறைய புண்ணியம் வரும்.''

''தப்பு தப்பு. கோவிலில் அப்படிப்பட்ட கல்மிஷமான வார்த்தைகளைப் பேசக்கூடாது. அதோ... அந்த மணியைப் பார்த்தீங்களா? தப்பு செய்தால் அந்த மணியை தலையால் அடிக்கணும்'' என்றாள்.

ராணா அவளை குறும்பாக பார்த்தான். ''உன் மனதில்தான் ஏதோ இருக்கு. புரளுவது என்றால் அது கல்மிஷமாகுமா? நான் சொன்னது அங்கப் பிரதட்சணம் செய்வதைப்பற்றி. படுக்கையில் புரளுவதைப் பற்றியில்லை'' என்றான்.

இருவரும் பூசாரிக்கு முன்னால் வந்து நின்றார்கள். சுவாமிச் சிலை நகைகளால் அலங்கரிக்கப்பட்டு ஜெக ஜோதியாக ஒளி வீசிக் கொண்டிருந்தது. அந்தக் காலத்தி லேயே இருபத்தைந்து லட்சம் மதிப்பு கொண்டவையாம். இப்பொழுது குறைந்தபட்சம் கோடி ரூபாயாவது இருக்கும்.

''என்னம்மா? சௌக்கியமா?'' கேட்டார் பூசாரி, கற்பூர ஆரத்தியை நீட்டிக் கொண்டே.

தட்டில் தட்சணையைப் போட்டு விட்டு ''சுவாமி! நீங்கள் புராணங்களை எல்லாம் நன்றாகப் படித்தவர் என்று நினைக்கிறேன்'' என்றான் ராணா அவரைப் பக்தியோடு பார்த்துக் கொண்டே.

''படித்திருக்கிறேன் தம்பீ.''

''வாத்ஸாயன புராணம் படித்திருக்கீங்களா?''

''வாத்ஸாயன புராணமா? சிவ சிவா! அந்தப் பெயரையே கேட்டதில்லையே?''

''நீங்கள் படித்திருக்காவிட்டால் படிக்கலைன்னு சொல்லுங்க. அதானே தவிர அப்படிப்பட்ட புராணமே இல்லைன்னு டபாய்க்காதீங்க. அதில் கன்னி கழிப்பதைப் பற்றி எழுதியிருப்பாரே, நினைவு இருக்கிறதா?''

''புராணத்தில் கன்னி கழிப்பதைப் பற்றியா? சங்கரா...'' என்று சுவாமி சிலையை நோக்கித் திரும்பினார். அலக்நந்தா இருவரையும் விநோதமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''சுவாமி! இந்தப் பெண்ணிற்குக் கன்னிக்கண்டம் இருப்பதாக ஜோதிடர் பத்து வருடங்களுக்கு முன்னால் சொன்னாராம். கன்னி கழிந்த அடுத்த நிமிடமே செத்துப் போய் விடுவாள் என்றாராம். சில பெண்களுக்கு அந்தக் கண்டம் இருப்பதும் உண்மைதான். வாத்ஸாயன புராணத்தில் இதற்குச் சில பரிகாரங்களைச் சொல்லியிருக்கிறார். மறைவிடத்தில் மச்சம்... நில்லுங்கள்... ஆ... சங்கரா! என்று திரும்பவும் போய் விடாதீங்க. பெண்ணிற்கு மறைவிடத்தில் மச்சம் இருந்தால் இந்த விதி செல்லாது என்று வாத்ஸாயனர் சொல்லியிருக்கிறார் இல்லையா?''

''மறைவான இடத்தில் மச்சமா?''

''ஆமாம் சுவாமி!''

''மறைவான இடத்தில்..''

''புனிதமான கர்ப்பக் கிரகத்தில் நின்று கொண்டு திரும்ப அந்த வார்த்தைகளையே சொல்லிக்கொண்டு இருக்கீங்களே சுவாமி!'' என்று கண்ணடித்தான்.

பூசாரி குழப்பத்துடன் பார்த்தார். ராணா முகத்தை அப்பாவியாக வைத்துக் கொண்டு இன்னொரு தடவை

கண்ணடித்துவிட்டு ''சுவாமி! நீங்களும் ஒரு காலத்தில் இளமையில் இருந்தபோது இந்தத் துன்பங்களை எல்லாம் அனுபவித்திருப்பீங்க. என்னைப் புரிந்து கொள்ளுங்கள்'' என்றான் தீனமாக.

''எங்கேயோ படித்தாற்போல் நினைவு அப்பனே.''

''போதும் சுவாமி போதும். கடவுளுக்கு இல்லை, உங்களுக்கு செய்ய வைக்கிறேன் நித்திய கல்யாண பூஜை'' என்று அலக்நந்தாவை நோக்கித் திரும்பி ''பார்த்தாய் இல்லையா. போய் மறைவிடத்தில் மச்சம் இருக்கும் படியாய் பண்ணு சுவாமி என்று கோவிலைச் சுற்றி மூன்று பிரதட்சணம் செய்து விட்டு வா'' என்று அவசரப்படுத்தினான்.

அவள் புரியாமல் விழித்தாள். ''மறைவிடம் என்றால்?''

''அதையெல்லாம் நாம் தனியாய் இருக்கும்போது சொல்கிறேன். முதலில் அர்ஜென்டாக போய் விட்டு வா'' என்று அனுப்பி வைத்தான்.

அவள் போன பிறகு ''என்னப்பா இதெல்லாம்?'' என்று கேட்டார் பூசாரி.

''வேறு வழியில்லை சுவாமி! இவள் அப்பாவித் தனத்தோடு, முட்டாள்தனத்தையும் ஜோடித்துக் கொண்டிருக்கிறாள். அதைப் போக்கடிக்கும் முயற்சிதான் இது. அது கிடக்கட்டும். நீங்கள் ஒன்றும் நினைத்துக் கொள்ளாமல் இருந்தால் ஒன்று கேட்பேன். இவ்வளவு லட்சக் கணக்கான விலை மதிப்புடைய நகைகளை சுவாமிக்கு அலங்கரித்து இருக்கீங்களே? திருடர்கள் பயம் இல்லையா?''

''இதன் பூட்டுச் சாவிகளுள் ஒன்று என்னிடமும், இன்னொன்று கோவில் ட்ரஸ்ட்டியிடமும் இருக்கு.

நான்கு கார்டுகள் ராவும் பகலுமாகக் காவல் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்புறம் பயம் எதுக்கு தம்பி?''

அலக்நந்தா ஒருமுறை சுற்றி விட்டு இரண்டாவது பிரதட்சணத்திற்குப் போனாள்.

''இரண்டு வருஷத்திற்கு முன்னால் உங்க மகனோடு சேர்ந்து நான்கு கார்டுகள் கொலை செய்யப்பட்டார்கள் இல்லையா?''

பூசாரியின் முகம் வாடி விட்டது. ஒரு வேதனைக் கீற்று அவர் முகத்தில் தோன்றியது. ''ஆமாம் தம்பி! ஸ்டுவர்ட்புரத்தைச் சேர்ந்த ராமஸ்வாமி என்ற கயவன் அந்த ஐவரையும் கொன்று போட்டு விட்டான்.''

''இல்லை...'' தன்னையறியாமல் கத்தி விட்டான் ராணா. அவன் கத்தல் கோவில் சுவர்களில் எதிரொலித்தது. அவன் முகம் சிவந்து விட்டது. ஆனால் அதற்குள் சுதாரித்துக் கொண்டு விட்டான்.

''மன்னித்துக் கொள்ளுங்கள். ஆவேசத்தில் ஏதோ சொல்லி விட்டேன். அது சரி, என்னதான் நடந்தது?''

''ஒருநாள் நள்ளிரவு நேரத்தில் அந்தத் திருடன் எங்கள் வீட்டிற்குள் நுழைந்து என் மகனைக் கொன்று போட்டு, சாவிக் கொத்தை அபகரித்துக் கொண்டு, திருடப் போனான். குறுக்கே வந்த நான்கு காவல்காரர்களையும் கொன்று விட்டான். இன்னொரு ஜோடி சாவிக் கொத்துக் கிடைக்காததால் அவன் முயற்சி பலிக்கவில்லை.''

அலக்நந்தா இரண்டாவது பிரதட்சணத்தை முடித்தாள்.

''அரசாங்கம் திரும்பவும் நான்கு கார்டுகளை நியமித்தது. ஆனால் போன என் மகன் திரும்பி வரமாட்டான் இல்லையா? அரக்கனான அந்த ராமசுவாமி இத்தனைப் பேரைக் கொன்று விட்டு எதைச் சாதித்தான்?''

ராணாவின் கைகள் முறுக்கேறிக் கொண்டன.

''சுவாமியின் நகைகளைத் திருட நினைத்தவங்க நாசமாய் போவாங்க. அவங்க வாழ்க்கை மட்டுமே இல்லை. குடும்பமும் மண்ணோடு மண்ணாகப் போகும். உருத் தெரியாமல் அழிந்து விடும்.''

அலக்நந்தா பிரதட்சணத்தை முடித்துக் கொண்டு வந்தாள். ''போவோமா?'' என்று கேட்டாள்.

பூசாரியிடம் விடை பெற்றுக் கொண்டு ''வா...'' என்று புறப்பட்டான்.

''ஏன் ஒரு மாதிரியாக இருக்கீங்க?'' என்று கேட்டாள்.

''ஒன்றுமில்லை. நன்றாகத்தானே இருக்கிறேன்.''

''என்னவோ தெரியாது. நீங்கள் சிரித்தால்தான் நன்றாக இருக்கும்.''

அவன் திரும்பி பழைய மூடிற்கு வந்தான். சிரித்து விட்டு ''காம்ப்ளிமென்ட்ஸுக்கு தாங்க்ஸ்'' என்றான். இன்னும் நான்கு படிகள்தான் இருந்தன. அப்பொழுது கால் தடுக்கி விழுந்து விட்டான். தேகப் பயிற்சி செய்து கட்டுமஸ்தாக வைத்துக் கொண்டிருந்த உடம்பு என்பதால் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை அவன். அவள் மட்டும் பயந்து விட்டாள்.

''என்ன நடந்தது?''

''கால் இடறிவிட்டது. அவ்வளவுதான்.''

''இதோ வருகிறேன்'' என்று அவள் மேலே ஏறி ஓடினாள். ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு திரும்பி வந்தாள்.

''என்ன செய்தாய்?''

''கோவிலில் வேண்டாத வார்த்தைகளைப் பேசியதற்கு சுவாமிக்குக் கோபம் வந்து விட்டதோ என்னவோ என்று மணியைத் தலையால் அடித்து விட்டு வந்தேன்.''

அவன் வியந்துபோய் அவளைப் பார்த்தான். அவள் நெற்றி கறுத்துக் கன்றியிருந்தது.

அது முட்டாள்தனமாகவே இருக்கலாம். ஆனால் எந்தத் தர்க்கமும் எந்தக் கூற்றும் தர முடியாத திருப்தி... மனம் முழுவதும் காவேரியாய்...

தெற்கேயிருந்து வந்து வீசிய காற்று கோவில் குளத்தைச் சேதி விசாரித்து விட்டு, கர்ப்பக் கிரகத்தின் மணியைத் தொட்டு விட்டு, கற்பூர ஆரத்தித் தட்டின் வழியாய் ஆசிகளை வழங்கினாற்போல்...

அவன் பரிவோடு அவள் கையைப் பிடித்துக் கொண்டு ''வீட்டுக்குப் போகலாம் வா'' என்றான்.

மறுநாள் அவன் கழியைக் கூப்பிட்டு ''எனக்கு அந்தக் கோவில் கொலை சம்பந்தப்பட்ட ஃபைல் வேண்டும்'' என்று கேட்டான்.

''அதை எப்பொழுதோ மூடி விட்டோம் சார்.''

''மூடி விட்ட ஃபைலைத்தான் கேட்கிறேன்.'' கடுமையான குரலில் சொன்னான். பத்து நிமிஷத்தில் ஃபைல் அவன் மேஜைக்கு வந்தது.

அவன் படிக்கத் தொடங்கினான். மிகக் கொடுமையாக நிகழ்ந்திருந்தது கொலை. நான்கு கார்டுகளும், பூசாரியின் மகனும் ஆக மொத்தம் ஐந்து பேர் கொலை செய்யப் பட்டிருந்தார்கள். அவன் ஃபைலைக் கவனமாகப் படித்தான். கழி என்ற சுதாகர் அவனையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''ஊம்...'' ஆழ்ந்து மூச்சுவிட்டான் ராணா. ''ஐந்து பேரையும் ராமஸ்வாமிதான் கொன்றானா?''

''ஆமாம் சார்.''

''நீ சர்வீஸில் சேர்ந்து எவ்வளவு நாளாகிறது சுதாகர்?''

''பதினைந்து வருஷமாகி விட்டது.''

''நான் சேர்ந்து பதினைந்து மாதங்கள் ஆகிறது. ஆனால் தர்க்கரீதியாக யோசித்துப் பார்ப்பதற்கு இன்ஸ்பெக்டர் வேலையில் இருந்தால்தான் முடியும் என்று நான் நினைக்கவில்லை.''

''நீங்க எதைப் பற்றிப் பேசறீங்கன்னு புரியலை சார் எனக்கு.''

''ஐம்பது வயதுடைய ராமஸ்வாமி ஐந்து பேரை, அதில் நால்வர் கார்டுகள் வேறு... கொன்றான் என்றால் நம்பி விட்டாயா சுதாகர்?'' மெதுவாக கேட்டான்.

''கொன்றதாக அவனே ஒப்புக்கொண்டான் சார்.''

''ஒப்புக்கொண்டானா? ஒப்புக் கொள்ளச் செய்தாயா?''

கழியின் முகம் வாடி விட்டது. ரொம்ப நேரம் மௌனமாக இருந்து விட்டு ''மேலிடத்து உத்தரவு சார்'' என்று முணுமுணுத்தான்.

ராணா அவனை நெருங்கி தோளில் கை வைத்து ''யார் உத்திரவு?'' என்று கேட்டான் தாழ்ந்த குரலில்.

''எம்.எல்.ஏ. நரசிம்மன்... அரவிந்த் சௌரஸியா...''

ராணா போய் தன் சீட்டில் உட்கார்ந்து கொண்டு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான். ஓரிடத்தில் அவன் பார்வை நின்று விட்டது. திரும்பவும் படித்தான்.

''இந்தச் சம்பவத்திற்கு சாட்சி எம்.டி. கண்ணு... யார் இந்த எம்.டி.கண்ணு?''

''அந்தப் பெண் இந்த ஊர் எம்.பி. புலிராஜனின் மகள் சார்.''

''புலிராஜனின் மகள் பெயர் கண்ணுவா? ரொம்ப வேடிக்கையான பெயராக இருக்கே?''

''நிஜப்பெயர் மயில் கண்ணு திருபுரா. சுருக்கி எம்.டி.கண்ணு என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ரொம்ப மாடர்ன் கர்ல் சார்.''

''மயில்கண்ணு திருபுரா? எங்கேயோ கேட்டாற்போல் இருக்கிறது இந்தப் பெயரை'' யோசனையில் ஆழ்ந்த வாறே சொன்னான் ராணா.

எம்.டி.கண்ணு!

ஐந்தடி மூன்று அங்குலம் உயரம். பாப் செய்யப்பட்ட தலைமுடி, ஜீன்ஸ் பேண்ட், சுவர்க்கம் இங்கேதான் இருக்கிறது என்ற வாசகம் எழுதப்பட்ட பனியன்.

எப்போதும் கலகலப்பாக இருக்கும் அவள் மணிக்கு நூறு கிலோ மீட்டர் வேகத்தில் காரை ஓட்டிக் கொண்டிருந்தாள். தெருவில் வாழைப்பழ வண்டி ஒன்று இந்தப் பக்கத்திலிருந்து வந்து கொண்டிருந்தது. ரிக்ஷா ஒன்று அந்தப் பக்கத்திலிருந்து வந்து கொண்டிருந்தது.

இரண்டிற்குமிடையே தன்னால் போக முடியுமா என்று நினைத்துப் பார்த்தாள். அப்படிப்பட்ட த்ரில் என்றால் அவளுக்கு ரொம்பவும் பிடிக்கும்.

வேகத்தைக் குறைக்காமலேயே இரண்டிற்கும் நடுவில் வேகமாகப் போனாள் அவள். ஆனால் அந்த டென்ஷனில் மற்றொரு பக்கத்திலிருந்து வந்து கொண்டிருந்தவளைக் கவனிக்கவில்லை. அவள் கையிலிருந்த பூக்குடலை காற்றில் எழும்பி விழுந்தது. அவள் தெருவோரத்தில் விழுந்தாள். கண்ணு என்ற திருபுரா காரை ஒரு ஓரமாகக் கொண்டு வந்து நிறுத்தினாள். கான்ஸ்டபிள் வேகமாக ஓடி

வந்து கீழே விழுந்தவளை தூக்கி நிறுத்தி விட்டுத் திருபுராவிடம் வந்தான்.

கீழே விழுந்தவள் அலக்நந்தா.

ராணா அந்தக் காட்சியைத் தொலைவிலிருந்தே பார்த்தான்.

முதலில் அங்கே என்ன ரகளை நடந்து கொண்டிருந்தது என்று அவனுக்குப் புரியவில்லை. அலக்நந்தா பயந்துபோய் மிரண்ட பார்வையுடன் நின்று கொண்டிருந்தது கண்ணில் பட்டது. போலீஸ் பிரம்மானந்தம் பாலகிருஷ்ணன் ஒரு பெண்ணோடு ஏதோ தகராறு செய்தபடி தொலைவில் காருக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்ததைக் கண்டான்.

அதற்குள் அந்தப் பெண் பாலகிருஷ்ணன் கன்னத்தில் பளாரென்று அறைந்தாள்.

ராணாவின் புருவம் மேலே எழும்பியது. பாலகிருஷ்ணன் லஞ்சம் வாங்கும் பேர்வழி என்று தெரியும். ஆனால் பெண்களிடம் மரியாதைக் குறைவாக நடந்து கொள்ள மாட்டான். போலீஸ் ஸ்டேஷனில் பெண் கைதிகளிடம்கூட மரியாதையாகத்தான் நடந்து கொள்வான். அப்படிப்பட்டவனை அந்தப் பெண் ஏன் அடித்தாள் என்று புரியவில்லை. அதுவும் அவன் யூனிஃபாரத்தில் வேறு இருந்தான். யூனிஃபாரத்தில் இருந்தவனை அடித்தது சட்டரீதியாக பெரிய குற்றம்.

ராணா மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு அவர்களிடம் சென்றான். பாலகிருஷ்ணன் மிரள மிரள விழித்தபடி நின்றிருந்தான். இன்ஸ்பெக்டரைப் பார்த்ததுமே அந்தப் பெண்ணின் முகம் மலர்ந்தது.

ராணா ''ட்யூட்டியில் உள்ள போலீஸை அடித்தது குற்றம் மேடம்'' என்றான்.

அவள் அதைப் பொருட்படுத்தாமல் ''சர்ப்ரைஸிங்! நீ இங்கேயா இருக்கிறாய்?'' என்றாள்.

தன்னை அவ்வளவு உரிமையுடன் ஒருமையில் அழைக்கும் அந்தப் பெண் யாராக இருக்கும் என்று வியப்படைந்தவன் ''யார் நீ?'' என்று கேட்டான் ஒருமையிலேயே.

''கல்லூரியில் உனக்கு ஜூனியர். பாட்டு விழாவில் நான் உன்னிடமிருந்து ஆட்டோகிராஃப்கூட வாங்கிக் கொண்டேன். அண்ட் யூ நோ... ஐ யாம் இன் லவ் வித் யூ சின்ஸ் தென். ஒன் சைட் லவ் என்று அர்த்தம். மல்லாந்து படித்தால் விட்டத்தில் சீலிங் ஃபேன், குப்புறப்படுத்தால் உன் ஃபீலிங் ஆழ ஆழமாய்'' என்றாள் சிரித்துக் கொண்டே.

அலக்நந்தா ஆச்சரியமடைந்தவளாக பார்த்துக் கொண்டிருந்தாள். சில பெண்கள் ஃபாஸ்டாக இருப்பார்கள் என்று தெரியும். ஆனால் இந்த அளவுக்கு ஃபாஸ்ட் என்று தெரியாது.

ஒன் சைட் லவ் என்று அர்த்தம் - என்று அந்தப் பெண் சொன்னதைக் கேட்டுச் சிரிப்பு வந்தது ராணாவுக்கு.

இந்த டீனேஜர்ஸ் எதற்கெடுத்தாலும் லவ் என்ற பெயரைச் சூட்டி விடுவார்கள். கல்லூரியில் படிக்கும் நாட்களில் அவன் ஒரு ஹீரோவாகத்தான் இருந்தான். படிப்பில் சுமார்தான் என்றாலும் கால் பந்தாட்டத்திலும், பாட்டிலும் முதலாவதாக இருப்பான். நிறையபேர் அவனிடமிருந்து ஆட்டோகிராஃப் வாங்கிக் கொள்வார்கள். அந்த வயதில் இருக்கும் த்ரில் அது. தன்னுடையது பால் இனக் கவர்ச்சி இல்லை என்று நினைப்பதே இன்ஃபாச்சுயேஷன்தான். இந்தப் பெண்ணின் காதல்கூட அதே போன்றதாய்த்தான் இருக்கும்.

இன்னொன்றுகூட இருக்கிறது. வாழ்க்கையில் ஏதேதோ சம்பவங்களும், அறிமுகங்களும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். அதற்குப் பிறகு அவர்கள் சந்தித்துக் கொள்ளமாட்டார்கள். ஆனால் காலம் செல்லச் செல்ல அந்தச் சாதாரணச் சம்பவம், அல்லது அந்த குறிப்பிட்ட ஆளைப்பற்றிய ஞாபகம் ரொம்ப இனிமையாகத் தோன்றும். எப்பொழுதோ முதல் முதலாக பெண் பார்க்கும் படலத்தில் பார்த்த நபரை வாழ்நாள் முழுவதும் ஞாபகத்தில் வைத்திருப்பது சகஜம். பௌர்ணமி வெளிச்சத்தில் தாஜ்மகாலைப் பார்த்தபொழுது ஏற்பட்டதைவிட, ஒரு வருடத்திற்குப் பிறகு அந்தக் காட்சியை ஊகித்துக் கொள்வது இனிமையாகத் தோன்றும். தனக்கு எதிரே நின்று கொண்டிருக்கும் பெண்ணைக்கூட அந்த வகையைச் சேர்ந்தவளாகவே பாவித்து, ராணா அவளுக்கு அதிக முக்கியத்துவம் தரவில்லை.

''உன் பெயர்?'' என்று கேட்டான்.

''கண்ணு. எம்.டி. கண்ணு. முழுப்பெயர் மயில் கண்ணு திருபுரா.''

அவன் சிலையாகி விட்டான். அவ்வளவு சீக்கிரத்தில் அந்தப் பெண்ணைச் சந்திக்க முடியும் என்று எதிர்பார்க்க வில்லை. உத்வேகத்தை கட்டுப்படுத்திக் கொண்டு ''எங்க போலீஸ் ஆளை எதற்காக அடித்தாய்?'' என்று கேட்டான்.

''திமிராகப் பேசினான்.''

''என்ன பேசினான்?''

''டிரைவிங் லைசன்ஸைக் காட்டச் சொன்னான்.''

''அது திமிராகப் பேசியதாக அர்த்தமா?''

''...''

''நீ ஒருமுறை போலீஸ் ஸ்டேஷனுக்கு வரவேண்டி இருக்கும்.''

''ப்ளெஷர். உடனே போவோமா?''

அவன் ஆச்சரியத்தை அடக்கிக் கொண்டு ''ட்யூட்டியில் இருந்த போலீஸ்காரரை அடித்ததற்கு உன்னை அரெஸ்ட் செய்கிறேன்'' என்றான்.

''போலீஸ் ஸ்டேஷனில் டீ கொடுப்பார்கள் இல்லையா?''

அவன் அவளை கண்ணிமைக்காமல் ஒரு வினாடி பார்த்தான். இதெல்லாம் அப்பாவியாய் நடிக்கும் முயற்சியா? எல்லைக் கடந்த ஃபாஸ்ட்னெஸ்ஸா? அல்லது பணத்தால் வந்த திமிரா?

அவன் அவளை அழைத்து வந்து போலீஸ் ஸ்டேஷனில் உட்கார வைத்தான். லாக்கப் செல்லைக் காட்டி விட்டு ''நான் அதில் உட்காரணுமா அல்லது இப்படி உனக்கு எதிரே உட்காரணுமா?'' என்று கேட்டாள். அவனுக்கு என்ன பதில் சொல்வதென்று புரியவில்லை.

''அப்படி உட்கார்ந்து கொண்டு நான் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லு.''

''அரெஸ்ட் செய்தால் கைகளுக்கு விலங்கு போடுவார்களே? பின்னே எனக்கு ஏன் போடவில்லை?''

''எல்லா அரெஸ்டுகளுக்கும் அப்படி விலங்கு போட மாட்டார்கள். குற்றவாளி தப்பி ஓடிப்போய் விடுவான் என்ற பயம் ஏற்பட்டால் விலங்கு போடுவார்கள்.''

''அப்படி என்றால் நாங்க பார்க்கிற சினிமாக்கள் எல்லாமே தவறு என்கிறாயா?''

அவன் அலுப்படைந்தவனாக ''நான் உன்னை இங்கே அழைத்து வந்தது நான் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்வதற்காகத்தான். அதானே தவிர நீ கேட்ட கேள்விகளுக்கு நான் பதில் சொல்வதற்காக இல்லை'' என்றான்.

''எனக்கு எதிலேயுமே எதிர்ப்பதமாக நடந்து கொள்ளத்தான் பிடிக்கும்.'' கால்மேல் காலைப் போட்டுக் கொண்டு சொன்னாள்.

''நீ ஒரு கேசில் சாட்சி சொல்லியிருக்கிறாய், நினைவு இருக்கிறதா?''

''ஆமாம். அதுதான் முதலும் கடைசியாகவும் நான் கோர்ட்டுக்குப் போனது.''

''கோவில் காவலாளிகளின் கொலை விஷயத்தில்.''

''ஆமாம். நினைவு இருக்கு.''

''அன்றைக்கு என்ன நடந்தது?''

''ராமஸ்வாமி என்ற திருடன் கொலை செய்துவிட்டு என் காருக்கு அடியில் வந்து விழுந்தான்.''

''அந்த நேரத்தில் நீ அங்கே ஏன் இருந்தாய்?''

''கல்லூரி படிப்பு முடிந்து விட்டது. சாமான்களை எல்லாம் மூட்டை கட்டிக்கொண்டு இந்த ஊருக்கு வந்து கொண்டிருந்தேன். ரொம்ப மழையாக இருந்தது. சாலையில் குறுக்கே வந்து காரில் மோதிக் கொண்டான். நான் சடன் பிரேக் போட்டதால் தப்பினான். இல்லாவிட்டால் அங்கேயே பிராணனை விட்டிருப்பான்.''

''அவன்தான் கொலைகாரன் என்று எப்படிச் சொல்கிறாய்?''

''அதான் கோர்ட்கூட தண்டனை கொடுத்திருக்கிறதே?''

''அவன் கொலைகாரன் என்று கோர்ட் தண்டனை கொடுத்தது. அதானே தவிர நீ சொன்னதுபோல் கோர்ட் தண்டனை விதித்ததால் அவன் கொலையாளி ஆகவில்லை.''

''என்னவோப்பா, அந்தத் தர்க்கமெல்லாம் எனக்குத் தெரியாது.''

''நீ காரில் ஊரை நோக்கி வந்து கொண்டு இருந்தபோது ராமஸ்வாமி காருக்கடியில் வந்து விழுந்தான் என்றாய். அப்படி என்றால் அவன் சாலைக்குக் குறுக்காக கடந்து வந்து விழுந்தானா?''

''ஆமாம்.''

''உன் காரின் லைட்டை அவனும் பார்க்கவில்லை. நீயும் அவனைப் பார்க்கவில்லையா?''

''திடீரென்று நட்டநடு ரோட்டில் வந்து நின்று விட்டான். பக்கத்திலிருந்த தோப்பிலிருந்து வந்ததால் அந்த இருட்டில் அவனைப் பார்க்கவில்லை.''

''வலது பக்கத்திலிருந்து வந்தானா? இடது பக்கத்தி லிருந்து வந்தானா?''

அவள் ஒரு வினாடி யோசித்துப் பார்த்துவிட்டு ''காருக்கு வலது பக்கமாக வந்தான். இடது பக்கத்தில் இருக்கும் தோப்பிற்குள் ஓட வேண்டும் என்பது அவன் எண்ணம். அதனால்தான் நான் பிரேக் போட்டும்கூட பயனில்லாமல் போய்விட்டது.''

''அந்த இருட்டில், அதுவும் நள்ளிரவு நேரத்தில் ஒரு ஆளுக்கு ஒரு பக்கத்து தோப்பிலிருந்து இன்னொரு பக்கத்து தோப்பை நோக்கி ஓட வேண்டிய அவசியம் என்னவாக இருக்கும்?''

''ஒருக்கால் கொலை செய்து விட்டு பதற்றத்துடன் ஓடியிருப்பான்.''

''அங்கேயிருந்து கோவில் எவ்வளவு தூரம்?''

''ஒரு கிலோ மீட்டருக்கு மேல் இருக்கும்.''

''என்னதான் கொலை செய்தாலும்... கொலை செய்வது அவனுக்கு அதுதான் முதல் தடவையாக இருந்தாலும், எந்தக் கொலைகாரனும் அதற்குள் ஒரு கிலோ மீட்டர் தூரம் தோப்புக்குள் ஓடியிருக்க முடியாது. தெருவுக்குக் குறுக்காக வந்திருக்கவும் முடியாது. அதுவும் தெருவில் விளக்கு வெளிச்சத்துடன் கார் ஒன்று வரும்போது...''

''நான் அவ்வளவு தூரம் யோசித்துப் பார்க்கவில்லை.''

''அதில் தவறு இல்லை. ஆக்ஸிடென்ட் நடந்ததுமே சாதாரணமாக வேறு எதையுமே யோசித்துப் பார்க்க முடியாது நம்மால்.''

''தாங்க்ஸ்! கரெக்டாக ஊகித்து விட்டாய். குட்... இங்கே ஏர்கண்டிஷன் இல்லையா? வெப்பம் தாங்க முடியவில்லையே?''

அவன் அவள் வார்த்தைகளை பொருட்படுத்த வில்லை. ''இரவோடு இரவாக நீ போய் போலீஸ் ஸ்டேஷனில் ரிபோர்ட் கொடுத்தாயா?''

''நேரில் போகவில்லை. போன் செய்து சொன்னேன்.''

''ஆக்ஸிடென்ட் ஆனால் சாதாரணமாக எவ்வளவு சீக்கிரமாக அதை மறந்து விடலாம் என்று நினைப்பார் களே தவிர போலீசுக்குப் போன் செய்ய மாட்டார்களே?''

அந்த போலீஸ் ஸ்டேஷனில் திடீரென்று நிசப்தம் வந்து சூழ்ந்து கொண்டது.

எஸ்.ஐ. கழியும் மற்ற போலீசாரும் பார்வையாளராக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

காரை வேகமாக ஓட்டிய குற்றத்திற்காக அழைத்துக் கொண்டு வந்து, இன்னொரு கேசு விஷயமாகக் கேட்டுக் கொண்டே, இந்த பாயிண்டை நோக்கி இழுத்து வந்துவிட்ட ராணாவை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

''சொல் மிஸ் திருபுரா! என் கேள்வியில் தவறு ஏதாவது இருக்கிறதா? ஆக்ஸிடென்டில் யாரும் சாகவில்லை. காயங்களும் ஏற்படவில்லை. ஆனாலும் நீ எதுக்கு வேலை மெனக்கெட்டு போன் செய்தாய்?''

''எனக்குப் போன் வந்தது. போனில் யாரோ இந்த விஷயத்தை எங்கேயும் வெளியே சொல்ல வேண்டாம் என்றார்கள். எனக்கு எப்பொழுதுமே எதிர்ப்பதமாக நடந்து கொள்ளும் வழக்கம். அதனால் உடனே போலீஸ் ஸ்டேஷனுக்குப் போன் செய்து சொல்லிவிட்டேன்.''

எஸ்.ஐ. கழி உற்சாகத்துடன் கேட்டுக் கொண்டிருந்தார்.

''இந்த போன் விஷயத்தை கோர்ட்டில் சொன்னாயா?''

''சொல்லவில்லை.''

''ஏன் சொல்லவில்லை?''

''யாருமே கேட்கவில்லை.'' சர்வசாதாரணமாக பதிலளித்தாள்.

ராணா கழியைப் பார்த்தான். அவன் முகத்தில் குழப்பம் தெரிந்தது.

''போனில் உன்னை என்ன எச்சரித்தான்?''

''கொலை செய்துவிட்டு ஓடிப்போய்க் கொண்டிருந்த போது உன் காருக்கு குறுக்கே வந்து மோதிக் கொண்ட விஷயத்தை யாரிடமாவது சொன்னால் உன் உயிர் தரிக்காது என்றான்.''

''அந்த விஷயத்தை அப்பவே மறந்து விட்டேன். ஆனால் இப்போது நீ சொல்ல வேண்டாம்னு சொன்னதால் கண்டிப்பாக போலீசுக்குச் சொல்வேன் என்றேன்.''

''உன் காருக்கடியில் வந்து விழுந்த ஆள் அப்பொழுதுதான் கொலை செய்து விட்டு ஓடுகிறான் என்று உனக்கு எப்படித் தெரிந்தது?''

''அவன்தான் போனில் சொன்னானே?''

''யாராவது தானே ''நான்தான் கொலையாளி. உன் காருக்குக் கீழே விழுந்தேன். இந்த விஷயத்தை எங்கேயும் சொல்லாதே'' என்பானா?''

''என்னவோ... இந்த விஷயத்தைப் பற்றியெல்லாம் நான் யோசித்துப் பார்க்கவில்லை. கோர்ட்டில் என்னை யாரும் கேட்கவில்லை.''

ராணாவின் முகத்திலிருந்த ரத்தமெல்லாம் குப்பென்று பொங்கியது. வேகமாக நாற்காலியைப் பின்னால் தள்ளி விட்டு எழுந்து நின்றான். ''கேட்க மாட்டார்கள். ஏன் கேட்கப் போகிறார்கள்? குற்றவாளி தன் சார்பில் லாயரை வைத்துக் கொள்ள முடியாத அளவுக்கு ஏழை. கோர்ட்

நியமித்த டிஃபன்ஸ் லாயர் எம்.எல்.ஏ. நரசிம்மனின் மைத்துனன். இனி வேறு யாரால் தட்டிக் கேட்டு விட முடியும்?'' என்று கத்தினான்.

யாருமே பதில் சொல்லவில்லை.

அவன் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான். எவ்வளவு சர்வ சாதாரணமாக நடந்து முடிந்து விட்டன விஷயங்கள். ஒரு கொலை நடந்திருக்கிறது. அதற்கு கொஞ்ச தூரத்தில் ஒருவன் காருக்கடியில் விழுந்து விட்டான். அவன் ஒரு காலத்தில் திருடனாயிருந்தவன் அவ்வளவுதான். இரண்டையும் இரண்டையும் கூட்டினால் நான்கு. அவன் கோவிலில் திருட முனைந்து, குறுக்கிட்ட கார்டுகளைக் கொலை செய்து விட்டு, ஒரு சாட்சியின் காருக்கடியில் வந்து விழுந்ததால் அவன்தான் கொலை காரன். இல்லையென்று வாதாடுவதற்கு டிஃபென்ஸ் லாயர் இல்லை. சாட்சியைக் கேள்வி கேட்க யாருமில்லை. குற்றவாளியின் ரோதனையை காதில் போட்டுக்கொள்ள எவருமே இல்லை. தெய்வமே! காப்பாற்று இந்த போலீஸ் ஸ்டேஷனை...

அந்த அறையில் மயான அமைதி நிலவியது.

''சாரி... நான் கேசைச் சரியாக விசாரணை செய்ய வில்லை. பெனிஃபிட் ஆஃப் டவுட் கூட இல்லை.''

ராணா ஜீவனில்லாமல் சிரித்தான்.

''சா... ரி... இரண்டெழுத்துக்கள். உயிர் ... அதுகூட மூன்றெழுத்துக்கள்தான்.''

அதற்குள் வெளியே கார்கள் வந்து நின்ற சத்தம் கேட்டது. வரிசையாக மூன்று கார்கள் வந்தன. முதல் காரிலிருந்து மூன்று பேர்களும், நடு காரிலிருந்து ஒரு

ஆளும் இறங்கினார்கள். அவனைப் பார்த்தால் புதுப் பணக்காரனைப்போல் தோன்றியது.

ஜோத்பூர் கோட்டு, வெள்ளை பேண்ட், பளபளத்த காலணிகள், மேல் நோக்கி வாரப்பட்டிருந்த கேசம், தங்க ஃபிரேம் போட்ட மூக்குக் கண்ணாடி.

அவன் முன்னால் நடந்து கொண்டிருக்க, மற்றவர் மூவரும் அனுசரித்து வந்தார்கள்.

''ஹாய் டாட்...'' என்றாள் கண்ணு நாற்காலியை விட்டு எழுந்து கொண்டே. புலிராஜன் மகளைத் திரும்பிப் பார்க்கவில்லை. ராணாவைக் கூர்ந்து பார்த்துக்கொண்டே ''என்ன தைரியம் உனக்கு? என் மகளைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்து வருவாய்?'' என்றார்.

சாதாரணமாக இருந்தால் விட்டுத் தள்ளியிருப்பான். ஆனால் வந்தவன் அவ்வளவு திமிராக பேசியதும் ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது ராணாவுக்கு.

''உங்க மகள் ஒரு கான்ஸ்டபிளின் கன்னத்தில் அறைந்தாள்'' என்றான்.

புலிராஜன் அதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. ராணாவைப் பார்த்து, ''உனக்கு ஒரு நிமிஷம் அவகாசம் தருகிறேன். என் மகளிடம் மன்னிப்புக் கேளு'' என்றான். ''இல்லாமல் போனால் உன்னை இங்கேயே சஸ்பென்ட் பண்ண வைத்து விடுவேன்.''

வெளியே ஜீப் வந்து நின்ற சத்தம் கேட்டது. டி.எஸ்.பி. ஓட்டமாக ஓடி வந்தார்.

''கொண்டு வந்தீங்களா?'' என்றான் புலிராஜன்.

டி.எஸ்.பி. பயந்து போய் பணிவுடன் ''கொண்டு வந்திருக்கிறேன் சார்'' என்று காகிதத்தை ஃபைலிலிருந்து எடுத்துக் கொடுத்தார்.

புலிராஜன் காகிதத்தைப் பெற்றுக்கொண்டு ராணாவைப் பார்த்து ''என்ன அப்படிப் பார்க்கிறாய்? உன் சஸ்பென்ஷன் ஆர்டர்'' என்றான்.

பணத்தால் வெறிபிடித்து, பதவியால் திமிரு தலைக்கேறியிருந்த அந்த அரசியல் தலைவனை நோக்கி ராணா சலனமில்லாமல் பார்த்தான். தன் மகளை ஒரு இன்ஸ்பெக்டர் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துப் போனான் என்று தெரிந்ததுமே மேலதிகாரிக்குப் போன் செய்து அடுத்த நிமிடமே சஸ்பென்ஷன் ஆர்டரைத் தயார் பண்ண வைத்துவிட்ட அந்த அரசியல் தலைவனைப் பயத்துடன் பார்க்க வேண்டுமா அல்லது மதிப்போடு பார்க்க வேண்டுமா அல்லது அருவருப்போடு பார்க்க வேண்டுமா என்று தெரியவில்லை.

''இந்தப் பெண் ஆக்ஸிடென்ட் செய்துவிட்டு, ஒரு போலீஸ்காரனையும் அடித்து விட்டாள் சார். அதற்கு மூவர் சாட்சி இருக்கிறோம்'' என்றான்.

''யாரந்த மூன்று பேர்?''

''நான், அலக்நந்தா, கான்ஸ்டபிள்.''

''அடிக்கவில்லை என்று என் மகள் சொன்னால்?''

''ஆனாலும்கூட 1 : 3 தானே?''

''ஓஹோ... விகிதத்தைப் பற்றிப் பேசுகிறாயா?'' என்று கான்ஸ்டபிள் பக்கம் திரும்பி ''ஏண்டா... என் மகள் உன்னை அடித்தாளா?'' என்று கேட்டான்.

அவன் தடுமாறிக்கொண்டே ''இ... இல்லை சார்'' என்றான்.

''ஸோ... 2 : 2 விகிதம் சரியாகி விட்டது. கேசு இல்லை. இப்போ சொல்லு. மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறாயா அல்லது வேலையை விட்டுப் போகிறாயா?''

ராணா இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை.

''பெண் போலீஸ் பக்கத்தில் இல்லாமல் ஒரு பெண்ணை காவல் நிலையத்திற்கு அழைத்து வந்ததற்கு உன்னை சஸ்பென்ட் செய்கிறோம்'' என்ற டி.எஸ்.பி.யின் பக்கம் திரும்பி ''அவ்வளவுதானே டி.எஸ்.பி.?'' என்றான்.

டி.எஸ்.பி. மென்று விழுங்கிக்கொண்டே அப்படித் தான் என்பதுபோல் தலையாட்டினார்.

''இன்னும் பத்து வினாடி இருக்கிறது.''

அந்த அறையில் ஊசி விழுந்தாலும் கேட்கும்படியான நிசப்தம் ஏற்பட்டது. திருபுராவும் தன் குறும்புத்தனத்தை மறந்துபோய் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

''இன்னும் ஐந்து வினாடிகள்.''

ராணா லேசாக தொண்டையைச் செருமிக்கொண்டே ''ஒரு பெண்ணிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள தன்மானம் இடம் கொடுக்கவில்லை சார். நீங்கள் சம்மதித்தால் உங்களிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன்'' என்றான்.

''முடியாது.''

''இவ்வளவு பேருக்கு நடுவில் இல்லாமல், கொஞ்சம் இந்தப் பக்கமாக வந்தால் உங்கள் கைகளை... இல்லை

இல்லை, கால்களையும்கூடப் பிடித்து மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன்'' என்றான்.

புலிராஜன் எல்லோரையும் பார்த்துப் பெருமையுடன் சிரித்து விட்டு ''வா'' என்றான்.

இருவரும் ஹாலுக்குப் பின் பக்கமாக இருந்த அறைக்குள் நுழைந்தார்கள். அவன் கையிலிருந்த சஸ்பென்ஷன் ஆர்டர் காற்றில் படபடத்துக் கொண்டிருந்தது.

''உங்களுக்கு ஒரு நவீன நீதி தெரியுமா சார்?''

புலிராஜன் நெற்றியைச் சுளித்து விட்டு, ''என்ன?'' என்று கேட்டான்.

''கற்பழிப்பைத் தவிர்க்க முடியாதபோது சந்தோஷத்துடன் அதை ஏற்றுக் கொள்ளணுமாம்'' என்று சற்றும் எதிர்பாராத வேகத்தில் இழுத்து அவன் கன்னத்தில் ஓங்கி அடித்தான். அந்த சத்தம் அறைச் சுவர்களில் எதிரொலித்தது. புலிராஜன் இன்னும் அந்த அறையால் ஏற்பட்ட திக்பிரமையிலிருந்து மீளும் முன்பே ''அடித்தேன் என்பதற்கு நீ சாட்சி. அடிக்கவில்லை என்பதற்கு நான் சாட்சி. 1 : 1 விகிதம் சரியாகி விட்டது. கேசு இல்லை'' என்று ஆர்டரை மடித்து ஜேபியில் வைத்துக் கொண்டு அங்கிருந்து முன்னறைக்கு வந்தான்.

அடென்ஷனில் நின்று டி.எஸ்.பி.யை சல்யூட் செய்து விட்டு வெளியே வந்தான். வெளியே திருபுரா நின்று கொண்டிருந்தாள். ''ஐயாம் சாரி ராணா! நீ ஒன்றும் வருத்தப் படாதே. நடந்தது என்னவோ நடந்து முடிந்து விட்டது. இந்த ஊரிலேயே இரண்டு பேருமாக சேர்ந்து மஸாஜ் பார்லர் ஒன்றை வைப்போம். ஆண்களுக்கு நீயும்

பெண்களுக்கு நானும். ஒரே வருடத்தில் லட்சம் லட்சமாக சம்பாதித்து விடலாம்'' என்றாள்.

''கண்டிப்பாக வைப்போம். முதல் கஸ்டமர் உங்க அப்பாதான்'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து போய் விட்டான் ராணா.

8

இரவு மணி எட்டு அடித்தது.

அந்த நான்குபேரும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவன் நடைபயின்று கொண்டிருந்தான். அவர்கள் யோசித்துக் கொள்வதற்குக் கொஞ்சம் அவகாசம் கொடுத்தாற்போல் அவனும் மௌனமாக இருந்தான்.

ரொம்ப ரகசியமான கூட்டம் அது.

அவன் இப்பொழுது பாராளுமன்ற அங்கத்தினராக இல்லை. கோபத்தால் முகம் சிவக்க எரிச்சலை அடக்கிக் கொள்ள முயன்றவாறு இருந்தான். தன்னுள் இருந்த அரக்கன் வெளியே வராதபடி அடக்கிக் கொண்டிருந்தான்.

அவன் புலிராஜன்!

அந்த நான்குபேரும் ஸ்வர்ட்புரம் திருடர்கள். ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு வித்தையில் கைதேர்ந்தவர்கள். அதில் முக்கியமானவன் பிரசாத். எவ்வளவு பெரிய கட்டிடமாக இருந்தாலும் எந்த ஆதாரமும் இல்லாமல் மேலே ஏறக்கூடியவன். எப்படிப்பட்ட கட்டுத் திட்டங்கள் கொண்ட வீடாக இருந்தாலும் சுலபமாக நுழைந்துவிடக் கூடியவன். இன்னொருத்தன் ஒல்லியாக உயரமாக இருந்தான். கம்பி, பின் போன்றவற்றால் எப்படிப்பட்ட பூட்டையும் நெம்பித் திறந்து விடுவான். விரல் ஸ்பரிசத்தால் இரும்புப் பெட்டியில் உள்ள ரகசியங்களைத் தெரிந்து கொண்டு விடுவான். மூன்றாவது ஆள் சற்று பருமனாக இருந்தான். மோப்பம் பார்த்தே தங்கம் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து விடுவான். நாலாவது ஆள் லேசான சத்தம் கேட்டாலும் உணரக் கூடியவன்.

இந்த நான்குபேரையும் புலிராஜன் ஒரு முக்கியமான காரியத்திற்காக அழைத்திருந்தான். ஆனால் அது என்ன காரியம் என்று சொல்லவில்லை.

''ஒரு திருட்டை பண்ணணும். ரொம்ப சுலபமான திருட்டு. அதை இப்போ சொல்லமாட்டேன். நீங்கள் ஒப்புக்கொண்டால் சொல்கிறேன். இந்தக் காரியத்தைச் செய்வதற்கு உங்கள் ஒவ்வொருத்தருக்கும் ஒரு லட்சம் தருகிறேன்'' என்றான்.

ஒவ்வொருத்தனுக்கும் ஒரு லட்சம் என்றதுமே பெரிய திருட்டுத்தான் என்று அவர்களுக்குப் புரிந்து விட்டது. ஆனாலும் அவர்களிடம் சலனம் இல்லை.

புலிராஜன் சொன்னான். ''உங்களுக்குப் பின்னால் நான் இருக்கிறேன். எந்தக் கேசும் வராமல் நான் பார்த்துக் கொள்கிறேன். என் செல்வாக்கு எப்படிப்பட்டது என்று உங்களுக்கு இதற்குள் தெரிந்திருக்கும். இன்றைக்கு நிமிட நாழிகைக்குள் இன்ஸ்பெக்டரை சஸ்பெண்ட் பண்ண வைத்து விட்டேன். உங்கள் வரையிலும் அந்த விஷயம் வந்ததா?''

வந்து விட்டது என்றாற்போல் பிரசாத் தலையை அசைத்தான்.

''அதிலிருந்தே நீங்கள் புரிந்து கொண்டிருப்பீங்க. அதனால் சொல்லுங்கள். இந்த திருட்டை செய்யறீங்களா? செய்வதாகச் சொன்னால் விவரங்களைச் சொல்கிறேன். ரொம்ப சிம்பிள் திருட்டு.''

பிரசாத் தொண்டையைக் கனைத்துவிட்டுச் சொன்னான். ''ஐயா... நீங்கள் ரொம்பப் பெரியவர். நாங்கள் இதற்கு முன்னால் நிறைய திருட்டுத் தனங்கள் பண்ணியிருக்கிறோம், உண்மைதான். ஒவ்வொருவரும் பத்து வருடங்களுக்குக் குறையாமல் ஜெயிலில் இருந்திருக்கிறோம் என்பதும் உண்மைதான். ஆனால், இனி இந்தத் திருட்டுத் தொழிலைக் கைவிட்டு விட வேண்டும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம் இப்பொழுது. எங்கள் குழந்தைகள் பெரியவர்களாகிக் கொண்டு வருகிறார்கள். நாங்கள் ஜெயிலில் இருந்த நாட்களில் எங்கள் மனைவிமார்கள் படாதபாடு பட்டிருக்கிறார்கள். இன்னும் எவ்வளவு நாளைக்கு இப்படியே திருட்டுத் தொழிலைப் பண்ணிக்கொண்டு ஜெயிலில் கழித்துக் கொண்டிருப்பது?

எங்கள் கைக்குக் கிடைப்பது ரொம்ப குறைவு. பங்காக கொடுப்பதுதான் அதிகம். வீரதாசும், எம்.எல்.ஏ. நரசிம்மனும் சேர்ந்து பாதியும், போலீசார் கால் பங்கும் பிடுங்கிக் கொள்கிறார்கள். ஜெயில் தண்டனை மட்டும் எங்களுக்கு. அதனால் நாங்கள் மாறவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு விட்டோம். ஸ்டுவர்ட்புரம் திருடர்களுக்கு அரசாங்கம் நிலத்தைத் தருகிறது. அந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம் என்று நினைக்கிறோம். எவ்வளவு நாட்களுக்குத்தான் இப்படியே திருடர்களாக வாழ்ந்து கொண்டிருப்பது? நீங்களே சொல்லுங்கள். அதனால் தயவு செய்து எங்களை விட்டு விடுங்கள்.''

புலிராஜன் உரத்தக் குரலில் சிரித்தான். ''நான் விட்டு விடுகிறேன். நீங்கள் இவ்வளவு தூரம் கேட்கும்போது கெஞ்சிக் கூத்தாடி உங்களிடமிருந்து வேலையை வாங்கிக் கொள்ள வேண்டிய தேவையோ, ஆசையோ இல்லை எனக்கு.''

அவன் முகத்திலிருந்த சிரிப்பு மாயமாகி விட்டது. அருகில் வந்து அவர்களின் முகத்தைப் பார்த்துக் கொண்டே சொன்னான். ''ஆனால் போலீசார் உங்களை விட்டு விடுவார்களா? வேறு ஆட்களைக் கொண்டு இந்த திருட்டைப் பண்ண வைக்க என்னால் முடியும். அதிலிருந்து உங்களுக்கு நரகம் தொடங்கி விடும். இல்லையா?''

அவர்கள் பதில் சொல்லவில்லை.

அவன் சொன்னான். ''ஆனால் அப்பொழுது உங்களுக்குப் பின்னால் நான் இருக்கமாட்டேன். போலீசாருக்கு மேலிடத்திலிருந்து போன்கள் வராது.

அதோடு திருடு போன சரக்கை உடனே கண்டுபிடிக்கச் சொல்லி மேலிடத்திலிருந்து கெடுபிடி அதிகமாகி விடும். அந்தக் கோபத்தை எல்லாம் உங்கள் மீதுதான் காட்டு வார்கள் போலீசார். சொல்லுங்கள், அந்த நரகத்தை அனுப விக்கிறீங்களா? என்னுடன் ஒத்துழைக்கிறீங்களா?''

அவர்கள் கொஞ்சம் மௌனமாக இருந்து விட்டு, ''எங்களுக்குக் கொஞ்சம் டயம் கொடுங்கள் சார்'' என்றார்கள்.

''ஐந்து நிமிடங்களில் வருகிறேன். யோசித்துக் கொள்ளுங்கள்'' என்று புலிராஜன் அங்கிருந்து போய் விட்டான்.

அவன் திரும்பி வருவதற்குள் அவர்கள் ஒரு முடிவிற்கு வந்து விட்டவர்களைப்போல் தென்பட்டார்கள்.

''என்ன முடிவு செய்தீங்க?''

பிரசாத் சொன்னான். ''நாங்கள் முதலில் செய்த முடிவுக்கே கட்டுப்பட்டு இருக்கணும் என்ற தீர்மானத்திற்கு வந்து விட்டோம் ஐயா.''

புலிராஜன் முகத்தில் ஒரு வக்கிரமான ரேகை தோன்றி மறைந்தது. ''சரி, போங்கடா... போய் அரசாங்கம் உங்களுக்குக் கொடுத்திருக்கும் நிலத்தை உழுது வாழுங்கள். நீங்கள் அமைதியாக வாழப்போகிறோம் என்று சொன்னால் நான் எதுக்கு மறுக்கப் போகிறேன்? ஏதோ ஒவ்வொருத்தனுக்கும் ஒரு லட்சம் வரும் என்று சொன்னால் சந்தோஷமாக ஒப்புக்கொள்வீங்கன்னு நினைத்தேன். போங்கள்... ஆனால் ஜாக்கிரதை! நம்மிடையே நடந்த இந்த விஷயம் வெளியே போனால் போலீஸ் இல்லை, நானே உங்களை வெட்டிக் குழி

தோண்டிப் புதைத்து விடுவேன். இந்த திருட்டைப் பற்றி நான் சொன்னதை இனி நீங்கள் மறந்து விடுங்கள்.''

''என்ன வார்த்தை சொல்லிட்டீங்க ஐயா! இதைவிட பெரிய பெரிய ரகசியங்களையே நாங்கள் எங்கள் வயிற்றில் புதைத்து வைத்துக் கொண்டிருக்கிறோம். ஒரு சின்ன விஷயத்தை வெளியே சொல்லிவிட்டாலும் எத்தனையோ போலீசாரின் வேலை பறிபோய் விடும். நாங்க செய்ய முடியாதுன்னு சொன்னோமே தவிர, உங்கள் விஷயம் எங்களுக்கு எதுக்கு சாமி! எங்களை இப்படியே விட்டு விடுங்கள்'' என்று சொல்லிவிட்டு அவர்கள் போய் விட்டார்கள்.

புலிராஜன் அவர்கள் போன திசையையே பார்த்து உட்கார்ந்திருந்தான்.

ஐம்பது லட்சம் விலை மதிப்புடைய நகைகள்! தேர்தல் நெருங்கிக் கொண்டிருந்தது. பணம் ரொம்ப தேவையாக இருந்தது. சுமார் மூன்று கோடி வரை செலவு செய்தால் துணை முதலமைச்சராகலாம். இந்தமுறை மாநிலத்தில் தம் கட்சிதான் கண்டிப்பாக வெற்றி பெறும். அதில் சந்தேகமில்லை. தற்சமயம் எம்.எல்.ஏ. நரசிம்மன் இருந்த கட்சிக்கு டிபாசிட்கூட கிடைக்காது. அதில்கூட சந்தேகம் இல்லை. பாராளுமன்றத்தில் மெம்பராக இருந்து கொண்டு தான் சாதிக்கக்கூடியது எதுவும் இல்லை. மாநில அரசியல் மீது கவனத்தை செலுத்த வேண்டும். இப்பொழுதிலிருந்தே லாபீயிங்கை நடத்தி ஒரு கோடி ரூபாயை வழங்கி விட்டால் கட்சியின் மேலிடத்தில் தன் பெயரை எடுத்துச் சொல்லக்கூடிய வாய்ப்பு இருக்கும். அவ்வளவு தூரம் வந்து விட்டால் மற்ற விஷயங்களைத்

தன்னால் பார்த்துக் கொள்ள முடியும். ஊடுருவிச் செல்ல முடியும்.

தற்சமயம் ஒரு கோடி அவசரமாக வேண்டும்.

அதில் சுமார் ஐம்பது லட்சம்...

கோவில் நகைகளைக் கொள்ளையடித்தால் கிடைத்து விடும்.

அதுதான் அவன் திட்டம்.

ராணா குடியிருந்த போர்ஷனுக்கும் வீட்டுக்காரர்களின் போர்ஷனுக்கும் இடையே ஒரு கதவு இருந்தது. ராணா அலக்நந்தாவுடன் அந்தக் கதவில் கோட் முறையை ஏற்படுத்திக் கொண்டிருந்தான். ஒரு தடவை டொக் என்று தட்டி விட்டு, கொஞ்சம் பொறுத்து இரண்டு தடவை டொக் டொக் என்று தட்டினால் அது அலக்நந்தாவிற்கு ரகசியக் குறிப்பு. இரண்டு போர்ஷனுக்கும் இடையே உள்ள அந்தக் கதவை அந்த விதமாக திறப்பதற்கு அலக்நந்தா முதலில் சம்மதிக்கவில்லை.

ஆனால் அரும்பாடுபட்டு இணங்கவைத்தான். ''வருத்தத்தில் இருப்பவனுக்கு தேவையானது கடுகளவு ஆறுதலும் அன்பும்தான் அலகா! நமக்கு இடையே குறுக்கே இருக்கும் இந்தக் கதவை உடைத்தெறிந்து விட்டு உன் அன்பை வெளிப்படுத்து'' என்றான் உணர்ச்சி வசப்பட்டவனாக.

அவள் பயந்து போய்ப் பார்த்தாள்.

''உன்னைக் காரால் மோதிய பெண்ணை அரெஸ்ட் செய்து என் வேலையை இழந்து விட்டேன். என்மேல் கொஞ்சமாவது கருணை காட்டமாட்டாயா அலகா?''

அவள் கண்களில் நீர் திரண்டது.

''அப்படிச் சொல்லாதீங்க. உங்களுக்காக சகலத்தையும் அர்ப்பணிப்பேன். உயிரையும் தருவேன்'' என்றாள்.

''சகலத்தையும் அர்ப்பணித்தால் உயிர் போய் விடும் என்ற தவறான எண்ணத்திலிருந்து நீ இன்னும் மீண்டு வரவில்லையா?'' சோர்ந்து போனவனாக கேட்டான்.

அவள் பதில் சொல்லவில்லை.

''குறைந்த பட்சம் முத்தம் வரைக்குமாவது ஒப்புக் கொள்.''

அலக்நந்தா அதிர்ச்சியடைந்தவளாக ஓரடி பின் வாங்கினாள். ராணா உயிரற்ற சிரிப்பை உதிர்த்தான். ''காதலுக்காக சகலத்தையும் அர்ப்பணிப்பதாகச் சொன்ன பெண் உயிர் போய்விடும் என்று பயந்து காதலனுக்கும் முத்தம் தர மறுக்கிறாள்.''

''அப்படிச் சொல்லாதீங்க ராணா'' என்றாள் அவள், ஆவேசத்தோடு ஓரடி முன்னுக்கு வந்து.

அதையே சாக்காக எடுத்துக்கொண்டு அவன் அவளைச் சுற்றிலும் கைகளைப் போட்டு உதட்டில் முத்தமிட்டான். அவள் கண்களை மூடிக்கொண்டாள்.

''என்ன இது? தன்மயமா?'' என்று கேட்டான் கனிவோடு.

''இல்லை. நெஞ்சு வலிக்கிறது'' என்றாள்.

ராணாவின் முகம் செக்கச் சிவந்து விட்டது. ''முதல் முத்தத்தின் அனுபவம் எப்படி இருந்தது என்று கேட்டால் இதுவா பதில்? ஆனாலும் அந்தக் கிளி ஜோதிடன் கன்னி கழிந்தால் மரணம் சம்பவிக்கும் என்று சொன்னானே தவிர

முத்தமிட்டால் நெஞ்சு வலி வரும் என்று சொல்ல வில்லையே?'' வெறுப்போடு சொல்லிவிட்டு அங்கிருந்து போய் விட்டான்.

அது நடந்த அன்றைக்கு மாலை அலகா அவனுக்கு கதவு சந்து வழியாக சின்ன சீட்டை தந்தாள். ''நடந்ததற்கு வருந்துகிறேன். இன்றிரவு கேட்டதைத் தருகிறேன்'' என்று இருந்தது. அதில் வெளிப்படையாக முத்தம் என்ற சொல் இல்லாவிட்டாலும் சாராம்சம் அதுதான்.

இரவு பன்னிரெண்டு மணிக்கு ராணா தயாராக இருந்தான். அவனுக்கு எந்த டென்ஷனும் இல்லை. தான் செய்யப் போகும் காரியம் என்னவென்றும், தன் வேலையை எவ்வாறு சம்பாதித்துக் கொள்வதென்றும் தெளிவாக அறிவான் அவன்.

அந்தக் காரியத்திற்காகத்தான் தற்சமயம் அவன் புறப்பட்டுக் கொண்டிருந்தான்.

அப்பொழுதுதான் மழை பெய்து ஓய்ந்திருந்தது. வெளியே இருட்டாக இருந்தது. என்னதான் வேலை இருந்தாலும் அலக்நந்தா எழுதிய கடிதத்தைப் பற்றி அவன் மறந்து போகவில்லை. கதவுக்கு அருகில் சென்று டொக் டொக் டொக் என்று கோட் முறையில் தட்டினான்.

கதவு திறந்து கொண்டது. ''தாங்க்ஸ் ஃபார் தி லெட்டர்'' என்று இருட்டிலேயே சட்டென்று அவளை அருகில் இழுத்து முத்தமிடப் போனான். வீரென்ற அலறல் கேட்டது.

அவன் கலவரத்துடன் அவளை விட்டுவிட்டு ''நீங்களா அன்னபூர்ணாம்மா?'' என்றான்.

''இதென்ன பாழாய்ப் போன காரியம் தம்பீ? நம்பிக்கையானவன் என்று பக்கத்துப் போர்ஷனை

உனக்கு வாடகைக்குத் தந்தால் இதுதானா நீ செய்யும் காரியம்?'' என்றாள் அந்தம்மாள் கோபமாக.

''மன்னித்துக் கொள்ளுங்கள் அத்தை! உங்க மகளை மாற்றும் முயற்சியில் இது ஒரு நாடகம். வேண்டுமானால் இந்த நிமிஷமே தாலியைக் கட்டி விடுகிறேன்'' என்றான். அந்தம்மாள் மௌனமாக இருந்ததைப் பார்த்துவிட்டு ''ஒரு முக்கியமான காரியமாக போய்க் கொண்டிருக்கிறேன். கொஞ்சம் எதிரே வாங்க'' என்று பேச்சை மாற்றி விட்டு சகுனம் வந்ததும் புறப்பட்டான்.

நள்ளிரவில் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்த (சஸ்பெண்ட் ஆன) இன்ஸ்பெக்டரைப் பார்த்து இரவு நேரத்து ஊழியர்கள் ஆச்சரியமடைந்தார்கள். அவன் போனை எடுத்துக் கொண்டு வரிசையாக போன் செய்ய ஆரம்பித்தான். அந்த ஊரிலிருந்து செய்திகளை நாளேடுகளுக்கு அனுப்பும் நிருபர்கள் மூன்று நான்கு பேர் இருந்தார்கள். அவர்களுக்கு போன் செய்தான் அவன்.

''நான் புலிராஜனின் பி.ஏ. பேசுகிறேன். இன்னும் அரை மணி நேரத்தில் புலிராஜன் சார் பத்திரிகைகளுக்கு ஒரு அறிவிப்பு தரப்போகிறார். நீங்கள் உடனே வரவேண்டும்.''

''இந்த நள்ளிரவு வேளையிலா?''

''ஆமாம். அர்ஜெண்ட். வீட்டுக்கு வந்து விடுங்கள்.''

அவ்வாறு நாலு பேருக்குப் போன் செய்து விட்டு அங்கிருந்து புறப்பட்டு ராணா புலிராஜனின் வீட்டிற்குப் போனான்.

இருட்டில் அந்தப் பங்களா பனைமரத்தைப் போல் இருந்தது. தண்ணீர்க் குழாயைப் பிடித்துக் கொண்டு

இரண்டாவது மாடிக்குள் நுழைந்தான். திருபுராவின் படுக்கை அறையைக் கண்டுபிடிப்பது அவனுக்கு ஒன்றும் கஷ்டமாக இருக்கவில்லை. சின்ன கம்பியின் உதவியால் அறையின் பூட்டைத் திறந்து விட்டு உள்ளே நுழைந்தான்.

கண்ணு என்கிற திருபுரா தூங்கிக் கொண்டிருந்தாள். படுக்கைக்கு அருகிலேயே நின்றபடி ஒரு வினாடி அவளையே பார்த்தான். நல்ல உடற்கட்டு அவளுக்கு. ஆரோக்கியத்துடன் தளதளவென்று இருந்தாள். அவள் உடுத்தியிருந்த மெல்லிய நைட்டியிலிருந்து உடம்பின் தோற்றம் தெளிவாகத் தென்பட்டுக் கொண்டிருந்தது.

அவன் ஜேபியிலிருந்து கத்தரியை வெளியே எடுத்தான். அந்தச் சந்தடியைக் கேட்டு அவள் கண்களைத் திறந்து பார்த்தாள். கட்டிலுக்குப் பக்கத்தில் கத்திரிக்கோலுடன் நின்று கொண்டிருந்த ராணாவைப் பார்த்த அவளுக்கு கொஞ்ச நேரம் எதுவும் புரியவில்லை.

எழுந்து உட்கார்ந்து கொண்டு ''என்ன இது?'' என்று கேட்டாள்.

''நான் இப்பொழுது உன்னைக் கற்பழிக்கப் போகிறேன்'' என்றான் கம்பீரமாக.

''கத்திரிக்கோலுடனா? பலே!'' என்றாள்.

பதில் சொல்லாமல் அவன் அவள் நைட்டியின் நாடாவை கத்தரிக்கோலால் கத்தரித்தான். அவள் அவன் செயல்களை எல்லாம் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். முழங்காலுக்குமேல் கிழித்து தொங்க விட்டான்.

''ரேப் என்றால் இவ்வளவுதானா? நான் இன்னும் நிறைய இருக்கும் என்று நினைத்தேனே?'' என்றாள்.

அவன் பதில் சொல்லாமல் அவள் கையைப் பிடித்துக் கொண்டு நகத்தால் கீறி விட்டான்.

''நகக்குறிகளா?'' என்று கேட்டாள்.

''பற்குறியும்கூட'' என்று முகத்தை நோக்கி குனிந்தான். அவள் வீரென்று கத்தினாள். அவன் சட்டென்று வாயைப் பொத்தினான்.

''கற்பழிக்கும்போது கத்த வேண்டாமா? அதான் கத்துகிறேன்'' என்று திரும்பவும் கத்த முயன்றாள். அதற்குள் வெளியே கதவைத் தட்டிய சத்தம்.

''திருபுரா! என்னம்மா? என்ன நடந்தது?'' என்ற புலிராஜனின் கலக்கமான குரல் கேட்டது.

ராணா ஜேபியிலிருந்து கைக்குட்டையை எடுத்து திருபுராவின் முகத்தில் மெதுவாக ஒற்றினான். அவள் நினைவு தப்பினாற்போல் சரிந்தாள்.

பேனாவை அவள் கன்னத்தின் மீது தெளித்தான். சிவப்பு மை ஆங்காங்கே பட்டது.

பிறகு மெல்லப் போய் கதவைத் திறந்தான்.

பலமாக ஓங்கித் தட்டிக் கொண்டிருந்த புலிராஜன் ராணா திடீரென்று கதவைத் திறந்ததால் அந்த வேகத்திற்கு முன்னால் விழுந்தான். ராணா அவனைத் தூக்கி நிறுத்தினான்.

''யார்? நீயா... நள்ளிரவு நேரத்தில் என் வீட்டிற்குள் நுழைந்தாயா? என்ன தைரியம் உனக்கு? உன்னைச் சுட்டுத் தள்ளி விடுவேன்.''

''மன்னியுங்கள். பச்சாத்தாபத்தால் தவித்துப் போய்க் கொண்டிருக்கும் என்னைப் பார்த்து நீங்கள் இப்படிச்

சொல்லுவது நன்றாக இல்லை'' என்றான் ராணா தீனமான குரலில்.

''பச்சாத்தாபமா? எதுக்கு பச்சாத்தாபம்? என்னதான் நடந்தது?'' என்று முன்னுக்கு வந்தான் புலிராஜன். அவன் பார்வை கட்டில் மீது இருந்த மகள் மேல் பட்டது. அதிர்ச்சியடைந்தவனாக நின்று விட்டான். வாயிலிருந்து வார்த்தை வெளியே வரவில்லை. கன்னத்தில் காயங்களுடன், கிழிந்த ஆடைகளுடன் கட்டிலில் விழுந்து கிடந்தாள் மகள்.

''என்னை மன்னியுங்கள்.'' பின்னாலிருந்து ராணாவின் குரல் கேட்டது. ''நீங்க என்னை சஸ்பெண்ட் செய்ய வைத்தீங்க என்ற ஆத்திரத்தில் வெறிபிடித்து விட்டது. உங்களை எப்படியாவது பழி வாங்கணும் என்று தோன்றியது. அந்த ஆவேசத்தில் என்ன செய்கிறேன் என்று எனக்கே தெரியவில்லை. வந்து உங்கள் மகளை கற்பழித்து விட்டேன்.''

ஒவ்வொரு வார்த்தையும் குண்டு வெடித்தாற்போல் வெடித்தது. புலிராஜனின் முகம் சிவந்தது. ஆத்திரத்தால் தத்தளித்தான். உடல் நடுங்க ''உன்னை... கொன்று போட்டு விடுகிறேன்'' என்றான்.

அதற்குள் கீழே காலிங் பெல் சத்தம் கேட்டது. இந்த நள்ளிரவு வேளையில் யார் வந்திருப்பார்கள் என்று புரியவில்லை புலிராஜனுக்கு. குழப்பத்துடன் பார்த்தான்.

''பத்திரிகை நிருபர்கள்'' என்றான் ராணா தாழ்ந்த குரலில். 'உங்கள் மகளை கற்பழிக்கும் வரையில் இருந்து வந்த ஆவேசம் அந்தக் காரியம் முடிந்துவிட்ட பிறகு தணிந்து போய்விட்டது. கற்பழிக்கப்பட்ட உங்கள் மகளை வெண்மையான பெட்ஷீட்டின் மேல் பச்சை நிற

நைட்டியில், சிவப்பு கறைகளுடன் பார்த்தபோது எனக்கு நம் நாட்டின் கொடி நினைவுக்கு வந்து விட்டது. பச்சாத்தாபத்தால் தவித்துப் போய்விட்டேன். உடனே இந்த அறையிலிருந்தே பத்திரிகை நிருபர்களுக்கு போன் செய்து இங்கே வரச்சொன்னேன். எப்படியும் வேலையிலிருந்து சஸ்பெண்ட் ஆகிவிட்டேன். என் குற்றத்திற்கு தண்டனை அனுபவிக்க வேண்டும். பன்னிரெண்டு ஆண்டுகள் ஜெயிலில் உழன்று கொண்டிருக்க வேண்டும். அதுதான் என் குற்றத்திற்கு பிராயச்சித்தம். உலகத்திற்கு நான் செய்த குற்றம் தெரியவேண்டும்.''

''நோ... அப்படி நடக்கக்கூடாது.''

''வேறு வழியில்லை புலிராஜன். ஆனாலும் என்னைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. உங்க மகளின் வாழ்க்கை இப்படி ஆகிவிட்டதே என்றுதான் கவலை. நாளைக்கு உங்களுக்கு மருமகன் வந்தால், இந்தப் பழைய பேப்பர் கட்டிங்கை யாராவது அவனுக்குக் காண்பித்தால் என்ன செய்வது என்ற பிரச்னைதான் என்னை தொல்லைப் படுத்திக் கொண்டிருக்கிறது. எனக்குப் பன்னிரெண்டு ஆண்டுகள்தான் தண்டனை. ஆனால் ஐயோ... நீங்கள் செய்த பாவத்திற்கு உங்க மகளுக்கு வாழ்நாள் முழுவதும் தண்டனை.''

''நான் செய்த பாவமா?''

''என்னை சஸ்பெண்ட் செய்ய வைத்தது, அதனால் தானே மனித பண்பையும் மறந்து மிருகமாக நடந்து கொண்டேன். புலிராஜன் சார்! ப்ளீஸ்... நடந்ததை எல்லாம் மறந்து விடுங்கள். என்னை அந்த நிருபர்களிடம் போக விடுங்கள். என் குற்றத்தை ஒப்புக்கொள்ள அனுமதி

கொடுங்கள்.'' கையிலிருந்த கத்திரியை ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டே சொன்னான் ராணா.

எல்லாம் புரிந்து விட்டாற்போல் புலிராஜன் தலையை அசைத்தான். ''உன் திட்டம் புரிந்து விட்டது. சஸ்பென்ஷன் ஆர்டரை வாபஸ் வாங்கா விட்டால், ஜெயிலுக்குப் போவதற்குக்கூட நீ தயார்தான். ஆனால் என்னை தெருவுக்கு இழுத்து வந்து விடுவாய். அதுதானே நீ சொல்ல வந்தது?''

''ரொம்ப சரியாக ஊகித்து விட்டீங்க.''

புலிராஜன் பலமாக பெருமூச்செறிந்து விட்டு, ''சரி... அப்படி என்றால் உன் சஸ்பென்ஷனை கேன்சல் செய்து விடுகிறேன்'' என்றான்.

''தாங்க்ஸ்... நானும் உங்க மகளை எதுவும் செய்ய வில்லை. இந்த விஷயமெல்லாம் இதோடு கப்சிப்.'' குறும்பாகச் சிரித்தான் ராணா.

புலிராஜன் சிரிக்கவில்லை. ''இதோ பார்... இந்த விஷயத்தை நான் இதோடு விட்டு விடுவேன் என்று நினைக்காதே. வீணாக கொள்ளிக் கட்டையால் தலையைச் சொரிந்து கொண்டு விட்டாய். விரைவிலேயே அனுபவிக்கப் போகிறாய்.''

ராணாவும் அவனைத் தீவிரமாகப் பார்த்து விட்டு, ''இதோ பார்... உன்னைப் போன்றவர்கள் ஆயிரம் பேரை பார்த்திருக்கிறேன். இந்த சின்ன டவுனுக்கு நீ மகாராஜாவாக இருக்கலாம். ஆனால் ரொம்ப சாதாரண மானவன் நீ. என்னோடு தகராறு வைத்துக் கொள்வது பாராளுமன்றத்தில் வெளி நடப்பு செய்வதுபோல் அத்தனை சுலபம் இல்லை. பி கேர்ஃபுல்'' என்று சொல்லி விட்டு அங்கிருந்து வந்து விட்டான்.

''வேலையை எப்படி சார் திரும்பவும் சம்பாதித்துக் கொண்டீங்க?'' பிரம்மானந்தம் பாலகிருஷ்ணன் ஆச்சரியமடைந்தவனாகக் கேட்டான். ராணா முறுவலித்து விட்டு பேசாமலிருந்தான். சுதாகருக்குக் கூட இதெல்லாம் விநோதமாக இருந்தது. அவனும் அதே கேள்வியைக் கேட்டான். இந்த முறை ராணா பதில் சொன்னான்.

''இதோ பார் கழி! நம் மனதிற்கு நாம் பதில் சொல்லியாக வேண்டும். அது மட்டும் முடிந்ததுன்னு வை, எப்படிப்பட்ட பிரச்னையாக இருந்தாலும் சுலபமாக கடந்து விடலாம்.''

அவன் சொல்லி முடிப்பதற்குள்ளேயே கான்ஸ்டபிள் சர்மா அங்கே ஓடி வந்தான். ''சுவாமி நகைகளைக் கொள்ளையடிச்சுட்டாங்க சார். கார்டுகளைக் கொன்னுட்டாங்க சார்.'' மூச்சிரைக்கச் சொன்னான். ''அங்கே ஒரே ரகளையாக இருக்கு.''

ராணா சிலையாகி விட்டான். கார்டுகளின் கொலை! இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த அதே சம்பவம் மறுபடியும் நிகழ்ந்திருக்கிறது. இந்த முறை நகைகளும் கொள்ளையடிக்கப்பட்டு விட்டன.

மனதிற்கு சமாதானம் சொல்லிக் கொள்ள முடிந்தால் எப்படிப்பட்ட பிரச்னையாக இருந்தாலும் கடந்து விட முடியும் என்று இப்பொழுதுதான் சொன்னான். அப்படி என்றால் இதற்கு அவனால் பரிகாரம் செய்ய முடியுமா?

அசெம்பிளியிலும், பார்லிமெண்டிலும் போலீசாரின் கையாலாகாத்தனத்தைப் பற்றி வெளிவராமல் அவனால் தடுக்க முடியுமா?

9

கோவிலில் சுவாமி விக்கிரகம் களையிழந்து தென்பட்டது. அந்த எல்லையெல்லாம் வெலவெலத் துப்போய் விட்டிருந்தது.

போட்டோ கிராபர்கள், போலீஸ் நாய்கள், தொலைவில் கும்பல் கும்பலாக மனிதர்கள்... எங்கும் பரபரப்பாக இருந்தது.

ராணா அந்த இடத்தில் நின்றபடி பார்த்துக் கொண்டிருந்தான். உண்மையில் அங்கே போலீஸ் நாய்களைக் கோவில் வளாகத்திற் குள் விடலாமா கூடாதா என்ற விஷயமாக எம்.பிக்களுக்கும், எம்.எல்.ஏ.க்களுக்கும் வாதாடிக் கொண்டிருந்தார்கள்.

இருவருக்குள் யாரோ ஒருத்தர் கொள்ளையடித்திருக்கிறார்கள் என்பது உண்மை. ஆனால் யாருமே பயப்படவில்லை.

நாளைக்கு எஸ்.பி. வர இருக்கிறார். அதற்குள் சென்னையிலிருந்து உத்தரவுகள் வந்து விட்டன, இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள் நகைகள் கிடைக்கும்படியாக பார்த்துக் கொள்ளச் சொல்லி.

அது சாத்தியம்தானா?

கோவிலுக்குள் போலீஸ் நாய்களை விடலாமா கூடாதா என்ற விஷயத்தைப் பற்றி வாதாட விரைவிலேயே ஒரு கமிட்டியைப் போட்டாலும் ஆச்சரியமில்லை.

ராணா யோசித்துக் கொண்டிருந்தது அதைப்பற்றி இல்லை. சரியாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் இதே போன்ற கொள்ளைக்கு முயற்சி நடந்தது. சிலர் கொலை செய்யப்பட்டார்கள். அந்த முயற்சியைச் செய்தது யார்? அவர்கள் திரும்பவும் முயற்சி செய்ய ஏன் இரண்டு ஆண்டுகள் காத்திருந்தார்கள்? அதுதான் கேள்வி.

டி.எஸ்.பி. ரொம்ப பரபரப்பாக தென்பட்டார். பாவம் இந்த வயதில் வீரதாசு போன்றவர்களின் தயவில் குடித்துக் கொண்டு உல்லாசமாக இருக்க முடியாமல் இந்த தொல்லை வந்து சேர்ந்து விட்டது.

அதற்குள் எஸ்.ஐ. கழி வந்து சல்யூட் செய்தான்.

''இது நிச்சயமாக ஸ்டுவர்ட்புரம் திருடர்களின் வேலைதான் சார்'' என்றான்.

''எப்படிச் சொல்கிறாய்?''

''பூட்டு உடைக்கப்படாமல் அப்படியே இருக்கிறது. இரும்புக் கம்பியால் நெம்பித் திறந்திருக்கிறார்கள். அப்படித் திறக்கக் கூடியவர்கள் அவர்கள் மட்டும்தான்.''

''எங்கே பூட்டு உடைக்காமல் திறந்திருந்தாலும் அது ஸ்டூவர்ட்புரம் திருடர்களின் வேலைதான் என்று முடிவுக்கு வருவது பாராட்டத்தக்க விஷயம்தான். ஆனால் இரண்டு வருடங்களுக்கு முன்னாடி ராமஸ்வாமிகூட அதேபோல் முயற்சி செய்தான் இல்லையா? பின்னே அவன் ஏன் வெற்றியடையாமல் போய்விட்டான்?''

எஸ்.ஐ. பதில் சொல்லாமல் அங்கிருந்து போய் விட்டான்.

இரவு மணி எட்டு.

நிலா வெளிச்சம் குடிசைகளின் மீதும், வீடுகளின் மீதும் சமமாக வந்து விழுந்து கொண்டிருந்தது. சில பிள்ளைகள் குடிசைக்கு முன்னால் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுதுதான் வயலிலிருந்து திரும்பியிருந்தவர்கள் கயிற்றுக் கட்டில்களில் படுத்திருந்தார்கள். பெண்கள் சிலர் வெட்ட வெளியிலேயே சமையல் செய்து கொண்டி ருந்தார்கள்.

பிள்ளைகளின் கத்தல்கள், கூச்சல்கள் தவிர, அந்த இடத்தில் வேறு எந்த சந்தடியும் இருக்கவில்லை.

அந்த நிசப்தத்தைப் பிளந்து கொண்டு தொலைவிலி ருந்து மோட்டார் சத்தம் கேட்டது. ஒன்றல்ல... நான்கைந்து வாகனங்களின் சத்தம்.

''போலீஸ்காரங்க வராங்கடோய்...'' யாரோ கத்தினார் கள். அடுத்த நிமிடமே அந்த இடத்தில் அமைதி சிதறி விட்டது.

வேன் நான்கு பக்கங்களிலும் வந்து சூழ்ந்து கொண்டது. சிறுவர்களின் அழுகுரல்களும், பெண்களின்

கூச்சல்களும் காதைப் பிளந்தன. ஆண்கள் ஓடிக் கொண்டிருந்தார்கள். எல்லாம் ஒரே குழப்பமாக இருந்தது. நான்கு பக்கமும் போலீசார் சூழ்ந்து கொண்டு விட்டதால் எந்தப் பக்கமாக ஓட வேண்டும் என்று தெரியவில்லை. கைக்கு அகப்பட்டவர்களை உதைத்து வேனுக்குள் தள்ளிக் கொண்டிருந்தார்கள்.

அரை மணிக்குள் எல்லாம் முடிந்து விட்டது. ஆண்களில் யாருமே அந்த ஸ்டூவர்ட்புரத்தில் எஞ்சி யிருக்கவில்லை. பெண்களின் அழுகைதான் எஞ்சி யிருந்தது. விவரம் தெரிந்த குழந்தைகள் அழுது கொண்டி ருந்தார்கள். விவரம் தெரியாதவர்கள் வேடிக்கை பார்த்தார்கள்.

வேனுக்குள் கும்பலை ஏற்றி அழைத்து வந்து போலீஸ் ஸ்டேஷனுக்குள் தள்ளினார்கள். எல்லோரையும் லாக்கப் ரூமுக்குள் போட முடியவில்லை. சங்கிலியால் கால் களைக் கட்டி சிலரை ஸ்டேஷனுக்கு வெளியே மரத்தடி யில் நிற்க வைத்தார்கள். விசாரணை தொடங்கி விட்டது.

விசாரணை என்றால் அதிகமாக கேள்விகள் எதுவும் இல்லை.

''நகைகளை என்ன செய்தாய்? சொல்லு'' என்று செம்மையாய் உதைப்பது, அவன் ''எனக்கு ஒன்றுமே தெரியாது'' என்று அழுவது, அவன் மயக்கம் போட்டு விழுந்ததும் இன்னொருத்தனை இழுத்து வந்து உதைப்பது.

விடியும் வரை இப்படியே தொடர்ந்தது.

ராணா காலையில் வந்து பார்த்தபோது அந்தக் காட்சி மனதைக் கசக்கிப் பிழியும்படியாய் இருந்தது. போலீசாரின் அடிகள் அவை. வெளியே தென்படாது. ஆனால் அதன் வலியை அவன் அறிவான். என்றும் வராத கோபம் எஸ்.ஐ. மேல் வந்தது.

''என்ன இது? ஏன் இப்படிச் செய்தாய்?'' என்றான்.

''நாம் எவ்வளவு சீக்கிரமாக இந்தக் கேசை செட்டில் செய்கிறோமோ அவ்வளவு நல்லது.''

''அதற்கும் இப்படி அடிப்பதற்கும் என்ன சம்பந்தம்?''

எஸ்.ஐ. கழி வியப்புடன் பார்த்தான். ''போலீஸ் ஸ்டேஷனில் அடிப்பது தவறு இல்லையே சார்'' - இது உங்களுக்குப் புதிதாகத் தோன்றுகிறதோ என்ற தொனியில் கேட்டான்.

''ஒரு திருடன் வாயிலிருந்து உண்மையை வரவழைப்பதற்கும், நம் விசாரணையை சுலபமாக்குவதற்கும் தர்ட்டிக்ரியைப் பயன்படுத்தலாம் சுதாகர். ஆனால் யார் திருடன் என்று தெரியாமல் இந்த லாக்கப் எல்லாம் எதற்கு?''

''அவர்கள் குற்றவாளிகள் சார்.''

''இப்பொழுது இல்லை, ஒரு காலத்தில். அவர்கள் பத்து வருஷம் பன்னிரெண்டு வருஷம் ஜெயிலில் தண்டனையை அனுபவித்துவிட்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் மாறுவதற்குத் தயாராக இருக்கிறார்கள். அவர்களை சீர்திருத்தக் கும்பலாக அறிவித்து அரசாங்கம் குடியிருப்புகளையும், நிலத்தையும் தந்திருக்கிறது. அவர்களின் வாழ்க்கை ஒளிமயமாக மாறப்போகும்

நேரத்தில் திரும்பவும் லாக்கப்பில் போடுகிறோம். ''நீங்கள் குற்றவாளிகள். நீங்கள் மாறுவதற்கு வழி யில்லை'' என்று திரும்பவும் செம்மையாக உதைக்கிறோம். ஒரு விதத்தில் நாமே அவர்களைப் பழைய வழிக்கு தள்ளிக் கொண்டு இருக்கிறோம்.''

''அவர்களை விட்டுவிடச் சொல்கிறீர்களா?''

சுதாகரின் வார்த்தைகளில் பழிப்பு ஏதாவது இருக்குமோ என்று சட்டென்று நிமிர்ந்து பார்த்தான் ராணா. அப்படி எதுவும் தென்படவில்லை. உங்கள் யோசனை என்னவென்று சொல்லுங்கள் என்பதுபோல், மேலதிகாரியின் பதிலுக்குக் காத்திருந்தாற்போல் நின்றிருந்தான் எஸ்.ஐ.

அதற்குள் டி.எஸ்.பி. பரபரப்புடன் அங்கே வந்தார். ''என்ன? என்னவாச்சு? ஏதாவது விஷயம் தெரிந்ததா? யாராவது வாயைத் திறந்தார்களா?'' கேள்வி மேல் கேள்வி கேட்டார்.

சுதாகர் ராணாவைப் பார்த்தான். பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு தன்மீது இருப்பதை உணர்ந்து ராணா எழுந்து நின்றான். ''உண்மையான திருடர்கள் அவர்கள் இல்லை.''

''பின்னே யாரு?''

ராணா பதில் சொல்லவில்லை. டி.எஸ்.பி. அவனை விநோதமாகப் பார்த்தார். அவனிடம் வந்தார். ''நீ ஒரு மாதம் லீவில் போனால் நன்றாக இருக்கும் ராணா'' என்றார்.

அதைவிட வேறு அவமானம் எந்த போலீஸ் அதிகாரிக்கும் இருக்க முடியாது. ''எனக்கு இரண்டு நாட்கள் டயம் கொடுங்கள் சார்... உண்மைத் திருடனைப் பிடித்துவிட முடியும்னுதான் நினைக்கிறேன்'' என்றான்.

டி.எஸ்.பி. அவனை நெருங்கி வந்தார். ''நீ உன்னை ரொம்ப உயர்ந்தவன் என்று எண்ணிக்கொண்டு இருந்தால் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை ராணா. ஆனால் எங்கள் வழிக்கும் எங்களைப் போக விடு'' என்று சொல்லி விட்டு அங்கிருந்து போய்விட்டார்.

அவன் சுமார் நான்கு மணியிலிருந்து குடித்துக் கொண்டே இருந்தான். குடி மனிதனை யுத்தத்திற்குத் தயார் பண்ணாது. தனக்குள் மறுகித் தளர்ந்து போகும்படிச் செய்யும். அந்த விஷயம் அவனுக்கும் தெரியும். ஆனால் இதயத்தில் வெடித்துக் கொண்டிருந்த எரிமலைக் குழம்பை அணைப்பதற்கு வேறு வழி தெரியாமல் குடியைத் தஞ்சமடைந்தான்.

இரவு பதினோரு மணிக்கு இன்னும் அவன் அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டு அலக்நந்தா அதற்குமேல் பொறுக்காமல் அந்த போர்ஷனுக்கு வந்தாள். ஏதோ நடந்து கொண்டிருக்கிறது என்று தெரியுமே தவிர, என்ன நடந்து கொண்டிருந்தது என்று தெரியாமல் அன்று முழுவதும் அவள் குட்டி போட்ட பூனையாய்ச் சுற்றிச் சுற்றி வந்தாள். அவன் தோற்றத்தைப் பார்த்து, பயந்து விட்டாள். அவன் கண்கள் நெருப்புக் கோளங்களாக இருந்தன. மனிதனாக இருக்கவில்லை. குரூரம் மிகுந்தவனாகத் தோன்றினான். அவனை அந்த விதமாகப் பார்ப்பது அதுதான் முதல் தடவை.

''என்னங்க இது? என்ன நடந்தது?'' என்று கேட்டாள் பயந்து கொண்டே.

''என்னைக் கொஞ்ச நேரம் தனியாக இருக்க விடு'' என்றான் கடுமையாக.

அவள் கண்களில் நீர் சுழன்றது.

அவன் சுதாரித்துக் கொண்டு ''உனக்குத் தெரியாது அலக்நந்தா! என் வருத்தம் உனக்குப் புரியாது'' என்றான்.

''என்னதான் நடந்தது?''

''கோவில் நகைத் திருட்டு விஷயத்தில் போலீசார் ஸ்டூவர்ட்புரம் திருடர்களைச் செம்மையாக உதைக்கிறார்கள்.''

''ஆமாம். அவர்களை ஜெயிலில் போட்டு விட்டார்களாம். எல்லோரும் பேசிக் கொள்கிறார்கள்.''

''ஆனால் அவர்கள் அந்தத் திருட்டைச் செய்யவில்லை. செய்தது எம்.பி. கொஞ்ச நாட்களுக்கு முன்னால் அவர்களோடு அவன் பேரம் பேசினான். அவர்கள் அதற்கு சம்மதிக்கவில்லை. அவன் வேறு விதமாக அந்தத் திருட்டை நடத்தி விட்டான். குற்றம் அவர்கள் மீது விழுந்து விட்டது. இந்த விஷயத்தை அவர்களே சுயமாக என்னிடம் சொன்னார்கள்.''

அவள் பதில் பேசவில்லை.

''இரண்டு வருடங்களுக்கு முன்னால் இதேபோல் முயற்சி நடந்தது தெரியுமா? கோவில் காவலர்களையும் பூசாரி மகனையும் கொன்று விட்டார்கள்.''

''ஆமாம். ராமஸ்வாமி என்ற ஸ்டூவர்ட்புரம் கும்ப லைச் சேர்ந்தவனே அந்தக் கொலைகளைச் செய்தானாம்.''

''இல்லை...'' ராணா உரத்தக் குரலில் கத்தி விட்டான். ''ராமஸ்வாமி அந்தக் கொலைகளைச் செய்யவில்லை. ஏனென்றால்... ஏனென்றால்... ராமஸ்வாமி என் தந்தை என்பதால்.''

அவள் வாயடைத்துப் போய் பார்த்துக் கொண்டிருந்தாள்.

★★★

''எங்கேயோ தொடங்கிய மனிதனின் வாழ்க்கை எங்கேயோ முடிவடைகிறது என்று சொல்வதற்கு நானே ஒரு உதாரணம். என் தந்தை ஒரு சுதந்திரப் போராட்ட வீரர். நாட்டிற்காக சகலத்தையும் தியாகம் செய்து விட்டார் என்று இறுமாப்புடன் இருந்து வந்த எனக்கு அவர் ஸ்டூவர்ட்புரத்தைச் சேர்ந்த திருடன் என்று தெரிந்ததும் தவிதவித்துப்போய் விட்டேன். ஒரு கேசில் பன்னிரெண்டு ஆண்டுகள் சிறைவாசத்தை அனுபவிக்க நேர்ந்த தந்தை ஜெயிலையே வீடாக மாற்றிக் கொண்டு விட்டார். என்னை சிறுவயதிலேயே ஒரு சர்வோதய ஆசிரமத்தைச் சேர்ந்த தலைவரிடம் ஒப்படைத்து விட்டார்.

நிலச்சுவான்தார்களிடமிருந்து நிலத்தைச் சேகரித்து ஏழைகளுக்குப் பகிர்ந்து அளிப்பது விநோபாபாவே சீடர்களின் லட்சியங்களில் ஒன்று.

அவ்வாறு நிலத்தைச் சேகரிப்பதற்காகப் போன பொழுது என் தந்தை பச்சிளம் குழந்தையான என்னை, அந்த சர்வோதயத் தலைவரின் பாதங்களில் வைத்து

பொறுப்பை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிக் கொண்டார். அவரையே என் தந்தையாகப் பாவித்து நான் வளர்ந்தேன்.

ஸ்டூவர்ட்புரம் திருடர்களுக்கு அரசாங்கம் நிலத்தை வழங்கியது. சாதாரண மக்களாக வாழ்வதற்கு உதவி செய்தது. சம்பல் பள்ளத்தாக்கில் கொள்ளையர் கூட்டத்தார் விநோபாபாவேக்கு அடிபணிந்தாற் போலவே ஸ்டூவர்ட்புரத்தில் சில திருடர்கள் நல்லவர்களாக மாற முடிவு செய்தார்கள். அதில் என் தந்தை ஒருவர்.

என் வளர்ப்புத் தந்தை இறக்கும் தருவாயில் என் உண்மை தந்தையான ராமஸ்வாமியிடம் அனுப்பி வைத்தார். சுதந்திரப்போராட்ட வீரரான என் வளர்ப்புத் தந்தையின் கொள்கைகள் என்னை நல்வழிக்கு அழைத்துச் சென்றன.

''ஒரு மனிதனின் கடந்தகால சரித்திரத்தைப் பார்த்து அவனை துவேஷிக்கத் தேவையில்லை. அன்பு செலுத்துவதைக் காட்டிலும் உயர்ந்த வரம் வேறொன்று மில்லை'' என்ற எண்ணத்துடன் ஸ்டூவர்ட்புரத்திற்கு சென்ற எனக்கு என் தந்தை மறுபடியும் போலீஸ் ஸ்டேஷனில் இருப்பதாகத் தெரிந்தது.

அன்றிரவு எனக்கு நன்றாக நினைவில் இருக்கிறது. மழை நன்றாக பெய்து கொண்டிருந்தது. விர்ரென்று காற்று பலமாக வீசிக் கொண்டிருந்தது.

இடியோசையை மீறிக் கொண்டு போலீஸ் ஸ்டேஷனிலிருந்து என் தந்தையின் அலறல் கேட்டுக் கொண்டிருந்தது. போலீசார் என் தந்தையை புரட்டிப் புரட்டி அடித்துக் கொண்டிருந்தார்கள்.

காரணம் ரொம்ப அற்பமானது. எங்கேயோ ஏதோ திருட்டு நடந்து விட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் யாரோ யாரையோ கொலை செய்து விட்டார்கள். சந்தேகத்தின் பேரில் என் தந்தையை அழைத்துக் கொண்டு வந்து உதைத்துக் கொண்டிருந்தார்கள். குற்றத்தை ஒப்புக் கொள்ளச் சொல்லி வற்புறுத்திக் கொண்டிருந்தார்கள்.

போலீஸ் ஸ்டேஷனில் எஸ்.ஐ.யுடன் நான் நன்றாகச் சண்டைபோட்டேன். எஸ்.ஐ. என்னை மிரட்டினார். ''ராமஸ்வாமியின் மகன் என்று சொன்னால் அந்தச் சின்ன காரணமே போதும், உன்னையும் உள்ளே தள்ளி உதைப்பதற்கு'' என்று ஏளனம் செய்தார்.

ரத்த வெள்ளத்தில் கிடந்த என் தந்தையைக் கைத்தாங்கலாகப் பிடித்துக் கொண்டு வீட்டிற்கு அழைத்து வந்தேன். ''எங்கள் வாழ்க்கையே இப்படித்தானப்பா. மாறுகிறோம் என்று சொன்னாலும் மாறவிட மாட்டார்கள் எங்களை. நீ போலீஸ்காரனாகி நம்ப ஊருக்குத் திரும்பி வா. ஸ்டூவர்ட்புரம் மனிதர்களைக் காப்பாற்று'' என்று வேண்டிக் கொண்டார் என் தந்தை. அது வரையிலும் திரும்பி வரக்கூடாது என்று என்னிடம் சத்தியம் வாங்கிக் கொண்டார்.

நான் திரும்பி பட்டணத்திற்குப் போய்விட்டேன். கஷ்டப்பட்டேன். போலீஸ் டிபார்ட்மெண்டில் வேலை கிடைத்தது. என் தந்தைக்குக் கடிதம் எழுதினேன்.

''அப்பா... நீங்கள் விரும்பியது போலவே இன்ஸ்பெக்டர் ஆகிவிட்டேன். நம் ஊருக்கு மாற்றிக் கொண்டு வருவதற்கு முயற்சி செய்கிறேன். என்னால் முடிந்தவரை அங்கே உள்ள நிலைமையை மாற்றப் பாடுபடுகிறேன்'' என்று எழுதினேன்.

எனக்கு ஏனோ பெற்ற தந்தையிடம் அளவுக்கு மீறிய பாசம் ஏற்பட்டது. எந்தச் சூழ்நிலையில் அவர் திருடனாக மாறினாரோ தெரியாது. ஆனால் பெற்ற மகனையே சர்வோதயத் தலைவரிடம் ஒப்படைத்து விட்டிருந்தார் என்றால், வாழ்க்கையில் அவர் எவ்வளவு இன்செக் யூரிடியை உணர்ந்திருப்பார் என்று ஊகித்துக் கொண்டேன். போலீசார் அடித்தபோதிலும், அரசியல் தலைவர்கள் தொல்லை கொடுத்தபோதிலும் அவர் மறுபடியும் திருடனாக மாறவே இல்லை. போலீஸ் இலாகாவில் வேலை கிடைத்ததும் ராஜ மந்திரி ஜெயிலுக்கு பயிற்சிக்கு அனுப்பினார்கள். ட்யூட்டியில் சேருவதற்கு முன்னால் நான் ஒரு முறை ஸ்டுவர்ட் புரத்திற்குப் போனேன். என் தந்தையின் ஜாடையே தெரியவில்லை. ஏதோ கேசில் அவரை சிக்க வைத்து விட்டார்கள் என்றும், எந்த போலீஸ் ஸ்டேஷனில் இருக்கிறார் என்றுகூட தெரியாது என்றும் அங்கிருந்த வர்கள் சொன்னார்கள். அந்த இடத்தின் நிலைமைகூட ஒன்றும் சரியாக இல்லை. மாற விரும்பியும், மாற விடாத சூழ்நிலையில் அங்கிருந்தவர்கள் திரும்பவும் திருடர்களாக மாறிக் கொண்டிருந்தார்கள். என் தந்தை இருக்கும் இடத்தைப் பற்றி விசாரணை செய்ய வேண்டியதாக ஐ.ஜி.க்கு விண்ணப்பித்துக் கொண்டு திரும்பி ராஜ மந்திரிக்கு வந்தேன். அதிகமாக முயற்சி செய்ய வேண்டிய தேவையில்லாமல் போய்விட்டது. என் தந்தையை நான் ராஜமந்திரியிலேயே சந்தித்தேன்-

தூக்கில் ஏறப்போகும் கைதிகள் இருக்கும் அறையில்.

★★★

அவ்வளவு அதிர்ச்சியை நான் என் வாழ்நாளில் என்றுமே அனுபவித்ததில்லை. என் தலை கிர்ரென்று சுழன்றது. என் தந்தை மறுநாள் இந்த உலகத்தை விட்டுப் போய்விடப் போகிறார்.

உயிரோடு இருந்தவரையில் எதையுமே அனுபவிக்க முடியாமல்... கடைசிக் காலத்தில் கொஞ்ச நாளாவது மகன் நிழலில் நிம்மதியாக காலம் கழிப்போம் என்றெண்ணிக் கொண்டிருந்த என் தந்தையின் ஆசை நிராசையாகி விட்டது. காற்றைவிட வேகமாக கோர்ட்டிற்கு ஓடி வந்த நான் எப்படியோ கஷ்டப்பட்டு ஜட்ஜ் மெண்டைப் படித்தேன்.

ஒன்றுமே இல்லை அதில். டிஃபென்ஸ் லாயரைக்கூட கோர்ட் நியமித்திருந்தது. குற்றவாளியை கட்டுத் திட்டமாக சிக்க வைத்திருந்தார்கள் கேசில். மனம் பதைபதைக்க ''என்ன அப்பா இது? இதெல்லாம் என்ன?'' என்று கேட்டேன். சிரித்துவிட்டுப் பேசாமலிருந்தார். அந்தச் சிரிப்பில் ஆண்டுக்கணக்கான ஜெயில் அறையில் கழிந்துவந்த இருள் தெரிந்தது. போலீஸ் லாட்டியால் அடித்தபோது வாயிலிருந்து வெளிவந்த அலறலின் தீனம் தெரிந்தது. நீதிபதி தூக்குத்தண்டனை வழங்கியபோது முகத்தில் வெளிப்பட்ட விரக்தி தெரிந்தது.

எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. இன்னும் பன்னிரெண்டு மணி நேரம்தான் இருந்தது. போலீஸ் உயர்மட்ட அதிகாரிகளைச் சந்தித்தேன். நான் சுற்றாத இடமில்லை. ஆனால் யாரால் தான் என்ன செய்ய முடியும்? நான்கு கார்டுகளை ஒற்றை ஆள் எப்படி கொலை செய்திருக்க முடியும் என்று யாருமே யோசித்துப்

பார்க்கவில்லை. ''காரில் போய்க் கொண்டிருந்த பெண்ணின் சாட்சியம் எந்த விதத்தில் செல்லும்?'' என்று டிஃபென்ஸ் லாயர் வாதாடவில்லை. எல்லாம் ஏதோ திட்டம் போட்டாற்போல் நடந்தேறிவிட்டது.

''இதையெல்லாம் என்னிடம் ஏன் முதலிலேயே சொல்லவில்லை அப்பா?'' என்று கேட்டேன்.

''சொன்னால் என்ன செய்து விடுவாய் அப்பா? படிப்பை பாதியில் விட்டுவிட்டு வந்து விடுவாய். என்னைப்போலவே போலீஸ் ஸ்டேஷனைச் சுற்றியும், கோர்ட்டைச் சுற்றியும் அலைந்து கொண்டிருப்பாய். ஒன்றும் செய்யவும் முடியாமல், செய்ததற்கு பலனும் இல்லாமல் என்னைப்போலவே நீயும் கல்லாக மாறி விடுவாய். இதெல்லாம் ஒரு வலை. இந்த வலையில் விழுந்து விட்ட மீனால் இனி வெளியே வர முடியாது. குண்டர்கள், அரசியல் தலைவர்கள், போலீசார் எல்லோருமாகச் சேர்ந்து ரகசியமாகப் பின்னியிருக்கும் வலை இது. ஒருத்தருக்காக இன்னொருத்தர் குற்றம் செய்வார்கள். அவர்கள் இடத்தில் இன்னொருத்தரை சிக்க வைப்பார்கள்.''

''யார்... யார்... செய்தார்கள் இதையெல்லாம்?''

''தெரியாதுப்பா.''

என் தந்தைக்குத் தெரியும். சொன்னாலும் லாபம் இல்லை' என்றெண்ணிச் சொல்லவில்லை. நான் சொன்னேன். ''அப்பா! உண்மையிலேயே நீ திருட எண்ணியிருந்தால் அதற்காக கார்டுகளைக் கொல்ல வேண்டிய அவசியமே இல்லை. இவ்வளவு பீதியைத்

தோற்றுவிக்க வேண்டிய அவசியமும் இல்லை. சந்தடி இல்லாமல் உன்னால் அந்தக் கோவிலுக்குள் நுழைந்து விட முடியும். காற்றினும் வேகமாக நகைகளை அபகரித்துக் கொண்டு ஓடியிருக்க முடியும். இதற்குப் பின்னால் யார் இருக்கிறார்கள் என்று சொன்னால், நான் அவர்களை ஒரு கை பார்த்து விடுவேன் என்றும் அந்த முயற்சியில் நான் இறங்கி விட்டால் என் உயிருக்கே ஆபத்தாகி விடும் என்றும் தெரிந்துதான் நீ எனக்கு இந்த விஷயத்தைச் சொல்ல மறுக்கிறாய். அப்படித்தானே?''

என் தந்தை பதில் பேசவில்லை.

விடிந்தது.

உதய சூரியன் வானத்தை ரத்த வர்ணத்தில் மாற்றிக் கொண்டிருக்கையில் என் தந்தை தூக்குமேடையே நோக்கி நடந்தார். பின்னாடி போலீஸ் அதிகாரி என்ற ஹோதா வில் நானும் நடந்தேன். எவ்வளவு வேதனையான காட்சி அது. எந்த மனிதனின் வாழ்க்கையிலும் ஏற்பட்டிருக்காது. ஒரு காலத்தில் வீடுகளுக்குக் கன்னம் வைத்த கைகளாகவே இருக்கலாம். ஆனால் பிறகு நிலத்தை உழுத கைகள் அவை. வளர்ந்த பயிரைக் கண்ணால் பார்க்கக்கூட கொடுத்து வைக்காமல் செயலை இழந்துவிட்ட கைகள் அவை. அந்தக் கைகளைப் பிடித்துக் கொண்டு விரல் முத்திரையைப் போடச் செய்யும் துரதிஷ்டம் ஏற்பட்டது எனக்கு. ''கோவில் கார்டுகளைக் கொன்றதற்காக செக்ஷன் 302யின் கீழ் உனக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை அமுலாக்குகிறேன்'' ஜட்ஜ்மெண்டைப் படித்துக் காட்டினேன். என் தந்தை சலனமில்லாமல் இருந்தார்.

''உன் கடைசி விருப்பம் ஏதாவது இருக்கா?''

''உன்னிடம் சொல்லலாமா அப்பா?''

''சொல்லுங்கள் அப்பா'' கண்ணீரை அடக்கிக் கொண்டேன்.

''அங்கே எல்லோருமே திருடர்கள்தான். ஆனால் சிலராவது உண்மையிலேயே மாற விரும்புகிறவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்காக அங்கே போப்பா. நீ சொன்னாயே அவர்களை ஒரு கை பார்க்கும் முயற்சியில் உயிருக்கு ஆபத்தை வரவழைப்பதைப்பற்றி. அந்தப் பகையும், பழி வாங்கும் நோக்கமும் நமக்கு வேண்டாமப்பா. வலையை உன்னால் எப்படியும் அறுத்தெறிய முடியாது. என்னைப் போன்ற அப்பாவி மீன்கள் அந்த வலையில் விழாமல் காப்பாற்று. அதுதான் என் கடைசி ஆசை.''

என் வளர்ப்புத் தந்தையான சர்வோதயத் தலைவர் சொன்ன கருத்தும் அதுதான். பகையைவிட கருணை உயர்ந்தது என்ற கருத்துக்கு வாழ்க்கை அனுபவத்தை ஜோடித்து என் பெற்ற தந்தை வெளியிட்ட கடைசி ஆசை அது.

''கண்டிப்பாக போகிறேன் அப்பா.''

நான் பேசிய கடைசி வார்த்தை அதுதான். சூரியனை மேகம் மறைத்தது. உண்மையைப் பொய் விழுங்கி விட்டாற்போல் ஒளியை இருள் மறைத்து விட்டது. என் தந்தையின் முகத்தில் கருப்பு முகமூடியை அணிவித்தார்கள். நான் அருகில் சென்று கயிற்றைப் பரிசோதித்தேன். கைகளையும், கால்கட்டை விரல்களையும் கயிற்றால் பிணைத்தார்கள்.

''அடென்ஷன்!''

போகப் போகும் உயிருக்கு மரியாதை வழங்குவது போல் நாங்கள் எல்லோரும் நின்று கொண்டிருந்தோம். ''அரசியலே! உனக்கு எங்கள் ஒத்துழைப்பு எப்பொழுதும் உண்டு'' என்பது போல் எங்கள் போலீசாரின் துப்பாக்கிகள் தரையில் ஊன்றியிருந்தன. ''குண்டாயிஸமே! உனக்கு எங்கள் பாராட்டுக்கள்'' என்பதுபோல் ஜெயிலர்கள் தலை குனிந்து நின்றார்கள்.

நான் கைக்குட்டையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டேன். ராமஸ்வாமியின் கழுத்தில் கயிற்றைப் பிணைத்தார்கள். இந்தக் கை கீழே இறங்காமல் எந்தச் சக்தியால் தடுத்து நிறுத்திவிட முடியும்? எந்த அரசியல் தலைவன் தேர்தல் நிதிக்காக அந்த நகைகளைக் கொள்ளையடிக்க நினைத்தானோ? எந்தச் செல்வந்தன் தன் இரும்புப் பெட்டியில் மேலும் ஐம்பது லட்சம் போட்டு பூட்டி வைத்துக் கொள்வதற்காக, குண்டர்களின் உதவியைப் பெற்றுக் கொண்டானோ? அமைதிக்குச் சின்னமான வெள்ளைக் கைக்குட்டை குரூரமாக ஒரு நிரபராதியின் உயிரை எடுத்துக் கொண்டிருந்தது.

என் கை கீழே இறங்கியது.

லீவர் நகர்ந்தது.

படபடவென்று அடித்துக் கொண்டிருந்த கால்கள்... பறவையின் சிறகு சத்தம்... உயிர் போய்க் கொண்டிருப்பதற்கு அறிகுறியா? பூரி ஜெகன்னாதரின் ரத சக்கிரங்களுக்குக் கீழே நலிந்து போகும் தர்மத்தின் ரோதனையா?

''சூரியனே! நின்று விடு. இதோ என் தாய் நாடு. இங்கே உயிர்களைப் பணத்திற்கு விற்று விடுவார்கள். இங்கே மனிதர்கள் பதவிக்காகவும், பணத்திற்காகவும் சகமனிதர்களை விலை கொடுத்து வாங்கிக் கொள்வார்கள். சத்தியத்தை வெளியில் கொண்டு வருவதற்காக போலீசார் அடிப்பார்கள். குற்றத்தை ஒப்புக் கொள்ளாத நிரபராதி மரணமடைந்தால் அதை லாக்கப் டெத் என்பார்கள். பெரிய பெரிய கொள்ளைகளுக்காக தலைவர்களே திருடர்களை ஊக்குவிப்பார்கள்.

ஆதரவு தந்து திருடர்களை தம் கைக்குள் போட்டுக் கொள்வார்கள். ஒப்புக்கொள்ளாமல் போனால் என் தந்தையைச் செய்ததுபோல் சமாதியாக்கி விடுவார்கள். அவர்கள் செய்யும் மரணஹோமங்களுக்கு சமித்துக்களாகப் பயன்படுத்திக் கொள்வார்கள்.

இதுதான் அலக்நந்தா என் கதை. இப்பொழுது சொல்லு. எங்கேயோ கோவிலில் கொள்ளை நடந்தால் அதற்கு இந்த ஸ்டூவர்ட்புரத்துத் திருடர்களைக் கொண்டு வந்து அடிப்பது நியாயமா?''

அலக்நந்தா பதில் சொல்லவில்லை. அவளால் இன்னும் இவ்வளவு கொடூரமான கதையின் பாதிப்பிலிருந்து மீள முடியவில்லை. ராணா இருட்டில் அவளையே கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

10

இரண்டு நாட்கள் கழிந்தன.

கோவில் திருட்டைப் பற்றி எந்த துப்பும் வெளிப்படவில்லை. ஸ்டூவர்ட்புரம் திருடர்கள் இந்தக் கொள்ளையைச் செய்யவில்லை என்று தெரியும். பெரிய திட்டத் துடன் இந்த திருட்டை செய்திருக் கிறார்கள். ஸ்டூவர்ட்புரத்தைச் சேர்ந்தவர்கள் இந்த விதமாகச் செய்திருக்கமாட்டார்கள். பூட்டு களுக்கு டூப்ளிகேட் சாவி தயாரிப் பது, விரல் முத்திரை விஷயத்தில் கவனமாக இருப்பது, போலீஸ் நாய்கள் மோப்பம் பிடித்துத் தெரிந்து கொள்ள முடியாதபடி முன் ஜாக்கிரதை எடுத்துக் கொள் வது போன்ற வேலைகளை எல்லாம் அவர்கள் செய்ய மாட்டார்கள். அவர்களுடைய வழிமுறையே முரட்டுத்தனம் நிறைந்தது.

இவ்வளவு நுட்பமாக கொள்ளையடிக்க மாட்டார்கள். ஆனாலும் போலீசார் அவர்களைத்தான் கொண்டு வந்து லாக்கப்பில் வைத்தார்கள். பின்னே போலீசார் மேலதிகாரிகளுக்கு சால்ஜாப்பு சொல்லிக் கொள்ள வேண்டாமா? அதனால் ஏதோ ஒன்றைச் செய்ய வேண்டும். யாரையோ ஒருத்தரை பலியாடு ஆக்க வேண்டும். ராணாவுக்கு ஒரு விஷயம் புரிபடவில்லை.

இரண்டு வருடங்களுக்கு முன்னால் இதே கொள்ளைக்காக முயற்சி நடந்தது. காவலர்களையும் பூசாரியின் மகனையும் கொன்று விட்டார்கள். ஆனால் கொள்ளை நடக்கவில்லை. அவர்கள் முயற்சி பலிக்கவில்லை.

ஆனால்... ஆனால்...

திருடர்கள் மறுபடியும் கொள்ளையடிப்பதற்கு இவ்வளவு நாட்கள் ஏன் காத்திருந்தார்கள்? இதே திருட்டை உடனேயே செய்திருக்கலாம் இல்லையா? முதல் குற்றம் எப்படியும் தன் தந்தையின் மீது சுமத்தப்பட்டு விட்டது. அந்தப் பக்கத்தில் பயம் தேவையில்லை அவர்களுக்கு. ஒருமுறை ரத்தத்தை ருசி பார்த்து விட்ட புலி இவ்வளவு நாளாக ஏன் பதுங்கியிருந்தது?

இதுதான் புரியாத கேள்வி.

ஒரு முயற்சி நடந்த பிறகு இவ்வளவு விலை மதிப்பு வாய்ந்த ஆபரணங்களைப் பார்த்துவிட்டு யாருமே இவ்வளவு நாளும் சும்மாயிருந்திருக்க முடியாது. இந்தத் திருட்டை யார் செய்தார்கள் என்பது வெளிப்பட வேண்டுமென்றால் முதலில் இந்த விஷயம் தெரிய வேண்டும். அவர்கள் எதற்காக இவ்வளவு நாளாக சும்மா இருந்தார்கள்?

ராணா இந்தக் கேசு விஷயமாக இப்படி யோசித்துக் கொண்டிருக்கும்போது பிற்பகல் பன்னிரெண்டு மணியளவில் பரத் அவனிடம் வந்தான். அவன் முகத்தில் ஏதோ பரபரப்பு.

''உங்களிடம் அவசரமாக பேசணும்.''

இருவரும் ஹோட்டலில் போய் உட்கார்ந்து கொண்டார்கள்.

''சொல்லுங்கள்'' என்றான் ராணா.

''என் வேலை போய் விட்டது.''

ராணா அதிர்ந்தவனாகப் பார்த்தான். பரத் முகத்தில் கவலை எதுவும் தென்படவில்லை. அதைக் காட்டிலும் ஏதோ சொல்ல வேண்டும் என்ற தவிப்புத்தான் தென்பட்டது.

''எப்படிப் போச்சு? ஏன் போச்சு?''

''அரவிந்த் சௌரஸியா... எங்கள் பத்திரிகை முதலாளியோடு பேசினான். சௌரஸியாவுக்குக்கூட ஷேர்கள் இருக்கிறதாம். போலீஸ் லாக்கப்பிலும், கிரிமினல் ரிக்கார்டிலும் இருக்கிறவனை எப்படி இன்னும் வேலையில் வைத்துக் கொண்டிருக்கிறாய் என்று கேட்டானாம். உண்மையான காரணம் அது இல்லை. நடைபாதை வாழ்க்கையைப் பற்றிய கட்டுரைதான். ஆனாலும் அதைப்பற்றி எனக்கு எந்தக் கவலையும் இல்லை. ஜர்னலிஸ்டுகளுக்கு வேறு வேலை கிடைப்பது கஷ்டமொன்றும் இல்லை. நான் இப்பொழுது வந்தது உங்களிடம் என் வேலையைப் பற்றிச் சொல்வதற்காக இல்லை. கோவில் நகைகளைப் பற்றி...''

ராணாவுக்கு ஆர்வம் இன்னும் அதிகரித்தது. நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு ''நகைகளைப் பற்றி என்ன?'' என்று கேட்டான்.

''இந்த ஊரில் தங்க நகைத் திருட்டு அத்தனைக்கும் ராமாச்சாரிக்கும் சம்பந்தம் இருக்கிறது. தங்கத்தை உருக்குவது, கற்களைப் பிரித்தெடுப்பது, விற்பது, தரகு வேலை அத்தனையும் அவன்தான் செய்கிறான்.''

''இந்த விஷயம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது?'' கேட்டான் ராணா.

''சில நாட்கள் போலீசார் என்னை லாக்கப்பில் வைத்திருந்தார்கள் இல்லையா? ஒரு திருடனோடு அறிமுகம் ஏற்பட்டது. அவன் என்னையும் ஒரு திருடன் என்று நினைத்து விட்டான். ஒரே தொழிலில் இருப்பவர்களுக்கு இடையே சாதாரணமாக ரகசியங்கள் இருக்காது. முந்தா நாள் கடைத்தெருவில் சந்தித்தான். ''புதிதாக ஏதாவது திட்டம் போட்டிருக்கீங்களா? பார்ட்னர்ஷிப் சேர்ந்து கொள்ளலாமா?'' என்று கேட்டான். அவன் வாயைக் கிளறிப் பார்த்தேன். அவன் சொன்னது மட்டும் உண்மையாக இருந்தால்... இரண்டு வருடங்களுக்கு முன்னாடியே நகைகள் கொள்ளையடிக்கப்பட்டு விட்டன. தற்சமயம் கொள்ளையடிக்கப்பட்டவை கில்ட் நகைகள்.''

ஆழ்ந்த நிசப்தம் சூழ்ந்து கொண்டது அவர்களுக்கு நடுவில். ராணா யோசனையிலிருந்து மீண்டவன் எழுந்து நின்றுகொண்டு ''தாங்க்ஸ்! மீதி விஷயங்களை நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்றான்.

அவன் மனதில் அப்பொழுதே ஒரு யோசனை உருவாகி விட்டது.

★★★

ரானாவுக்கு இப்பொழுது விஷயம் முழுவதும் புரிந்து விட்டது.

இரண்டு வருடங்களுக்கு முன்னால் நகைகளைக் கொள்ளையடித்து விட்டு சுவாமிக்கு கில்ட் நகைகளைப் பூட்டியிருக்கிறார்கள். திருடி விட்டு வெளியே வந்து கொண்டிருந்தபோது அவர்களை காவலாளிகள் பார்த்து விட்டார்கள்போலும். அவர்களைச் சுட்டுக் கொன்று விட்டுத் தன் தந்தையை அந்தக் கொலை கேசில் சிக்க வைத்து விட்டார்கள். சுவாமி சிலையின் மீது நகைகள் எப்பொழுதும் போலவே இருந்ததால் யாருக்கும் திருட்டின் மீது கவனம் செல்லவில்லை. ஒரு தடவை திருடி விட்டு அவர்கள் கப்சிப்பென்று இருந்து விட்டார்கள். இரண்டு வருடங்கள் கழித்து இப்பொழுது மறுபடியும் இன்னொருத்தரின் கவனம் அந்த நகைகளின் மீது பட்டு விட்டது. அவை கில்ட் நகைகள் என்று தெரியாமல் திருடியிருக்கிறார்கள்.

யார்?

தெரிந்து கொள்வதற்காக அவன் ராமாச்சாரியின் வீட்டிற்குப் போனான். இன்ஸ்பெக்டர் உடையில் அல்ல, கம்பளியைப் போர்த்திக் கொண்டு.

இரவு பத்து மணிக்கு வந்த முன் பின் தெரியாத ஆளைப் பார்த்துவிட்டு ராமாச்சாரி வியப்படையவில்லை. அவன் வியாபாரம் தொடங்குவதே அந்த நேரத்தில்தான்.

''யார் நீ?''

''எங்க ஊர் ஸ்டுவர்ட்புரம்.''

''இதுக்கு முன்னால் உன்னை எங்கேயும் பார்த்தாற் போல் தெரியவில்லையே?''

''ராமஸ்வாமியின் மகன் நான். சமீபத்தில் தான் எங்க அப்பாவைத் தூக்கில் ஏற்றினார்கள்.''

''என்ன விஷயம்?''

''ஒரு மோதிரத்தை விற்கணும். திருடி இரண்டு நாளாகி விட்டது. பணம் அவசரமாக வேண்டியிருக்கு'' என்று நீட்டினான்.

''எங்கேயிருந்து திருடிக்கொண்டு வந்தாயடா இதை?'' பெற்றுக் கொண்டே கேட்டான்.

''முந்தா நாள் கோவில் கொள்ளையடித்தது நான்தான் சாமி-''

ராமாச்சாரியின் முகம் மாறியது. ''அந்தக் கொள்ளையை நடத்தியது நீதானா? யாரடா செய்திருப்பாங்கன்னு குழம்பிக் கொண்டிருந்தேன்.''

''மோதிரத்தை எடுத்துக்கிட்டு பணம் தாங்க சாமி.''

''இது கில்ட் மோதிரம்டா அம்பீ. பைசா பெறாது.''

''கல்லில் உராய்ந்து பார்க்காமல் எப்படித் தெரிந்தது?''

சாரி நாக்கைக் கடித்துக்கொண்டு ''பார்த்தாலே தெரிந்து விடும் எங்களுக்கு. எடுத்துக்கொண்டு போ'' என்று தள்ளினான் அதை. அது மேஜையின் இடுக்கில் விழுந்தது. ராணா குனிந்து அதை எடுத்துக்கொண்டு திரும்பி விட்டான்.

அவன் போனதுமே ராமாச்சாரி கதவைச் சாத்திக் கொண்டான். தான் தெரிந்து கொண்ட விஷயத்தைத் தன் ஆட்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்ற தவிப்பு ஏற்பட்டது. உடனே போன் செய்தான்.

''எம்.எல்.ஏ. நரசிம்மன் ஹியர்.''

''நான்தான் ராமாச்சாரி பேசுகிறேன் சார். பாவம் அந்த கில்ட் நகைகளை எவனோ ஸ்டூவர்ட்புரத்தைச் சேர்ந்த திருடன் கொள்ளையடித்திருக்கிறான். அவன் உண்மை யான நகைகள்தான் என்று நினைத்து என்னிடம் எடுத்து வந்தான். அவற்றைக் கொள்ளையடித்த முட்டாள் யாராக இருக்கும் என்று நினைத்தோமே?''

''இன்னும் அவன் அங்கேதான் இருக்கிறானா?''

''இல்லை சார். கில்ட் விஷயத்தைச் சொல்லி அனுப்பி வைத்துவிட்டேன்.''

''அவன் எம்.பி.யின் ஆளாக இருப்பான்.''

''என்ன சார்? எப்படித் தெரியும்?''

''ஆமாம். முந்தாநாள் நகைகளை கொள்ளையடித்தது எம்.பி.யாம். அது தெரிந்துதான் இங்கே நாங்கள் சிரித்துக் கொண்டிருக்கிறோம். தானே நேராக வந்து விற்றால் நன்றாக இருக்காது என்று தன் ஆளை அனுப்பியிருப்பா னாக இருக்கும். பாவம் அந்த நகைகள் எல்லாம் கில்ட் டுன்னு தெரிந்தால் அவன் முகம் எப்படிப் போகும்னு இப்போ எனக்குப் பார்க்கணும்போல் இருக்கு.''

''யாரோ மறுபடியும் கதவைத் தட்டறாங்க. போனை வைத்து விடுகிறேன் சார்.'' போனை வைத்துவிட்டுப் போய் கதவைத் திறந்தான் ராமாச்சாரி.

எதிரே ராணா நின்று கொண்டிருந்தான்.

சாரியைத் தள்ளிவிட்டு மேஜைக்கருகில் வந்தான். அவன் வைத்த டேப் ரிக்கார்டர் இன்னும் இயங்கிக் கொண்டிருந்தது.

ராமாச்சாரியின் முகத்தில் ரத்தம் வற்றிவிட்டது. ஆள் நடுங்கிக் கொண்டிருந்தான். ராணா முழு உரையாடலை யும் கேட்டான்.

எல்லாவற்றையும் கேட்ட ராணா ''ஸோ... இரண்டு வருடங்களுக்கு முன்னால் ஒரிஜினல் நகைகளை எம்.எல்.ஏ. கொள்ளையடித்து விட்டான். இப்பொழுது கில்ட் நகைகளை எம்.பி. கொள்ளையடித்திருக்கிறான்.''

ராமாச்சாரி பதில் சொல்லவில்லை.

''கடவுளே! என் நாட்டைக் காப்பாற்று'' என்று நினைத்துக் கொண்டான் ராணா. ராமாச்சாரியை அரெஸ்ட் செய்து போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றான்.

★★★

''அவனைக் கொன்று போட்டுடணும்.'' வீரதாஸ் சுருக்கமாகச் சொன்னான். எம்.எல்.ஏ. நரசிம்மன் நடுங்கிக் கொண்டிருந்தான். சாதாரண நிலைமையாக இருந்தால் அவ்வளவு பயந்திருக்கமாட்டான். ஆனால் விரைவில் தேர்தல்கள் வர இருக்கின்றன. கேசு நடக்குமா இல்லையா என்பது வேறு விஷயம். பத்திரிகைக்காரர்கள் விட்டு வைக்க மாட்டார்கள். இரண்டு வருடங்களுக்கு முன்பு நடந்த கொள்ளை... கில்ட் நகைகள்... கொலைகள் எல்லாம் இப்பொழுது வெளிப்பட்டு விட்டால் கஷ்டம். மக்களுக்கு பக்தி ஜாஸ்தி. சுவாமி நகைகளை கொள்ளை

யடித்தவன் என்ற பெயர் வந்து விட்டால்போதும். கோர்ட்டுகூடத் தேவையில்லை. டிபாசிட்டைக்கூட இழக்க வேண்டியதுதான்.

எம்.பி. புலிராஜன்கூட சும்மாயிருக்க மாட்டான். அந்த கில்ட் நகைகளை எங்கேயாவது குப்பைத் தொட்டியில் வீசியெறிந்து விடுவான். ராமாச்சாரியின் சாட்சியம் இன்னும் பலத்தைக்கூட்டும். அதனால்தான் விஷயம் தெரிந்ததும் நள்ளிரவில் வீரதாசிடம் ஓடி வந்தான்.

''அவனைக் கொன்று போட்டு விடணும்'' வீரதாஸ் எழுந்து கொண்டான். ''இன்றிரவே... உடனே...''

நரசிம்மன் வீரதாசுடன் நடந்தான். எதிர்த்துச் சொல்ல வில்லை. விஷயம் எவ்வளவு ஆபத்தானது என்று தெரியும். அதற்குள் ராமாச்சாரி அரெஸ்ட் ஆகி இரண்டு மணி நேரம் ஆகியிருந்தது. ஊர் முழுவதும் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தது. வீரதாசின் ஜீப் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஒரு பர்லாங்கு தொலைவில் நின்றது. நான்கு ஆட்கள் பெட்ரோல் டின்களைத் தூக்கிக் கொண்டு வந்தார்கள். போலீஸ் ஸ்டேஷனுக்கு வலது பக்கத்து வராண்டாவில் இருந்தது லாக்கப் ரூம். சென்ட்ரி ஒருவன் குட்டித் தூக்கம் போட்டுக்கொண்டிருந்தான்.

அவன் போய் சென்ட்ரியிடம் ''உன்னை எம்.பி. சார் வரச் சொன்னார்'' என்றான். அவன் பயந்துபோய் ''எங்கே?'' என்றான். அந்த நள்ளிரவு நேரத்தில் எம்.பி. ஏன் வந்தார் என்று புரியவில்லை.

''அங்கே ஜீப்பில் இருக்கிறார்.''

சென்ட்ரி ஓடிப்போய் பார்த்தான். அவன் அப்படிப் போனதுமே வீரதாஸ் இருட்டிலிருந்து வெளியே வந்தான்.

நான்குபேரும் பெட்ரோலை ஊற்றியதும், வீரதாஸ் நெருப்புக் குச்சியைக் கிழித்துப் பற்ற வைத்ததும் ஒரே சமயத்தில் நடந்து முடிந்து விட்டன. வெள்ளம் பெருக்கெடுத்து ஓடினாற்போல் லாக்கப் ரூமுக்குள் பெட்ரோல் ஓடியது. அத்துடன் தீயும் பரவியது. பெரிதாக ஓலமிட்டுக் கொண்டே ராமாச்சாரி கம்பிகளைப் பிடித்து உலுக்கிக் கொண்டிருந்தான்.

லாக்கப் ரூமை விட்டு வெளியே வருவதற்கு முயற்சி செய்தான். ஸ்டேஷனிலிருந்த இரண்டு போலீசார் வெளியே வந்தார்கள். லாக்கப் அறைக்குள் பற்றியெரிந்து கொண்டிருந்த உடல் அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தது. போலீசார் கலவரத்துடன் பூட்டைத் திறக்க முயன்று கொண்டிருந்தார்கள். அது வரவில்லை. அந்த இடமெல்லாம் ஒரே களேபரமாக இருந்தது. கடைசியில் ஒருவாறு பூட்டைத் திறந்தார்கள். அதற்குள் உள்ளேயிருந்து பொசுங்கிய நாற்றம் வரத் தொடங்கி விட்டது. கான்ஸ்டபிள் சைக்கிளை எடுத்துக் கொண்டு ராணா வீட்டிற்குப் போனான். ராணா வரும்போது சாரி உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தான். டாக்டர் அந்த இடத்திற்கே வந்தார். இன்னும் ஐந்து நிமிடங்களுக்கு மேல் பிழைக்கமாட்டான் என்று சொல்லி விட்டார்.

''இதோ பார்'' என்றான் ராணா முழங்காலில் உட்கார்ந்து கொண்டு, ''உயிரோடு இருக்கும் வரையிலும் பாவங்களை செய்து வந்தாய். சாகும் தருணத்திலாவது உண்மையைச் சொல்லிவிட்டால் நல்லது. உன்னால் இந்த நாட்டிற்குச் சில தீயவர்கள் குறையலாம். லாக்கப் ரூமில் பெட்ரோலை ஊற்றியது யாரென்று தெரியுமா?''

''வீரதாஸ்.''

ராணா குறித்துக் கொண்டான்.

''இரண்டு வருடங்களுக்கு முன்னால் அவர்கள் நகைகளைக் கொள்ளையடித்தார்கள். அந்த விஷயத்தில் நீ அப்ரூவராக மாறுகிறாய் என்று தெரிந்து உன்னைக் கொலை செய்ய வந்தார்கள் இல்லையா?''

''ஆமாம்.''

''அன்று நீங்கள் செய்த கொள்ளையின்போது காவலாளர்களை யார் கொலை செய்தார்கள்?''

''வீரதாஸ்.''

''அந்தக் குற்றம் யார் மீது சுமத்தப்பட்டது?''

''ராமஸ்வாமியின் மீது.''

''இதற்குப் பின்னால் இன்னும் யாராவது இருக்கிறார்களா?''

''எம்.எல்.ஏ. நரசிம்மன்.''

''இதை எல்லாம் நீ சுயநினைவோடுதான் சொல்கிறாயா?''

ராமாச்சாரியின் மரண வாக்குமூலத்தில் அவன் கையொப்பத்தை வாங்கிக் கொண்டான் ராணா. பிறகு அரை மணிக்கெல்லாம் சாரியின் உயிர் காற்றில் கலந்து விட்டது.

சுமார் இரண்டு மணிக்கு வீரதாஸின் இருப்பிடத்திற்குப் புறப்பட்டுப் போனான் ராணா. அங்கே எல்லோரும் அப்பொழுதுதான் தூங்க ஆரம்பித்திருந்தார்கள். போலீஸ் வேன் சத்தம் கேட்டு அந்த இடத்தில் சலசலப்பு ஏற்பட்டது. வீரதாஸின் ஆட்கள் தடுத்தபோது அவர்களைத் தள்ளிவிட்டு உள்ளே போனான் ராணா.

கண்களைக் கசக்கிக்கொண்டே கதவைத் திறந்த வீரதாஸ் எதிரே ராணாவைப் பார்த்ததும் வியப்படைந்து விட்டான். ஆனால் அது வினாடி நேரம்தான். உடனே உல்லாசமாக சிரித்துக்கொண்டே ''வாங்க சார். என்ன இது? நள்ளிரவு நேரத்தில் வந்திருக்கீங்களே?'' என்றான்.

''ராமாச்சாரியைக் கொலை செய்த குற்றத்திற்காக உன்னை அரெஸ்ட் செய்கிறேன்.''

வீரதாஸ் வியப்படைந்தவன்போல் காட்டிக் கொண்டே ''ராமாச்சாரி இறந்து விட்டானா? எங்கே? எப்படி?'' என்றான்.

ராணா அவனையே கண்ணிமைக்காமல் ஒரு வினாடி பார்த்துவிட்டு நாடகத்திற்கு கடைசித் திரையைப் போட்டாற்போல் ''மரண வாக்குமூலம் கொடுத்திருக் கிறான். அத்தனையும் சொல்லி விட்டு கையொப்பமிட்டி ருக்கிறான்'' என்றான்.

வீரதாஸ் முகத்திலிருந்த சிரிப்பு மாயமாகி விட்டது. இருவருக்குமிடையே பயங்கரமான நிசப்தம்.

''எவ்வளவு வேண்டும்? சொல்லு... இருபதாயிரம்?''

ராணா அவனையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''அந்த ஸ்டேட்மெண்டைக் கிழித்துப்போட்டு விடு. விஷயத்தை இப்பொழுதே செட்டில் செய்து விடுகிறேன்.''

''விஷயத்தை செட்டில் செய்வதற்காகத்தான் வந்திருக்கிறேன். கிளம்பு.''

வீரதாஸ் நகரவில்லை. ''ரொம்ப கஷ்டத்தில் மாட்டிக் கொள்ளப்போகிறாய் ராணா. இப்பொழுதுதான் வேலையில் சேர்ந்திருக்கிறாய். நட்புடன் இரு.''

''நீ இன்னும் ஒரு நிமிஷத்தில் என்னோடு வராமல் போனால் விலங்கிட்டு அழைத்துச் செல்ல வேண்டியிருக்கும்.''

திரும்பவும் அதே பார்வை. வீரதாஸ் ஒரு முடிவுக்கு வந்தவனாக போனை நெருங்கி டயல் செய்தான். இரண்டு நிமிஷங்களில் தொடர்பு கிடைத்தது.

''ஹலோ மிஸஸ் காமினி! அமைச்சர் அவர்கள் இருக்கிறாரா? ஒன்றுமில்லை. சின்ன மாற்றல் உத்தரவு வேண்டும். இப்பொழுதே ஒரு நிமிடத்திற்குள். ஊஹூம், அப்படி பயமுறுத்தினாலேபோதும். எவனோ ஒரு இளம் இன்ஸ்பெக்டர் அரெஸ்ட் செய்கிறேன் என்று சொல்லிக் கொண்டு நள்ளிரவில் வந்து உட்கார்ந்திருக்கிறான். அனுபவம் குறைவு. நீங்கள் பேசறீங்களா, சரி.''

போனைத் தந்தான் வீரதாஸ். ராணா பெற்றுக் கொண்டான்.

''இந்த நள்ளிரவில் நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்று உங்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லைன்னு நினைக்கிறேன். நீங்கள் ஏதாவது சொல்ல நினைத்தால் சொல்லலாம்.''

''நான் எப்போது சொன்னாலும் ஒன்றையேதான் சொல்லுவேன். இந்த அரசியல் வளையத்திற்குள் சிக்கிக் கொள்ளாதே. ரொம்ப சங்கடத்தில் மாட்டிக் கொள்வாய்.''

''நீங்க சொல்ல வேண்டியது இன்னும் ஏதாவது பாக்கியிருக்கா?''

''மாநிலத்தில் ஆளும் கட்சிக்கு வீரதாசின் தேவை ரொம்பவும் அவசியம்.''

''இன்னும் ஏதாவது இருக்கிறதா?''

''விரைவில் தேர்தல்கள் வரவிருக்கின்றன.''

''தெரியும். இன்னும் ஏதாவது?''

மறுமுனையில் யாரோ போனுக்கு அருகில் வந்த சந்தடி. காமினி கணவனிடம் எல்லாவற்றையும் சொல்லி விட்டாள் போலும். ஹோம் மினிஸ்டர் லைனுக்கு வந்தார்.

''உன் பெயர்?''

''ராணா சார்... ஸ்டூவர்ட்புரம் இன்ஸ்பெக்டர்.''

''அந்தக் கேசைப் பார்த்தும் பார்க்காத மாதிரி விட்டு விடு.''

''சார்... இறந்துபோன ஆள் மரண வாக்குமூலத்தில் தெளிவாகச் சொல்லியிருக்கிறான், வீரதாஸ்தான் தன்னைக் கொன்றதாய்.''

''உன் மரணவாக்கு மூலத்தைக் குப்பைக் கூடையில் போடு. F.I.R. இன்னொன்றை எழுதிக்கொள்.''

''ஆனால் சார்...''

''உடனே போனை வைத்து விட்டு நான் சொல்கிறபடி செய்கிறாயா அல்லது இந்த நிமிஷமே உன்னை ட்ரான்ஸ்ஃபர் செய்ய வைக்கட்டுமா?''

ராணா போனை வைத்து விட்டான்.

வீரதாஸ் சிரித்தான்.

ராணா உள்ளங்கையை மடக்கிக்கொண்டு அவன் தாடையில் ஓங்கி குத்தினான். போனோடு சேர்ந்து வீரதாஸ் கீழே விழுந்தான். அவன் எழுந்துகொள்வதற்

குள் கைகளில் விலங்கை மாட்டி தோளைப் பிடித்து எழுப்பினான்.

★★★

இரவு மூன்று மணி...

வீரதாஸை அரெஸ்ட் செய்து ராணா போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்து வந்த சமயத்தில் அந்த இடத்தில் ஒரே பரபரப்பாக இருந்தது. எம்.எல்.ஏ. நரசிம்மன், டி.எஸ்.பி., போலீசார், மக்கள், எஸ்.ஐ. எல்லோரும் இருந்தார்கள்.

அதற்குள் செய்தி எங்கும் பரவி விட்டது. நள்ளிரவு நேரத்தில் அவ்வளவு பரபரப்பும், சந்தடியும் ஏற்பட்டது அந்த போலீஸ் ஸ்டேஷன் சரித்திரத்தில் அதுதான் முதல் தடவை.

''என்ன தைரியம் உனக்கு? ஹோம் மினிஸ்டர் சொன்ன பிறகும்கூட அரெஸ்ட் செய்திருக்கிறாயே?'' என்றான் நரசிம்மன்.

''மாற்றல் உத்தரவு வரும் வரையில் இங்கே இன்ஸ்பெக்டர் நான்தான்'' என்றான் ராணா.

டி.எஸ்.பி. இருக்கையை விட்டு எழுந்தார். ஏனோ தெரியவில்லை. அவர் முகத்தில் வருத்தம் தென்பட்டது.

''ஐ யாம் சாரி ராணா. உன்னை உடனே டிரான்ஸ்ஃபர் செய்யச் சொல்லி உத்தரவு, வீரதாசை விடாத பட்சத்தில்'' என்றார். அவர் குரலில் இயலாமை தெரிந்தது.

ராணா மூவரையும் பார்த்தான். வீரதாஸ் தலை குனிந்தவாறு கைகளிலிருந்த விலங்கைப் பார்த்துக் கொண்டிருந்தான். குனிந்த முகத்தில் உதடுகள் சிரித்துக் கொண்டிருந்தன.

போனை எடுத்து எக்ஸ்சேஞ்சிற்குச் சொன்னான். ''டில்லி கனெக்ஷன் கொடுங்கள். 242691 லைட்னிங் கால்.''

மூவரும் வியப்படைந்தவர்களாய் பார்த்துக் கொண்டிருக்கையில் ராணா போனில் பேசினான். ''சாரி... பாதி ராத்திரியில் தொந்தரவு செய்வதற்கு. நீங்க சொன்ன மாதிரியே நடந்தது. இங்கே மாநில முதலமைச்சர் தடையாக இருக்கிறார்... ஆமாம், வீரதாஸ் அரெஸ்ட் விஷயத்தில்தான். என்ன? கேசை சி.பி.ஐ.க்கு ட்ரான்ஸ்ஃபர் செய்யப் போறீங்களா? ஒரு நிமிஷம். எங்க டி.எஸ்.பி.யோடு பேசுங்கள்'' என்று போனை டி.எஸ்.பி. யிடம் தர முற்பட்டான். அவர் இன்னும் அதிர்ச்சி யிலிருந்து மீளவில்லை.

''யார் அந்தப் பக்கம்?'' என்று கேட்டார்.

''பிரதமரின் பிரைவேட் செகரெட்ரி சார்'' என்றான் ராணா.

திடீரென்று அந்த அறையில் சலசலப்பு ஏற்பட்டது.

ராணா மேலும் தானே போனில் பேசினான். ''சரிங்க சார். திரும்பவும் ஏதாவது தேவை ஏற்பட்டால் பேசுகிறேன்'' என்று போனை வைத்து விட்டான்.

வீரதாஸை லாக்கப்பில் போட்டு விட்டு, சாவியை டி.எஸ்.பி.க்கு முன்னால் தூக்கிப் போட்டவன் ''நான் செய்ய வேண்டியதை செய்து விட்டேன் சார். இனி உங்கள் விருப்பம். என்னை எங்கே ட்ரான்ஸ்ஃபர் செய்தாலும் இந்த நிமிடமே ரிலீவ் ஆகிப் போய் விடுகிறேன்'' என்றான்.

நரசிம்மனை நோக்கித் திரும்பிய டி.எஸ்.பி. என்ன செய்யச் சொல்றீங்க என்பதுபோல் பார்த்தார். நரசிம்மன்

செல்லுக்குள் இருந்த வீரதாஸைப் பார்த்தான். அந்த இடமெல்லாம் ஒரே இருட்டாக இருந்தது. ஒன்றும் தென்படவில்லை. எல்லாம் குழப்பமாக இருந்தது நரசிம்மனுக்கு. கதை இப்படி திரும்பி விடும் என்று அவன் ஊகித்திருக்கவில்லை. ஹோம் மினிஸ்டருட னாவது காமினியுடனாவது பேச வேண்டும்.

''நாளைக் காலையில் சந்திப்போம்'' என்று பரபரப்புடன் அங்கிருந்து போய் விட்டான்.

போலீஸ் ஸ்டேஷன் முழுவதும் மயான அமைதி பரவியிருந்தது. மூன்று அதிகாரிகளும் வெளியே வந்தார்கள். விடிவதற்கு இன்னும் இரண்டு மணி நேரம் இருந்தது.

குளிர்ந்த காற்று வேகமாக வீசிக்கொண்டிருந்தது. திருமணச் சடங்கோ அந்திமக் கிரியைகளோ முடிவடைந்த பிறகு ஏற்படும் ரிலீஃப்.

''எனக்கு ஆச்சரியமாக இருக்கு ராணா. உனக்கு... உனக்குப் பிரதமரிடம் அவ்வளவு செல்வாக்கு இருக்கிறதா?'' டி.எஸ்.பி. கேட்டார்.

ராணா சிரித்தான். ''அவன் ஐந்து நம்பர்களைச் சுழற்றி விட்டு தமிழக முதலமைச்சரோடு பேசச் சொன்னான் சார். நான் ஏழு நம்பர்களைச் சுழற்றிவிட்டு டில்லி பிரைம் மினிஸ்டர் என்றேன். நான் யாரோடு பேசினேன் என்று எனக்கே தெரியாது. ஏதோ கைக்கு அகப்பட்ட நம்பரைச் சுழற்றினேன். அவ்வளவுதான்.''

மற்ற இருவரும் வாயைப் பிளந்தபடி கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

மேலும் ராணா சொன்னான். ''ஆசிரியர் காலனிக் காரர்கள் வந்தபோது நான் அவர்களுக்கு ஒரே ஒரு யோசனைதான் சொன்னேன் சார். உங்கள் சார்பிலிருந்து நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள் என்று. அசெம்பிளி இருக்கிறது. எதிர்க்கட்சி இருக்கிறது. எல்லாவற்றையும் மீறி பத்திரிகைகள் இருக்கின்றன.''

ராணா தொடர்ந்தான். ''நாளைக் காலை வரையில் வீரதாஸை செல்லுக்குள் வைத்தால்போதும். பத்திரிகை களில் இந்தச் செய்தி வந்துவிடும். என்னிடம் என்ன சார் இருக்கு? நான் இன்னொரு ஊரிலிருந்து இந்த ஊருக்கு வந்தவன். இந்த ஊரிலிருந்து இன்னொரு ஊருக்குப் போய் விடுவேன். அதனால்தான் பிரதமரின் பெயரைச் சொல்லி நரசிம்மனை பயமுறுத்தினேன்'' என்று சிரித்தான்.

இருவரும் வாயடைத்துப்போய் கேட்டுக்கொண்டி ருந்தார்கள்.

டி.எஸ்.பி. அடென்ஷனுக்கு வந்தார். ''ஒரு காலத்தில் நான் எப்படி இருக்கணும்னு நினைத்துக் கொண்டிருந் தேனோ அதேபோல் இருக்கிறாய் ராணா. ஐ யாம் ப்ரௌட் ஆஃப் மை டிபார்ட்மென்ட்'' என்று தொப்பியைக் கழற்றிக் கையில் வைத்துக்கொண்டு ராணாவுக்கு சல்யூட் செய்தார். ராணா வாயிலிருந்து வார்த்தை வராதவன்போல் பார்த்துக் கொண்டிருந்தபோதே அவர் தொடர்ந்தார்.

''நான் இளமையில் இருந்தபோது இவ்வளவு துணிச்சல் இல்லாமல், புத்திசாதுரியம் இல்லாமல் குடிகாரனாகவும் லஞ்சம் வாங்குவதில் கவனத்தைச் செலுத்திக் கொண்டும் இருந்தேன். இப்பொழுது...

இப்பொழுது உன்னைப் பார்த்து உண்மையிலேயே நான் பெருமைப்படுகிறேன்.'' அவர் கண்களில் ஈரம் பளபளத்தது.

கிழக்கேயிருந்து படர்ந்த ஒளிக்கீற்றுகள் அந்த மூன்று ஆபீசர்களின் மீதும் விழுந்தன.

★★★

அவர்கள் எதிர்பார்த்ததுபோல் மறுநாள் வீரதாஸ் லாக்கப்பிலிருந்து ரிலீஸ் ஆகவில்லை. ராணாவுக்கு மாற்றல் உத்தரவு வரவில்லை.

மாலைப் பத்திரிகைகளில் மட்டும் இந்தச் செய்தி வெளியாயிற்று. அதன் மூலம் பரபரப்பு ஏற்பட்டது.

அதிகாலையிலேயே செய்தி ஊர் முழுவதும் பரவி விட்டது. எம்.பி. புலிராஜனுக்குத் தான் கொள்ளை யடித்தவை போலி நகைகள் என்று இரண்டு நாட்களுக்கு முன்பே தெரிந்துவிட்டது. திருடனுக்குத் தேள் கொட்டி னாற்போல் ஆகிவிட்டது. இப்பொழுது வீரதாஸ் அரெஸ்ட் ஆனதும் உண்மை விஷயம் வெளிப்பட்டு விட்டது. நகைகள் கிடைக்க வில்லையே என்ற வருத்தத்தை விட வீரதாஸின் அரெஸ்டும், நரசிம்மன் அடித்த கொள்ளையும்தான் அவனுக்குச் சந்தோஷத்தை ஏற்படுத்தின.

அதற்குள் ராணாவை ட்ரான்ஸ்ஃபர் செய்து விட்டு, மரண வாக்குமூலத்தை மாயமாக்கிவிட முயற்சிகள் நடந்து கொண்டிருப்பதாக செய்தி வந்தது. டில்லிக்குப் போன் செய்தான். பிரதமரிடம் நேராக இந்தக் கேசு விஷயத்தைச் சொன்னான். தமிழக அரசிடம் மத்திய அரசுக்கு ஒரு தனிப்பட்ட ஆர்வம் இருந்து வந்தது. மத்திய

அரசாங்கத்திலிருந்த கட்சிக்கு மாநில அரசாங்கத்திலிருந்த கட்சி ஒரு தலைவலியாக மாறிவிட்டது.

இப்பொழுது இதை ஒரு நல்ல வாய்ப்பாக பாவித்தார் பிரதமர். கோவில் கொள்ளையில் எம்.எல்.ஏ.வுக்குப் பங்கு... ரௌடியைக் கைது செய்யப் போனதால் ஹோம் மினிஸ்டர் இன்ஸ்பெக்டரை ட்ரான்ஸ்ஃபர் செய்ய வைத்தது... இந்த இரண்டும்போதும், தேர்தலுக்கு முன்னால் மாநிலத்தில் உள்ள ஆளும் கட்சியின் மீது களங்கத்தை ஏற்படுத்துவதற்கு.

நிமிஷ நேரத்தில் ஆணைகள் பறந்தன. மத்திய அரசின் ஆளும் கட்சித் தலைவர்கள் அந்த ஊருக்கு வந்தார்கள்.

மாநில ஹோம் மினிஸ்டரை எதிர்த்து, போலீஸ் ஸ்டேஷனுக்கு முன்னால் மத்திய அரசு டென்ட் போட்டது.

ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரை சாக்காக வைத்துக் கொண்டு மத்திய, மாநில யுத்தம் தொடங்கி விட்டது.

எதிரிகளை முட்டாளாக்க ராணா போனில் எந்த நாடகம் போட்டானோ அது உண்மையாகி விட்டது.

''நீ திருடன்'' என்றால் ''நீ திருடன்'' என்று முடிவெடுப் பதற்காக இரு சார்பினரும் திருடர்களின் ஊரான ஸ்டூவர்ட் புரத்தில் தம் பலத்தைத் திரட்டிக் கொண்டார்கள்.

11

"நாளைக்கு நம் ஊரில் பந்த் நடத்தணும். இரண்டு நாட்களுக்குப் பிறகு தமிழ்நாடு முழுவதுமே பந்த் நடத்த நம் கட்சி அழைப்பு விடுக்கும். இதுதான் தற்போதைய நிகழ்ச்சி நிரல்'' என்றார் ஹோம் மினிஸ்டர்.

நரசிம்மன் தலையை அசைத்தான்.

''வீரதாஸ் கடந்த காலத்தில் செய்த ஏதாவது நல்ல காரியம் இருந்தால் வெளிப்படுத்துங்கள்.''

நரசிம்மன் கொஞ்சம் யோசித்துவிட்டு, ''அவன் ஒரு நல்ல காரியமும் செய்ததாக நினைவு இல்லை'' என்றான்.

''வெயில் நாட்களில் தண்ணீர் பந்தல் அமைத்துத் தருவது, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்

களுக்காக நிதி வசூலிப்பது வரையிலும்... ஏதாவது ஒன்று இல்லாமல் போகாது.''

நரசிம்மன் ஏதோ நினைவிற்கு வந்து விட்டாற்போல் ''ஞாபகம் வந்து விட்டது. போன வருஷம் சீராலாவில் நடந்த தீ விபத்திற்காக இந்த ஜில்லாவில் சந்தா வசூலித்தோம்'' என்றான். போன வருஷம் நூறு குடிசைகள் எரிந்து போனதில் நிறைய பொருள் நஷ்டம் ஏற்பட்டது. அந்தச் சமயத்தில் வீரதாஸ் தானே தொண்டர்களை அனுப்பி அந்த ஜில்லாவில் சந்தாக்களை வசூல் செய்ய வைத்தான். கொஞ்சம் பெயர் பெற்ற வியாபாரிகள் யாராவது பத்தாயிரத்திற்குக் குறைவாகத் தந்தால் தொண்டர்கள் அந்தச் சந்தாவை பெற்றுக் கொள்ள மறுத்தார்கள். மொத்தம் பத்து லட்சம் வரையிலும் வசூலானதாகக் கேள்வி. ஆனால் தீ விபத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்குப் போய்ச்சேரவில்லை. அதெல்லாம் வேறு விஷயம்.

அன்று மாலையிலேயே ஊர் முழுவதும் போஸ்டர்கள் ஒட்டப்பட்டன. ஆயிரக்கணக்கான கரப்பத்திரங்கள் வினியோகம் செய்யப்பட்டன. ''போலீஸ் அராஜகம் ஒழிய வேண்டும்'', ''ஏழைகளின் பங்காளன் வீரதாஸை அக்கிரமமாக சிறையிட்டார்கள்'' போன்ற தலைப்பில் கரப்பத்திரங்கள் இரவோடு இரவாக அச்சிடப்பட்டன.

மறுநாள் காலையிலேயே ஊரில் பந்த் தொடங்கி விட்டது.

ஆனால் இந்த குருக்ஷேத்திர போராட்டத்தில் அடுத்த கட்சியும் சும்மாயிருக்கவில்லை. மத்திய அரசு சார்பிலிருந்து சுற்றுப்பயணம் வந்த கட்சியின் செயலாளர் புலிராஜனைச் சந்தித்து திட்டங்களைப் போட்டார்.

''கோவிலில் புனிதமான நகைகள் கொள்ளையடிக்கப் பட்டுள்ளது. இதற்குக் காரணம் எம்.எல்.ஏ. நரசிம்மன்.

ராமஸ்வாமி என்ற அப்பாவியை அநியாயமாக தூக்கில் ஏற்றினார்கள்.

ராமாச்சாரி சாகும் முன் தன்னைக் கொன்றது வீரதாஸ் என்று சொன்னதை வைத்துக் கொண்டு, அந்த வாக்கு மூலத்தின் ஆதாரமாக வீரதாசை அரெஸ்ட் செய்தார்கள். இப்பொழுது மாநிலத்தின் ஆளும் கட்சி அந்த வீரதாசை விடுவிப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறது. மகாஜனங்களே, இப்படிப்பட்ட கட்சியை அதிகாரத்தில் விட்டு வைக்கப் போகிறீர்களா? யோசித்துப் பாருங்கள்.''

இந்த விதமாக தொடர்ந்தது அவர்களின் பிரசாரம். மத்திய அரசில் அதிகாரத்தில் இருந்த கட்சி இந்த விளைவு களைக் கண்டு சந்தோஷத்தில் ஆழ்ந்து விட்டது. இந்தக் கேசு மக்களுக்கிடையே ஆழ்ந்து வேரூன்றி விட்டது. முதலமைச்சர் தளர்ந்து போய் விடுவார் என்றும், சிலந்தி வலையில் சிக்கிக் கொண்டாற்போல் ஆகிவிடுவார் என்றும் மத்திய அரசுக் கட்சிக்குத் தெரியும்.

ராணாவுக்கு இதெல்லாம் ஆச்சரியமாகவும், அருவருப் பாகவும் இருந்தது. அப்பாவியான தன் தந்தை தூக்கி லேற்றப்பட்டு விட்டார். எந்த சலசலப்பும் ஏற்பட வில்லை. கோவில் நகைகள் களவு போனபோது வானம் இடிந்து விழுந்து விடவும் இல்லை. வீரதாஸ் என்ற ஒரு கொலைகாரனை சாட்சியாதாரங்களுடன் கைது செய்தால் அதற்கு இவ்வளவு எதிர்ப்பு போராட்டங்கள்.

காலை ஏழு மணிக்கு மாநிலக் கட்சியைச் சேர்ந்தவர்கள் ரிக்ஷாக்களிலும், சைக்கிள்களிலும் ஏறிக்கொண்டு

பிரசாரம் செய்ய புறப்பட்டு விட்டார்கள். தொண்டர்கள் ஜீப்புகளில் கடைத் தெருவில் சுற்றி வந்து கடைகளை மூடச் செய்தார்கள். ஆனால் அது பத்து நிமிஷங்களுக்குத் தான் நீடித்தது. அதற்குள் அடுத்தக் கட்சியினர் வந்து திரும்பவும் கடைகளைத் திறக்கச் செய்தார்கள். இவர்கள் அந்தப் பக்கமாகப் போனதும் அவர்கள் திரும்பவும் வந்து மூடப் செய்தார்கள்.

''யாரடா உங்களை மூடச் சொன்னது?'' என்று அவர்கள் வந்து அடித்தார்கள். ''எவன்டா திறக்கச் சொன்னது?'' என்று இவர்கள் வந்து உதைத்தார்கள்.

இவ்வாறு மாலை வரையிலும் தொடர்ந்தது. எந்தக் கட்சி விவகாரத்திலும் தலையிட வேண்டாம் என்று போலீசாருக்கு மேலிடத்திலிருந்து ஆணைகள் வந்தன. அவர்கள் பார்வையாளர்களாக இருந்து விட்டார்கள்.

மாலையில் மாநில அரசை சப்போர்ட் செய்யும் நாளேடுகள் ''கடையடைப்பு முழு வெற்றி'' என்று பிரசுரித்தன. மத்திய அரசை ஆதரிக்கும் நாளேடுகள் ''பந்த் தோல்வி'' என்று வெளியிட்டது. மொத்தத்தில் பந்த் பாதி வெற்றி பாதி தோல்வி என்று மக்கள் நினைத்தார்கள். கொலை எதுவும் நடக்காமல் போனதற்கு நிம்மதியாக மூச்சு விட்டுக் கொண்டார்கள்.

முதலமைச்சருக்கு என்ன செய்வதென்று தெரிய வில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் மட்டும் வீரதாசுக்கு உதவி செய்யாவிட்டால் நாளைக்கு அவன் ஜெயிலிலிருந்து வெளியே வந்த பிறகு, தன்னுடன் இதற்கு முன்னால் இருந்தாற்போல் நட்புடன் இருக்க மாட்டான். சுமார் நூறு எம்.எல்.ஏ.க்கள் அவன் சுவாதீனத்தில் இருக்கிறார்கள்.

அவன் பிளேட்டை மாற்றினால் தன் கட்சி பலவீன மடைந்து விடும். இந்த இன்ஸ்பெக்டரை எப்படி வழிக் குக் கொண்டு வருவது? வீரதாசை மதிப்பேர்டு எப்படி வெளியே கொண்டு வருவது? இந்தச் சூழ்நிலையில் ராணா மீது எந்த நடவடிக்கை எடுத்தாலும் சரி, கஷ்டம் தான். முதலமைச்சர் ஹோம் மினிஸ்டருடன் பேச்சு வார்த்தை நடத்தினார். அவராலும் எந்த விதமான பரிகாரமும் சொல்ல முடியவில்லை. ஹோம் மினிஸ்டர் வீட்டுக்குத் திரும்பி வந்தபோது மனைவி டில்லிக்குப் போயிருப்பதாகத் தெரிந்தது.

அவ்வளவு அவசரமாகத் தன்னிடம் கூட சொல்லிக் கொள்ளாமல் காமினி டில்லிக்கு ஏன் போனாள் என்று நாயுடுவுக்குப் புரியவில்லை.

அரசியலில் சரியான முடிவை சரியான நேரத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். அரசியல் சதுரங்கத்தில் உடனுக்குடன் திட்டங்களை தீட்ட வல்லவனே இறுதியில் வெற்றியடைவான். அப்படிப்பட்ட திறமை காமினியிடம் இருந்தது.

தன்னை முதலமைச்சராக்குவதற்காகவே காமினி டில்லிக்குப் போயிருக்கிறாள் என்று கனவில்கூட அவன் எதிர்பார்க்கவில்லை.

★★★

''எதுக்கு அவ்வளவு அவசரமாக டில்லிக்குப் போய்விட்டு வந்தாய்?' அரவிந்த் சௌரஸியா கேட்டான்.

காமினி சிரித்தாள். ''இந்த நேரத்திலா அப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்பாங்க?'' என்றாள் சிரித்துக் கொண்டே.

விளக்கு வெளிச்சம் ஆடை குலைந்த அவள் உடம்பில் பட்டு மின்னிக் கொண்டிருந்தது. அவள் கை அவன் முதுகின் கீழே தாழ்ந்து மெல்ல முன்னுக்கு வந்து கொண்டிருந்தது. அங்கு மென்மையாய் நகர்ந்து தாளலயத்துடன் செயல்பட்டு அவனை தூண்டிவிட முயன்று கொண்டிருந்தது. அவளுக்கு மட்டுமே அது கை வந்த கலை.

ஆனாலும் சௌரஸியா அத்துடன் ஒன்றவில்லை.

''மாநிலத்தின் முதலமைச்சரை மாற்றுவதற்கு முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன போலிருக்கு'' என்றான்.

அவள் கலவரத்தை அடக்கிக் கொண்டு ''அதெல்லாம் ஒன்றுமில்லை'' என்றாள்.

''எனக்குத் தெரியாத விஷயமே கிடையாது காமினி. தெரியாது என்று நீ நினைத்தால் அது தவறு'' என்றான் சுருக்கமாக. ''ராணா விஷயம்கூட எனக்குத் தெரியும்.''

''எந்த விஷயம்?''

''அவன் ரொம்ப நல்ல இன்ஸ்பெக்டர் என்று.'' நல்ல என்ற வார்த்தையை அழுத்திச் சொன்னான். அவளுக்குப் புரியவில்லை.

''ஆனாலும் அந்த விஷயமெல்லாம் என் சம்பந்தப் பட்டவை இல்லை. உன் கணவனை நீ முதலமைச்ச

ராக்கினால் எனக்கென்ன வந்தது? அல்லது பிரதமராகத் தான் ஆக்கினால்தான் என்ன?'' அவள் மீது படர்ந்து கொண்டே சொன்னான்.

அவள் யோசனைகள் மட்டும் வேறிடத்தில் இருந்தன.

வீரதாஸ் அரெஸ்ட் ஆனதை சாக்காக வைத்துக் கொண்டு தன் கணவன் கட்சி மாறப் போகிறான் என்று சௌரஸியாவுக்கு எப்படித் தெரிந்தது?

★★★

''என்ன வேண்டும்?'' ராணா கேட்டான்.

''வீரதாசுக்காக ஜாமீன் கொண்டு வந்திருக்கிறேன்'' என்றான் அந்த இளம் லாயர். தொடர்ந்து அவன் ''குற்றவாளியை இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள் மேஜிஸ்ட்ரேட்டுக்கு முன்னால் ஆஜராக்கணும். அந்த விஷயமாக உங்க மேலதிகாரிகளுக்குக் கம்பிளைண்ட் தரப்போகிறேன்'' என்று ஜாமீன் காகிதங்களைத் தந்தான்.

ராணா செய்வதறியாமல் அவனைப் பார்த்தான்.

ஒரு தடவை வீரதாஸ் வெளியே வந்து விட்டானானால் அதற்குப் பிறகு இந்த கேசில் அவனுக்குத் தண்டனை கிடைப்பது என்பது பகல்கனவாகி விடும். கேசு கோர்ட் வரைக்கும் கூடப் போகாது.

என்ன செய்யலாம்?

அவன் ஜாமீன் காகிதங்களைப் பார்த்தான். ''இவை ராமாச்சாரி கொலை கேசு சம்பந்தப்பட்டவை. நான் வீரதாஸை அரெஸ்ட் செய்தது இரண்டு வருடங்களுக்கு முன்னால் நடந்த திருட்டுக் கேசில்'' என்றான்.

ராணாவுக்கு லீகல் பாயிண்டுகள் தெரியாது. வேடிக்கை என்னவென்றால் அந்த லாயருக்குக்கூட அது தெரியாது.

''அதற்குக்கூட ஒரு மணி நேரத்தில் ஜாமீன் கொண்டு வந்து விடுகிறேன்'' என்று நாற்காலியை விட்டு எழுந்து கொண்டான்.

சரியாய் அதே நேரத்தில் நரசிம்மன் உள்ளே நுழைந்தான். ''என்ன நடந்தது?'' என்று கேட்டான்.

ராணா எரிச்சலுடன் ''முதலில் பந்த் நடத்தினீங்க. அது தோல்வியடைந்து விட்டதால் இப்போ நீதி மன்றத்தை சரணடைந்திருக்கீங்க'' என்றான்.

நரசிம்மன் சிரித்தான். ''இனி ''பந்த்''தும் இல்லை. நீதி மன்றமும் இல்லை. கேசுதான் மூடப்பட்டு விடப் போகிறதே?''

''கேசு எப்படி மூடப்படும்?'' ராணா கேட்டான்.

''இறக்கும் தருவாயில் ராமாச்சாரி கொடுத்த டெத் ஸ்டேட்மென்டை... அதான் மரண வாக்குமூலத்தை... நீ கிழித்தெறிந்து விட்டால்?''

''நான் கிழித்தெறிவேன் என்று எப்படி நினைத்தீங்க?''

நரசிம்மன் சிரித்துக் கொண்டே இருந்தான். ராணாவின் மனம் தீங்கை எடை போட்டது. குழப்பத்துடன் நரசிம்மனைப் பார்த்தான்.

நரசிம்மன் மேலும் சிரித்தான். 'அவ்வளவு பெரிய பிரச்னைக்கு எத்தனை சிறிய பரிகாரம் பார்த்தாயா?' என்பதுபோல் இருந்தது அந்தச் சிரிப்பு. ''போலீஸ்காரர் கள் விசாரணை என்ற பெயரில் வருஷக்கணக்காக

குற்றவாளிகளை லாக்கப்பில் போட்டு வைத்திருப்பாங்க. அவர்களை வெளியே கொண்டு வருவதற்காக குற்ற வாளிக்கு வேண்டியவர்கள் அரசாங்க அதிகாரியை கிட்நாப் செய்து குற்றவாளியை விடுதலை செய்யச் சொல்லி டிமாண்ட் செய்வார்கள். வேறு வழியில்லாமல் நீங்கள் லாக்கப்பில் இருப்பவனை விட்டு விடுவீங்க. இதெல்லாம் எப்பொழுதும் நடக்கிறதுதானே? ஆனால் இப்போ இங்கே நடந்த மாறுதல் என்னவென்றால், அரசாங்க அதிகாரிக்குப் பதில் உன் அலக்நந்தாவை எங்களிடம் பணயமாக வைத்துக் கொண்டிருக்கிறோம். அதுதான் வித்தியாசம்.''

ராணா வாயடைத்துப் போனவனாகப் பார்த்தான்.

நரசிம்மனின் முகத்திலிருந்த சிரிப்பு மாயமாயிற்று. ''சாகும்போது ராமாச்சாரி கொடுத்த வாக்குமூலத்தை எங்களிடம் கொடுத்து விட்டால் அந்தப் பெண்ணை விட்டு விடுகிறோம்'' என்றான்.

ராணா இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. இந்த நீதிமன்றங்கள், சாட்சியங்கள் அத்தனைக்கும் அப்பாற் பட்டது தாதாகிரி என்று அவன் அறிவான். ஆனால் அந்த தீயவிளைவை இன்றுதான் முதல் முதலாகப் பார்க்கிறான். அரெஸ்ட் செய்த இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள் ஜாமீன் ஒருத்தனும், மிரட்டல் ஒருத்தனுமாக கொண்டு வந்து விட்டார்கள். இனி நீதி எப்படி நிலைக்கும்?

முன்பே அவன் ஜாக்கிரதையாகத்தான் இருந்து வந்தான். வீரதாசை அரெஸ்ட் செய்த இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள் மேஜிஸ்ட்ரேட்டுக்கு முன்னால் ஆஜராக்கி, பதினான்கு நாட்கள் போலீஸ் ஸ்டேஷனில்

வைத்திருப்பதற்கு அனுமதியைப் பெற்றுக் கொண்டான். சட்ட ரீதியாக அதற்கு மேல் நீடிப்பது சாத்தியமில்லை. வீரதாசைக் கூடியவரையில் ரிமாண்டில் வைத்திருக்க வேண்டும் என்பதுதான் ராணாவின் முயற்சி. ஆனால் அதற்கு நாலாப் பக்கங்களிலிருந்து எதிர்ப்பு வரும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

நரசிம்மன் சொன்னான். ''எனக்கு உன் முடிவு பற்றி உடனே தெரிய வேண்டும்.''

''இல்லாவிட்டால்?''

''அதான் சொல்லி விட்டேனே அலக்நந்தா விஷயத்தை. இன்னும் ஐந்து நிமிடத்திற்கெல்லாம் அங்கே உயிர் போய் விடும்.''

''இதை நான் நம்பணுமா?''

''நம்பாவிட்டால் இன்னும் ஒரு மணி நேரம் காத்திருந்து போஸ்ட் மார்டம் செய்து கொள்.''

''மை காட்!'' என்று நாற்காலியை விட்டு எழுந்து ''ராணா பிரதாப்... ராணா...'' என்று உரத்தக் குரலில் கத்தினான்.

''என்ன இது? உன் பெயரை நீயே சொல்கிறாயே?''

''ஓ... அது என் பெயர் இல்லையா? பரபரப்பில் மறந்தே போய் விட்டேன். சாவிக் கொத்து... செல்லின் சாவிக் கொத்து எங்கே? எஸ்.ஐ. எங்கே? சாவிக் கொத்தை எடுத்து வீரதாசை விடுதலை செய்யச் சொல்லு, உடனே. நேரம் அதிகம் இல்லை'' பதற்றத்தில் பிதற்றத் தொடங்கினான்.

இளம் லாயர் உற்சாகத்துடன் நரசிம்மனைப் பார்த்தான். ''அனாவசியமாக சட்டம் படித்து விட்டேன். எந்த தாதாவோ, எம்.எல்.ஏ.வோ ஆகியிருந்தால் நன்றாக இருந்திருக்குமே'' என்று நினைத்திருப்பான் போலும். நரசிம்மன் தந்த கெடுவுக்கு இன்னும் நான்கு நிமிஷங் கள்தான் எஞ்சியிருந்தன.

''அந்த வாக்கு மூலத்தைத் தா'' என்றான் நரசிம்மன்.

''உங்கள் கையில் கொடுக்கமாட்டேன். அலக்நந்தா க்ஷேமமாக இருக்கிறாள் என்று கண்ணால் பார்த்த பிறகுதான் தருவேன்.'' கச்சிதமாகச் சொன்னான்.

''வீரதாஸ் விடுதலையாகாமல் அந்தப் பெண்ணை எங்க ஆட்கள் விடமாட்டார்கள்.''

''வீரதாஸை உடனே விடுதலை செய்து விடுகிறேன்.'' எரிச்சலுடன் சொன்னான் ராணா. எஸ்.ஐ.யைப் பார்த்து, ''என்ன? சாவி கிடைத்ததா?'' என்று கத்தினான்.

கழி பயந்து போய் ''தேடிக் கொண்டிருக்கிறோம் சார்'' என்றான்.

''நான்சென்ஸ். என்ன போலீஸ் ஸ்டேஷன் இது? செல்லில் இருக்கும் ஆளை வெளியே விடணும் என்றால் சாவியைக் காணவில்லை. ஐயோ... இன்னும் இரண்டே நிமிஷங்கள்தானே டயம் இருக்கு? எப்படி?'' என்று நரசிம்மனை நோக்கித் திரும்பி ''உடனே உங்க ஆட்களுக்குப் போன் செய்யுங்கள். அந்தப் பெண்ணை ஒன்றும் செய்ய வேண்டாம்னு சொல்லுங்கள்'' என்றான்.

''வீரதாஸ் வெளியே வந்து விட்டால் ஒன்றும் செய்ய மாட்டாங்க.''

அதற்குள் பிரம்மானந்தம் பாலகிருஷ்ணன் போலீஸ் ஸ்டேஷனின் பின் பக்கத்திலிருந்து ஒரு கடப்பாரையைக் கொண்டு வந்தான்.

ராணா நரசிம்மனிடம் ''நீங்க ஒன்றும் கவலைப்படா தீங்க. எங்க ஜெயிலில் சாவி கிடைக்காவிட்டால் இப்படி கடப்பாரையால் பிளப்பது வழக்கம்தான். அதற்கு தடை உத்தரவு கிடையாது'' என்று சொல்லிக் கொண்டே டிராயரைத் திறந்து அதிலிருந்த கவரை எடுத்து ஜேபிக்குள் வைத்துக் கொண்டான். ''இந்தக் கவரை உங்க ஆட்களிடம் ஒப்படைத்து விட்டு அலக்நந்தாவை அழைத்துப் போகி றேன். உங்க ஆட்களிடம் சொல்லுங்கள். அவங்களை எந்த ரகளையும் செய்ய வேண்டாம்னுகூட சொல்லுங்கள். அடேய் பாலகிருஷ்ணா! ஏன் அப்படிப் பார்க்கிறாய்? சீக்கிரமாக அந்த வீரதாஸை வெளியே கொண்டு வா. அங்கே ஒருத்தியின் உயிர் போய்க் கொண்டிருக்கிறது. நரசிம்மன்! இன்னும் ஏன் அப்படியே நின்று கொண்டிருக்கீங்க? உங்க ஆட்களிடம் சொல்லுங்கள்.''

அவன் பதற்றத்தைப் பார்த்தபோது நரசிம்மனுக்குச் சிரிப்பு வந்தது.

''காதலுக்கு கண்ணில்லை'' என்று சிரித்துக் கொண்டான். வெளியே காரில் இருந்த தன் ஆட்களிடம் சைகைக் காட்டி விட்டு, ''போ'' என்றான் ராணாவிடம். ராணா போனதுமே நரசிம்மன் கடப்பாரையால் செல்லின் பூட்டை ஓங்கி ஒரு அடி அடித்தான். அது கழண்டு விழுந்தது. உள்ளேயிருந்த வீரதாசுக்கு வெளியே என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று தெரியாது. அவன் வெளியே வந்ததும் ''என்ன நடந்தது?'' என்று கேட்டான்.

''போகும்போது சொல்கிறேன்.'' நரசிம்மன் முகத்தில் வெற்றிப் பெருமிதத்தோடு கூடிய சிரிப்பு நெளிந்தது. இருவரும் இன்னொரு காரில் எம்.எல்.ஏ.வின் வீட்டை நோக்கி புறப்பட்டார்கள்.

ராணா நரசிம்மனின் ஆட்களோடு சேர்ந்து அவனுடைய ரைஸ் மில் இருக்குமிடத்திற்குப் போய்ச் சேர்ந்தான். அங்கே மஸ்தான் நின்று கொண்டிருந்தான். ''எங்கே? காகிதம் கொண்டு வந்தாயா?'' என்று கேட்டான். ராணா மறு பேச்சுப் பேசாமல் ஜேபியிலிருந்து கவரை எடுத்துத் தந்தான். மஸ்தான் அதற்குள்ளே இருந்த காகிதத்தை வெளியே எடுத்தான். டைப் செய்யப்பட்டி ருந்த அந்தக் காகிதத்தைத் துண்டுகளாக கிழித்தெறிந்து விட்டு ராணாவிடம், ''சரி, நீ போகலாம்'' என்றான்.

''அப்போ அலக்நந்தா?''

''அலக்நந்தா எங்களிடம் இல்லை. அவளை நாங்கள் பார்க்கக்கூட இல்லை.''

''இது ரொம்ப அநியாயம்'' என்றான் ராணா.

மஸ்தான் சிரித்தான். ''நீ இன்னும் நிறைய புத்திசாலித் தனத்தோடு நடந்து கொள்ளணும் பாய். ஆனாலும் இப்போ என்ன நடந்து விட்டது? நாங்க அந்தப் பெண்ணைக் கடத்தினோம் என்று நினைத்துக் கொள். இப்போ திரும்பி விட்டு விட்டோம் என்று எண்ணிக் கொள். கடைசியில் அதுதானே நடந்தது? வீட்டுக்குப் போ. அந்தப் பெண் அங்கேயே க்ஷேமமாக இருப்பாள்'' என்றான்.

ராணா வீட்டிற்குப் போகவில்லை. அலக்நந்தாவைப் பற்றி அவனுக்குக் கவலையில்லை. அவளுக்கு ஏதாவது ஆகி விடுமோ என்ற பயத்தை ஒரு பக்கமாக ஒதுக்கினான்.

வீரதாஸ் போன்ற குற்றவாளியை ஜெயிலில் வைப்பதற்காக அலக்நந்தாவை விடக்கூட, அவன் தயாராகத்தான் இருந்தான்.

ராணா எம்.எல்.ஏ. நரசிம்மன் வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தபோது எம்.எல்.ஏ.வும் இளம் லாயரும் சீட்டாடிக் கொண்டிருந்தார்கள். அதற்குள் வீரதாஸ் விடுதலையான விஷயம் தெரிந்து அந்த இடத்தில் கும்பல் கூடிவிட்டது. எம்.எல்.ஏ. நரசிம்மன் தலைகால் புரியாமல் ஜோக்கடித்துக் கொண்டிருந்தான்.

ராணா வந்ததைப் பார்த்துவிட்டு உல்லாசமாக சிரித்துக் கொண்டே ''வா... ராணா. உன் காதலி க்ஷேமமாகத்தான் இருப்பாள் என்று நினைக்கிறேன். நாங்க ஏதோ விளையாட்டுக்கு தந்திரம் செய்தோம். எல்லாம் சுபம்தானே?'' என்றான்.

''எனக்குச் சுபமான முடிவுதான்.''

ஸ்ட்ரைக்கரால் காயை அடிக்கப் போன வீரதாஸ் நிமிர்ந்தான்.

''அப்படி என்றால்?'' நரசிம்மன் சந்தேகத்தோடு கேட்டான்.

''ஜெயில் பூட்டை உடைத்து விட்டு வெளியே வந்ததற்காக வீரதாசுக்கு "நான்-பெயிலபில்" வாரண்ட் கொண்டு வந்திருக்கிறேன்.''

திடீரென்று அந்த இடத்தில் ஊசி விழுந்தாலும் கேட்கும் அளவுக்கு நிசப்தம் ஏற்பட்டது.

இளம் லாயர் எழுந்து நின்று ''அண்டர் செக்ஷன்'' என்று ஏதோ சொல்லப்போனவன் ராணா தீட்சண்யமாக பார்த்ததும் நிறுத்திக் கொண்டான்.

''இது அநியாயம்.'' கத்தினான் நரசிம்மன். ''சாவிக் கொத்தை தொலைத்தது நீ. செல்லை உடைத் தெறிந்து...''

அவன் வார்த்தைகளை இடைமறித்து விட்டு ''செல் பூட்டை உடைக்கும்போது நான் அங்கே இல்லை'' என்றான் ராணா. ''எங்க போலீஸ்காரர்கள் என்னவோ கடப்பாரை மேல் உங்கள் விரல் அடையாளங்கள் இருக்குன்னு சொல்றாங்க. அது உண்மையாக இருந்தால் வீரதாசுடன் சேர்த்து உங்களையும் அரெஸ்ட் செய்யணும். சொல்லுங்கள், அவனுக்குத் துணையாக இருப்பதற்காக நீங்களும் வரீங்களா? அவனை அழைத்து போகச் சொல்கிறீங்களா?''

வேண்டுமென்றே 'அவன்' என்ற சொல்லை அழுத்தி உச்சரித்தான். வீரதாசின் முகம் சிவந்தது. எம்.எல்.ஏ. நரசிம்மனின் கன்னத்தில் ஓங்கி அறைவது போன்ற வேகத்துடன் வந்து அவன் காலரைப் பிடித்துக் கொண்டு கெட்ட வார்த்தையால் திட்டினான்.

''செல்லின் சாவியைக் காணவில்லை என்று சொன்னதுமே பூட்டை உடைத்தெறிந்து விடுவதா?''

எம்.எல்.ஏ. நரசிம்மன் பதில் சொல்லவில்லை. நான் உடைத்துக் கொண்டிருந்ததை நீயும்தானே பார்த்தாய்? என்று திருப்பிக் கேட்டிருக்கலாம். அவ்வளவு தைரியம் இல்லை. ஒரு குண்டர் தலைவன் எம்.எல்.ஏ.வைக் கெட்ட வார்த்தைகளால் எல்லோருக்கும் முன்னால் திட்டினாலும் கேட்டுக் கொண்டிருக்க வேண்டிய ஜனநாயகம் இது. திருப்பிக் கேட்டு விட முடியுமா அவனால்?

அதுவரை பார்வையாளனாக நின்று கொண்டிருந்த ராணா ''வா'' என்றான்.

''மரண வாக்குமூலத்தை தான் எங்களிடம் தந்து விட்டாயே? இன்னும் கேசு எதற்கு?'' வீரதாஸ் கேட்டான்.

''போலீஸ் ஸ்டேஷனிலிருந்து கவரை ஜேபியில் வைத்துக் கொண்டு நான் புறப்பட்டது உண்மைதான். அதை வாங்கிக் கொண்டு மஸ்தான் ''அலக்நந்தாவை கிட்நாப் செய்ததாக சொன்னது வெறும் நாடகம். நீ இன்னும் புத்திசாலித்தனத்தோடு நடந்து கொள்ளணு பாய்'' என்று சொன்னான். ஆனால் அந்தச் சந்தோஷத்தில் நான் எந்த காகிதத்தை கொடுத்தேன் என்றுகூட கவனிக்கவில்லை. போலீஸ் ஸ்டேஷனும், அதன் சுற்றுப்புறமும் சுத்தமாக இருக்க வேண்டும் என்ற விஷயமாக எங்களுக்கு வந்த சர்க்குலர் காப்பி அது. ராமாச்சாரியின் மரண வாக்குமூலம் அவன் கையொப்பத்துடன் இருக்கும் என்றுகூடக் கண்டுகொள்ளாத முட்டாள் அசிஸ்டெண்ட் மஸ்தான். போலீஸ் ஸ்டேஷனிலேயே அதைப் பரிசீலித்திருக்க வேண்டும் என்ற அறிவுகூட இல்லாத உன் இன்னொரு கையாள் எம்.எல்.ஏ. நரசிம்மன். வா... வீரதாஸ்! கொலை கேசில் உனக்கு ஜாமீன் கிடைத்தாலும் லாக்கப் ரூம் பூட்டை உடைத் தெறிந்த கேசில் மட்டும் அது கிடைக்காது. நாடே எதிர்த்து வந்தாலும் சரி, உன்னோடு போராடித் தீருவேன்.''

ராணாவின் வார்த்தைகளை முழுவதுமாக கேட்டுக் கொள்ளவில்லை வீரதாஸ். தன்னைச் சுற்றிலும் எப்படி வலை இறுக்கமாகப் பின்னிக் கொண்டு விட்டது என்றறிந்தான். பார்ப்பதற்கும், கேட்பதற்கும் ரொம்ப அற்பமாக தோன்றும் பாயிண்ட் அது. ஆனால் கவனமாக பின்னப்பட்ட வலை அது. எம்.எல்.ஏ. நரசிம்மன் மட்டும்

எல்லாம் தெரிந்தவன் போல் இப்படி பாழும் திட்டம் மட்டும் போட்டிருக்காவிட்டால், தான் இதற்குள் ஜாமீனில் வெளியே வந்திருப்பான்.

இங்கே இந்தச் சம்பவம் நடந்து கொண்டிருந்த அதே சமயத்தில் டில்லியில் புலிராஜன் பிரதமருடன் பேசிக் கொண்டிருந்தான்.

வீரதாஸ் விவகாரத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டு தமிழகத்தில் ஆளும் கட்சியை எவ்வாறு குழி தோண்டிப் புதைப்பது என்று யோசித்துக் கொண்டிருந்தார்கள் அவர்கள்.

இப்படிப்பட்ட விஷயங்களில் தான் நேராக பங்கெடுத்துக் கொள்வதை விரும்பாத பிரதமர், கொஞ்ச நேரம் பேசி விட்டு அங்கிருந்து போய்விட்டார். மற்றதை மத்திய அரசில் அதிகாரத்தில் இருந்த கட்சித் தலைவர் தொடர்ந்தார்.

புலிராஜன் சந்தோஷத்தால் தலைகால் புரியாமல் திக்குமுக்காடிக் கொண்டிருந்தான்.

வீரதாஸ் அரெஸ்ட் ஆனது மாநில கட்சிக்குப் பெரிய இழப்பு என்று அவனுக்குத் தெரியும். எம்.எல்.ஏ. நரசிம்மனின் மேல் இருந்து வந்த தன்னுடைய பகைமைக்கு இது வெற்றி. அந்தச் சந்தோஷத்தில் ஒன்றிற்கு இரண்டாக ஜோடித்துத் தன் சொந்த பெருமையை அளக்கத் தொடங்கினான். அந்தக் கட்சிக் காரர்கள் வீரதாஸ் அரெஸ்ட்டை முன்னிட்டு எந்த விதமாக பந்த் நடத்த முனைந்தார்கள் என்றும், தம் கட்சித் தொண்டர்களின் உதவியுடன் அதை தான் முறியடித்தது எப்படி என்று விலாவாரியாகச் சொன்னான்.

நகைக் கொள்ளை விஷயத்தில் பேப்பர்களில் முதல் பக்கத்தில் அந்தச் செய்தி பிரசுரமாகும்படி தான் எவ்வாறு முயற்சி எடுத்தான் என்றும், மக்களுக்கிடையே தற்போது பதவியில் உள்ள ஆளும் கட்சியிடம் வெறுப்பு ஏற்படும் விதமாக தான் எவ்வாறு திட்டம் போட்டான் என்றும் சொல்லி விட்டு இனி அந்தக் கட்சிக்கு மாநிலத்தில் இடம் இல்லை என்பதுபோல் விவரித்தான். புலிராஜன் அந்த அறைக்குள் நுழைந்ததுமே சந்தோஷமும், உற்சாகமும் பெருக்கெடுக்க ''எல்லாம் முடிந்து விட்டது சார்! ஹமாரி பார்ட்டி ஸ்டேட் மே சக்ஸஸ்'' என்றான்.

''ஹிந்தியைக் கொலை செய்யாதே, ஆங்கிலத்தில் பேசு'' என்றார் கட்சித் தலைவர். புலிராஜன் தோய்ந்துபோன முகத்துடன் ''ஐ நோ... நோ குட் இங்கிலீஷ். ட்ரை அன்டர்ஸ்டான்ட்'' என்றான்.

கட்சித் தலைவருக்குப் புரை ஏறியது. டில்லியில் இது ரொம்ப சாதாரண விஷயம் என்பதுபோல், ஹிந்தியும் ஆங்கிலமும் தெரியாத அரசியல் தலைவர்களுக்காகவே இருந்து வந்த துபாஷி மேற்பட்ட விஷயங்களை எல்லாம் கட்சித் தலைவருக்கு மொழி பெயர்த்துச் சொன்னார். எல்லாவற்றையும் கேட்டு விட்டு ''வீரதாஸ் அவ்வளவு சக்தி வாய்ந்த ஆளுன்னு சொல்லுங்க'' என்றார் எதுவும் தெரியாதவர்போல்.

''ஆமாம் சார். எம்.எல்.ஏ.க்களில் பலபேர் அவனால்தான் ஜெயித்திருக்காங்க. அவன் மட்டும் கோதாவில் இறங்கினால்போதும், யாராலுமே எதிர்த்து நிற்க முடியாது. ரிக்கிங் முதல் வேட்பாளர்களைத் தீர்த்துக் கட்டுவது வரை எல்லாவற்றிலும் அவன்தான் முன்னால் இருப்பான்.''

''அப்படிப்பட்டவன் எதிர்க்கட்சியில் இருக்கிறான். தற்சமயம் ஜெயிலில் இருக்கிறான்.''

''ஆமாம். இனி தப்பித்துக் கொள்ள முடியாது. நம் கட்சி அந்த விஷயத்தில் கடைசி வரை போராடும்.''

''அவன் ஜெயிலிலிருந்து வெளியே வரணும் என்றால் கண்டிப்பாக நம் கட்சியின் ஆதரவு அவனுக்குத் தேவை.''

''ஆமாம் சார். நம் உதவி இல்லாமல் அவனால் எதுவும் செய்ய முடியாது. செத்தாலும் வெளியே வரமுடியாது. அந்த விதமாக எல்லாவற்றையும் நான் ரகசியமாக ஏற்பாடு செய்திருக்கிறேன்.'' பெருமை பொங்கும் குரலில் சொன்னான் புலிராஜன்.

''அவ்வளவு சக்தி வாய்ந்த ஆள் நம் எதிரியின் குரூப்பில் இருக்கும்போது அவனுக்கு உதவி கிதவி செய்வதை விட்டு விட்டு இங்கே வந்து அதை ரொம்பப் பெருமையாக வேறு சொல்லிக் கொள்கிறாய். நீ எப்படித் தான் அரசியல் தலைவன் ஆனாயோ புலிராஜன்?''

புலிராஜன் அதிர்ந்து விட்டான்.

கட்சித் தலைவர் சிரித்தார். ''அரசியலில் செத்த பாம்பை மேலும் சாகடிக்கக் கூடாது. நம் கட்சிக்குள் இழுத்துக்கொண்டு, இன்னும் கொஞ்சம் பால் ஊற்றி வளர்த்து, பலத்தைக் கூட்டிக் கொண்ட பிறகு எதிரியின் மீதே ஏவிவிட வேண்டும். அது முதல் பாடம்.''

புலிராஜன் இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. கட்சித் தலைவர் சொன்னார். ''வீரதாஸ் நம்ப பக்கத்தில் வேலை செய்யணும் என்ற நிபந்தனை வையுங்கள். அந்த நிபந்தனைக்கு ஒப்புக் கொண்டால் நம் கட்சிகூட அவன் விடுதலைக்கு முயற்சி செய்யும் என்று சொல்லு.''

''ஆனால் இந்த விஷயம் தெரிந்து விட்டால் முதலமைச்சர் அந்த இன்ஸ்பெக்டரோடு சேர்ந்து கொண்டு, கேசை இன்னும் பலமாக்கி விடுவார். இது மாநிலம் சம்பந்தப்பட்ட கேசு.''

''தெரிய வேண்டிய அவசியம் இல்லை. வீரதாசு விடுதலையாகும் வரையிலும் அவன் தன்னுடைய ஆள்தான் என்று நினைத்துக் கொள்வதுபோல் முதலமைச் சரை பிரமையில் ஆழ்த்தி வைத்திருப்போம். திரை தூக்கப்படும் வரையில் பின்னால் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று தெரியாமல் வைத்திருப்பதுதான் அரசியலில் இரண்டாவது பாடம்.''

புலிராஜனுக்கு கட்சித் தலைவர் சொல்வது நடக்கக் கூடிய காரியம்தானா என்ற சந்தேகம் ஏற்பட்டது. வீரதாசை தன் பக்கம் திருப்பிக் கொள்வது சுலபமாக இருக்கலாம். அல்லது இல்லாமலும் போகலாம். ஆனால் நரசிம்மன் விஷயம் என்னவாகும்? அவன் எப்படி சும்மா இருப்பான்? சும்மா ஏன் இருப்பான்? எம்.எல்.ஏ. நரசிம்மனுக்குத் தெரியாமல் வீரதாசைத் தம் பக்கம் திருப்பிக் கொண்டு, அவனை விடுதலை செய்வது சாத்தி யமா? உள்ளூரில் இருக்கும் எம்.எல்.ஏ.வுக்கு சந்தேகம் ஏற்படாதவாறு வீரதாசுக்கு எப்படி உதவி செய்வது?

அந்த விஷயத்தையே கட்சித் தலைவரிடம் சொன்னான். அவர் சிரித்து விட்டு, ''வீரதாஸ் ஒருத்தனை மட்டும்தான் நம் பக்கம் திருப்பிக் கொள்கிறோம் என்று ஏன் நினைக்கிறாய் புலிராஜன்? எம்.எல்.ஏ.வையும், ஹோம்மினிஸ்டரையும்கூட நம் பக்கம் திருப்பிக் கொள்ளலாம்'' என்றார்.

புலிராஜனுக்கு தலை சுற்றியது. இது தன்னுடைய வெற்றியா நரசிம்மனின் வெற்றியா என்று புரியவில்லை.

கட்சியில் தன் இடம் எது என்றுகூடப் புரியவில்லை முதலில். அப்பொழுதுதான் அவள் உள்ளே நுழைந்தாள். அவள் மீது இருந்த மதிப்பினாலோ அல்லது அபிமானத் தினாலோ தெரியாது, கட்சித் தலைவர் எழுந்து நின்றார். தன்னோடு பேசும்போது அவரிடம் தென்பட்ட அலட்சியம் இப்பொழுது தென்படாததைக் கவனித்தான் புலிராஜன். அவளைப் பார்த்ததுமே அவன் கண்கள் நிலை குத்தி நின்று விட்டன. அவளுடைய அழகால் மட்டுமே அல்ல. மிடுக்கால் அந்தப் பொலிவு வந்து சேர்ந்திருந்தது. அவள்தான் காமினி.

மாநில ஹோம் மினிஸ்டரின் மனைவியைத் தம் கட்சிக் காரியாலயத்தில் பார்த்தது புலிராஜனை சொல்ல முடியாத குழப்பத்தில் ஆழ்த்தி விட்டது. காமினி தனக்கே உரிய பாணியில் வணங்கி விட்டு ''சௌக்கியமா?'' என்று கேட்டாள். புலிராஜன் நடுமையமாக தலையை அசைத்தான்.

''இந்தக் கட்சி பிரதிநிதியாக நீங்கள் என்னோடு வந்தால் மற்ற விஷயங்களை நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்றாள் அவள்.

''எங்கே வரணும்?'' என்றான் புலிராஜன்.

''எம்.எல்.ஏ. நரசிம்மனிடம்.''

''செத்தாலும் வர மாட்டேன். இதோ பாரும்மா. எங்களிருவருக்குமிடையே விரோதம் உன் வயதைவிட அதிகம். எனக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கும் இந்தக் கிழவனுக்குத் தமிழ் வராதது நல்லதாகி விட்டது. இல்லாவிட்டால் நான் சொன்ன இந்த வார்த்தைகளுக்கு உடனே இடைமறித்து - அரசியலில் நிரந்தரமாக விரோதம் சிநேகம் என்று எதுவும் இருக்காது. அது மூன்றாவது பாடம் - என்று சொல்லியிருப்பான். என் இவ்வளவு நாள்

அனுபவத்தில் சொல்கிறேன். கட்சியின் மேலிடத்து உத்தரவை அனுசரித்து நான் நரசிம்மனிடம் போய் மனச்சாட்சியைக் கொன்றுவிட்டுக் கெஞ்சினாலும் அவன் முருங்கை மரத்தில் ஏறி உட்கார்ந்து கொள்வான்.''

''அவனுக்கு மாநில மந்திரி சபையில் இடம் தருவதாகச் சொன்னாலும்கூட அவன் அப்படித்தான் பிடிவாதமாக இருப்பானா?''

புலிராஜன் திடுக்கிட்டு ''நரசிம்மனுக்கு அமைச்சர் பதவியா?'' என்றான்.

காமினி சிரித்தாள். ''இதையெல்லாம் செய்ததற்கு உங்களுக்கு அமெரிக்கத் தூதர் பதவி கிடைக்கப் போகிறது. ஒரே ஊரில் இருந்து கொண்டு நரசிம்மனின் முகத்தைத் தினமும் பார்க்க வேண்டிய அவசியம் உங்களுக்கு இருக்காது. கட்சியை மாற்றிக் கொண்டு அமைச்சர் பதவியில் இருக்கும் நரசிம்மனைவிட, கட்சியில் இருந்துகொண்டே அமெரிக்கத் தூதரான உங்களுக்குத்தான் உங்கள் ஊரில் செல்வாக்கு இருக்கும். யோசித்துப் பாருங்கள்.''

யோசிப்பதற்கு எதுவுமே இல்லை என்று புலிராஜனுக்குத் தெரியும். இந்த காமினிக்கு தன் அனுபவம் அத்தனை வயது இல்லை என்றான். ஆனால் அவள் யோசிக்கும் திறனில் பாதிகூட தன்னிடம் இல்லை. எங்கேயோ தமிழ்நாட்டில் ஒரு ரவுடி ஜெயிலுக்குப் போனால், அவனை விடுதலை செய்வதற்காக நடக்கும் போட்டியில் மாநில ஆளும் கட்சியைப் பதவியிலிருந்து இறக்கிவிடலாம் என்ற யோசனை சொன்னதற்கே இவள் பாராட்டிற்குரியவள்.

''நீ ஒன்றும் நினைத்துக் கொள்ளவில்லை என்றால் ஒரு சின்ன சந்தேகம்.''

''கேளுங்கள்.''

''மாறப்போகிற அரசாட்சியின் புதிய செட்டப்பில் உங்கள் கணவர் முதலமைச்சர் ஆகப் போகிறாரா?''

அந்தக் கேள்வியைக் கேட்டதுமே அவள் முகத்தில் மனோகரமான முறுவல் தவழ்ந்தது.

''அந்த விருப்பம் உங்களுக்கு இருந்தால், அந்தப் பதவியை உங்களுக்கே விட்டு விட்டு நாங்கள் அமெரிக்காவுக்குப் போய் செட்டிலாவதற்கு எந்த ஆட்சேபணையும் இல்லை'' என்று சிரித்தாள் அவள்.

அந்த சிரிப்பில் அவனுக்கு நான்காவது பாடம் புரிபட்டது. ''அரசியலில் எனக்கு என்ன தெரியும் என்று யோசிக்காதே. உனக்குத் தெரிந்தது போதுமா இல்லையா என்று யோசித்துக் கொள்'' என்ற பாடம் அது.

★★★

''என் மனைவி சொன்னது எனக்குச் சரியாகத்தான் தோன்றுகிறது. எங்கள் கட்சியில் இவ்வளவு வருஷமாக இருந்தாலும் எனக்கு எதிர்காலம் இல்லை. ஆனாலும் எனக்கு மத்திய அரசிடமிருந்து வாக்குறுதி வேண்டும். எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் மாநிலத்தில் அரசை கலைக்க வேண்டும். நான் இந்தக் கட்சியிலிரந்து ராஜினாமா செய்து உங்கள் கட்சியில் சேர்ந்து விடுகிறேன். அதற்குள் இருக்கிற அத்தனை பேரையும் உங்கள் கட்சிப் பக்கமாக திருப்பி விடுகிறேன் என்று வாக்களிக்கிறேன். இடைத் தேர்தலில் நமக்குத்தான் வெற்றி'' - ஹோம் மினிஸ்டர் சொன்னார்.

எம்.எல்.ஏ. நரசிம்மன் அவரை ஒரு மாதிரியாகப் பார்த்தான். இந்த நாயுடு எப்படித்தான் ஹோம் மினிஸ்டர் ஆனான் என்று நரசிம்மனுக்கு எப்போதும் சந்தேகம்தான்.

காமினியைப் போன்ற பெண் மனைவியானதுதான் அதற்குக் காரணம் என்று அவனுடைய ஆழ்ந்த நம்பிக்கை. ''என் மனைவி சொன்னது எனக்குச் சரியாகத்தான் தோன்றுகிறது'' என்று சொல்கிறவன் இந்த மாநிலத்தின் ஹோம் மினிஸ்டர்.

புலிராஜன், நரசிம்மன், ஹோம் மினிஸ்டர், வீரதாசு நான்கு பேரும் மேஜையைச் சுற்றிலும் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள்.

நரசிம்மன் சொன்னான். 'இவ்வளவு நாட்களாக எங்கள் இரண்டு கட்சிகளுக்கிடையே பசும்புல்லைப் போட்டால் கூடக் குப்பென்று பற்றிக் கொள்ளும். அப்படி இருக்கும்போது இப்போ நான் எங்கள் கட்சியை விட்டு விட்டு மத்திய அரசு கட்சியில் சேர்ந்தால் எங்க ஆட்கள் என் முகத்தில் காறித் துப்ப மாட்டார்களா?''

''அரசியலில் அதெல்லாம் சகஜம்தானே? எல்லாம் தெரிந்த உனக்கு நான் சொல்லணுமா என்ன?'' என்றான் எம்.பி. புலிராஜன். எப்படியாவது அத்தனைப் பேரையும் தன் கட்சியில் சேர்த்துக் கொண்டு மாநில அரசைக் கவிழ்த்து விட்டால், தனக்கு அமெரிக்கத் தூதர் பதவி கிடைக்கும் என்பது அந்த ஆங்கிலம், ஹிந்தி இரண்டும் தெரியாத அரசியல் தலைவனின் ஆசை.

நரசிம்மன் சொன்னான். ''கட்சி மாறினால் எங்க ஹோம் மினிஸ்டர் சீஃப் மினிஸ்டர் ஆகலாம். ஆனால் என்னால் என்ன ஆக முடியும்?''

அவன் வார்த்தைகள் இன்னும் முடியக்கூட இல்லை. ''நான் சி.எம். ஆகணுமே தவிர, நீதான் என் ஹோம் மினிஸ்டர். அதை யாராலும் தடுக்க முடியாது'' என்றான் நாயுடு.

மேஜையைச் சுற்றிலும் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள் நால்வரும். நடுவில் தட்டுகளில் இனிப்புகளும், சுற்றிலும் பூச்செண்டுகளும் இருந்தன. சம்பாரி சூட் அணிந்து கொண்டிருந்த சிலர் வெளியே பரபரப்புடன் சுற்றிக் கொண்டிருந்தார்கள்.

ஹோம் மினிஸ்டர் கூட்டம் நடத்தினால் இவையெல்லாம் சகஜம்தான் என்றாலும், அந்த மீட்டிங் போலீஸ் ஸ்டேஷனில் நடப்பது ஒரு விசேஷம் என்றால், அதில் நான்காவது மெம்பர் அந்த ஊரில் லோக்கல் தாதா வீரதாஸ் ஆக இருப்பது இன்னொரு விசேஷம்.

ராணா மோட்டார் சைக்கிளில் ஸ்டேஷனுக்கு வந்தபோது, வெளியே திண்ணையில் அமர்ந்து கொண்டு வேர்க்கடலையைச் சாப்பிட்டுக் கொண்டிருந்த டி.எஸ்.பி. தென்பட்டார். தொலைவில் அரசாங்கத்தைச் சேர்ந்த ஜீப்புகளும், கார்களும் தென்பட்டன. அவனுக்கு ஒரு நிமிஷம் விஷயம் என்னவென்று புரியவில்லை.

''உள்ளே ஹோம் மினிஸ்டர் வீரதாசுடன் பேசிக் கொண்டிருக்கிறார். யாரையும் உள்ளே விடவேண்டாம் என்று சொல்லியிருக்கிறார். எம்.பி., எம்.எல்.ஏ.கூட உள்ளே இருக்கிறார்கள்'' என்றார் டி.எஸ்.பி.

''போலீஸ் ஸ்டேஷனை அரசியல் விபசார இல்லமாக மாற்றி விட்டீர்களா?'' கோபமாக சொன்னான் ராணா.

''அப்படி ஏன் நினைக்கணும்? குருக்ஷேத்திரத்தில் சந்திக்கிற முயற்சி என்று நினைத்துக் கொள். இரண்டு பேருமே வெவ்வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள் இல்லையா?'' என்றார் டி.எஸ்.பி.

இங்கே இந்த விதமாக உரையாடல் நடந்து கொண்டிருக்கும்போது உள்ளே வேறு விதமாக சர்ச்சைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

''கூடிய சீக்கிரம் இடைத் தேர்தல்களை நடத்தச் சொல்லி உங்களுடைய ஹை கமாண்டிடம் சொல்லுங்கள். இதற்கிடையே முடிந்தவரையில் ஆட்களை சேர்த்துக் கொண்டு நான் கட்சி மாறி விடுகிறேன். இனி இந்த மாநிலத்துக் கட்சிக்கு எதிர்காலமே இருக்காது'' என்றார் ஹோம் மினிஸ்டர்.

''எந்தக் கட்சி தேர்தலில் ஜெயிக்க வேண்டும் என்றாலும் வீரதாசு ஜெயிலிலிருந்து வெளியே வருவது முக்கியம். அவன் மூலமாக அரவிந்த் சௌரஸியாவை நம் பக்கம் திருப்பிக் கொள்ளலாம். மாநிலத்தில் நம் கட்சி அதிகாரத்தை கைப்பற்ற வேண்டுமென்றால் குறைந்த பட்சம் ஆறாயிரம் குண்டர்களாவது கள்ள வோட்டுப் போட வேண்டியிருக்கும். கோடி ரூபாய் செலவானாலும் அத்தனை குண்டர்களை சப்ளை செய்யக்கூடியது சௌரஸியா ஒருத்தன்தான். என்ன வீரதாஸ்? நான் சொன்னதில் தவறு எதுவும் இல்லையே?''

தவறு எதுவும் இல்லை என்பதுபோல் தலையை அசைத்தான் வீரதாசு.

எம்.எல்.ஏ. நரசிம்மன் மேலும் தொடர்ந்தான். ''இதையெல்லாம் நாம் ஒரு கௌரவப் பிரச்னையாக எடுத்துக் கொண்டு இரண்டு மூன்று நாட்களில் வீரதாசை விடுதலை செய்ய வைக்க வேண்டும். நாம் எல்லோரும் சேர்ந்து விட்டதாக முதலமைச்சருக்குச் சந்தேகம் வரக்கூடாது. வீரதாசு வெளியே வந்ததும் மாநிலத்தில் அவன் ரகளையை ஏற்படுத்த வேண்டும். பயங்கரமான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அப்பொழுது மத்திய அரசு மாநிலத்தில் கவர்னரின் ஆட்சியைக் கொண்டு வருவதும், நாம் எல்லோரும் கட்சிக்கு ராஜினாமா கொடுப்பதும் ஒரே சமயத்தில் நடக்க

வேண்டும். அரவிந்த் சௌரஸியா நமக்கு உதவி செய்து தேர்தல்களில் நாம் பெற்றி வெறும் விதமாக செய்யணும்.''

''இந்த கான்ட்ராக்டை வீரதாசு ஓரிரண்டு கோடிகளுக்கு அரவிந்த் சௌரஸியாவுடன் செட்டில் செய்யணும். புதுக் கட்சி அதிகாரத்திற்கு வந்ததும் நாயுடுவை முதலமைச் சராக்கும் பொறுப்பு மத்திய அரசைச் சேர்ந்தது. இதுதான் நம் திட்டம்'' என்றான் நரசிம்மன்.

சரியாகச் சொல்லி விட்டாய் என்பதுபோல் பார்த்தார் ஹோம் மினிஸ்டர் நாயுடு.

''இதற்கு என்னால் ஆன உதவியைச் செய்கிறேன்'' என்றான் புலிராஜன்.

''எல்லாவற்றையும்விட வீரதாசை விடுதலை செய்வதுதான் முக்கியம்.''

ஹோம் மினிஸ்டர் வெளியே வந்ததும் வாசலுக்கு அருகில் நின்று கொண்டிருந்த ராணாவும், டி.எஸ்.பி.யும் சல்யூட் செய்தார்கள். ஹோம் மினிஸ்டர் அவர்களை ஆசீர்வதிப்பதுபோல் கையை உயர்த்தி விட்டு போய் விட்டார். அரசாங்கக் கார்கள் பெருத்த ஓசையை ஏற்படுத்திக் கொண்டு நகர்ந்தன. எம்.பி.க்களும், எம்.எல்.ஏ.க்களும் பார்க்காததுபோலவே நடித்தார்கள்.

''இனி நான் உள்ளே போகலாமா சார்?'' ராணா கேட்டான். அவன் குரலில் பழிப்பு இல்லை. தோல்விதான் இருந்தது.

''போய் வீரதாசைச் செல்லிற்குள் போடு'' என்றார் டி.எஸ்.பி. ராணா நிமிர்ந்து பார்த்தான். டி.எஸ்.பி. தலை குனிந்து கொண்டார். செல்லுக்குள் அடைத்து வைப்பது ஒன்றுதான் தற்காலிக விஜயம் என்பதுபோல் அங்கிருந்து நகர்ந்தான் ராணா.

உள்ளே வீரதாசு மேஜைக்கு முன்னால் உட்கார்ந்து கொண்டு கேக் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். பூங்கொத்துக்கள் இன்னும் அப்படியே இருந்தன. வேலைக்காரர்கள் மாலைகளை எடுத்துக் கொண்டிருந் தார்கள். ராணாவைப் பார்த்து விட்டு கேக் சாப்பிடுவதை நிறுத்தி விட்டு எழுந்தான்.

''பார்த்தீங்களா சார், உங்க ஸ்டேஷனையே பொது இடமாக மாற்றி மீட்டிங் வைத்துக் கொண்டோம். மன்னித்துக் கொள்ளுங்கள்.''

''செல்லுக்குள் நட.'' முகத்தில் எந்த உணர்ச்சியும் காட்டாமல் சொன்னான் ராணா.

வீரதாஸ் சிரித்தான். ''போகிறேன் சார். ஹோம் மினிஸ்டரே கூப்பிட்டு உட்கார வைத்து விட்டார். அப்பொழுதே நான் சொன்னேன். சார்... என் அட்டாவில் தவிர இப்படிப்பட்ட காரியங்களை வெளியில் செய்ய மாட்டேன் என்று. போலீஸ் ஸ்டேஷனையே உன் அட்டாவாக வைத்துக் கொள் என்று சொல்லி விட்டார். அதற்கு நான் சொன்னேன், ''சார்... இது ராணாவின் ஆபீசு. அவனுக்குத் தெரியாமல் அவன் ஸ்டேஷனை நாம் பயன்படுத்திக் கொள்வது நன்றாக இருக்காது'' என்று. எங்க ஹோம் மினிஸ்டருக்குப் புத்தியே இல்லை சார். மரியாதை தெரியாது. ''ராணா என்றால் யார்? அரசு இலாக்காவில் திருகாணியைப் போன்றவன். கொஞ்சம் வேர்க்கடலையை கொடுத்து வெளியே திண்ணையில் உட்காரு என்று சொன்னால் உட்கார்ந்து கொள்வான்'' என்று சொன்னார். சாரி சாரி, இவ்வளவு நேரமாக உங்க நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு அவர்கள் இரண்டு பேரும் ஒன்று சேருவதற்குப் பேச்சுவார்த்தை

நடத்தினேன்'' என்று நாற்காலியைக் காலால் ராணாவின் பக்கம் தள்ளினான்.

ராணா அவன் தோளைப் பிடித்துக் கொண்டான்.

''இதோ பார்! உன் பழிப்பு எனக்குப் புரிந்து விட்டது. இரண்டு கட்சி மட்டுமே இல்லை. நாட்டில் உள்ள எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்தாலும் சரி, உன்னைத் தூக்கு மேடையில் ஏற்றத்தான் போகிறேன். என் தந்தை எப்படி தூக்கிலிடப் பட்டாரோ... சரியாக... அதேபோல்.''

வீரதர்சின் முகத்தில் சிரிப்பு மாயமாகி விட்டது.

''உண்மையாகவா? அதையும் பார்த்துவிடலாம். உன் கண் முன்னாடியே நான் எப்படி வெளியே போகிறேன் என்று பார்த்துக் கொண்டிரு. முதலில் இந்தக் கேசு கோர்ட் வரைக்கும்கூட போகாது. சாலஞ்ச்!''

ராணா ஏதோ சொல்ல வந்தபோது ஒரு பெண் உள்ளே வந்தாள். எல்லோரும் அவளை வியப்புடன் பார்த்தார்கள்.

போலீஸ் கான்ஸ்டபிளின் காலரைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்ததே அதற்குக் காரணம்.

''என்ன நடந்தது பாலகிருஷ்ணா?'' ராணா கேட்டான். அவனை முன்னால் பிடித்துத் தள்ளியதால் பிரம்மானந்தம் பாலகிருஷ்ணன் வந்து ராணாவின் காலடியில் விழுந்தான்.

''என்ன நடந்தது?'' ராணா மறுபடியும் கேட்டான்.

''கோர்ட் எல்லைக்குள் மரத்தடியில் எவனோடயோ படுத்திருந்ததால், இழுத்துக்கொண்டு வந்தேன் சார்.'' பாலகிருஷ்ணன் சொன்னான், கீழே விழுந்த தொப்பியை எடுத்து மாட்டிக் கொண்டே.

''படுத்துக் கொண்டிருந்தது உண்மைதான் சார்'' என்றாள் அவள் மூச்சிரைக்க. அவளுக்கு முப்பத்தைந்து வயது இருக்கலாம். காலம், வயதை தேவைக்கு அதிகமாகவே விழுங்கியிருந்தது.

''ஆனால், ஏன் படுத்தேன்னு கேட்க மாட்டீங் கறீங்களே? ஏன்?'' எல்லோரையும் பார்த்துக் கேட்டாள் அவள்.

யாருமே பதில் சொல்லவில்லை. யாரும் இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. அந்தக் காட்சியே வேடிக்கையாகவும், ஆச்சரியமூட்டுவதாகவும் இருந்தது.

அவள் தந்த விவரம் மனதைக் கசக்கிப் பிழிவதாக இருந்தது.

''என் புருஷனை லாக்கப்பில் வைத்து விட்டார்கள் தம்பீ. எங்கேயோ கோவிலில் நகை போயிடுத்துன்னு லாக்கப்பில் வைத்தார்கள். எவ்வளவு நாள் வெச்சுருப் பாங்களோ, எங்கே வெச்சிருப்பாங்களோ தெரியாது. இன்னிக்கு ஆகஸ்ட் பதினைந்து. சுதந்திரம் கிடைத்த நாள். சுதந்திர நாளன்றாவது சாதம்போட மாட்டாயாம்மா? என்று கேட்ட என் குழந்தைகளின் பசியைக் காண சகிக்காமல், கோர்ட்டு முடிந்ததும் வெளியே இருட்டில் மரத்தடியில் எவனுக்கோ முந்தானை விரித்தது உண்மைதான். விபசாரம் செய்வது தவறா, அங்கே அந்தக் காரியத்தைச் செய்வது தவறா என்றெல்லாம் எனக்குத் தெரியாது. ஆனால் அவன் தந்த ஐந்து ரூபாயில் என் குழந்தைகளுக்கு அரை வயிறாவது சாப்பாடு போடலாம்னு நினைத்திருந்தபோது, இதோ இந்த போலீஸ்காரன் என் கையிலிருந்த நோட்டைப் பிடுங்கிக் கொண்டான். இருட்டில் திருடனோன்னு நினைச்

சுட்டேன். காலரைப் பிடித்து இழுத்துக் கொண்டு வெளியே வந்து பார்த்தால் போலீஸ்காரன்! நியாயத்தை இங்கேயே கேட்டு விடலாம்னு இதோ இங்கேயே இழுத்து வந்து விட்டேன். குற்றம் செய்ததற்கு என்னை ஜெயிலில் போடுங்கள். ஆனால் பணத்தை மட்டும் என் குழந்தைகளுக்கு அனுப்பி வையுங்கள். சுதந்திர நாளன்றாவது வயிறாரச் சாப்பிடச் சொல்லுங்கள். இந்தத் திருட்டுப் பயலிடம் மட்டும் கொடுத்தனுப்பாதீங்க. நடுவிலேயே குடித்து விட்டு...''

பாலகிருஷ்ணன் அவள் மீது பாய்ந்து ''என்னது? சும்மாயிருக்கோம் என்று தலைக்கு மேல்...'' என்று ஏதோ சொல்லப் போனான்.

''பிரம்மானந்தம்!'' உறுமினான் ராணா. ''அவளிட மிருந்து பணத்தைப் பிடுங்கிக் கொண்டாயா இல்லையா?''

''இரவு நேரத்தில் கோர்ட்டுக்கு வெளியே மரத்தடியில்...''

''என் கேள்விக்குப் பதில் சொல்லு.'' முகம் சிவக்க ராணா கேட்டான்.

''பி... பிடுங்கிக் கொண்டேன்.''

''அதை உடனே கொடுத்து இவளை அனுப்பி விடு. உடனே...'' கத்தினான் ராணா. அந்தக் கத்தலுக்குப் போலீஸ் ஸ்டேஷனே அதிர்ந்தாற்போல் இருந்தது. பிரம்மானந்தம் பெல்டுக்குள்ளிருந்த நோட்டை எடுத்து அவளிடம் கொடுத்தான்.

அவள் அதைப் பார்த்தாள்.

மறுபடியும் உற்றுப் பார்த்தாள்.

பிறகு அதைத் தூக்கி எறிந்தாள்.

காற்றில் பறந்து கொண்டே தன் மேஜையை நோக்கி வந்த அந்தக் காகிதத்தைப் பார்த்தான் ராணா.

ஆகஸ்ட் பதினைந்தாம் தேதியன்று தோரணமாக கட்டும் காகிதக் கொடி அது.

அவள் சிரித்தாள்.

தர்மச் சக்கிரத்தை உலுக்கி எடுக்கும் சிரிப்பு அது. மனிதப் பண்புகளுக்குச் சவால் விடும் சிரிப்பு அது.

''ஐந்து நிமிட விவகாரத்திற்கு ஐந்து ரூபாய்க்கு மேல் தர மாட்டேன்னு அவன் சொன்னபோது, அழுதேன் தம்பி. கொடுத்த காகிதத்தை இருட்டில் அஞ்சு ரூபாய் நோட்டுன்னு நினைச்சு இவன் பிடுங்கிக் கொண்டபோதுகூட அழுதேன் தம்பி, ஆனால் இப்படி இந்த வெளிச்சத்தில் நம் நாட்டுக்கொடியின் விலையே அஞ்சு ரூபாய்ன்னு தெரிந்த பிறகு சிரிப்புத்தான் வருகிறது தம்பி. சிரிப்புத்தான் வருகிறது'' என்று அங்கிருந்து வேகமாகப் போய் விட்டாள்.

காலம் படீரென்று வெடித்து அதிலிருந்து பரவிய நிசப்தம் இதயத்தின் சூனியத்தைப் பழித்துக் கொண்டிருந்தது. எழும்பி விழும் அலை அந்த இடத்தில் சலனமில்லாமல் நின்று விட்டால், பிறகு வேதனை வெள்ளத்திற்கு முக்தி ஏது?

எல்லோரும் சிலையாக நின்றிருந்தார்கள். அந்தச் சூனிய நிலையிலிருந்து, அந்தப் போலீஸ் ஸ்டேஷனில் உட்புற இருட்டிலிருந்து, ஒரு ஆளின் புலம்பல் சத்தம் கேட்டது.

''சும்மாயிரு ராமப்பா, சும்மாயிரு.'' செல்லுக்குள் இருந்த சக கைதி தேற்றிக் கொண்டிருந்தான். ராமப்பன்

ஏழாம் வகுப்பு வரை படித்து விட்டு தச்சு வேலை செய்து கொண்டிருந்தான்.

''எப்படி சும்மாயிருப்பேன்? அது என் பெண் ஜாதி!'' ராமப்பா ஆவேசத்தால் தள்ளாடிக் கொண்டிருந்தான்.

பிறகு சாமி வந்தவன்போல் ஜெயில் கம்பிகளைப் பிடித்து உலுக்கிக் கொண்டே கத்தத் தொடங்கினான். ''நாங்க என்ன தவறு செய்து விட்டோம் என்று எங்களை ஜெயிலில் போட்டிருக்கீங்க இன்ஸ்பெக்டர்? இருட்டு அறைக்குள் போட்டு ஏன் உதைக்கிறீங்க? குற்றத்தை ஒப்புக் கொள்ளச் சொல்லி ஏன் வற்புறுத்தறீங்க? எங்க வீட்டுப் பெண்கள் விபசாரம் செய்துக் கொண்டிருக்காங்க. பிள்ளைகள் சாப்பாடு இல்லாமல் செத்து கொண்டிருக் காங்க. நாங்க ஒரு காலத்தில் திருடர்களாக இருந்த தற்காகவா இந்த தண்டனை? நல்லாயிருக்கு இன்ஸ்பெக்டர். ரொம்ப நல்லாத்தான் இருக்கு.'' அவன் புலம்பல் சிரிப்பில் கொண்டு போய் விட்டது.

பெரிதாக சிரித்துக் கொண்டே சொன்னான். ''செய்யாத குற்றத்தை ஒப்புக் கொள்ள முடியாதுன்னு சொன்னதற்கு நாங்கள் உதைபடுகிறோம். செஞ்ச குற்றத்திற்கு எவ்வளவோ சாட்சிகள் இருந்த அந்த வீரதாசு அமைச்சர் களோடு சேர்ந்து கேக் சாப்பிட்டுக் கொண்டிக்கிறான். சல்யூட் இன்ஸ்பெக்டர்... ஸ்டூவர்ட்புரம் போலீசுக்கு சல்யூட்...'' அலையலையாக வந்து கொண்டிருந்தது சிரிப்பு. அந்தச் சிரிப்பு திடீரென்று நின்று விட்டது.

அந்த சோர்வு ராணாவை சவால் விடுவதுபோல் இருந்தது. வீரதாஸ் அந்தப் பக்கமாகத் திரும்பி நின்று கொண்டிருந்தான். அவன் உதட்டில் புன்னகை நெளிந்து கொண்டிருக்கும் என்றறிவான் ராணா. எதிரே இரண்டு முகங்கள் தோன்றி ஒன்றில் அழுகையும் இன்னொன்றில்

சிரிப்புமாக பதில் சொல் என்பதுபோல் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தன.

அவனுக்குப் பதில் கிடைத்து விட்டது. டிராயரிலிருந்து சாவியை எடுத்து லாக்கப் அறையின் கதவைத் திறந்தான். ''வாங்க'' என்று திருடர்களை கூப்பிட்டான்.

செல்லில் இருந்த வீரதாஸ் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான். ராணா அவனை நெருங்கி வந்தான்.

''இதோ பார் வீரதாஸ்! எல்லாவற்றையும் கேட்டு விட்டுச் சிரித்துக் கொண்டாய் இல்லையா. இப்போ உன் முகத்தில் சிரிப்பு மயமாகியிருக்கும் என்று நினைக்கிறேன். நகைகள் கிடைக்காமலேயே திருடர்களை எப்படி வெளியே விட்டேன் என்று சந்தேகப்படுகிறாய் இல்லையா? நாளைக்கு ரிக்கார்டுகளில் எதைக் காட்டுவோம்னு குழப்பமாக இருக்கிறதா? இந்த சந்தேகங்களுக்கெல்லாம் பதில் கிடைக்கணும் என்றால் இரவு முழுவதும் தூங்காமல் விழித்திருந்து யோசித்துக் கொண்டிரு'' என்று சொல்லி விட்டுத் திருடர்களுடன் சேர்ந்து வெளியே நடந்தான் ராணா.

12

அந்த இடத்தில் ஒரே இருட்டாக இருந்தது. தொலைவில் எங்கிருந்தோ சுவற்றுக் கோழிகளில் சத்தம். இரவு மணி ஒன்று.

அவர்களுடன் ராணா அங்கு வந்து சேர்ந்தான். அவர்கள் மொத்தம் நான்கு பேர். நான்கு பேரும் நான்கு துறைகளில் வல்லவர்கள். ஒரு காலத்தில் அவர்கள் ஸ்டூவர்ட்புரத்தில் பெயர் பெற்ற திருடர்கள். பிறகு சீர்திருத்தப் பட்டவர்கள்.

அதற்கு பிறகு ரவுடிகளின் கைகளிலும், வீரதாஸின் கைகளிலும் சிக்கிக் கொண்டார்கள்.

கோவில் திருட்டுக் குற்றம் சுமத்தப்பட்டு தற்சமயம் ஜெயிலில் இருப்பவர்கள்.

அவர்களைத்தான் ராணா போலீஸ் ஸ்டேஷனிலிருந்து வெளியே அழைத்து வந்தான்.

எல்லோரும் எம்.எல்.ஏ. நரசிம்மனின் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். ராணா அவர்களிடம் சொன்னான்.

''என்னை மன்னித்து விடுங்கள். நான் இந்த விதமாக உங்களிடம் வேண்டிக் கொள்ளக்கூடாது. ஆனால் நான் ஆதரவில்லாதவன். அதிகாரம் என்ற இயந்திரத்தில் கடைசிப் படியில் இருக்கும் சின்ன கடையாணி போன்றவன் நான். எங்கேயோ உயரத்தில் இருக்கும் அரசியல்வாதிகள் என் எதிரிகள். போலீஸ் ஸ்டேஷனிலேயே மீட்டிங் வைத்துக் கொள்ளும் அளவுக்கு சாமர்த்தியம் படைத்தவர்கள். இருட்டில் உங்க மனைவியரின் கையில் நாட்டில் கொடியை வைக்கும் நீசமானவர்கள். அவர்களுடன் போராடுவதற்கு அதிகாரம், நியாயம், நேர்மை போன்றவை பயன்படாது. முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும். குற்றம் செய்வதை கைவிட்டவர்கள் நீங்கள். உங்களைக் கொண்டு மறுபடியும் குற்றம் செய்ய வைப்பது நியாயம் இல்லை. ஆனால் உங்களை சாசுவதமாக லாக்கப்பிலிருந்து மீட்க வேண்டுமென்றால் நீங்கள் இந்தக் காரியத்தைச் செய்யாமல் முடியாது'' என்று செய்ய வேண்டியதைச் சொன்னான். பிறகு அங்கிருந்து போய்விட்டான்.

அதற்குப் பிறகு வேலை தொடங்கியது.

அவர்கள் பைப் லைனைப் பிடித்துக் கொண்டு மேலே ஏறினார்கள். அந்த நிசப்தத்தில் அவர்கள் அப்படி மேலே ஏறிக் கொண்டிருப்பதைப் பார்த்தால் மரங்களில் சந்தடி செய்யாமல் அங்கும் இங்கும் ஓடும் அணிலின் நினைவுதான் வரும்.

நால்வரில் முதலாமவன் மாடியிலிருந்து பால்கனிக் குள் குதித்தான். தாழ்ப்பாள் போட்டிருந்த கதவைத்

திறப்பது கஷ்டமாக இருக்கவில்லை. மெயின் கதவுகளைத் திறப்பதில் அவன் கைதேர்ந்தவன். அவனைத் தொடர்ந்து மற்ற மூவரும் உள்ளே போனார்கள். இரண்டாமவன் படுக்கை அறைக்குள் நுழைந்தான். நரசிம்மன் மரக்கட்டையாய் தூங்கிக் கொண்டிருந்தான். அவன் மனைவி மெலிதாக குறட்டை விட்டுக் கொண்டிருந்தாள்.

இரண்டாமவன் அவள் உள்ளங்காலில் விரல்களால் லேசாக தடவினான், கிச்சு கிச்சு மூட்டுவதுபோல். அவள் புரண்டு படுத்ததும் தலையணைக்கு அடியில் கையை விட்டு சாவிக்கொத்தை எடுத்தான். இரும்புப் பெட்டியைத் திறந்து அதில் இருந்த பணத்தை எடுத்துக் கொண்டான்.

மூன்றாவது ஆள் ஆழமாக மூச்சு எடுத்துக் கொண்டே குளியலறைக்குள் சென்றான். அங்கே ஒரு நிமிஷம் நின்று மற்றொருமுறை ஆழமாக சுவாசித்தான். பிறகு குனிந்து தரையில் தடவிப் பார்த்தான். பிறகு நான்காவது ஆளைப் பார்த்தான். அவன் சமையலறையிலிருந்து தோசைத் திருப்பியைக் கொண்டு வந்தான். சத்தம் போடாமல், யாருக்கும் தூக்கம் கலைந்து விடாமல் சில நிமிடங்களில் வேலையை முடித்தார்கள்.

கற்பலகையை மேலே எழுப்பினார்கள்.

கீழே இருந்தது கறுப்புப் பணம். அத்துடன் தங்கம் கட்டிகளாக, நகைகளாக அறுபது எழுபது லட்சம் வரையிலும் இருக்கும். நால்வரும் அதை மூட்டையாக கட்டினார்கள். இந்த ஆபரேஷன் முழுவதும் ஐந்து நிமிடங்களில் நடந்து முடிந்து விட்டது. ஐந்து நிமிடங்களில் அறுபது லட்சம். உண்மையிலேயே

ஸ்டூவர்ட்புரம் திருடர்கள் நினைத்தால் எவ்வளவு சுலபமாக திருட முடியுமோ சொல்வதற்கு நல்ல உதாரணம். ''நாங்கள் இதைச் செய்யாமல் இருப்பதற்குக் காரணம் எங்களால் முடியாது என்பதால் அல்ல. சாதாரண மனிதர்களாக வாழ வேண்டும் என்ற ஆசையினால். எங்களுடைய வாழ்க்கையை லாக்கப் அறைகளிலும், எங்க குடும்பத்தாரின் வாழ்க்கை ஜெயிலைச் சுற்றுவதிலும் முடிந்து போகக்கூடாது என்பதற்காகத்தான் மாற நினைக்கிறோம். நாங்கள் மட்டும் மாறவில்லை என்றால், ஒரு அரசியல்வாதி ஐந்து வருடங்களில் சம்பாதித்ததை நாங்கள் ஒரே வருடத்தில் சம்பாதித்து விடுவோம். ஆனால் ஒரு விஷயத்திற்காக நாங்கள் சந்தோஷப்படுகிறோம். இவ்வளவு நாட்களும் ரவுடிக்களுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் பயந்து குற்றங்களை ஒப்புக்கொண்டோம். ஆனால் இன்று நேர்மையான ஒரு இன்ஸ்பெக்டருக்காக சந்தோஷமாக இந்த திருட்டைச் செய்கிறோம்'' என்ற திருப்தி தென்பட்டது அவர்களிடம்.

பணத்தையும், தங்கத்தையும் மூட்டை கட்டிக் கொண்டு அவர்கள் கிளம்ப முற்பட்டார்கள்.

அப்பொழுதுதான் வெளியிலிருந்து காலிங் பெல் ஒலித்தது.

நரசிம்மன் தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டான். விளக்கைப் போட்டுக் கொண்டே ''யார்?'' என்றான்.

பக்கத்திலேயே இருந்த மனைவியும் கண்களைத் திறந்து ''இந்த நள்ளிரவு வேளையில் யாருங்க?'' என்றாள்.

''பார்த்து விட்டு வருகிறேன்'' என்று படியிறங்கி கீழே வந்தான். கதவைத் திறந்ததுமே ராணா எதிரே தென்பட்டான்.

''என்ன விஷயம்? இந்த நள்ளிரவு நேரத்தில் வந்திருக்கிறாய்?''

''உங்கள் வீட்டில் திருடப் போகிறோம் என்று யாரோ போன் செய்தார்கள். அதைச் சொல்லத்தான் வந்தேன்.''

நரசிம்மன் சிரித்தான். ''இந்த விதமாக உன்னை நல்லவனாக்கிக் கொள்ளலாம் என்று பார்க்கிறாயா? இதோ பார் ராணா... உன் வேலை முடிந்து விட்டது. இனி என்னை எவ்வளவு காக்காய்ப் பிடித்தாலும் பிரயோஜனம் இல்லை.''

''ஒருமுறை உங்கள் பெட்ரூமில் இருக்கும் இரும்புப் பெட்டியைப் பார்க்க விடுங்கள்.''

''தேவலையே. பாத்ரூமை பார்க்கணும் என்று சொல்லாமல் விட்டாயே?''

''ஏன்? பாத்ரூமில்கூட ஏதாவது ஒளித்து வைத்திருக்கீங்களா?''

நரசிம்மன் முகத்தில் சிரிப்பு மறைந்தது. ''நான் எந்தெந்த இடத்தில் என்னென்ன மறைத்து வைத்தேனோ உனக்கு அனாவசியம். நள்ளிரவு நேரத்தில் சாவகாசமாக உன்னிடம் பேசுவதற்கு எனக்கு பொறுமையில்லை.''

''யாராவது முயற்சி செய்கிறார்களோ என்னவோ? ஒருமுறை என்னைப் பார்க்க விடுங்கள். அவர்கள் பெரிய திருடர்களாக இருப்பார்கள். இல்லாவிட்டால் இப்படி முன்னாலேயே போன் செய்து சொல்ல மாட்டார்கள்.''

''எவனோ போக்கிரிப்பயல் போன் செய்து சொன்னதையும் நீ இப்படி பரபரப்புடன் வந்ததையும் பார்த்தால் எனக்கு உங்கள் டிபார்ட்மென்ட் திறமையின் மீதே சந்தேகம் ஏற்படுகிறது. உங்கள் நேரத்தையெல்லாம் இப்படித்தான் வீணாக சுற்றிக் கழித்துக் கொண்டிருப்பீங்களா?''

''உங்களிடம் எவ்வளவுதான் பணம் இருக்கு? ரொம்ப அதிகமாக இருந்தால் இன்றிரவு மட்டுமாவது ஓரிரண்டு போலீசாரை காவலுக்கு அனுப்பி வைக்கிறேன்.''

''அதிகப்பிரசங்கம். என்னிடம் எவ்வளவு இருக்குன்னு தெரிந்து கொள்ளத்தான் இந்த நள்ளிரவில் மூன்றாம் தரமான திட்டத்துடன் வந்தாயா? இனியும் உன்னுடன் பேச எனக்கு பொறுமையில்லை.''

''சரி, நான் போகிறேன். ஏதாவது போனால் மட்டும் உடனே போன் செய்யுங்கள். ஸ்டேஷனில்தான் இருப்பேன். இரவு நேரத்தில் தூக்கத்தை கெடுப்பானேன் என்று யோசிக்காதீங்க'' என்று ராணா திரும்பி விட்டான். ஆனால் அவன் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகவில்லை. பத்து நிமிடங்களுக்குப் பிறகு மறுபடியும் போய் நரசிம்மனின் வீட்டுக் காலிங் பெல்லை அழுத்தினான்.

இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு கண்களைக் கசக்கிக் கொண்டே வந்து கதவைத் திறந்தான் நரசிம்மன். எதிரே ராணாவைப் பார்த்ததுமே ''திரும்பவும் ஏன் வந்தாய்? இன்றிரவு என்னைவிடப் போவதில்லையா?'' என்றான்.

''என்ன இது? நீங்கதானே இப்போ போன் செய்து உடனே வா. வீட்டில் கொள்ளை நடந்திருக்குன்னு சொன்னீங்க. போனை வைத்து விட்டுப் பறந்து வந்தேன்'' என்றான்.

''நான் உனக்குப் போன் செய்தேனா? கனவு கண்டிருப்பாய்.''

''இல்லை. உங்கள் குரல்தான். நன்றாக அடையாளம் புரிந்து கொண்டேன். 'ஐம்பது லட்சம் பெறுமானமுள்ள தங்க நகைகளும், இருபது லட்சம் காஷும் போய் விட்டது'ன்னு சொன்னீங்க. அவ்வளவு நகைகளை ஏன் வீட்டில் வைத்திருந்தீங்க என்று கேட்டேன். 'கேள்வி கேட்பதை நிறுத்தி விட்டு உடனே வா. திருடன் ரொம்ப தூரம் போயிருக்கமாட்டான்' என்று பதற்றமாகச் சொன்னீங்க.''

''உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டது ராணா. எவனோ உண்மை விளம்பி போன் செய்ததைக் கேட்டு விட்டு, திருடன்னு ஒரு தடவை ஓடி வந்தாய். திரும்பவும் அவனே குரலை மாற்றிக் கொண்டு என்னைப் போலவே போன் செய்தபோது அதையும் நம்பி இரண்டாவது தடவை வந்திருக்கிறாய். உன்னைப் போன்ற களிமண் மண்டை, போலீஸ் டிபார்ட்மெண்டில் எப்படித்தான் வந்தானோ தெரியவில்லை. எம்.எல்.ஏ.வின் குரலுக்கும், உண்மை விளம்பியின் குரலுக்கும் வித்தியாசம் தெரியாமல் போய் விட்டதா?''

''கொஞ்சம் வித்தியாசம் தெரிந்தது. அதைக்கூட போனில் கேட்டேன். இப்பொழுதுதானே உங்கள் வீட்டிலிருந்து வந்தேன். உங்கள் குரல் ஏதோ வித்தியாசமாக இருக்கேன்னு கேட்டேன். அதற்கு, 'எழுபது லட்சம் சொத்துக்கள் போயிடுத்தேன்னு கம்பிளைன்ட் கொடுத்தால், குரல் வித்தியாசத்தைப் பற்றிக் கேட்கிறாயா?' என்று எரிந்து விழுந்தீங்க.''

நரசிம்மன் உரத்தக் குரலில் சிரித்தான். ''அந்த உண்மை விளம்பி எவனோ தெரியவில்லை. உனக்கு நன்றாக

குல்லாய் போட்டிருக்கிறான். அவனுக்கு சன்மானம் பண்ண வேண்டும் போலிருக்கு. உங்க போலீசார் எவ்வளவு முட்டாள்கள் என்றால், நாளைக்கு அவனே என்னைப்போல் வேஷம் போட்டுக்கொண்டு வந்தால் நான்தான் என்று நம்பிவிடுவீங்க. இவ்வளவு முட்டாள்களாக நீங்க இருப்பதால்தான் அந்தத் திருடன் ஆட்டம் காட்டுகிறான். அவனை எப்படியாவது பிடித்து ஜெயிலில் போடு. திரும்பவும் போன் கால் வந்ததுன்னு என்னிடம் வந்தால் நியூசென்ஸ் கேசு போட்டு விடுவேன். கோவிலில் நடந்த அவ்வளவு பெரிய திருட்டை விட்டு விட்டு இப்படிச் சின்ன கேசைப் பிடித்துக் கொண்டு அலைகிறாயே?''

''இனி கோவில் திருட்டைப் பற்றி கவலை என்ன சார்? அந்த நகைகள்தான் நேற்றிரவே கிடைத்து விட்டதே?''

''அவை கில்ட் நகைகள் என்று கேள்விப்பட்டேன்.''

''கில்ட் நகைகள் கிடைத்து விட்டதோடு, இரண்டு வருடங்களுக்கு முன்னால் கொள்ளைபோன ஒரிஜினல் நகைகளும் கிடைத்து விட்டன.''

நரசிம்மன் முகத்தில் சிரிப்பு மறைந்தது. ''ஒரிஜினல் நகைகளும் கிடைத்து விட்டனவா?'' என்றான்.

''ஒரிஜினல் நகைகளைவிட நன்றாக இருக்குங்க. புத்தம் புதுசாய் இப்பொழுதுதான் தங்கத்தை உருக்கிச் செய்தாற்போல் இருக்கு.''

''எப்படி கிடைத்தன? யாரிடமிருந்து கிடைத்தன?'' என்னதான் அடக்கிக் கொள்ள முயன்றாலும் நரசிம்மனின் முகத்தில் பரபரப்பு வெளிப்பட்டது.

''ஒரு மணி நேரத்திற்கு முன்னால்தான் கிடைத்தன.''

''எங்கே?''

''மரத்திலிருந்து விழுந்தன. நான் கடவுளைப் பிரார்த்தனை செய்து கொண்டேன். ''முட்டாள் ஜனங்கள் நிரம்பியுள்ள இந்த டிபார்ட்மென்டை நீதான் காப்பாற்றணும் சுவாமி! உதவி செய்'' என்று வேண்டிக் கொண்டேன். அந்தக் காலத்தில் சுக்ரீவன் ராமனுக்கு உதவி செய்ததுபோலவே குரங்கு ஒன்று மரத்தின் மேலிருந்து தூக்கிப் போட்டு விட்டது. நானும் அதை முதலில் நம்பவில்லை. போலீஸ் ஸ்டேஷனுக்குத் தட்டானை வரவழைத்து பரிசோதிக்கச் சொன்னேன். அத்தனையும் நல்ல தங்கம் என்று உறுதிப்படுத்தினான். மொத்தம் ஐம்பது லட்சம் விலை மதிப்பு வாய்ந்த நகைகள்.''

நரசிம்மன் நம்பாதவன்போல் பார்த்தான். நம்ப முடியாமல் முணுமுணுத்துக் கொண்டான்.

ராணா சொன்னான். ''பாவம், இவ்வளவு நாட்களாக அந்த ஸ்டூவர்ட்புரம் திருடர்களைப் பிடித்துக் கொண்டு நன்றாக அடித்து வந்தோம். இந்த நகைகளை ஏதாவது குரங்கு எடுத்துக் கொண்டு போயிருக்கும் என்ற சந்தேகம் எங்களுக்கு அப்போது வரவில்லை. ஒரு மணி நேரத்திற்கு முன்னால்தான் அவர்களை விட்டு விட்டோம்.''

நரசிம்மன் பதில் சொல்லவில்லை. திகைப்பிலிருந்து அவன் இன்னும் மீளவில்லை.

''போய் வருகிறேன் சார். வீணாக பாதி ராத்திரியில் இரண்டு தடவை உங்களை தொந்தரவு செய்து விட்டேன். அந்த உண்மை விளம்பி இன்னொரு தடவை போன்

செய்தால் அவனைப் பிடித்துக் கம்பி எண்ண வைக்கா விட்டால் என் பெயர் ராணா இல்லை. நீங்க இனி கவலையில்லாமல் தூங்குங்கள்'' என்று அங்கிருந்து போய் விட்டான்.

நரசிம்மன் கதவைச் சாத்திக் கொண்டு உள்ளே போய்விட்டான்.

''எதுக்கு வந்தான் அந்த இன்ஸ்பெக்டர்?'' கேட்டாள் அவன் மனைவி.

''என் குரலில் எவனோ போன் செய்தானாம். கொள்ளை நடந்திருக்கு, உடனே வான்னு. குரலைக்கூட சரியாக அடையாளம் தெரிந்து கொள்ள முடியவில்லை. இவர்கள் எல்லாம் எப்படித்தான் இன்ஸ்பெக்டர் ஆனாங்களோ தெரியவில்லை. அது கிடக்கட்டும், கோவில் நகைகள் கிடைத்து விட்டனவாம்.''

''எந்த நகைகள்? அந்த கில்ட் நகைகளா?''

''பைத்தியமே... கில்ட் நகை இல்லை. ஒரிஜினல் நகைகள்தானாம்.''

''இதென்னது? அந்த நகைகளைத்தான் எப்போதோ நீங்க பங்கு போட்டுக் கொண்டீங்களே?''

''உஷ்! உரக்கச் சொல்லாதே. அதுதான் எனக்கும் புரியவில்லை. இந்த போலீஸ்காரர்கள் கேசை மூடுவதற்காக ஏதாவது தில்லுமுல்லு செய்திருப்பாங்க. அசல் அதேபோல் நகைகளை செய்ய வைத்து எங்கிருந்தாவது கொஞ்சம் தங்கத்தை சம்பாதித்து, அதற்குக் கோட்டிங் கொடுத்திருப்பாங்க. பிரமோஷன்

கிடைக்கணும்னு இப்படிப்பட்ட காரியங்களை நிறையவே செய்திருப்பாங்க.''

''ஆமாம். இல்லாவிட்டால் ஐம்பது லட்சத்தையும், அறுபது லட்சத்தையும் எங்கேயிருந்து கொண்டு வர முடியும் அந்தப் போலீசாரால் மட்டும்? அதுசரி, இவ்வளவு தடவை சொல்லியிருப்பேன் உங்களுக்கு? பாத்ரூமுக்குப் போய்விட்டு வந்தால் கதவைச் சாத்திட்டு வாங்கன்னு.''

''நான் எங்கே போனேன்? நீதான் பார்த்துக் கொண்டு இருந்தாயே? நான் இன்ஸ்பெக்டரோடு பேசிவிட்டு அப்படியே வந்து படுக்கையில் படுத்துக் கொண்டேன்.''

''பின்னே நான்தான் திறந்தேன் என்று சொல்றீங்களா?'' என்று அவள் பாத்ரூம் கதவைத் தாழிடப் போனவள், வீரென்று கத்தினாள். நிபுணன் ஒருவனால் பெயர்த் தெடுக்கப்பட்டாற்போல் செங்கற்கள் பெயர்த்தெடுக்கப் பட்டு பெரிய பெட்டி வெளியே எடுத்துச் செல்லப் பட்டிருந்தது. அங்கே இருந்ததெல்லாம் கொள்ளை யடிக்கப்பட்டிருந்தது.

''ஏனுங்க? நம்ப தங்கம்...''

நரசிம்மன் ஒரே பாய்ச்சலாகக் கட்டிலிலிருந்து குதித்து பாத்ரூமுக்கு வந்து சேர்ந்தான். அங்கே நிலைமையைப் பார்த்ததும் என்ன நடந்திருக்கும் என்று புரிந்து விட்டது. சட்டென்று பக்கத்து அறைக்கு ஓடினான்.

இரும்புப் பெட்டி திறந்து கிடந்தது.

பாத்ரூமுக்குப் பக்கத்தில் சரிந்து விழுந்த மனைவி ராகம் போட்டு பிலாக்கணம் பாடத் தொடங்கினாள்.

அத்தனை நகைகளும், ரொக்கமும் போய் விட்டன. சேர்த்து வைத்திருந்த சொத்து முழுவதையும் கொள்ளையடித்துக்கொண்டு போய் விட்டார்கள். முன் அறைக்கு வந்து போலீசுக்கு போன் செய்தான்.

''ஹலோ... ராணா ஹியர்'' என்று கேட்டது மறுமுனையிலிருந்து.

''நீ சொன்னது போலவே நடந்து விட்டது ராணா. உடனே வரணும்'' என்றான் பதற்றத்துடன்.

''இதோ பார் உண்மை விளம்பி! நீ என்னதான் குரலை மாற்றிப் பேசினாலும் உன் குரலுக்கும் எம்.எல்.ஏ.வின் குரலுக்கும் வித்தியாசத்தைத் தெரியாத அளவுக்கு போலீசார் முட்டாள் இல்லை.''

''உண்மை விளம்பி இல்லை. இங்கே எல்லாமே நாசமாகி விட்டது. எழுபது லட்சம் சொத்து போய் விட்டதுன்னு கம்பிளைன்ட் தந்தால் குரலில் வித்தியாசத்தைப் பற்றிக் கேட்கிறாயே?''

''போன தடவைகூட இதையேதான் சொன்னாய். போய் அங்கே சொன்னபோது அந்த நரசிம்மன் என்னை அதிகப் பிரசங்கி என்றான்.''

''ஐயோ! உனக்கு எப்படித்தான் புரிய வைப்பது என்று தெரியவில்லை. நான்தான் அந்த நரசிம்மன். உடனே புறப்பட்டு வா?''

''இன்னொரு தடவை போய் அவரை எழுப்பினால் செருப்பால் அடித்து விடுவார். எம்.எல்.ஏ. நரசிம்மன் நல்லவராக இருக்கக் கொண்டு இரண்டு தடவை சும்மா இருந்து விட்டார். உன்னைப்பற்றிச் சொன்னபோது

''எவன் அந்த உண்மை விளம்பி? அவனுக்குச் சன்மானம் செய்யணும் போலிருக்கு'' என்றார். இப்படி நள்ளிரவு நேரத்தில் என்னிடம் இப்படிப் பிராக்டிகல் ஜோக் அடித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் அவரிடம் போயிருக்கலாமே. எங்கள் போலீசாரை முட்டாளாக்கிய திறமையை மெச்சி உனக்கு சன்மானம் வழங்குவார்.''

''ராணா!'' மறுமுனையில் கோபமாக கத்தினான் நரசிம்மன். ''நீ வரப்போகிறாயா? என்னை வரச் சொல்கிறாயா?''

''நீயே வா.''

சட்டென்று போனை வைத்து விட்ட ஓசை.

ஐந்தே நிமிடத்தில் நரசிம்மன் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தான். விடியற்காலை நான்கு மணி அப்பொழுது. நரசிம்மனின் முகம் சிவந்து கன்றிப் போயிருந்தது.

உள்ளே வந்ததுமே கோபத்துடன், ''பூனையின் விளையாட்டு எலிக்கு பிராண - சங்கடம் போல இருக்கு உன் நடவடிக்கை. எழுபது லட்சம் சொத்துக்கள் போயிடுத்தேன்னு நான் போன் செய்தால் உடனே விரல் ரேகை நிபுணர்களையும், போலீஸ் நாய்களையும் களத்திற்குள் இறக்காமல் ஜோக் அடிக்கிறாயா?'' என்று கத்தினான்.

ராணா சிரித்து விட்டு, ''நரசிம்மன் சார் தொலை நோக்குடன் இந்த விஷயத்தை முன் கூட்டியே சொல்லியிருக்கிறார். போலீஸ்காரர்கள் முட்டாள்கள். அவன் என்னைப்போல் வேஷம் போட்டுக் கொண்டு

வந்தாலும் நீங்க நம்பி விடுவீங்க. ஜாக்கிரதையாக இருன்னு சொன்னார். உண்மை விளம்பி! உன்னைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு வரவழைப்பதற்காகவே நேராக வந்து கம்பிளைன்ட் தரச் சொன்னேன். செல்லுக்குள் போ. நரசிம்மன் வந்து உன்னை என்ன செய்வது என்று தீர்மானிக்கும் வரையில் லாக்கப்பில் இரு'' என்றான்.

இரண்டு போலீஸ்காரர்கள் வந்து நரசிம்மனை ஆளுக்கொரு பக்கமாக பிடித்துக் கொண்டார்கள். ''நான்தான் நரசிம்மன்'' என்ற அவன் கத்திக் கொண்டிருந்தான். அவனைப் பிடித்து லாக்கப்பில் தள்ளினார்கள்.

வீரதாசு எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தான். நரசிம்மன் வந்து அவன் பக்கத்தில் விழுந்தான்.

13

ஸ்டுவர்ட்புரத்தில் இந்தக் கதை நாடகத்தனமாக நடந்து கொண்டிருந்த அதே சமயத்தில் வேறொரு இடத்தில் அரவிந்த் சௌரஸியாவுக்கும் அப்துல் சத்தாருக்குமிடையே சரித்திரப் புகழ் வாய்ந்த கூட்டம் தொடங்கியது.

சத்தார் சொன்னான். ''நாடு என்றால் பல கலாச்சாரங்கள், சம்பிரதாயங்கள் நிறைந்த கதம்பம். பல விதமாக ஜாதிகள், மதங்களின் சேர்க்கை. முக்கியமாக இந்தியாவைப் போன்ற பரந்த, செக்யுலரிசம் அதிகமாக உள்ள நாட்டில் இது ரொம்ப வெளிப்படையாக தென்படுகிறது.

ஒரு பெரிய நாட்டிற்குப் பக்கத்திலேயே உள்ள சிறிய நாடு தன் இருப்பை கட்டிக் கொள்ள என்றுமே முயற்சி செய்து கொண்டிருக்கும். உங்களுக்கு

இதெல்லாம் தெரியாது என்று சொல்லவில்லை சௌரஸியா சார்! உங்களுக்கு எதிரியான எங்கள் நாடு புனிதமான கொள்கைகளுக்காக, ஒரு நல்ல எண்ணத்துடன் பாடுபடுகிறது என்றுகூடச் சொல்லவில்லை நான். வெறுமே ஸ்டரகுல் ஃபர் எக்ஸிஸ்டென்ஸ். உலகளவில் எங்கள் பலத்தைக் கூட்டிக் கொள்வதற்கும், எங்கள் நாட்டிலுள்ள மக்களை ஈர்ப்பதற்காகவும் நாங்கள் செய்யும் முயற்சி இது. பக்கத்தில் உள்ள நாடு எவ்வளவு துண்டு துண்டுகளாகப் பிரிந்து சிறியதாகிப் போகிறதோ அவ்வளவு தூரம் பாதுகாப்பற்ற உணர்ச்சி எங்களிடமிருந்து விலகிப் போகும்.''

சத்தார் மதுவைக் குடித்துக்கொண்டே தொடர்ந்தான். ''மத்தியப் பிரதேஷ், ராஜஸ்தான் போன்ற மாநிலங்கள் இயற்கையிலேயே ஏழ்மையானவை. பஞ்சாப், அஸ்ஸாம், காஷ்மீர் போன்ற எல்லைப் பிரதேசங்கள் இயற்கையிலேயே வளமானவை. இங்குள்ள செல்வத்தை மத்திய அரசு அங்கே கொண்டுபோய் கொட்டுவதால் நாட்டை சமத்துவம் ஆக்குகிறது. அது நாணயத்தின் ஒரு பக்கம். வீணாக நம் செல்வத்தை ஏழை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கக்கூடிய உரிமை யாருக்கு இருக்கிறது? இந்த எண்ணத்தை இந்த மாநில மக்களுக்கிடையே புகுத்தி விட்டால், அது நெருப்பு பற்றிக் கொள்வது போல் பற்றிக் கொண்டு விடும்.

அது ஒரு வழி. நாளுக்கு நாள் மோசமாகிப் போய்க் கொண்டிருக்கும் மைனாரிட்டி மதத்தினரிடையே இந்த விதமான பாதுகாப்பற்ற உணர்வை விதைப்பது ரொம்ப

சுலபம். இல்லாத புலியைக் காட்டி பயமுறுத்துவது, இருக்கிற புலியைக் காட்டுவதைவிடச் சுலபம். இப்படிப் பட்ட இன்னொரு மாநிலம் எது என்று நாங்கள் யோசித்தபோது எங்களுக்கு உடனே தோன்றியது உங்கள் மாநிலம்தான்.''

அரவிந்த் சௌரஸியா தலையை அசைத்தான். சத்தார் சொல்லப்போவது அவனுக்குத் தெரிந்துதான் இருந்தது. தன் மகிழ்ச்சியை வெளியில் காட்டிக் கொள்ளாமல் அடக்கியபடி கேட்டுக் கொண்டிருந்தான்.

''மாநிலத்தில் நடக்கப்போகும் விளைவுகளைப் பற்றி உங்களுக்குத் தெரிந்ததுதானே? எங்கள் இன்டெலிஜன்ஸ் டிபார்ட்மென்ட் மிக ஆழ்ந்து பரிசீலித்து விட்டு, எங்கள் அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்திருக்கும் ரிப்போர்ட்டின் நகல் இது.'' பிரீப் கேசிலிருந்து காகிதக் கட்டை எடுத்துக் காட்டி விட்டுச் சொன்னான். சுமார் ஐம்பது பக்கங்கள் கொண்ட ரிப்போர்ட் அது.

''தற்போது உள்ள உங்கள் ஹோம் மினிஸ்டர் தான் இருக்கும் கட்சியிலிருந்து விலகி, மத்திய அரசில் பதவியில் உள்ள கட்சியோடு சேர்ந்து கொள்ளப் போகிறர். தற்சமயம் மாநிலத்தில் அதிகாரத்தில் உள்ள கட்சியை டிஸ்மிஸ் செய்ய வைத்து, ஏதோ ஒரு காரணம் காட்டி மறுபடியும் தேர்தல் நடக்கும்படியாக மத்திய அரசு பார்த்துக் கொள்ளும். அப்பொழுது ஹோம் மினிஸ்டர் முதலமைச்சர் ஆகி விடுவார். டில்லியில் இரண்டு நாட்களுக்கு முன்பு நடந்த ஒரு ரகசியக் கூட்டத்தில் இந்தத்

திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. எம்.பி. புலிராஜனை இதற்கு உதவி செய்யும்படியாக கட்சியின் மேலிடம் கேட்டுக் கொண்டது, அமெரிக்கத் தூதர் பதவியை ஆசைக்காட்டி.''

அரவிந்த் சௌரஸியா ஆச்சரியத்தை அடக்கிக் கொண்டான். மிக ரகசியமாக நடந்த அந்தக் கூட்டத்தை கேமராவால் படம் பிடித்தாற்போல் சொல்லிக் கொண்டிருக்கிறான் இந்த வெளிநாட்டு ஏஜென்ட்.

ஒருமைப்பாடுதான் ரொம்ப நல்லது என்று சிறு வயதில் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். பிரிவினை எவ்வளவு தீங்கை விளைவிக்கும் என்பதைக் கண்ணாரக் காண்கிறான். பாலிடிக்ஸ்... பிளடி பாலிடிக்ஸ்... இந்த மோசமான அரசியல்தான் தனக்குக் கோடி கோடியாகச் சம்பாதித்துத் தரப்போகிறது என்று அவனுக்குத் தெரியும்.

சத்தார் சொன்னான். ''விரைவிலேயே ஹோம் மினிஸ்டர் கட்சி மாறி சீப் மினிஸ்டர் ஆகப் போகிறார். அது நடந்தே தீரும். தற்சமயம் ஸ்டுவர்ட்புரம் ஜெயிலில் உள்ள வீரதாசு என்ற ஆளை வெளியே கொண்டு வந்து விட்டால் அந்தக் கட்சி தொண்ணூறு சதவீதம் சீட்டுகளைத் தேர்தலில் சம்பாதித்துக் கொண்டு விடும். அவன் வெளியே வரமுடியாமல் ராணா என்ற இன்ஸ்பெக்டர் தடுத்துக் கொண்டிருக்கிறான். இப்பொழுது இரண்டு கட்சிகளும் இணைந்து விட்டதால் ராணாவால் ஒன்றும் செய்ய முடியாது. வீரதாசு வெளியே வந்தாக வேண்டும்.

மாநில அரசு மாறத்தான் வேண்டும். அதற்கு உங்கள் சப்போர்ட் உண்டு என்று எங்களுக்குத் தெரியும்.''

சௌரஸியா தலையை அசைத்தான்.

''வெளியே இருந்து நாங்கள் முயற்சி செய்வது வேறு. உள்ளே இருப்பவர்கள் எங்களுக்கு உதவி செய்வது வேறு. இரண்டாவது நடக்கும் பட்சத்தில், எங்கள் வேலை சுலபமாகி விடும். இந்த விஷயத்தைப் பற்றி முன்பே உங்களிடம் பேசி, நீங்களும் ஒப்புக்கொண்டு விட்டீர்கள் சௌரஸியா. இப்போ அந்தத் தருணம் நெருங்கி விட்டது என்று நாங்கள் நினைக்கிறோம்.''

''எந்த விதத்தில்?''

''வரப்போகும் தேர்தலில் முதலமைச்சராக ஆகப் போகிறவரை நம் பக்கமாகத் திருப்பிக் கொள்வதன் மூலமாக. உங்களிடம் சுறுசுறுப்பான இளைஞர்கள் சுமார் இருநூறு பேர் வரையிலும் இருக்கிறார்கள். அவர்களைத் தீவிரவாதிகளாக, ஏரியா கமாண்டர்களாக, கமாண்டர் இன் சீஃப்களாக மாற்றி, மாநிலத்தில் மதக் கலவரங்களை வளர்த்து, மாநிலத்தை நாட்டிலிருந்து பிரிக்கும் முயற்சியைத் தொடங்க வேண்டும். எல்லை மாநிலம் மூலமாக இல்லாவிட்டாலும் கடற்கரைப் பிரதேசங்கள் வழியாக உங்களுக்கு உதவி செய்ய எங்களால் முடியும். அதனால்தான் மாநில அரசாங்கத்தின் உதவியும் ஒத்தாசையும் வேண்டுமென்று அழுத்திச் சொல்கிறேன். ஏறத்தாழ ஆறு மாதங்கள் வரையிலும் உங்கள்

முதலமைச்சர் இதைப் பார்த்தும் பார்க்காததுபோல் சும்மா இருந்து விட்டால், இந்த நெருப்பு காட்டுத் தீயாக பிடித்துக் கொண்டு விடும். அதற்குள் மத்திய அரசு விழித்துக் கொண்டு ஒருக்கால் பஞ்சாபைப் போல் அரசாங்கத்தை டிஸ்மிஸ் செய்தாலும், அதற்குப் பிறகும் அந்தப் புகைச்சல் புகைந்து கொண்டே இருக்கும். இதற்கு நீங்கள் டி.கே.நாயுடுவைச் சம்மதிக்க வைக்கணும்.''

''கஷ்டம்'' என்றான் சௌரஸியா. ''மாநிலத்தை நிர்மூலமாக்குவதற்காக, நாட்டை அல்லகல்லோலப் படுத்துவதற்காக அரசியல் தலைவர்கள் எத்தனை திரிசமனம் செய்தாலும் மக்கள் மன்னிப்பார்கள். அதை அவர்களின் தினசரி கடமைகளில் ஒன்றாக பாவிப்பார்கள். ஆனால் தீவிரவாதிகளுடன் கைகோர்த்துக் கொள்வதை, எதிரி நாட்டுடன் சம்பந்தம் வைத்துக் கொள்வதை அவர்களால் மன்னிக்க முடியாது. இன்னும் அவ்வளவு பொறுமை அவர்களிடம் படியவில்லை. அதற்கு இன்னும் ஐந்து பத்து வருஷங்கள் பிடிக்குமோ என்னவோ. ஏதோ கட்சியை மாற்றி அரசாங்கத்தை வீழ்த்த நாயுடுவால் முடியுமோ என்னவோ? தவிர இவ்வளவு பெரிய திட்டத்தோடு எதிரி நாட்டுடன் கைகோர்த்துக் கொண்டு, தீவிரவாதச் செயல்களை செய்யக்கூடிய சாமர்த்தியக்காரன் இல்லை அவன்.''

''மரத்திற்கு உள்ளேயே இருந்து வேரைத் தின்னும் பூச்சி, வெளியே இருந்து கொண்டு வெட்டித் தள்ளும் கோடாலி இரண்டும் ஒன்றுதானே சௌரஸியா?''

''முட்டாள்களான எங்கள் ஜனங்களுக்கு அது தெரியாமல் போனது எங்கள் அரசியல் தலைவர்கள் செய்த அதிர்ஷ்டம். நாட்டில் உள்ள ஒரு கட்சி பந்த் நடத்தி, ரயில்களை எரித்து இரண்டு கோடிகளை நஷ்டமாக்கினாலும் பொறுத்துக் கொள்வார்கள். அண்டை நாட்டு விமானம் கொஞ்சம் ஊடுருவிக் கொண்டு உள்ளே வந்து விட்டாலோ அமர்க்களப்படுத்திடுவாங்க?''

சத்தார் கொஞ்ச நேரம் மௌனமாக இருந்தான். டப் என்று சத்தம் கேட்டது. சத்தார் சொன்னான். ''சரியான தருணம் வந்து விட்டதாக பாவிக்கிறது எங்கள் நாடு. நம் ஆட்களைக் களத்தில் இறக்கி விடணும். நாளை பிள்ளையார் சதுர்த்தியிலிருந்து இந்த சண்டைப் பூசல்களை தொடங்கி விடணும். அமைச்சரின் ஒத்துழைப்பை நீங்கள் சம்பாதித்துக் கொள்ளணும்.''

''என் ஆட்களை களத்தில் இறக்குவதை என்னால் பார்த்துக் கொள்ள முடியும். இனி ஹோம் மினிஸ்டர் விஷயத்திற்கு வந்தால் முயற்சி செய்து பார்க்கிறேன். தேசத் துரோகத்திற்கு எங்கள் நாட்டில் தூக்குத் தண்டனை கொடுப்பார்கள். ஆசைகாட்டினாலும் அவன் இதற்கு மசிவானோ இல்லையோ தெரியாது. ஏற்கனவே பயந்தாங்கொள்ளி வேறு.''

''அவனைப் பற்றிய ரிப்போர்ட்டைக்கூட எங்கள் இன்டெலிஜென்ஸ் டிபார்ட்மென்ட் சம்பாதித்திருக்கிறது மிஸ்டர் சௌரஸியா'' என்று பைலை எடுத்தான் சத்தார்.

''உண்மையில் அவனை இல்லை நீங்க இணங்க வைக்க வேண்டியது, உங்கள் காதலியான அவன் மனைவி காமினியை...''

பக்கத்தில் குண்டு விழுந்தாற்போல் அதிர்ந்து விட்டான் சௌரஸியா.

கா...த...லி.

கா...மி...னி.

அந்த இரண்டு வார்த்தைகளும் அவனை உலுக்கி எடுத்தன.

ஆனால் அனுபவம் மிகுந்தவன் என்பதால் உடனே சுதாரித்துக் கொண்டான்.

''காமினி அதற்கு ஒப்புக் கொள்ளாமல் போகலாம்.''

''அவள் பின்னால் இருந்து கொண்டு கணவனை ஆட்டி வைத்துக் கொண்டிருக்கிறாள் சௌரஸியா. உண்மையில் அவள்தான் இதையெல்லாம் செய்ய வேண்டியது. அவளைப் பற்றிய ரிப்போர்ட்கூட எங்களிடம் இருக்கிறது. அவள் பாம்பைப் போன்றவள். ஆசைக்கு அளவில்லை. அவள் கண்டிப்பாக ஒப்புக் கொள்வாள் என்பது எங்களுடைய அபிப்பிராயம்.''

''பதவி, பணம், ஹோதா, ஆசை, வெறுப்பு எல்லாம் அவளுடைய ரசனைகள். ஆனால் தேசத் துரோகம்? ப்சு... ஒப்புக்கொள்ளாமல் போகலாம்.''

சத்தார் சிரித்தான். ''எந்த நாட்டின் சரித்திரத்திலுமே எந்த நேரத்தில் தேசத் துரோகம், பலனை சாதித்துக் கொண்ட பிறகு சுதந்திரப் போராட்டமாகி விடுகிறது மிஸ்டர் அரவிந்த்! வார்த்தைகளின் மாறுபாடுதான் இது. எத்தனையோ இரவுகளை அவளுடன் கழித்திருப்பீங்க. அவள் உள்மனம், இந்த ரிப்போர்ட்டில் சொல்லியிருப்பதைவிட உங்களுக்குத்தான் அதிகமாகத் தெரிந்திருக்கும்.''

அரவிந்த் சௌரஸியா எரிச்சலை அடக்கிக் கொண்டே ''தெரிந்திருப்பதால்தான் சொல்கிறேன்'' என்றான்.

சத்தார் பையிலிருந்து இன்னொரு உறையை வெளியே எடுத்தான்.

''அவளுக்கு கோஹினூர் வைரத்தை பரிசாகத் தருவதாகச் சொல்லுங்கள். அவள் கணவனைப் பிரதமராக்குவோம் என்று ஆசை காட்டுங்கள். வாக்குறுதிகள்தானே? எவ்வளவு வேண்டுமானாலும் கொடுக்கலாம்.''

''அப்படிப்பட்ட சாம, தானங்களுக்கு அவள் மசியமாட்டாள்.''

''அப்படி என்றால் கடைசி துருப்புச் சீட்டை பயன்படுத்துங்கள்'' என்று உறையைப் பிரித்து அவனுக்கு முன்னால் வைத்தான். விதவிதமான கோணங்களில் போட்டோக்கள். சௌரஸியா காமினி... அவன் முகத்திலிருந்த ரத்தமெல்லாம் வற்றி விட்டது.

''என்ன இது?'' என்று கத்தி விட்டான்.

''மன்னித்துக் கொள்ளுங்கள். எங்கள் இன்டெலிஜென்ஸ் டிபார்ட்மென்ட் ரொம்ப கஷ்டப்பட்டு சேகரித்திருக்கும் போட்டோக்கள்.''

சௌரஸியா இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. சத்தார் மேலும் சொன்னான்.

''எந்தப் பெண்ணுமே தன் வாழ்க்கை ரகசியங்களை மறைத்து வைத்திருக்கத்தான் விரும்புவாள். காமினியைப் போன்ற பெண்களைப் பற்றியோ, கேட்க வேண்டாம். இந்த போட்டோக்களை ஆதாரமாக வைத்துக் கொண்டு நீங்கள் நினைத்ததைச் சாதித்துக் கொள்ளலாம். நீங்கள் அவளை பிளாக்மெயில் பண்ண வேண்டிய தேவையில்லை. இருநூறு கோடி ரூபாய் மதிப்பு கொண்ட தங்கத்தை பேரம் பேசி அவளையும், அவள் கணவனையும் நம் பக்கம் திருப்பிக் கொள்கிறோம். அவ்வளவுதான். இந்த விஷயத்தை உண்மையில் நாங்கள் உங்களோடு பேச வேண்டிய அவசியம் இல்லை. இவ்வளவு விலைக்கு அவர்களோடு நேரடியாகவே பேரம் பேசியிருக்கலாம். ஆனால் காமினியிடம் அவள் கணவன் மூலமாகப் போவதைக் காட்டிலும் உங்கள் மூலமாகப் போவதுதான் நல்லது என்று எங்கள் இன்டெலிஜென்ஸ் டிபார்ட்மென்ட் அபிப்பிராயப்படுகிறது. அந்த போட்டோக்களை நீங்கள் விரும்பினால் பயன்படுத்திக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால் வேண்டாம். அது உங்கள் விருப்பம்.''

அரவிந்த் சௌரஸியாவுக்கு தான் சரியாக எந்த இடத்தில் சிக்கிக் கொண்டு விட்டோம் என்று புரிந்தது.

பண்ணினால்...

வேலை ரொம்ப சுலபம்...

இருநூறு கோடி ரூபாய் லாபம்.

பண்ணாவிட்டாலோ...

விளைவு...

மான மரியாதை காற்றில் பறந்து விடும்.

அவன் எழுந்து சத்தாருடன் கை குலுக்கி விட்டு ''போட்டோக்கள் தேவையில்லை. உங்கள் டிபார்ட்மென்டிலேயே வைத்திருங்கள். காமினியை நம் பக்கமாக திருப்புவதற்கு நான் முயற்சி செய்கிறேன்'' என்றான்.

''தாங்க்ஸ். ரொம்ப சந்தோஷம். காரியம் கூடிய சீக்கிரத்தில் முடிய வேண்டும்.''

''என்ன அவசரம்? மாநிலத்தில் அரசாங்கம் மாற வேண்டாமா?''

''ஆமாம். மாற வேண்டும். மாறணும் என்றால் வீரதாசு விடுதலையாகணும்.''

''அது அவ்வளவு சுலபம் என்று தோன்றவில்லை. எதிர்க்கட்சி ரொம்பப் பலமாக இருக்கிறது. குறைந்த பட்சம் ராணாவை ட்ரான்ஸ்ஃபர் செய்யக்கூடிய நிலையில்கூட இல்லை அரசாங்கம்.''

போகத் திரும்பிய சத்தார் நின்று சிரித்தான். ''அவர்களால் பண்ண முடியாவிட்டால் நானே பண்ணுகிறேன் சௌரஸியா சார். இந்த லோகத்திலிருந்து மேல் லோகத்திற்கு ட்ரான்ஸ்ஃபர்.''

கெஸ்ட் ஹவுஸிலிருந்து இருவரும் ஆளுக்கொரு பக்கமாகப் பிரிந்து போனார்கள். நள்ளிரவு கூட்டம் அந்த விதமாக முடிவடைந்தது.

ஒரு சின்ன போலீஸ் ஸ்டேஷனில், சின்ன இன்ஸ்பெக்டர் ஒரு ரவுடியை அரெஸ்ட் செய்தது, மாநிலத்தைத் தாண்டி, நாட்டில் கட்சிகளை உலுக்கி விட்டு அகில உலகச் சிறப்பைச் சம்பாதித்துக் கொண்டு விட்டது.

ஆனால் அந்த விஷயமெல்லாம் அரவிந்த் சௌரஸியா சொல்லாமலேயே காமினிக்குத் தெரிந்து விட்டது.

சௌரஸியா சத்தார் இருவரும் பேசிக் கொண்டிருந்த போது கேட்ட டப் என்ற சத்தம் அவள் பொறுத்தியிருந்த எலக்ட்ரானிக் ஆட்டோமேட்டிக் டேப்ரிக்கார்டர் மூலமாக வந்ததுதான்.

அவள் யாரையும் நம்ப மாட்டாள்.

கணவனை மட்டுமே இல்லை. காதலனையும் கூடத்தான்.

14

எல்லாம் வேகமாக நடந்து முடிந்து விட்டது. திருபுரா பெட்ரோல் பங்கில் காருக்குப் பெட்ரோல் போட்டுக் கொண்டு புறப்படப் போனபொழுது நான்குபேர் அவளைச் சூழ்ந்து கொண்டு அவளைக் காரோடு சேர்த்துக் கடத்திக் கொண்டு போய் விட்டார்கள். பிறகு போன் செய்து வீரதாசை அறுபத்தி நான்கு மணி நேரத்திற்குள் விடுதலை செய்யாவிட்டால், அந்தப் பெண்ணின் பிணத்தைத் தான் பார்க்க முடியும் என்று சொன்னார்கள்.

மறுநாள் ''எம்.பி.யின் மகள் கடத்திச் செல்லப்பட்டாள்'' என்ற செய்தி எல்லாப் பத்திரிகைகளிலும் முக்கியச் செய்தியாக வெளிவந்தது.

நகரத்தில் எம்.பி.யின் மகளுக்குப் பாதுகாப்பைத் தர முடியாத போலீஸ் இலாக்காவை குற்றம்

சாட்டி மத்திய அரசில் அதிகாரத்தில் இருந்த கட்சி கடையடைப்பிற்கு அழைப்பு விடுத்தது.

மறுநாள் பந்த் வெற்றிகரமாக நடந்தேறியது.

வெற்றிகரமாக என்றால் வீடுகளை எரிப்பது, அட்டூழியங்கள் செய்வது, பஸ்களின் கண்ணாடிகளை உடைப்பது போன்றவை.

ராணா சங்கடத்தில் ஆழ்ந்து விட்டான். சட்டத்தின் கட்டுத் திட்டங்கள் கடுமையாக இருந்தன. தானே நடு நாயகமாக இருந்ததால் எந்த வழிக்குப் போவது என்று புரியாமல் குழம்பினான்.

தீவிரவாதிகள் வைத்திருந்த கெடு முடிய இன்னும் நாற்பது மணி நேரங்கள் இருந்தன.

அன்று மாலையில் பள்ளிக்கூட விளையாட்டு மைதானத்தில் மிகப்பெரிய கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தது, மக்கள் சைதன்ய பரிஷத் என்ற சங்கம். அது புதிய சங்கமாக இருந்தாலும் எம்.எல்.ஏ.க்களும், எம்.பி.க்களும் ஆஜரானதால் அதற்குச் சிறப்பு கூடி விட்டது. இரண்டு வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் ஒரே மேடையில் அமருவதென்றால், அதைக் காட்டிலும் மக்களுக்கு வேறு சுவையான காட்சி இருக்க முடியுமா? அன்று முழுவதும் ஊரெல்லாம் அதே பேச்சாக இருந்தது.

முதலில் நரசிம்மன் பேசினான். ‘‘வீரதாஸ் அவர்களை ஜெயிலில் போட்டு விட்டார்கள். வீரதாசு எப்படிப்பட்ட சமூகச் சேவை செய்கிறவர் என்று எல்லோருக்குமே தெரியும். ஏதோ கொலைக் குற்றத்தை அவர் மீது சுமத்தி, ஜெயிலில் தள்ளி விட்டார்கள். அவர் ஜாமீனில் வர

நினைத்தால் அடுத்த நிமிஷமே வந்து விடுவார். ஆனால் அப்படி வருவதை அவர் விரும்பவில்லை. போலீஸ் டிபார்ட்மென்ட் சாமானிய மனிதர்களை எப்படித் துன்புறுத்துகிறது என்று எடுத்துக் காட்டுவதற்காகவே அவர் லாக்கப்பில் இருந்து வருகிறார்.

அவரை அவமதிப்பதற்காகவே போலீஸ் டிபார்ட் மென்ட்காரர்களே எம்.பி.யின் மகளைக் கடத்தி விட்டு, மக்களுக்கிடையே வீரதாசின் செல்வாக்கைக் குறைக்க முயன்று வருகிறார்கள்.

அவர்கள் குறிப்பட்டிருந்த கெடு தாண்டிய பிறகு எம்.பி. புலிராஜனின் மக்களுக்கு ஏதாவது தீங்கிழைத்து விட்டு இதையெல்லாம் வீரதாஸ்தான் செய்ய வைத்தான் என்று போலீசார் சொல்லக்கூடும். இதைத் தவிர வேறு காரணம் எனக்குப் புலப்படவில்லை.''

பிறகு எம்.பி. புலிராஜன் பேசினான். மைக்கிற்கு முன்னால் நின்று கொண்டு கண்களைத் துடைத்துக் கொண்டான் முதலில். பிறகு தொண்டையைச் செருமிக் கொண்டான். ''என் மகளின் உயிருக்கு தீவிரவாதிகள் வைத்திருக்கும் கெடுவிற்கு இன்னும் நாற்பது மணி நேரம்தான் இருக்கிறது. சுதந்திரப் போராட்டத்தில் உயிரைப் பணயமாக வைத்த தேசபக்தர்களின் வம்சம் எங்களுடையது. என் மகளின் வாழ்க்கை ஒரு லட்சியத் திற்காக நாசமானாலும் நான் வருத்தப்பட மாட்டேன்.

ஒரு தந்தையாக என் இதயத்தில் எரிமலையே வெடித்துக் கொண்டிருந்தாலும், ஒரு அரசியல் தலைவனாக, எம்.பி.யாக இப்படிப்பட்ட மிரட்டல் களுக்கு தலை வணங்க மாட்டேன். உண்மையில் வீரதாசு

எங்கள் கட்சியைச் சேர்ந்தவனே இல்லை. ஆனால் ஒரு சக மனிதனை போலீசார் அநியாயமாக அரெஸ்ட் செய்தால், அங்கே கட்சிகளுக்கும், ஜாதிகளுக்கும் அவசியம் இல்லை. மனித நேயம்தான் அவசியம். என் மகளை போலீசார்தான் கிட்னாப் செய்தார்கள் என்று சொன்னால் முதலில் என்னால் நம்ப முடியவில்லை. ஆனால் எம்.எல்.ஏ. நரசிம்மனின் பிரசங்கத்தைக் கேட்ட பிறகு அது உண்மைதான் என்று தோன்றுகிறது.

வீரதாஸால் எந்த நிமிஷத்தில் வேண்டுமானாலும் லாக்கப்பிலிருந்து வெளியே வந்து விட முடியும். ஆனால் அவர் வர விரும்பவில்லை என்று புரிந்தது. பின்னே இந்த கிட்னாப் எதற்காக? அவருடைய ஆட்சிகளுக்கு இப்படி கிட்னாப் செய்து மிரட்ட வேண்டிய தேவையே இல்லை. போலீசாரின் கொடுமையைப் பற்றி மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்காக ஜெயிலையே சத்தியாகிரகச் சாலையாக மாற்றிக் கொண்டிருக்கும் மகான் அவர். அதனால்தான் அவர் எங்கள் கட்சியைச் சேர்ந்தவராக இல்லாத போதிலும் அவருக்கு இந்தக் கூட்டத்தில் கையெடுத்துக் கும்பிடுகிறேன்.''

சபையில் கைத்தட்டல் ஓசை.

புலிராஜன் கொஞ்சம் நிறுத்தி விட்டு, தொடர்ந்தான். ''நாளைக்கு என் மகள் பிணமாக வெளிப்படலாம். அவள் உடல் கண்டந்துண்டமாக வெட்டப்பட்டு எந்தக் கால்வாய்க் கரையிலாவது விழுந்து கிடக்கலாம். நான் வருத்தப்படுவது போலீசாருக்கும், அரசியலுக்கும் இடையே சிக்கிக் கொண்டு ஒரு பெண் அநியாயமாக பலியாகப் போகிறாளே என்றுதான். அவள் என் மகள்

என்று இல்லை. நாளைக்கு உங்கள் மகளுக்கு இந்த நிலை வரலாம். உங்கள் மனைவிக்கு இந்த கதி நேரலாம்.

பின்னே இதைப் பார்த்துக் கொண்டு சும்மாயிருந்து விடுவதா? மக்களுக்கு இடையே விழிப்புணர்வு வரவே வராதா? வெறும் பார்வையாளர்களாக இருந்து விடுவதா? உங்கள் அனைவரைப் பற்றியும் நான் அறிவேன். நீங்கள் போராட்டத்தைக் கொண்டு வருவீங்க. நமக்கு இருப்பது நாற்பது மணி நேரம்தான். ஒவ்வொரு விநாடியும் விலை மதிப்பு வாய்ந்தது. எழுச்சியடையுங்கள். கட்சிகளுக்கும், அரசியலுக்கும் அப்பாற்பட்டு எழுச்சியுறுங்கள்.''

மக்கள் எழுச்சியடைந்து நடக்கவில்லை. சிறு தலைவர்களும், இரு கட்சிகளையும் சேர்ந்த தொண்டர்களும் அவர்களை நடத்திச் சென்றார்கள். ரவுடிகள் அவர்களோடு சேர்ந்து கொண்டார்கள். அரை மணிக்குள் அறுபது லட்சம் சொத்து நாசமாக்கப்பட்டது. அடிதடி சண்டைகளும், கலகங்களும் நிகழ்ந்தன. வீடுகள் பற்றி எரிந்தன. மத்திய அரசாங்கம் தொலைக்காட்சி ஊழியர்களை அனுப்பி வைத்தது. அன்றிரவு செய்திகளில் ரொம்ப நேரம் அந்தக் காட்சிகளையே காட்டினார்கள். அமைதிப் பாதுகாப்பு விஷயத்தில் மாநில அரசு எப்படித் தோல்வியடைந்தது என்று சொல்வதில் மத்திய அரசு வெற்றியடைந்து விட்டது.

முதலமைச்சருக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. ஹோம் மினிஸ்டரிடம் யோசனை கேட்டார். ''அந்த இன்ஸ்பெக்டரை டிரான்ஸ்ஃபர் செய்து விட்டு வீரதாஸிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டு விட்டால் இந்த கண்டத்திலிருந்து தப்பித்து விடலாம் என்கிறாயா?''

''அங்கே நடக்கும் ரகளையில் மக்கள் அரசியலையே நம்பவில்லை. அந்த இன்ஸ்பெக்டர் செய்ததுகூட சரிதான் என்று நம்புகிற மக்களும் இருக்கிறார்கள். அவர்களையும் நம்ப வைக்காமல் போனால் கஷ்டம்'' என்றார் ஹோம் மினிஸ்டர்.

''பின்னே என்ன செய்யலாம்?''

''ஒரு அங்கத்தினரைக் கொண்ட கமிஷனைப் போடுவோம்'' என்று யோசனை சொன்னான் ஹோம் மினிஸ்டர். ''நானே அந்த கமிஷனுக்கு மெம்பராக இருக்கிறேன்.''

உடனே அறிக்கை வெளி வந்தது.

''வீரதாசை லாக்கப்பில் போட்டது சம்பந்தமாக அரசாங்கம் கமிஷனை நியமித்துள்ளது'' என்று.

ராணா நடந்து கொண்டிருந்த விஷயத்தை எல்லாம் கவனித்துக் கொண்டுதான் இருந்தான். அடிக்குமேல் அடி. எல்லாப் பக்கங்களிலிருந்து புகார்கள். உள்ளூரில் இரண்டு கட்சிகளும் ஒன்று சேர்ந்து கொண்டு விட்டதால், ரவுடிகள் மூலமாக தீவிரமான நிலைமையை எதிர்த்து நிற்க வேண்டியிருக்கும். டி.எஸ்.பி. எதுவும் தெரியாதது போல் நடித்துக் கொண்டிருந்தார். மக்களுக்கிடையே இரக்கம் இருந்தது. ஆனால் அதனால் லாபம் இல்லை. தடியெடுத்தவன்தான் தண்டல்காரன். ஒரு திட்டமிட்ட முறைப்படி தனக்கு எதிர்ப்பதமாக நடந்து கொண்டிருப்ப தாக உணர்ந்தான். வீரதாசை ரிமாண்டிற்கு அனுப்ப வேண்டிய நாள்கூட நெருங்கி விட்டது. சீக்கிரத்தில் விட்டு விட்டு கைக்கழுவி கொள்வது ஒரு வழி. இரண்டில் ஒன்றை தெரிந்து கொள்வது இன்னொரு வழி.

ஒவ்வொரு மனிதனாலும் போராட முடியும். ஆனால் எவ்வளவு நேரம் போராட்டத்தைத் தொடர முடியும் என்பது அவனுடைய மன தைரியத்தைப் பொறுத்திருக்கும். அந்தப் போராட்டம் ஆட்களுடன்தான் இருக்க வேண்டும் என்று இல்லை. சூழ்நிலையோடு போராடுவது மனிதர்களோடு போராடுவதைவிடப் பயங்கரமானது. மனம் நழுவி விடாமல் ஊன்றி நிற்பதற்கு நிறைய துணிச்சல் வேண்டும்.

ஹோம் மினிஸ்டர் உடனே புறப்பட்டு வந்தார். எம்.பி.யின் மகளை எந்த விதமாகவும் துன்புறுத்த வேண்டாம் என்று தீவிரவாதிகளுக்கு வேண்டுகோள் விடுத்து அறிக்கை விட்டார். அடுத்த ஒரு மணி நேரத்திற்குள் கமிஷன் தொடங்கப்படவிருக்கிறது என்று பத்திரிகையாளர்களிடம் சொன்னார்.

போலீஸ் ஸ்டேஷனின் நடு ஹாலில் எம்.எல்.ஏ., எம்.பி., ஹோம் மினிஸ்டர், டி.எஸ்.பி. முதலியவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். வீரதாசைக்கூட ஒரு பக்கத்தில் உட்கார வைத்திருந்தார்கள்.

ராணா நின்று கொண்டிருந்தான்.

''எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் நாம் இந்த விசாரணையை முடித்து விட்டு, எம்.பி.யின் மகளைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்'' என்றார் ஹோம் மினிஸ்டர்.

ராணா சிரித்தான்.

''ஏன் சிரிக்கிறாய்?''

''புலிராஜன் சாரின் மகளை யாருமே கிட்னாப் செய்யவில்லை என்றும், எம்.பி. தன் மகளைத் தானே மறைத்து வைத்து விட்டு, நாடகமாடுகிறார் என்று இங்குள்ள நம் ஐந்து பேருக்குமே தெரியும். நமக்குள் இந்த ஹிப்போகிரஸி எல்லாம் எதுக்கு சார்? விஷயத்திற்கு வாங்க'' என்றான்.

''நீ ரொம்ப கெட்டிக்காரன்'' என்றார் ஹோம் மினிஸ்டர்.

தன் புத்திசாலித்தனமெல்லாம் மக்களைக் காப்பாற்று வதைவிட தலைவர்களை எதிர்த்து நிற்பதிலேயே கழிந்து போய்க்கொண்டிருக்கிறது என்று நினைத்துக் கொண்டான் ராணா. ''இனி விசாரணையைத் தொடங்கலாமா?''

ராணாவின் மனம் கொதித்தெழுந்தது. அது தன் போலீஸ் ஸ்டேஷன். தன் சீட்டில் ஹோம் மினிஸ்டர் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். அவருக்கு எதிரே எம்.பி., எம்.எல்.ஏ.வும் உட்கார்ந்திருந்தார்கள். பக்கத்தில் வீரதாசு உட்கார்ந்திருந்தான்.

அவன் நின்று கொண்டிருக்கிறான்.

அந்தக் காட்சி ஒரு ஓவியன் வரைந்த சித்திரம் போல் இருந்தது.

''உன் தந்தையின் பெயர்?''

''ராமஸ்வாமி.''

''என்ன வேலை செய்கிறார்?''

''ஸ்டூவர்ட்புரம் சீர்திருத்தக் கும்பலில் ஒருவர். அரசாங்கம் தந்த நிலத்தை உழுது கொண்டே வாழ்க்கைப் பாதையை மாற்றிக் கொண்டவர்.''

''ஓஹோ... அப்படி என்றால் நீ ஒரு திருடனின் மகன் என்று சொல்லு.''

''நான் ஒரு போலீஸ் ஆபீசர் சார்.''

''ராமஸ்வாமியைத் தூக்கில் போட்டதாக ரிக்கார்டு களில் இருக்கிறது.''

''ஆமாம் சார்.''

''கோவில் காவலர்களைக் கொன்ற குற்றத்திற்காக.''

''ஆமாம் சார். ரிக்கார்டுகளில் அப்படித்தான் இருக்கிறது.''

''அரசாங்கத்திடமிருந்து நிலத்தை வாங்கிக் கொண்டு மறுபடியும் கொலை செய்யத் தொடங்கி விட்டாரா?'' வீரதாஸ் கேட்டான். அவன் முகத்தில் சிரிப்பு தெரிந்தது.

ராணா ஆவேசத்தை அடக்கிக் கொண்டான். ''என் தந்தை கொலை செய்யவில்லை சார். கோவிலில் கொள்ளையடித்தவர்கள், சாட்சியாக இருந்த என் தந்தையை அடித்து மிரட்டி கொலைக் குற்றத்தை ஒப்புக் கொள்ளும்படி செய்து விட்டார்கள். ஸ்டூவர்ட்புரம் திருடர்களுக்கு இப்படிப்பட்ட தண்டனைகள் வழக்கம் தான்.''

''இதை எல்லாம் உனக்கு யார் சொன்னார்கள்?'' எம்.எல்.ஏ. கேட்டான்.

''ராமாச்சாரி சொன்னான். மரணவாக்கு மூலத்தில் அதையெல்லாம் எழுதிக் கொண்ட பிறகு கையெழுத்துப் போட்டான்.''

''உண்மை விஷயம் அது இல்லை ராணா. நடந்ததை நான் சொல்கிறேன் கேள். உன் தந்தை கோவில் காவலர்களைக் கொன்றது உண்மைதான். ஆனால் நகைகள் கொள்ளையடிக்கப் போய் இல்லை. காவல் காரனைத்தான் கொல்லப்போனார். காவல்காரனுக்கு ஒரு பெண்ணோடு சம்பந்தம் இருந்தது. அந்தப் பகைமையில் கொல்வதற்காகப் போனார். அதனால்தான் நகைக் கொள்ளை அன்றைய தினம் நடக்கவில்லை.''

''பாதிக் கொள்ளை நடந்தது. ஒரிஜினல் நகைகளை எடுத்து விட்டு டூப்ளிகேட் நகைகளை போட்டு விட்டார்கள். அதனால்தான் யாருக்கும் சந்தேகம் வரவில்லை.''

''அப்படி என்றால் அன்று நீ போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு வந்த நகைகள் டூப்ளிகேட்டா?''

''இல்லை. ஒரிஜினல்தான்.''

''எங்கே கிடைத்தன?''

''எம்.எல்.ஏ. நரசிம்மன் வீட்டில்.''

''பின்னே எம்.எல்.ஏ.வை ஏன் அரெஸ்ட் செய்ய வில்லை?''

''அப்பாவிகளான ஸ்டுவர்ட்புரம் திருடர்களை விடுதலை செய்வதுதான் என் நோக்கமே தவிர, நரசிம்மனை அரெஸ்ட் செய்வது இல்லை.''

''இதையெல்லாம் நாங்கள் எப்படி நம்புவது?''

''ராமாச்சாரியின் வாக்குமூலத்தில் இதெல்லாம் இருக்கிறது.''

''ராமாச்சாரி வாக்குமூலம் தரும்போது பக்கத்தில் மேஜிஸ்ட்ரேட்டை வைத்துக் கொள்ளணும் என்று உனக்குத் தெரியாதா?''

''மேஜிஸ்ட்ரேட்டிடம் நான் போனேன். கார் இருந்தால்தான் வர முடியும் என்றார். அதற்குள் ராமாச்சாரியின் நிலைமை மோசமாகி விட்டது. அங்கே போக வேண்டியிருந்தது.''

(மேஜிஸ்ட்ரேட் வர மறுப்பது உண்மையில் நடக்கும் சம்பவம்தான்.)

''ராமாச்சாரியின் கையெழுத்துத்தான் இது என்று எப்படி நம்புவது?''

ஆழ்ந்த நிசப்தத்தில் திடீரென்று குண்டு ஒன்று வெடித்தாற்போன்ற கேள்வி. செங்கல்லுக்கு மேல் செங்கல்லாக வைத்து கட்டிக் கொண்டே போன கட்டிடம் திடீரென்று இடிந்து விழுந்து விட்டாற்போல்... மயான நிசப்தம் ஏற்படுத்திய பிரம்மாஸ்திரம். அந்தக் கேள்வி எதிரியை நன்றாகத் தாக்கிவிடும் என்று முன்பே அறிந்திருந்த வீரதாஸின் உதட்டில் குறுநகை நெளிந்தது. கொஞ்ச நேரம் எல்லோருக்குமிடையே நிசப்தம். பிறகு ஹோம் மினிஸ்டர் சொன்னார்.

''நீ சொன்ன எதுவும் நம்பத் தகுந்ததாக இல்லை மிஸ்டர் ராணா. கோவில் நகைகளை டூப்ளிகேட் என்றாய். ஒரிஜினல் நகைகள் எம்.எல்.ஏ. நரசிம்மன் வீட்டில் கிடைத்தது என்றாய். ஆனால் எம்.எல்.ஏ.வை அரெஸ்ட் செய்யவில்லை என்றாய். ராமாச்சாரியின் வாக்கு மூலத்திலுள்ள கையெழுத்திற்கு உறுதி சான்று எதுவும்

இல்லை. அதோடு நீ உன் ஸ்டூவர்ட்புரம் திருடர்களை ரிலீஸ் செய்த முறைகூட ஏற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் இல்லை. அவர்களை ஒரு குற்றத்திற்காக அரெஸ்ட் செய்திருக்கும்போது பொருள்கள் கிடைத்துவிட்ட காரணத்தால், அவர்களை ரிலீஸ் செய்வது ஒரு போலீஸ் ஆபீசர் செய்யக்கூடிய காரியம் இல்லை. வீரதாஸ் போன்ற ஆளை நீ கேவலம் தனிப்பட்ட விரோதத்தால் லாக்கப்பில் வைத்தாய். அவனை லாக்கப்பில் போட்டு துன்புறுத்து வதற்காகவே ஒரு வாரத்திற்கு மேல் உன் ஆதீனத்தில் வைத்துக் கொள்வதற்கு அனுமதியைப் பெற்றுக் கொண்டாய்.''

''பொய்'' என்றான் ராணா. ''வீரதாஸ் இந்த ஊரிலும், மாவட்டத்திலும் பெயர் பெற்ற குண்டர் தலைவன். அவனை விடுதலை செய்தால் சாட்சியங்களை தாறுமாறு செய்வதில் கெட்டிக்காரன். அதுதான் காரணம். அவ்வளவு தானே தவிர அவன் மேல் எனக்குத் தனிப்பட்ட முறையில் விரோதம் என்ன இருக்க முடியும்?''

தன்னைக் குண்டர் தலைவன் என்று குறிப்பிட்டதற்கு வீரதாஸ் வருத்தப்பட்டதாகத் தெரியவில்லை. லேசாக சிரித்துக் கொண்டே ''உன் தந்தை கோவில் காவலனை ஏன் கொன்றார் என்று எனக்குத் தெரியுமாதலால்... உன் தந்தை தூக்குமேடை ஏறுவதற்கு நான்தான் காரணம் என்பதால்'' என்றான்.

''கோவில் காவலனைக் கொன்றது நீதான். என் தந்தை யில்லை.''

''உண்மையான காரணம் உனக்குத் தெரியாது.''

பத்திரிகை நிருபர்கள் எழுதிக் கொண்டிருந்தார்கள்.

''பின்னே என்ன காரணம் என்கிறாய்?'' ராணா கேட்டான்.

வீரதாஸ் ஓரக்கண்ணால் பத்திரிகை நிருபர்களைப் பார்த்தான். ஏதுமறியாத முயல்களை வேட்டையாடும் போது, அம்பை குறி வைத்தது ஏவும்போது வேடன் உதடுகளில் நெளியும் விஷப் புன்னகை அவன் உதடுகளில் தோன்றியது. மற்றொரு முறை நிருபர்களை நோக்கித் திரும்பி ''உன் தாய்க்கும் கோவில் காவலனுக்கும் சம்பந்தம் இருந்ததால்'' என்றான்.

பூமி வில்லில் நாணைக்கட்டி, ஆகாயம் வரைக்கும் தூக்கிப் பிடித்துக் கொண்டு இழுத்து, அம்பை விட்டு சோகத்தையெல்லாம் திரட்டிக் கொண்டு படீரென்று வெடித்தாற்போல் இதயம் வெடிக்க, திக்குத் தெரியாத காட்டில் நின்று கொண்டிருந்தாற்போன்ற நிலைமை.

''பொய்!'' என்ற கத்தலுக்கு பூமியே அதிர்ந்தது. சலனம் ஒடுங்கி சோகமாக குமுறியது கடல்.

வீரதாஸ் மெதுவாகச் சொன்னான். ''பொய் என்று நீ சொல்கிறாய். உண்மை என்று நான் சொல்கிறேன். ராமாச்சாரி மரண வாக்குமூலம் உண்மை என்று நீ சொல்லுவாய். பொய் என்று நான் சொல்லுவேன்.'' சிரித்தான். ''ஆனால் நான் சொல்வதுதான் உண்மை என்று மக்கள் நம்புவார்கள். ஏனென்றால் திருடனின் மனைவி, புருஷன் ஜெயிலில் இருக்கும்போது விபசாரம் செய்வது, கள்ளத் தொடர்பு வைத்துக் கொள்வது சகஜம்தான் என்பதால்.''

ராணா ஓடினான். அவ்விருவருக்குமிடையே பத்தடி தூரம்தான் இருந்தது. ஆனாலும் சரி, எழுந்து அம்பாக ஓடினான்.

சண்டமாருதம்போல் போய் அதே வேகத்தில் வீரதாஸை நாற்காலியிலிருந்து தூக்கித் தள்ளினான். அவன் தலை ஜன்னல் கம்பிகளில் பட்டு பட்டென்று சத்தம் கேட்டது. வேறு யாராவதாக இருந்தால் அந்த நிமிஷமே மரணமடைந்திருப்பார்கள். வீரதாஸாக இருக்கவே சமாளித்துக் கொண்டான். ஆனால் அவன் எழுந்து கொள்ள முயற்சி செய்யவில்லை. சாதிக்க வேண்டியதைச் சாதித்து விட்டோம் என்பதுபோல் பேசாமல் இருந்தான். உதட்டில் சிரிப்புகூட இன்னும் அப்படியே இருந்தது. ஹோம் மினிஸ்டரின் பாடி கார்டுகள் போய் ராணாவைப் பின்னால் இழுத்துப் பிடித்துக் கொண்டார்கள். ராணாவுக்கு மூச்சிரைத்தது. அவன் மனதில் எந்த இடத்தில் அடிக்க வேண்டுமோ சரியாக அந்த இடத்தில் அடி கொடுத்து விட்டான். சரியாக இந்த அவகாசத்திற்காகவே இவ்வளவு நாளாக லாக்கப் இருட்டறையில் தன் குற்றத்தை ஒப்புக் கொண்டு இருந்தாற்போல் சிரித்துக் கொண்டிருந்தான்.

''பத்திரிகை நிருபர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போது, ஹோம் மினிஸ்டருக்கு முன்னால், லாக்கப்பில் இருக்கும் ஒரு நபரை அடிப்பது மன்னிக்க முடியாத குற்றம். உன் திமிரையும், கைதிகளிடம் உனக்கு இருக்கிற தாழ்வான அபிப்பிராயத்தையும் அது காட்டுகிறது'' என்றார் ஹோம் மினிஸ்டர். ''உன் தந்தை ஒரு ஸ்டுவர்ட்புரம் திருடன். உன் சகாக்கள் அத்தனைபேருமே திருடர்கள். அவர்கள் கோவில் நகைகளைக் கொள்ளை

யடித்தார்கள். அந்தக் குற்றத்திற்காக அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். இனி உனக்கு வேறு வழியில்லாமல் நகைகள் திருப்பிக் கிடைத்து விட்டாற்போல் நடித்து உன் சகாக்களை விட்டு விட்டாய். ராமாச்சாரியின் மரண வாக்கு மூலத்திற்கு சாட்சிகள் யாரும் கிடையாது. மேஜிஸ்ட்ரேட் வர மறுத்ததாக நீ சொல்கிறாய். அதற்காக அவர் உன் மீது மான நஷ்ட வழக்குப்போடலாம். வீரதாஸின் செல்வாக்கைக் குறைப்பதற்காக நீ அவனை அரெஸ்ட் செய்தாய் என்று நன்றாக விளங்கி விட்டது.

அவரை மேலும் தொல்லையில் ஆழ்த்துவதற்காக நீ எம்.பி.யின் மகளைக் கடத்தி, வீரதாசுக்கும் தீவிரவாதி களுக்கும் சம்பந்தம் இருப்பதாகத் தவறான செய்தியைப் பரப்பினாய். இந்தக் காரணத்தால், உன்னை சஸ்பென்ட் செய்கிறேன். உன் மீது மேஜிஸ்ட்ரேட் மான நஷ்ட வழக்குப் போடுகிறார். எங்கள் எல்லோருக்கும் முன்னால் கை நீட்டி அடித்ததற்காக வீரதாஸ் உன் மீது கிரிமினல் கம்பிளைன்ட் கூடத் தர முடியும்.

யு ஆர் சஸ்பென்டெட் ஹியர் அண்ட் நௌ இட் செல்ஃப்.

மன்னிப்போடு வீரதாஸை விடுதலை செய்வதற்கு உத்தரவுகளைப் பிறப்பிக்கிறேன்.''

ஒரு கையால் ராணாவுக்கும், மறு கையால் வீரதாசுக் கும் ஆர்டர்களைக் கொடுத்தார் ஹோம் மினிஸ்டர்.

வெளியே எல்லோருக்கும் இந்த விஷயம் தெரிந்து விட்டது போலும். ''வீரதாசுக்கு ஜை!'' என்று எவனோ கத்தினான். ரவுடி ஒருவன் உள்ளே வந்து ஆளுயர

மாலையை வீரதாசுக்கு அணிவித்தான். நான்கு பேர் அவனை கைகளால் தூக்கிக் கொண்டு வெளியே போனார்கள். லாரிகளில் ஊர்வலம் தொடங்கி விட்டது.

வெளியே இருள் பரவிக் கொண்டிருந்தது. போலீஸ் ஸ்டேஷனில் இன்னும் இருட்டாக இருந்தது. ராணா தனியாக உட்கார்ந்திருந்தான்.

தொலைவில் யாரோ குடித்து விட்டுப் பாடிக் கொண்டிருந்தார்கள்.

15

அவள் ரொம்ப நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தாள். அவளுக்கு முன்னால் டேப்ரிக் கார்டர் இருந்தது.

காமினி ஒன்றும் பெரிய தேச பக்தை இல்லை. நாட்டிற்காக உயிரை விடும் அளவுக்கு தியாக மூர்த்தியும் இல்லை. ஆனால் டேப்ரிக்கார்டரிலிருந்த விஷயங் கள் அவளை உலுக்கி விட்டன.

மனிதர்களுக்குள் படிந்திருக்கும் சுயநலத்தைப் பற்றி அவளுக்குத் தெரிந்த அளவிற்கு வேறு யாருக் கும் தெரிந்திருக்காது என்று சொன்னால் அதில் மிகை எதுவும் இல்லை.

சாதாரணமாக சுயநலத்தைப் பற்றி ஆண்களைவிட பெண் களுக்குத்தான் அதிகம் தெரிந் திருக்கும். அழகான பெண்களாக இருந்தாலோ இன்னும் அதிகம். பெரும் புள்ளியாக இருந்து

விட்டாலோ சொல்லத் தேவையில்லை. பெண்கள் பெரும் புள்ளிகளாகத் திகழ்வது இரண்டு துறை களில்தான். ஒன்று சினிமாத்துறை, மற்றொன்று அரசியல். சினிமாத் துறையில் பெண்களுக்கு நிறைய தொல்லைகள் இருக்கும் என்பது பலரின் கருத்து. முதலில் சில நாட்கள் அவ்வாறு இருந்தால் இருக்கலாமே தவிர, ஒருமுறை அவள் தன் திறமையை நிரூபித்து விட்டால், பிறகு யாருக்கும் அடங்கியிருக்கத் தேவையில்லை. அதற்குள் அவள் அந்தத் தொல்லைகளுக்குப் பழக்கப்பட்டுப் போயிருந்தால் அது வேறு விஷயம்.

அரசியல் அவ்வாறு இல்லை. வெளியில் தெரியாத புதை மணல் அது. அதில் முன்னுக்கு வரவேண்டும் என்றால் திறமை, புத்திசாலித்தனம், படிப்பு அவசிய மில்லை. பொதுஜனத் தொடர்பும், லௌகீகமும் தெரிந்திருந்தால் போதுமானது. இவை எல்லாவற்றையும் விட மேலிடத்திலிருந்து ஆதரவும், செல்வாக்கும் தேவை. ஒரு பெண்ணிற்கு இதெல்லாம் எப்படி வரும்?

காமினிக்கு அரசியல், சினிமா இரண்டிலுமே அனுபவம் உண்டு. அதனால்தான் மனிதர்களின் சுய நலத்தைப் பற்றி அவளுக்குத் தெரிந்த அளவுக்கு வேறு யாருக்கும் தெரியாதோ என்னவோ. அவள் சினிமாத் துறையைவிட அரசியலைத்தான் அதிகமாக வெறுத்தாள். அழகான பெண்கள் தம் மேல் மட்டத்தில் உள்ளவர்களின் ஆதரவுக்காக மற்ற பெண்களை படுகுழியில் தள்ளுவதை அவள் கண்ணாரக் கண்டிருக்கிறாள். வேலைக்காக வருபவர்கள், மாற்றலுக்காக வேண்டுபவர்கள், அப்பொழுதுதான் அரசியலில் சேர்ந்தவர்கள், வேலை வெட்டி இல்லாத பெரிய இடத்துப் பெண்கள், இவர்களுக்

கிடையே அறிமுகங்கள்... புதிய நட்பு... விபசார விடுதியில் இருக்கும் தலைவிகளைப்போல் சில பெண்கள் மாறி வருவதையும் கண்டாள். அமைச்சர்களில் சிலர் எதிர்பார்த்ததைக் காட்டிலும் தரக்குறைவாக நடந்து கொள்வதை அவள் அறிவாள். அவளுக்காக எத்தனையோ பேர் தூது கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படி கொண்டு வந்தவர்களும் பெண்களாகவே இருந்ததுதான் விசேஷம்.

இந்தப் பெண்கள் புரோக்கர்கள் இல்லை. நல்ல பதவியில் இருப்பவர்கள். கட்சியில் டிக்கெட்டை எதிர் பார்த்துக் கொண்டிருப்பவர்கள். கட்சி நியமிக்கும் பதவி-- களுக்காக ஆசைப்படுபவர்கள்.

சினிமாத் துறையில் மஞ்சள் பத்திரிகை இருப்பது போல் அரசியலுக்கும் இருந்திருந்தால் எத்தனையோ பேர்களின் மானக்குறைவான வாழ்க்கை ரகசியங்கள் வெளிப்பட்டிருக்கும்.

அப்படிப்பட்ட காமினி இப்பொழுது தன் வாழ்க்கை யின் மிகக் கடினமான அதிர்ச்சியை ஜீரணித்துக் கொள்ள வேண்டிய நிலையில் இருந்தாள். கொஞ்ச நேரத்திற்கு முன்னால்தான் அரவிந்த் சௌரஸியா அவளிடம் இந்த பிரபோசலை வைத்தான். அவளுக்கு முதலில் புரியவில்லை. தன் கணவன் முதலமைச்சர் ஆகப் போகிறான் என்பது அவளுக்குத் தெரிந்த விஷயம்தான். அதற்கான முயற்சியை அவளேதான் மேற்கொண்டாள். இப்பொழுது சௌரஸியா இந்த பிரபோசலை அவளிடம் கொண்டு வந்திருக்கிறான். அந்தச் சமயத்தில் அவள் டேப்பைக் கேட்டிருக்கவில்லை. அவளுக்கு அவன் சொன்னது எதுவும் புரியவில்லை.

''உன் கணவன் இந்த மாநிலத்தின் முதலமைச்சர் ஆன பிறகு நீ என்ன செய்யப் போகிறாய்?'' என்று கேட்டான்.

அவள் சிரித்து விட்டு, ''வேறென்ன செய்வேன்? முதலமைச்சரின் மனைவியாவேன்'' என்றாள்.

''சினிமாவில் நடிக்க மாட்டாயா?''

''ஹோம் மினிஸ்டரின் மனைவியாக இருந்தபோது நடிக்கவில்லையா? அதேபோல் நடித்து விட்டுப் போகிறேன்.''

''உன் கணவனால் நாடு உருப்படுமா?''

அவள் சிரித்துக் கொண்டே, ''எந்த முதலமைச்சரால் நாடு உருப்பட்டிருக்கிறது?'' என்றாள்.

''சில புரட்சிகரமான மாற்றங்களை நீ கண்டிப்பாகக் கொண்டு வரணும். அது உன்னால்தான் முடியும்.''

''எந்த விதமான மாறுதல்கள்?''

''உதாரணமாக நாட்டிலிருந்து மாநிலத்தைப் பிரிப்பது.''

அவள் அதிர்ந்து விட்டாள். முதலில் அவன் ஜோக் அடிக்கிறானோ என்ற நினைத்தாள். ஆனால் கொஞ்ச நேரத்தில் அவன் உண்மையாகத்தான் இதையெல்லாம் சொல்கிறான் என்று புரிந்து விட்டது. அவள் தன் மனதில் ஏற்பட்ட கலவரத்தை வெளியில் காட்டிக் கொள்ளாமல் கேட்கத் தொடங்கினாள்.

பிள்ளையார் சதுர்த்தி விழாவில் மதக் கலவரத்தை எப்படித் தூண்டி விடுவது, அங்கிருந்து அணுவணுவாய்

எப்படி ரகளையை அதிகரித்துக் கொண்டே போவது, அதற்கு முதலமைச்சர் திரைக்குப் பின்னால் இருந்து கொண்டு நாடகத்தை நடத்தினால் மாநிலம் பிரிந்து போன பிறகு ஏற்படும் லாபங்கள் என்னென்ன என்றும் விவரித்துச் சொன்னான்.

அவன் சொன்னதைக் கேட்டுக் கொண்டே அவன் யோசனையில் ஆழ்ந்தாள். அவனுக்கு இந்த யோசனை திடீரென்று வந்ததா அல்லது முன்னாலேயே இருந்ததா என்று. முன்னாலேயே இருந்தது என்றால் இதைப் பற்றி அவளிடம் ஒரு தடவையாவது சொல்லியிருப்பான். இவ்வளவு பயங்கரமான யோசனை அவனுக்கு எப்படி வந்திருக்கும் என்று யோசித்துக் கலங்கிக் கொண்டிருந்தாள்.

டேப்பில் உரையாடலைக் கேட்ட பிறகு அவள் சந்தேகம் உறுதியாகி விட்டது. ஆனால் அவள் மனதில் வேதனை இன்னும் அதிகரித்து விட்டது. இதுவரை சௌரஸியாவுக்கும் தனக்கும் இடையே சாதாரண ஈர்ப்புக்கும் அப்பாற்பட்ட பந்தம் ஏதோ இருப்பதாக நினைத்து வந்தாள்.

ஆனால் யாரோ வந்து ஏதோ போட்டோக்களை வெளிப்படுத்தி விடுவதாகச் சொன்னதுமே, அவன் அதற்குப் பயந்து தன்னிடம் அசல் விஷயத்தைச் சொல்லாமல், இந்த விதமாக ஏமாற்ற முயற்சி செய்தது அவள் மனதைச் சுட்டெரித்தது. அவன் அவளோடு எல்லா விஷயங்களையும் சொல்லி விட்டு, ''இந்த போட்டோக்கள் வெளிப்பட்டு விட்டால் என்ன செய்வது?'' என்று சொல்லியிருந்தால் அது வேறு விஷயம். உண்மையில்

அந்த போட்டோக்கள் வெளிப்பட்டு விட்டால் அவனைவிட அவளுக்குத்தான் அதிகமான மான நஷ்டம். அவன் கோடீஸ்வரனாகவும், மாஃபியா தலைவனாகவும் இருக்கலாம்.

ஆனால் அவள் அரசியலிலும், வெள்ளித் திரையிலும் பிரபலம். அவளுக்குத் திடீரென்று துக்கம் பொங்கிக் கொண்டு வந்தது. ஒருமுறை திரும்பிப் பார்த்துக் கொண்டால் தான் எவ்வளவு தனியனாகி விட்டோம் என்று தோன்றும்போது மனிதனுக்கு ஏற்படும் துக்கம் அது.

தன் மீது அன்பு செலுத்துவோர் இல்லாமல், தான் கஷ்டத்தில் மூழ்கியிருக்கும்போது வாய் வார்த்தையாக உதவி செய்யவும் ஒருத்தருமே இல்லை என்று தெரியும் போது ஏற்படும் துக்கம் அது. மனிதனுக்குப் பணம், பதவி, ஹோதா எதாலும் கொடுக்க முடியாதது அது.

டேப்ரிக்கார்டரில் சத்தார் சொன்ன வார்த்தைகள் அவளுக்கு யதார்த்தமாகத் தோன்றின. கணவனை பயமுறுத்துவதற்காகக் கொலைச் செய்ய வைத்தாள். அந்தக் கொலையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக அரவிந்த் சௌரஸியாவிற்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்டாள். அவன் உதவியோடு அரசியலில் திட்டங்களைப் போட்டாள். பிரதமரின் பி.ஏ.வுடன் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொண்டாள். அதைக் காட்டி முதலமைச்சரை மிரட்டினாள். முதலமைச்சரை பதவி யிலிருந்து நீக்குவதற்காக குழப்பங்களை ஏற்படுத்தத் துணிந்தாள். இன்னும் உச்சாணிக் கொம்பில் ஏற வேண்டும் என்று நினைத்திருந்தாள். தன்னுடைய

வீழ்ச்சியை இதுவரையிலும் மனம் ஏற்றுக் கொண்டிருந்தது. சத்தார் இன்னும் ஒருபடி கீழே இறங்கிவரச் சொல்கிறான். பேருந்துகளை எரித்து, கலகங்களைத் தோற்றுவிக்கும் கலகக்காரர்களுக்கும், எல்லையைத் தாண்டி ஊடுருவி வரும் தீவிரவாதிகளுக்கும் வித்தியாசம் இல்லை என்கிறான் அவன். அது உண்மையாகவே இருக்கலாம்.

எங்கே தொடங்கியது? எங்கே போய்க் கொண்டிருக்கிறது?

மனிதனுக்கு மனதோடு நல்லுறவு இல்லை. மனிதனுக்கு சகமனிதர்களுடன், அரசாங்கத்துடன், நாட்டுடன் நல்லுறவு இல்லை. இதெல்லாம் எதனால் நிகழ்கின்றன? உண்மைக்கு இடமில்லாமல் போனதால் தானா? தன் வாழ்க்கைக்கு அனுகூலமாக முதலில் கொள்கைகளை ஏற்படுத்திக் கொண்டு, பிறகு அந்த கொள்கைகளே தம்மை மனதளவில் சதா துன்புறுத்திக் கொண்டிருந்தால் நித்தியமும் குமுறிக்கொண்டே இருக்கும் மனிதர்களுக்கு வேறு வழி ஏது? தன் காதலனின் அறையிலேயே டேப்ரிக்கார்டர் வைக்கும் அளவுக்கு தரம் தாழ்ந்தவள் அவள். பிறகு காதலன் இப்படிச் செய்கிறானே என்று வருத்தப்படுவானேன்? மனிதப் பண்புகள் சீரழிந்து போகின்றன என்று புலம்புவது எதற்காக? இந்த வளையத்திலிருந்து எப்படி வெளியேறுவது என்றுதான் அவளுக்குப் புரியவில்லை.

சௌரஸியா எப்படியும் பிரஷரைக் கொண்டு வருவான். அவள் கணவன் அதற்கு ஒப்புக்கொள்ளாமல் போகலாம். நாட்டின் மேலுள்ள பற்றால் அல்ல.

அரசாங்கம் தூக்கில் ஏற்றிவிடுமோ என்ற பயத்தால். தீவிரவாதிகளுடன் கைகோர்க்கும் அளவிற்கு தைரியம் இல்லை.

அவள் தவறையெல்லாம் கணவன் மீது தள்ளிவிட முடிவு செய்தாள். அவள் கேட்டு விடுவாள். கணவன் மறுப்பான். அந்த விஷயத்தை சௌரஸியாவிடம் சொல்வாள். மற்ற விஷயங்களை அவர்கள் பார்த்துக் கொள்வார்கள். அவள் மட்டும் இந்த பிரச்னையிலிருந்து மீண்டு விடுவாள்.

இந்த விதமாக யோசித்துக் கொண்டே அவள் புறப்பட்டாள். கணவனிடம் போய்க் கொண்டிருக்கும் போது அவள் மனமெல்லாம் ஒரு மாதிரியாகி விட்டது. காதலனிடமிருந்து செய்தியைக் கணவனிடம் சேர்ப்பித்து ஒருக்கால் எந்தப் பெண்ணுக்குமே இதுவரை இப்படிப் பட்ட நிலைமை ஏற்பட்டிருக்காது.

அவள் நாயுடுவிடம் இந்த விஷயத்தைப் பற்றி ரொம்ப ஜாக்கிரதையாகப் பேசினாள். சௌரஸியாவைப் பற்றிய பேச்சை வரவில்லை. ''வெளியிலிருந்து சில சக்திகள் உதவி செய்யத் தயாராக இருக்கின்றன. மாநிலத்தை அல்லக்கல்லோலப் படுத்திப் பிரிக்க முடிந்தால் கோடிக் கணக்கில் லாபம்'' என்பதுபோல் சொன்னாள்.

நாயுடுவின் முகம் உணர்ச்சிப் பெருக்காலும், சந்தோஷத்தாலும் மலர்ந்தது. ''உண்மையாகவா?'' என்றான் பரபரப்புடன்.

அப்பொழுதே தான் முதலமைச்சராகி விட்டாற்போல் ஊகித்துக் கொண்டதை அவன் முகம் பறை சாற்றியது.

காமினியின் முகம் ரத்தம் வற்றிவிட்டாற்போல் வெளிறி விட்டது. அவள் இதை எதிர்பார்க்கவில்லை. கணவனின் பயத்தை சுயநலம் மிஞ்சி விட்ட தருணம் அது. இரண்டு இடங்களிலும் தான் தோற்றுப் போய் விட்டாற்போல் உணர்ந்தாள். அவளிடம் வெறுப்புத் தோன்றியது. அந்த வெறுப்பின் உச்சக்கட்டத்தில் ''இதற்கெல்லாம் உனக்கு யார் உதவி செய்கிறார்கள் என்று நீங்கள் கேட்கவே இல்லையே?'' என்றாள்.

''ஆமாம். கேட்க மறந்து போய் விட்டேன். யாரு?''

''அரவிந்த் சௌரஸியா!''

அவன் முகம் திடீரென்று மலர்ந்தது. ''சௌரஸியா நமக்கு உதவி செய்கிறானா?'' என்று கத்தி விட்டான்.

அவள் வெறுப்பு உச்சத்தைத் தொட்டது. இந்த மக்களின் மீதும், மனிதர்களின் மீதும், திரைக்குப் பின்னால் இருந்து கொண்டு போடும் வேஷங்கள் மீதும்... எல்லாமாகச் சேர்ந்து எதிரே இருந்தவன் மீதும்.

''ஆமாம், உங்களுக்கு ஏன் உதவமாட்டான்? நீங்க. அவன் காதலியின் கணவர் இல்லையா?'' என்றாள். கடைசி அஸ்திரத்தை எடுத்து விட்டபடி, அந்த நிமிஷத்தில் எல்லாவற்றையும் சொல்லி விடணும் என்ற தீர்மானத்திற்கு வந்து விட்டாள்.

யுத்தம் முடிந்த பிறகு தெரிந்து கொள்வதைவிட, அதற்கு முன்பே எதிரி யார்? நண்பர்கள் யார் என்று தெரிந்து கொள்வது நல்லது இல்லையா?

அவன் அதைக் கேட்டு நிமிர்ந்து பார்த்தான். அவன் முகத்தில் பலவித உணர்ச்சிகள் தென்பட்டன. காமினி

அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். திடீரென்று மடைதிறந்து கொண்டு பாய்ந்த வெள்ளத்தைப்போல் அவளிடம் ஆவேசம் கட்டுமீறிக் கொண்டு புறப்பட்டது. தன்னை அந்த இடத்திலேயே கண்டந்துண்டமாக வெட்டிப் போட்டு விடுவான் என்று எதிர்பார்த்தாள். ஆனால் அவன் முகத்தில் தோன்றிக் கொண்டிருந்த மாறுபாடுகள் ஆவேசத்தால் வந்தவை அல்ல, மகிழ்ச்சிக்கு சம்பந்தப்பட்டவை.

''உண்மையாகவா? உனக்கும் சௌரஸியாவுக்கும் அத்தனை நெருக்கமான சம்பந்தம் இருக்கா?'' என்றான் மகிழ்ச்சி பொங்கும் குரலில்.

உடல் பற்றி எரிவதுபோல் இருந்தது அவளுக்கு. அவன் ஆவேசத்தோடு தன்னைக் கொல்ல முயன்றிருந்தால்கூட அவ்வளவு ஆச்சரியப்பட்டிருக்க மாட்டாளோ என்னவோ. இந்த விஷயத்தைச் சொன்னதுமே அவன் மகிழ்ச்சி யடைந்ததைப் பார்த்து அவளுக்குக் கோடாலியால் தன்னைப் பிளந்தாற்போல் இருந்தது.

முகம் சிவக்க ''உங்க மனைவிக்கு இன்னொருத்த னோடு சம்பந்தம் இருக்குன்னு சொல்கிறேன். ஆனாலும் உங்களுக்கு ஆவேசம் ஏற்படவில்லையா?'' என்றாள்.

அவன் சாதாரணமான குரலில், ''நான் அரசியல் தலைவன் இல்லையா?'' என்றான். ''அரசியல் தலைவனாக இருப்பவன் அனாவசியமான விஷயத்திற்கு ஆவேசப்படமாட்டான்.''

அதைக்கேட்டு அவள் மேலும் எரிச்சலடைந்தவளாக ''நீங்கள் ஒரு ஆண்பிள்ளைதானா? உங்க உடம்பில்

ஓடுவது ரத்தம் தானா? உங்க மனைவிக்கு வேறொரு ஆணுடன் சம்பந்தம் இருக்குன்னு சொன்னால் அது அனாவசியமான விஷயமா?'' என்று கத்தினாள்.

''ஆவேசப்படாதே காமினி! விஷயத்தைச் சொல்லு. சௌரஸியா உன்னிடம் என்ன சொன்னான்? என்னைப் பற்றிய பேச்சு எதற்காக வந்தது? இந்த மாநிலத்திற்கு முதலமைச்சராகப் போகிற என்னோடு சௌரஸியாவுக்கு என்ன வேலை?'' என்றான் பரபரப்புடன்.

''அவனுடன் இணைந்து இந்த மாநிலத்தை மத்திய அரசாங்கத்திலிருந்து வேறாகப் பிரித்துவிட வேண்டும் என்று தூது அனுப்பியிருக்கிறான் என் மூலமாக.''

''அவனை நம்பலாமா? அல்லது என்னை ட்ராப் செய்து கம்பி எண்ண வைப்பதற்காக முதலமைச்சரோடு சேர்ந்து அவன் போடும் தந்திரமா இது?''

''அவனோடு சேர்ந்து ஒரே கட்டிலைப் பகிர்ந்து கொண்டிருக்கும் எத்தனையோ இரவுகளின் சாட்சியாக சொல்கிறேன். அவனை நம்பலாம்.''

''நீயே சொல்லிவிட்ட பிறகு இனி அதற்கு அப்பீல் ஏது? நீயே எங்களைச் சந்திக்க வைக்கிறாயா? அல்லது நீ சொன்னதாக நானே அவனைச் சந்தித்து இந்த பிரபோசலைக் கொண்டு வரட்டுமா?''

''அப்படியென்றால் அவனுடன் சேர்ந்து மாநிலத்தில் தீவிரவாதத்தைப் பரப்புவதில் உங்களுக்கு விருப்பம்தான் போலிருக்கு.''

''இதில் தவறு என்ன இருக்கு? சுதந்திர மாநிலத்திற்கு நான் அதிபதியாவேன்.''

அதற்குமேல் அவளால் தாங்க முடியவில்லை. சரேலென்று எழுந்து அவன் காலரைப் பிடித்து இழுத்து. ''உன் முகத்தில் காரித்துப்பணும் போலிருக்கு எனக்கு. எவ்வளவு தாழ்ந்து போய்விட்டாய் நீ? என் கணவன் ஒரு கையாலாகாத அசடு என்று எண்ணிக் கொண்டிருந்தபோது வருத்தம் ஏற்படவில்லை எனக்கு. அப்படிப்பட்டவனை ஹோம் மினிஸ்டர் ஆக்குவதற்காக டில்லியில் கண்டவனின் கால்களில் விழுந்தபோதுகூட வருத்தம் ஏற்படவில்லை. ''நீ ரொம்ப முதிர்ச்சியாக தென்படுகிறாய். உனக்கு மேக்கப் போடுகிற பெண்ணை எனக்கு அறிமுகம் செய்து வை'' என்று சௌரஸியா சொன்னபோதுகூட வருத்தம் ஏற்படவில்லை. ஆனால்... இப்பொழுது... இப்பொழுது ஒரு சின்ன நாட்டிற்கு ராஜாவாக வேண்டும் என்ற ஆசையால் நாட்டிலிருந்து மாநிலத்தைப் பிரிப்பதற்காக, மனைவியின் காதலனோடு கைகோர்த்துக் கொண்டவன் என் கணவன் என்று நினைக்கும்போது எனக்கு ரொம்பவும் வருத்தமாக இருக்கிறது'' என்றாள்.

அவன் மெதுவாக ''இவ்வளவுதானா? நீ சொல்ல வேண்டியது இன்னும் இருக்கிறதா?'' என்று கேட்டான். பிறகு எழுந்து நின்று அவளைப் பார்த்துச் சொன்னான்.

''நீ ரொம்ப உயர்ந்தவள் என்பது உன் எண்ணம். நீ மட்டுமே இல்லை. உன்னைப் போன்ற நிறைய பெண்கள் அப்படித்தான் நினைத்துக் கொண்டிருப்பார்கள். தாம் உலகத்தையே பார்த்து விட்டோம் என்று, நிறைய ஆண்களைப் பார்த்துவிட்டோம் என்றும் நினைத்துக் கொள்வார்கள். உன்னைப் போன்ற பெண்கள் அரசியலில்

அதிகமாக இருந்தாலும், வெளியுலகத்திலும் இருப்பார்கள். இவர்களால் எங்கேயுமே ஒன்ற முடியாது.

ஒரு நண்பனோடு தொடங்கிய உங்களைப் போன்றவர்களின் வாழ்க்கை எத்தனையோ கட்டங்களாக தொடரும்.

ஒவ்வொன்றையும் நீங்கள் ஒவ்வொரு அனுபவமாக பாவித்து உயர்ந்து விட்டோம் என்று நினைத்துக் கொள்வீங்க. ஒரு ஆண் தனக்கு ஒரு பெண் கிடைப்பதை ஒரு வாரமாக நினைப்பான். அப்படிப்பட்ட உருப்படாத கும்பல் எல்லாம் உங்களைச் சூழ்ந்து கொண்டு உங்களிடம் இல்லாத பெருமைகளை எல்லாம் தோற்றுவிக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் உங்கள் உடம்பின் மீது இருக்கும் மோகத்தால் உங்களிடம் வந்து சேருகிறார்கள். சிலர் உங்களை காதலிக்கவும் செய்கிறார்கள். ஆனால் அந்தக் காதலை எல்லாம் தங்களுடைய துன்பங்களை உங்களிடம் எடுத்துச் சொல்வதற்காகத்தான் பயன்படுத்துவார்கள். அப்படிப்பட்ட ஆண்களை உங்களுக்குப் பிடிக்காது.

அதற்குள் உங்களைப் பற்றி பத்து பேருக்குத் தெரியும். பத்து பேருக்குத் தெரிந்து விட்டதென்று உங்களுக்கும் தெரியும். உங்கள் மனதோடு உங்களுக்கு நல்லுறவு இருக்காது.

எரிச்சலும் வெறுப்பும் அதிகமாகும். ஆணுக்கு ஒரு அனுபவம் அவன் அகௌண்டில் ஒரு நம்பரை ஏற்றும். பெண்ணுக்கு ஒரு அனுபவம் முகத்தில் ஒரு சுருக்கத்தைக் கூட்டும். இவ்வளவு சின்ன விஷயத்தைத் தெரிந்து கொள்வதற்குள் உங்களைச் சுற்றிலும் இருப்பவர்களின் எண்ணிக்கை குறைந்து போய் விடும். மனதோடு

அதற்குமேல் நடிக்க முடியாமல் போய் விடுவதால் ''என்னை எனக்காகவே நேசிக்கும்...'' என்று புதிய புலம்பலைத் தொடங்குவீர்கள். உங்களை உங்களுக்காகவே காதலிப்பதற்கு உங்களிடம் எதுவும் பாக்கியில்லை என்றும், மிஞ்சியிருப்பது வெறும் திமிரும், தற்பெருமையும்தான் என்று புரிந்து கொள்ள மாட்டீங்க. அதற்குள் உங்களுக்கு கொஞ்சம் ஹோதா வந்திருக்கும்.

அதை உங்களுடைய ஃப்ரஸ்ட்ரேஷனுக்காகப் பயன்படுத்திக் கொள்வீங்க. நீங்கள் வேலை பார்ப்பவர்களாக இருந்தால், கீழே வேலை பார்ப்பவர்களை துன்புறுத்துவீங்க. எழுத்தாளர்களாக இருந்தால் எழுத்தில் காட்டுவீங்க. அரசியலில் இருந்தால் அமைச்சர்களுக்கிடையே பிரச்னைகள் ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்வீங்க. தினமும் பத்து மணி நேரம் ஃபேனுக்கு அடியில் கழிப்பது உங்கள் நோய்க்கு முதல் அறிகுறி. உங்கள் முகத்தில் சந்தோஷமான சிரிப்புத் தோன்றி பல வருடங்கள் ஆகியிருக்கும். அது இரண்டாவது அறிகுறி. இந்த இரண்டு லட்சணங்களும் உன்னிடம் இருக்கு என்று உனக்குத் தெரியும். எனக்கும் தெரியும், இப்போ சொல்லு. இதையெல்லாம் கேட்ட பிறகு உனக்கு வயிற்றில் சங்கடம் தோன்றுகிறதா?''

எகிப்து நாட்டு பிரமிட் சமாதிகளில் உள்ள மம்மியைப் போல் அவள் சிலையாக உட்கார்ந்திருந்தாள். அவள் கண்கள் வெளிறிப்போய், இரத்தம் வற்றிவிட்டாற்போல் இருந்தன. தன்னோடு பேசியது தன் கணவன்தானா என்ற சந்தேகத்துடன் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் எண்ணத்தைப் படித்துவிட்டவன்போல் அவளை நெருங்கி வந்தான்.

''பல ஆண்டுகளுக்கு முன்னால் நான் ஒரு லாயர் நண்பனுடன் சேர்ந்து உன்னிடம் வந்தேன். நீ என்னை உன் உள்ளங்கைக்குள் போட்டுக் கொண்டு விட்டாய். அதிலிருந்து நீ என்னை ஒரு மனிதனாகவே மதிக்க வில்லை. அதனால் ''இவன் என்ன? இவ்வளவு புத்திசாலி யாகப் பேசுகிறானே?'' என்று எண்ணிக் கொண்டால் அதில் தவறு இல்லை.

ஒரு எழுத்தாளன் ஒரு பாத்திரத்தை படைக்கும்போது மற்ற பாத்திரங்களை ஒதுக்கி வைப்பது போலவே நமக்கு மற்றவர்களின் மீது ஒரு எண்ணம் இருக்கும். அதே அபிப்பிராயம் தொடர்ந்து கொண்டிருக்கும். என் மேல் இளப்பமான அபிப்பிராயத்தை முதலிலிருந்தே வைத்துக் கொண்டிருந்தாயே தவிர, நான் இவ்வளவு ஆழமாக சிந்திக்கக் கூடியவன் என்று எதிர்பார்க்கவில்லை நீ.

எவ்வளவு புத்திசாலித்தனம் இருந்திருந்தால் நான் இந்த மாநிலத்தின் ஹோம் மினிஸ்டராக இவ்வளவு நாளாக தொடர்ந்து கொண்டிருப்பேன்? இப்பொழுது அவசியம் வந்ததால் சொல்கிறேன். கேட்டுக்கொள். உன்னை என் தேவைக்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றால் உன்னிடம் கையாலாகாதவனாக நடித்து உன் ஈகோவை திருப்திப் படுத்த வேண்டும். இவ்வளவு நாளாக அப்படித்தான் நடித்து வந்தேன்.

நான் ரொம்ப நாட்களுக்கு முன்பே இன்னொருத்தியை ரகசியமாகத் திருமணம் செய்து கொண்டு விட்டேன். பப்ளிசிட்டிக்கு பயந்து அதை வெளிப்படுத்தவில்லை. அதனால்தான் உன் சௌரஸியா விஷயம் என்னை பாதிக்க வில்லை. இனி உன் தேவை எனக்கு இல்லை. எனக்கு

வேண்டியதை சௌரஸியாவோடு சேர்ந்து சாதித்துக் கொள்வேன். அதைவிட முக்கியமாக...'' அவன் நிறுத்தி நிதானமாகச் சொன்னான், ''உன் அழகால் காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் ஸ்டேஜை நீ தாண்டி விட்டாய் என்பது என் உத்தேசம்.''

அவள் முகம் சிவந்து விட்டது. கண்கள் நெருப்பை உமிழ்ந்தன. ''இவ்வளவு கபடத்தை மனதில் வைத்துக் கொண்டு இவ்வளவு நாளாக என்னோடு சேர்ந்து இருந்தாயா?''

''நீ இல்லையா? அதேபோல்தான்'' என்றான்.

சுளீரென்று கன்னத்தில் அறைந்தாற்போல் இருந்தது. ''நீயும் நானும் ஒன்றா? என்னோடு உன்னை ஒப்பிடுகிறாயா? வெட்கமாக இல்லையா?''

''காமினி! இந்த உலகத்தில் மனிதர்கள் மூன்று விதமானவர்கள். நல்லவர்கள், கெட்டவர்கள், தாம் நல்லவர்கள் என்று நினைத்துக் கொள்ளும் கெட்டவர்கள். இந்த மூன்றாவது வகையினர்தான் தொண்ணூறு சதவீதம் இருப்பார்கள். நான் இரண்டாம் வகையைச் சேர்ந்தவன். நான் நல்லவன் என்று என்றுமே சொல்லிக் கொண்டதில்லை. நீ மூன்றாவது பிரிவைச் சேர்ந்தவள். செய்கிற காரியமெல்லாம் செய்து விட்டு, அதற்கு எப்படி பூசி மெழுகுவது என்று யோசித்துக் கொண்டிருப்பாய். நான் மாநிலத்தை வெளிநாட்டிற்கு விற்றுவிட எண்ணியது உனக்கு கொடூரமான செயலாகப் பட்டது. சௌரஸியா வோடு தகாத உறவு வைத்துக் கொண்டிருப்பது உனக்கு கொடுமையாகத் தோன்றவில்லை.

அதற்காக நீ என்னென்ன காரணங்கள் சொல்லிக் கொள்வாயோ, அதேபோல் என் நடத்தைக்கு பல காரணங்களை என்னாலும் சொல்ல முடியும்.

சுதந்திரப் போராட்ட வீரர்களுக்குத் தருகிற ஓய்வு ஊதியத்தை, சாங்ஷன் பண்ணுவதற்குக்கூட லஞ்சம் வாங்குபவன், நாட்டைப் பற்றி பேசுகிறான். அதுதான் சிரிப்பு வருகிறது. நம்மை நாம் திருத்திக் கொள்ளாமல் அடுத்தவனைப் பற்றிப் பேசுவோம். தேசபக்தியைப் பற்றி சொற்பொழிவு ஆற்றுவோம். நாம் எல்லோரும் கெட்டவர்கள்தான் காமினி. அந்த விஷயத்தை ஒப்புக் கொள்.''

அவள் கத்தினாள். ''நோ... நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். இந்த நாடு நிர்மூலமாவதற்கு நான் ஒப்புக் கொள்ள மாட்டேன்.''

அவன் சிரித்தான். ''உன்னால் எதுவுமே செய்ய முடியாது காமினி! பிள்ளையார் ஊர்வலம் நடக்காமல் உன்னால் தடுக்க முடியாது. அதில் ரகளைகள் நடக்காமல் தடுத்துவிட முடியாது. அந்தக் காரணத்திற்காக நான் ராஜினாமா செய்து விடுவேன். மத்திய அரசின் கட்சியுடன் சேர்ந்து கொண்டு மாநிலத்தில் அதிகாரத்தைச் சம்பாதித்துக் கொண்டு விடுவேன். எதைத் தடுக்க முடியும் உன்னால்?''

''நீயும் சௌரஸியாவும் ஒன்று சேரப் போவதைப் பற்றியும் நம் மாநிலத்தில் தீவிரவாதத்தைக் கொண்டு வரப் போவதையும், நம் நாடு இன்னொரு பஞ்சாபாக

மாறப் போவதையும், உங்களைப் பற்றிய எல்லா விஷயங்களையும் எல்லோருக்கும் சொல்லி விடுவேன்.''

''உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதென்று நினைப்பார்கள். பஞ்சாபில் ஏற்பட்ட சின்ன ரகளை மிகப் பெரிய கலவரமாக மாறப்போகிறதென்று பதவியில் இருந்த அரசியல் தலைவர்களுக்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே தெரியும். காஷ்மீர் தகராறு முடிவடையாமல் இருந்தால் நல்லது என்று இன்னும் சில அரசியல் தலைவர்கள் நினைக்கிறார்கள். இதெல்லாம் அரசியல்.

காமினி! இந்த விஷப் பாம்புகளுக்கு முன்னால் அப்பாவியான மக்கள் எறும்பைப் போன்றவர்கள். முற்றிலுமாக நஷ்டமடைந்து போகிறவரை தாம் என்ன நஷ்டமடைந்து கொண்டிருக்கிறோம் என்று தெரிந்து கொள்ளாத அறிவீலிகள். அப்பாவித்தனத்தின் மீது சாமர்த்தியசாலி விளையாடுகிற ஆட்டம்தான் அரசியல்'' என்று சிரித்து விட்டு அவன் அங்கிருந்து போய் விட்டான்.

அவள் ஆடாமல் அசையாமல் அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

அவன் சொல்வதில் தவறு எதுவும் இல்லை என்று அவளுக்குத் தெரியும்.

அவளுக்குப் பழைய நாட்கள் நினைவுக்கு வந்தன.

நாயுடுவைத் தான் எவ்வளவு குறைவாக எடை போட்டு விட்டாள் என்று புரிந்தது. அவன் நண்பனை அவள் கொலை செய்ய வைத்ததிலிருந்தே அதை மனதில்

வைத்துக் கொண்டு இருந்திருக்கிறான். வெளியே எதுவும் காட்டிக்கொள்ளவில்லை. அவளை ஏணியாக பயன் படுத்திக் கொண்டு முன்னுக்கு வந்து விட்டான். எந்த இடத்திலும் சாமர்த்தியத்தைக் காட்டிக் கொள்ளவில்லை. தேவையானதை எல்லாம் சாதித்துக் கொண்டு விட்டான். தேவை நிறைவேறி விட்ட பிறகு, உதைத்துத் தள்ளி விட்டான். மிகக் கொடுமையான உதை.

அவளுக்குப் பெரிதாகச் சிரிக்க வேண்டும் போலிருந்தது. அவன் சொன்னது உண்மைதான். இவ்வளவு நாளாக தன் பக்கத்திலிருந்து மட்டுமே யோசித்துப் பார்த்து வந்திருக்கிறாள். அடுத்தவன்கூட சாமர்த்தியசாலிதான் என்பதை உணரவில்லை. அவளும், சௌரஸியாவும், நாயுடுவும், ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு லெவலில் தம் சுயநலத்திற்காக எதிராளியையும், நாட்டையும் மாநிலத்தையும் சூறையாட முயன்று கொண்டிருந்தார்கள். நேர்மையாக, நன்மைக்காக போர் புரிபவர்கள் ஒருத்தருமே இல்லையா?

அவளுக்கு ராணாவைப் பற்றி நினைவு வந்தது. ஒரு குற்றவாளியை சட்டரீதியாக லாக்கப்பில் வைப்பதற்காக அரசியல் தலைவர்கள் அத்தனைப் பேருக்கும் எதிராக தன்னந்தனியாகப் போராடித் தோற்றுப் போய்விட்ட இன்ஸ்பெக்டர்.

மிகச் சின்ன போலீஸ் ஸ்டேஷனில் சின்ன அதிகாரியாக இருந்தால் என்ன? அவளுக்கு அவன் போதும்.

வயது அவளைத் தோற்கடித்து விட்டது. ஆனால் புத்தி சாதுரியத்தைத் தோற்கடித்து விடவில்லையே? தோல்வியை வேறு வழியில்லாமல் ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தால் சக்தியை எல்லாம் கூட்டி கடைசி முயற்சியைச் செய்து பார்ப்பதுதான் விளையாட்டு வீரனின் லட்சணம்.

அவள் உடனே ராணாவைச் சந்திக்கப் புறப்பட்டாள்.

16

தன் எதிர்காலம் என்னவென்று ராணா இரண்டு நாட்களாக யோசித்துக் குழம்பிக் கொண்டிருந்தான்.

எதுவுமே புரியவில்லை. வீரதாசுக்கு தினமும் மாலையில் ஏதாவது பாராட்டுக் கூட்டங்கள் நடந்து கொண்டிருந்தன.

வீரதாஸ் ஜெயிலில் இருந்ததைக் கூட ஒரு உயர்ந்த காரியமாக உருவகப்படுத்தி அரசியல் தலைவர்கள் ஆற்றிய சொற்பொழிவுகளைக் கேட்டபோது மூளை குழம்பியது.

மக்கள் எண்ணத்தை மாற்றுவது இவ்வளவு சுலபமா என்றும் தோன்றியது.

தன்னை சஸ்பென்ட் செய்யப் போவதாகச் சொல்லிவிட்டு, ஹோம் மினிஸ்டர் போன பிறகு ராணா அதற்கப்புறமாக போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகவில்லை. அதிகாரப்பூர்வமான உத்தரவுக்காகக் காத்திருந்தான்.

''என்ன நடந்தது?'' அபிராமி கேட்டாள்.

அவன் சொன்னான்.

அவள் ஒன்றும் சொல்லாமல் ரொம்ப நேரம் ஏதோ யோசனையில் ஆழ்ந்து விட்டாள். கடைசியில் ''நாம் எதுவும் தவறு செய்யவில்லை என்றால் நமக்கு எந்தக் கஷ்டமும் வராதுன்னு சொன்னீங்களே? பின்னே எதுக்குச் சஸ்பென்ட் செய்தாங்க?'' என்று கேட்டாள். இவ்வளவு நேரமாக அந்தச் சிறுமி எதை நினைவுப்படுத்திக் கொள்ள முயன்றாள் என்று அவனுக்குப் புரியத் தொடங்கியது.

முதல் முதலாக ஸ்டூவர்ட்புரத்திற்கு மாற்றலாகி வந்து கொண்டிருந்தபோது, அந்தச் சிறுமி அவனோடு சேர்ந்து பயணம் செய்த சமயத்தில் அவள் தந்தை ஜெயிலில் இருந்ததைத் தெரிந்து கொண்டு, அவர்களுக்குத் தைரியம் சொல்வதற்காக அந்த வார்த்தைகளைச் சொன்னான் அவன். இப்பொழுது அவை பொய் என்று தெரிந்து விட்டது. பாலிடிக்ஸ் வர்ஸெஸ் போலீஸில் எப்பொழுதுமே முதலாவதற்குத்தான் முதலிடம் என்பது ருசுவாகி விட்டது. இந்தக் கதையின் முடிவு இதுதான்.

''இது இப்படி நடக்கக் கூடாது'' என்றாள் அலக்நந்தா.

எப்பொழுதும் பூஜை புனஸ்காரம் என்று இருந்தவளின் வாயிலிருந்து அப்படிப்பட்ட வார்த்தைகள் வந்ததைப் பார்த்து வியப்படைந்தவனாக ''பின்னே எப்படி நடக்கணும்?'' என்று கேட்டான்.

''நான் போராட்டத்தைத் தொடங்கி வைக்கிறேன்'' என்றாள் அவள்.

அவ்வளவு வேதனையிலும் அவனுக்குச் சிரிப்பு வந்தது. ''போராட்டமா?'' என்றான் சிரித்துக் கொண்டே.

அவள் சிரிக்கவில்லை. அவள் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டே ''ராணா... ஒரு நாள் நீங்கள் சொன்னீங்க, நினைவிருக்கிறதா? புரட்சி என்பது வேறு எங்கிருந்தோ வராது, மக்களிடமிருந்துதான் வரும் என்று. பின்னே மக்கள் என்றால் யார்? நீங்களும் நானும் நாமும் தானே? நில்லுங்கள். அப்படிச் சிரிக்காதீங்க. சுப்ரபாதத்தோடு நாளைத் தொடங்கி, உபவாசத்தோடு நித்திய கடனை முடிக்கிற இந்த அலக்நந்தா இப்படிப் பேசுகிறாளே என்று ஆச்சரியமடையாதீங்க. நான் தொடங்குகிறேன். அது எங்கே போய் முடிகிறதோ அல்லது ஆரம்பத்திலேயே நசித்துப் போய் விடுகிறதா என்று காலம்தான் முடிவு செய்யும். ஜான்ஸிராணிகள் எங்கிருந்தோ பிறந்து விடமாட்டார்கள். என் வார்த்தை களில் சொல்ல வேண்டுமென்றால் மனிதர்களுக்கிடையே தான் பிறக்கிறார்கள்.''

''உன் ஆவேசத்தைப் பார்த்தால் எனக்கு பயமாக இருக்கிறது. ஆனால் அவர்கள் அரசியல் தலைவர்கள். மக்களோடு விளையாடக் கூடிய சாமர்த்தியம் படைத்தவர்கள். மக்களை அவர்களே வழி நடத்திச் செல்வார்கள். நீயும் நானும் எதுவும் செய்ய முடியாது.''

''அப்படி நினைத்துக் கொண்டால் எதுவுமே செய்ய முடியாது. நீங்கள் சிரிக்காமல் இருந்தால் நான் ஒரு உதாரணம் சொல்கிறேன். சில நாட்களுக்கு முன்னால் நம் ஊரில் வரிசையாக நான்கு நாட்கள் கடையடைப்பு நடந்தது, நினைவிருக்கிறதா? என்னென்னவோ

காரணங்கள். அந்த நான்கு நாட்களில் ஒரு நாள் ஏகாதசி. ஆனால் என்னால் கோவிலுக்குப் போகக்கூட முடியாமல் போய்விட்டது. அந்த எரிச்சலில் நான் என்ன நினைத்துக் கொண்டேன் தெரியுமா? ஜனங்கள் எல்லோரும் சேர்ந்து தலைக்குப் பத்து ரூபாய் சந்தா போட்டுக் கொண்டு அந்த ரவுடிகளிடம் கொடுத்து ஒரு வருஷம் வரை இந்த ஊரில் எந்தக் கடையடைப்பும் நடக்காதபடி பார்த்துக் கொண்டால் எப்படி இருக்கும் என்று. தற்சமயம் இருந்து வருகிற சமூகச் சூழ்நிலையில் பக்தியிலிருந்தே இப்படிப் பட்ட எரிச்சல் ஏற்படுகிறது என்றால், ஒரு நல்ல காரணத்திற்காக நான் செய்யும் இந்தப் போராட்டத்திற்கு இந்த ஊரில் அத்தனைபேரும் என்னை சப்போர்ட் செய்வார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.''

★★★

அவள் ஆசிரியர் காலனியைச் சேர்ந்தவர்களைச் சந்தித்தாள். அவர்கள் அவள் உணர்ச்சிகளுக்கு மதிப்பளித்தார்கள்.

அன்று மாலையில் நூலகத்தின் ஹாலில் ஒரு கூட்டம் நடந்தது. எதிர்பாராத விதமாக ஜனம் வந்ததில் நெருக்கடியாகி விட்டது. மறுநாள் விளையாட்டு மைதானத்தில் கூட்டத்தை நடத்த முடிவு செய்தார்கள். கூட்டம் வெற்றிரமாக நடந்தது.

சுமார் ஆயிரம் பேர் வந்தார்கள். எம்.எல்.ஏ.வுக்கும் எம்.பி.க்கும் இந்த விஷயம் தெரிந்தாலும் பொருட் படுத்தவில்லை. சிரித்துக் கொண்டார்கள்.

அன்றிரவு ஆசிரியர் காலனியைச் சேர்ந்தவர்கள் சிலரை அழைத்து வந்தார்கள். அடுத்த நிகழ்ச்சி சம்பந்தப்பட்ட

பொறுப்புகளை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். இரவோடு இரவாக ஆயிரக்கணக்கான போஸ்டர்களும், கரப்பத்திரங்களும் தயாராயின.

''நேர்மையான இன்ஸ்பெக்டர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையை நிறுத்த வேண்டும். குண்டர்களின் எதிர்ப்புப் போராட்டம் ஒழிக'' போன்ற ஸ்லோகங்கள் அடங்கிய போஸ்டர்கள் ஒட்டப்பட்டன.

விடிவதற்குள் ஊரெல்லாம் ஒட்டப்பட்டிருந்த அந்த போஸ்டர்களைப் பார்த்துவிட்டு நரசிம்மனும், புலிராஜனும் கலக்கமடைந்தார்கள்.

''பார்த்தீங்களா ராணா! போராட்டம் எப்படி நடக்கிறது பாருங்கள்'' என்றாள் அலக்நந்தா உத்வேகத்துடன். ஆனால் ராணா சலனமில்லாமல் இருந்தான். அவள் மேலும் சொன்னாள். ''ஒரு நல்ல காரணத்திற்காக நின்றால் மக்கள் எப்படி சப்போர்ட் செய்கிறார்கள் என்று பாருங்கள். எல்லோருமாகச் சேர்ந்து முதலமைச்சருக்கு விண்ணப்பத்தை அனுப்பப் போகிறோம். மாலையில் கூட்டத்திற்கு ஐம்பதாயிரம் பேர் வரலாம். சுற்றுவட்டாரத்தில் இருக்கும் ஊர்களிலிருந்தும் கூட ஜனங்கள் திரட்டிக் கொண்டிருக் கிறார்கள்.''

ராணா அதிகமாக உற்சாகம் காட்டாமல் ''முந்தா நாள் காலனிவாசிகளுடன் வந்த இளைஞர்கள் யாரென்று தெரியுமா?'' என்று கேட்டாள்.

''யார்?''

''மத்திய அரசாங்கத்தின் கட்சியோ, மாநில அரசாங்கத் தின் கட்சியோ இல்லை. எந்த அதிகாரத்திலும் இல்லாத

கட்சி அது. இந்தச் சம்பவத்தைக் கேஷ் செய்து கொள்ள வேண்டும் என்று நினைக்கும் கட்சி அது. அதற்குள் அதன் அரசியல் வெளிப்படுவதை விரும்பாத அது வேறு பெயரில் தன் ஊழியர்களை அனுப்பியிருக்கிறது. அதாவது இந்தப் போராட்டம் வலுவடைந்து விட்டால் அப்பொழுது அது வெளிப்படும் என்று அர்த்தம்.''

அலக்நந்தா வியப்படைந்து விட்டாள். ''இதில்கூட அரசியலா?''

''ஆமாம் அலகா. படிப்பு, தொழிலாளர்களின் சக்தி, பொருளாதாரம் இவற்றில் இந்தக் குழப்பம் வந்தாலும் சரி, உடனே அதில் அரசியல் நுழைந்து விடும். மேதாவிகள் நம் ஜனநாயகத்தை அப்படி உருவாக்கியிருக்கிறார்கள்.''

''அப்படி என்றால் இதற்கு விமோசனமே இல்லையா?''

''ஏதாவது அற்புதம் இந்த நாட்டு வரலாற்றில் நிகழ்ந்தால் தவிர விமோசனமே கிடையாது.''

அந்த அற்புதம் மறுநாள் நடந்தது.

★★★

பள்ளிக்கூட விளையாட்டு மைதானத்தில் நடக்கவிருந்த கூட்டத்திற்கு எதிராக அதே நாளில் வீரதாஸ் விமோசன சங்கம் வேறு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப் போகிறது என்ற செய்தி நகரம் முழுவதும் பரவி விட்டது. அதை எம்.எல்.ஏ. நரசிம்மனும், எம்.பி. புலிராஜனும் நடத்தப் போவதாகச் சுவரொட்டிகள் தெரியப்படுத்தின.

அதே கூட்டத்தில் வீரதாசுக்கு சன்மானம் செய்யப் போவதாக விளம்பரப்படுத்தியிருந்தார்கள். கண்டும் கேட்டுமிராத அளவிற்கு இந்தக் கூட்டத்தை நடத்த வேண்டும் என்று அவர்கள் கங்கணம் கட்டிக் கொண்டிருந்தார்கள்.

அந்தக் கூட்டத்திற்கு முக்கிய விருந்தினராக காமினி வரப்போகிறாள்.

அதுதான் ட்ரம்ப் கார்ட்.

வெள்ளித்திரையில் மின்னல் வெளிச்சம் -

அந்த ஒரு தகுதிபோதும், எள் விழ இடமில்லாத அளவிற்குக் கூட்டத்தைக் கொண்டு வந்து சேர்ப்பதற்கு. இன்னொரு கவர்ச்சி-

அவள் ஹோம் மினிஸ்டரின் மனைவி.

குண்டாயிஸத்திற்கு எதிராக நடக்கும் கூட்டம் ஒரு பக்கம்.

அதற்குப் போட்டியாக இன்னொரு கூட்டம் மற்றொரு பக்கம். அந்தக் கூட்டத்திற்கு ஹோம் மினிஸ்டரின் மனைவி முக்கிய விருந்தாளி.

இதைக்காட்டிலும் பரபரப்பான செய்தி வேறு இருக்க முடியுமா? ராணாவை ஆதரித்த சாதாரண ஜனங்களும், அலக்நந்தாவும் மனதளவில் ரொம்ப சோர்ந்து போய் விட்டார்கள் இந்த நிலைமைக்கு.

மனைவியின் முடிவைப் பார்த்து, நாயுடு மட்டும் ரொம்ப சந்தோஷமடைந்தான். அவள் அத்தனை எளிதாக ஒப்புக் கொண்டு விடுவாள் என்று நினைக்கவில்லை

அவன். ஏறக்குறைய தான் முதலமைச்சர் ஆகி விட்டாற் போலவும், மாநிலத்தைப் பிரித்து அதற்குத் தான் அதிபதி யாகவும் ஆகிவிட்டாற்போல் ஊகித்துக் கொண்டான்.

அவள் புறப்படும் சமயத்தில் அரவிந்த் சௌரஸியா அவளுக்குப் போன் செய்தான். ''என்ன விஷயம்? உன் கணவன் நான் சொன்னதற்கு ஒப்புக் கொண்டு விட்டானா?''

''ஒப்புக் கொண்டது மட்டுமில்லை. எப்பொழுது உங்களைப் பார்க்கப் போகிறோம் என்று தவித்துக் கொண்டிருக்கிறார்.''

''மறுபடியும் நீ ஊருக்குப் போய் விடுவாய் இல்லையா? ஐந்து நிமிஷத்தில் வருகிறேன். தனியாக சந்திக்க ஏற்பாடு செய்.''

''நம் கெஸ்ட் ஹவுசுக்கு அழைத்து வரட்டுமா?''

''உடனே அழைத்து வா.''

கணவனோடு சேர்ந்து அவள் சௌரஸியாவைச் சந்தித்தாள். சௌரஸியா நாயுடுவுடன் கை குலுக்கி விட்டு, ''நாமிருவரும் இப்படி நெருக்கமானது எனக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது. உங்களை இதற்கு முன்னால் நிறைய தடவை சந்தித்திருந்தாலும், இப்படி வருங்கால முதலமைச்சர் என்ற ஹோதாவில் எல்லோருக்கும் முன்கூட்டி நானே உங்களுக்கு வாழ்த்துக்களை சொல்லக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்ததை என் அதிர்ஷ்டமாக பாவிக்கிறேன்'' என்றான். அவன் பேசிய ஆங்கிலத்தில் நாயுடுவுக்குப் பாதி புரியவில்லை.

சௌரஸியா தொடர்ந்தான். ''விஷயம் ரொம்ப நுட்பமானது. அத்தனைக்கத்தனை பயங்கரமானதும்கூட. அதனால்தான் காமினி அவர்கள் மூலமாக உங்களுக்குச் செய்தி சொல்லியனுப்பினேன்.''

காமினி இடைபுகுந்து ''அவருக்கு முன்னால் என்னை அவர்கள் இவர்கள் என்று குறிப்பிடத் தேவையில்லை. உங்களுக்கும் எனக்குமிடையே உள்ள உறவைப் பற்றி என் கணவரிடம் சொல்லிவிட்டேன். அவர் ரொம்ப சந்தோஷமும் பட்டார்'' என்று நிறுத்தினாள். நாயுடுவும் சௌரஸியாவும் சிலையாகி விட்டார்கள். அவள் சிரித்துக் கொண்டே ''ஏன் இப்படி ஆகி விட்டீங்க? யுத்தத்திற்கு முன்னால் ஒரு பெண் தன் கணவனையும் காதலனையும் ஒன்றாக இணைப்பது என்பது ராமாயணம் மகாபாரதத் திலும்கூட நிகழ்ந்திருக்காது'' என்றாள்.

சௌரஸியா சுதாரித்துக் கொண்டான். சிரித்துக் கொண்டே ''இப்போ யுத்தம் எங்கிருந்து வந்தது?'' என்றான் விஷயத்தை எளிதாக்க விரும்பி.

அதற்குப் பிறகு அவர்கள் பேசிக் கொண்ட உரையாடலில் காமினி பங்கெடுத்துக் கொள்ளவில்லை. அவள் வெறும் பார்வையாளராக இருந்து விட்டாள், அந்த உரையாடலை ரகசியமாக ரிகார்ட் பண்ணிக் கொண்டே.

நள்ளிரவு நேரத்தில் கதவைத் தட்டிய சத்தம் கேட்டு ஆச்சரியமடைந்தவனாய் கதவைத் திறந்தான் ராணா. எதிரே நின்று கொண்டிருந்த காமினியைப் பார்த்து மேலும் வியப்படைந்து ''நீங்களா?'' என்றான். காமினியின் முகத்தில் சோர்வு வெளிப்படையாகத் தெரிந்தது.

சுமார் நானூறு கிலோ மீட்டர் தொலைவு பிரயாணம் செய்து வந்திருக்கிறாள். அந்தக் கூட்டத்தில் பங்கெடுத்துக் கொள்வதற்காக.

''பல நாட்களுக்குப் பிறகு சந்தித்துக் கொள்கிறோம் இல்லையா? ஸ்டுவர்ட்புரத்திற்கு நீங்கள் இன்ஸ்பெக்டராக வரவிருந்த முதல் அத்தியாயத்தில்'' என்றாள்.

''ஆமாம். இப்பொழுது கடைசி அத்தியாயத்தில் மறுபடியும்'' என்றான்.

''இதுதான் கடைசி அத்தியாயம் என்று ஏன் நினைக்கிறீங்க?''

''ஓரிரண்டு நாட்களுக்குள் உத்தரவு வந்து விடும் என்பதால்.''

''நாம் சந்தித்துக் கொள்வது இதுதான் கடைசி தடவையாக இருக்கலாமோ என்னவோ. ஆனால் நீங்கள் மட்டும் இன்ஸ்பெக்டராகவே தொடர்ந்து இருப்பீங்க. உங்களை யாராலும் சஸ்பென்ட் செய்ய முடியாது. மக்களைத் தட்டி எழுப்பி நீங்கள் மீட்டிங் வைத்திருக்கீங்க இல்லையா?''

''அதைக் கெடுப்பதற்காக வேலை மெனக்கெட்டுக் கொண்டு அதான் நீங்கள் சென்னையிலிருந்து வந்திருக்கீங்களே?''

''இல்லை. உங்களிடம் ஒரு உதவி கேட்கத்தான் வந்திருக்கிறேன்.''

அவன் வியப்பை அடக்கிக் கொண்டு ''என்னையா?'' என்றான்.

''நாளைக்கு உங்கள் மீட்டிங் நடக்கக் கூடாது. எங்கள் மீட்டிங் மட்டும்தான் நடக்கணும்'' என்றாள்.

அவன் முகம் சிவந்து விட்டது. கோபத்தை அடக்கிக் கொண்டே ''இந்த மாதிரியான கூட்டத்தால் ஏதாவது லாபம் இருக்கும் என்று நானும் நம்பவில்லை. அதற்காக எங்க ஆட்கள் வைத்திருக்கும் மீட்டிங்கை நிறுத்திக் கொள்வேன் என்று எப்படி நினைத்தீங்க?'' என்றான்.

''என்னைப் புரிந்துகொள்ள முயற்சி செய் ராணா. நான் பழைய காமினி இல்லை. அப்பொழுது நான் முற்றிலும் அகம்பாவத்தோடு தன்னம்பிக்கை என்ற முக்காட்டிற்குள் இருந்து வந்தேன். இப்பொழுது நான் உயர்ந்து விட்டேன். ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு ஸ்டேஜிலும் அப்படித்தான் நினைத்துக் கொள்வான் என்று எனக்குத் தெரியும். ஆனால் நான் உயர்ந்திருப்பது என் மனத்திருப்திக்கு சம்பந்தப்பட்டது. இதற்கு முன்னால் இல்லாத திருப்தி இன்று எனக்குக் கிடைத்திருக்கிறது. என் மீது கொஞ்சமாவது நம்பிக்கை இருந்தால், நீ மீட்டிங்கை நிறுத்து. என்னுடைய மீட்டிங்கிற்கு வா. ட்யூடியில் வா. அங்கே அபூர்வமான ஒரு விஷயம் நடக்கப் போகிறது. நீ சற்றும் எதிர்பார்க்காத உண்மையை நான் அங்கே வெளிப்படுத்தப்போகிறேன்'' என்று சொல்லி விட்டு அவள் வேகமாக இருட்டில் மறைந்து விட்டாள்.

ராணா அவள் போன திசையையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தான்.

★★★

மறுநாள் மீட்டிங் கேன்சலாகி விட்டதாகச் செய்தி எட்டியது. காமினியின் கண்கள் கசிந்து விட்டன. அவள்

மீது இதுவரை இவ்வளவு நம்பிக்கை வைத்தவர்கள் யாருமில்லை. கணவன், காதலனையும் சேர்த்துத்தான்.

அவள் ராணாவுக்கு எதிரி. அவள் கணவன்தான் அவன் வேலை போனதற்குக் காரணம். ஆனாலும் அவன் தன்னை நம்பினான். இனி அவள் மீது பெரிய பொறுப்பு சுமத்தப் பட்டிருக்கிறது. மிகக் கடினமான காரியம் அது. மீட்டிங்கை கேன்சல் செய்து கொண்ட மூன்றாவது கட்சி ''சினிமா நடிகையை ஆயுதமாகப் பயன்படுத்திக் கொண்டு அடுத்த கட்சியினர் இன்னொரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருப்பதால், தங்களுடைய மீட்டிங்கை கேன்சல் செய்திருப்பதாக'' அறிவிப்பு வெளியிட்டார்கள். இப்பொழுது அந்த ஜனங்கள் எல்லோரும்கூட தம் கூட்டத்திற்கு வருவார்கள் என்று தெரியும் அவளுக்கு.

அந்தக் கூட்டத்தில் இந்தத் தேசத்துரோகத்தைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்பது அவள் எண்ணம். அது நாட்டையே ஒரு கலக்கு கலக்கி விடும் என்று அவளுக்குத் தெரியும்.

தன்னோடு கொண்டு வந்திருந்த கேசட்டை டேப்ரிக் கார்டரில் பொருத்தினாள். அப்துல் சத்தார், அரவிந்த் சௌரஸியா, டி.கே.நாயுடு முதலியவர்களின் உளவு, வியாபாரம் மற்றும் அரசியல் வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி வைக்கப் போகும் கேசட் அது.

கூட்டம் நடைபெற இன்னும் ஐந்து மணி நேரம்தான் இருந்தது. வீடியோ எடுப்பதற்காக தொலைக்காட்சியைச் சேர்ந்தவர்களும் வந்திருந்தார்கள். காமினி வரப் போவதை அறிந்து சுமார் ஒரு லட்சம் பேர் கூட்டத்திற்கு ஆஜராவார்கள் என்று தெரிய வந்தது. வீரதாசுக்கு சன்மானம் வேறு.

கேசட்டில் உரையாடல் சரியாக பதிவாகியிருக்கிறதா இல்லையா என்று இன்னொரு முறை சரிபார்த்துக் கொள்வதற்காக அவள் டேப்பை ஆன் செய்தாள். ரொம்ப நேரம் நிசப்தத்திற்கு பிறகு லேசான சிரிப்பு சத்தம் கேட்டது.

அது அரவிந்த் சௌரஸியாவின் சிரிப்பு. அதாவது தன் திட்டம் அத்தனையும் முன்பே தெரிந்து கொண்டு விட்டான் போலும். அவள் முகம் ரத்தம் வற்றி விட்டாற் போல் வெளுத்து விட்டது. திடீரென்று கட்டிடமே இடிந்து தலைமேல் விழுந்தாற்போல் உணர்ந்தாள்.

அவள் விரல்கள் நடுங்கத் தொடங்கின. கூட்டம் ஆரம்பமாவதற்கு இன்னும் அதிக நேரம் இல்லை.

இந்த அம்பை ஆதாரமாக வைத்துக் கொண்டுதான் அவள் இந்தத் திட்டத்தைப் போட்டாள். அது கடைசி நேரத்தில் பலமிழந்து போய் விட்டது. அவளுக்கு முன்னாலிருந்த கேசட் அவளைப் பார்த்துக் கேலியாகச் சிரிப்பதுபோல் இருந்தது.

அரவிந்த் சௌரஸியா அவள் மீது சாதித்துக் கொண்டு விட்ட கடைசி வெற்றியாக இருந்தது அது. கொஞ்ச நேரம் சலனமில்லாமல் இருந்த பிறகு அவள் மெல்ல தேறிக் கொண்டு சாதாரண மனுஷியானாள். வீரதாசுக்காகக் கூடிய கூட்டத்தின் நிகழ்ச்சியைப் பதிவு செய்வதற்காக வந்திருந்த தொலைக்காட்சி ஊழியர்களைச் சந்தித்தாள். ''கூட்டம் முழுவதையும் வீடியோ எடுப்பீங்களா? அல்லது தேவையானதை மட்டுமா?''

''கூட்டம் முழுவதையும் வீடியோ எடுத்து விட்டு வேண்டியதை எடிட் செய்து கொள்வோம் மேடம்.''

தாங்க்ஸ் சொல்லி அவர்களை அனுப்பி விட்டாள். இன்னும் அரை மணியில் கூட்டம் தொடங்க போவதால் அவளை மேடைக்கு அழைத்துச் செல்வதற்காக புலிராஜன் வந்தான்.

''உட்காருங்கள். அதான் இன்னும் நேரம் இருக்கிறதே. போகலாம்'' என்றாள்.

இருவரும் பேசிக் கொண்டிருந்தபோது நரசிம்மனின் வீட்டிலிருந்து டிபன் வந்தது. வேலைக்காரன் இருவருக்கும் தட்டுகளில் எடுத்து வைத்தான்.

புலிராஜன் சொன்னான். ''உங்க வீட்டுக்காரர் முதலமைச்சர் ஆனால் கேபினெட்டில் குறைந்த பட்சம் நாலுபேர் நான் சிபாரிசு செய்தவர்களாக இருக்கணும்.''

''கண்டிப்பாக.'' அவள் தன் தட்டில் இருந்த இனிப்பை எடுத்து அவன் தட்டில் போட்டுக் கொண்டே சொன்னாள். ''இவ்வளவு இஷ்டப்பட்டு வீரதாஸை வெளியே கொண்டு வந்தோம். எல்லோரையும் ஜெயிக்க வைக்கிறானா இல்லையா என்று பார்க்கணும். அது அவ்வளவு சுலபம் இல்லை என்று நினைக்கிறேன்.''

''எங்கள் கட்சி சென்டரிலிருந்து சப்போர்ட் செய்கிறது இல்லையா? எங்களுக்கு வேண்டியது தற்போது முதலமைச்சராக இருப்பவர் பதவியை இழந்து, எங்கள் கட்சி அதிகாரத்திற்கு வரணும். உங்கள் கணவர் எங்கள் கட்சியில் சேர்ந்து விட்டால் இனி பிரச்னையே இல்லை. கொஞ்சம் ஸ்வீட் எடுத்துக்கோம்மா.''

''வேண்டாம் சார். நாங்க சினிமாவில் நடிக்கிறவர்கள் இல்லையா? ஸ்வீட் சாப்பிடக் கூடாது'' என்று நிறுத்தி

விட்டு, தொடர்ந்தாள். ''என் கணவர் ஒருக்கால் உங்கள் கட்சியில் சேரமாட்டார் என்று நினைக்கிறேன்.''

அவனுக்கு ஸ்வீட் தொண்டையை அடைத்தது. ''அப்படி என்றால்?'' என்றான்.

''எனக்கு முழுவதுமாக தெரியாது புலிராஜன் சார், இந்த விஷயத்தை உறுதியாக அவர்கள் சொல்லும் வரை நான் உங்களிடம் சொல்லக் கூடாது. ஆனால் என் ஊகம் அது'' என்று தலை குனிந்து கொண்டே ''எனக்கும் என் கணவருக்கும் ஒத்துப்போகவில்லை. விரைவிலேயே நாங்கள் விவாகரத்து பெற்றுக்கொள்ளப் போகிறோம். அதனால்தான் உங்களுக்கு இதை முன்கூட்டியே சொல்கிறேன்'' என்றாள்.

புலிராஜன் இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. ''உங்களுக்கு ஏன் இந்த யோசனை தோன்றியது?'' என்று தர்மசங்கடத்துடன் கேட்டான்.

''வீரதாசு இந்தப் பகுதியில் ரொம்ப பெயர் பெற்றவனாக இருக்கலாம். ஆனால் மாநிலத்தில் அவனுடைய கன்ட்ரோல் எவ்வளவு? சரி, அதை விட்டுத் தள்ளுங்கள். என் கணவர் கட்சி மாறி, உங்கள் கட்சியில் சேர்ந்து முதலமைச்சர் ஆகிறார் என்று வையுங்கள். எவ்வளவு நாட்களுக்கு பதவியில் இருந்து விட முடியும்? எதிர்க்கட்சிக்காரர்கள் சும்மா இருந்து விடுவார்களா? எத்தனையோ ஆண்டுகளாக கட்சியையே நம்பிக் கொண்டிருந்தவர்களை விட்டுவிட்டுப் புதிதாக சேர்ந்தவரை முதலமைச்சர் ஆக்கினால் அது நிலைத்திருக்குமா? அப்பொழுது மத்திய அரசு வேறு தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளச் சொன்னால்

நரசிம்மனின் கதியும், என் கணவரின் கதியும் என்ன ஆவது? அவர்கள் உங்களை அவ்வளவு சுலபமாக எப்படி நம்புவார்கள்?''

''பின்னே இதையெல்லாம் ஏன் செய்தார்கள்?''

''அவர்கள் எங்கே செய்தார்கள்? எதையும் செய்ய வில்லை. எல்லாம் நீங்கள்தான் செய்து உதவி செய்தீங்க. முதலில் வீரதாஸ் விடுதலையாகாமல் தடுத்தீங்க. பிறகு தூதுக்கு வந்தீங்க. எங்க ஆட்கள் அதை நம்பினாற்போல் நடித்து வீரதாசை விடுதலை செய்ய வைத்து விட்டார்கள். அவர்களுடைய காரியம்தானே நிறைவேறியது?''

புலிராஜனின் முகம் சிவந்தது. ''ராஸ்கல்ஸ்! அவர்களை உயிரோடு விடப் போவதில்லை'' என்றான். நாளைக்கு டில்லியில் தன் கட்சிக்காரர்களுக்கு முன்னால் எப்படி முகம் காட்டுவது என்று புரியவில்லை அவனுக்கு.

''இதெல்லாம் நான் ஊகித்துக் கொண்டவைதான். அரசியலில் எனக்கு அதிகமாக அனுபவம் இல்லை. நீண்ட நாட்கள் ஹோம் மினிஸ்டராக இருப்பதைவிட சில நாட்கள் முதலமைச்சராக இருப்பதே மேல் என்று என் கணவர் நினைத்தால் ஒருக்கால் கட்சி மாறக்கூடும்.''

புலிராஜன் ரொம்ப நேரம் யோசனையில் ஆழ்ந்து விட்டு பிறகு, ''போகலாமா, நேரமாகி விட்டது'' என்றான். அதற்குள் போன் வந்தது நரசிம்மனிடமிருந்து. அவள் பேசி விட்டுப் போனை வைத்தாள். ''டிபன் நன்றாக இருந்ததா என்று கேட்டார். நான் ஸ்வீட் சாப்பிட மாட்டேன் என்று சொன்னேன்'' என்றாள்.

ஐந்து நிமிஷத்தில் இருவரும் கூட்டம் நடக்கப் போகும் இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். காரை விட்டு இறங்கிக்

கொண்டே புலிராஜன் சொன்னான். ''நீ சொன்னதெல்லாம் உண்மையாக இருந்தால் நான் நரசிம்மனை உயிரோடு விடமாட்டேன். சாரீ... உன் கணவரையும்கூட.''

★★★

மீட்டிங் மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. முதலில் நரசிம்மன் பேசினான். பிறகு புலிராஜன். அவன் நாற்காலியை விட்டு எழுந்து கொள்ளப் போனபோது காமினியை நெருங்கி வந்து அவள் டிரைவர் ஏதோ சொன்னதைப் பார்த்தான். அவள் முகம் அதைக் கேட்டு களையிழந்து விட்டது.

''உண்மையாகவா?'' என்று முணுமுணுத்ததை அவன் பார்த்தான்.

அவள் நாற்காலியை நெருங்கி வந்து ''என்ன விஷயம்?'' என்று கேட்டான்.

''எங்க வேலைக்காரன் செத்துட்டானாம். எதையோ தின்று விட்டானாம். உணவில் விஷமாம்.'' தாழ்ந்த குரலில் சொன்னாள்.

புலிராஜன் மைக் அருகில் போய் பேசத் தொடங்கிய ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் அவனுக்கு மார்பில் ஏதோ எரிச்சல் கிளம்பியது. விஷயம் கொஞ்சம் கொஞ்சமாக புரியத் தொடங்கியது. திரும்பி நரசிம்மனைப் பார்த்தான். நரசிம்மன் சிரித்துக் கொண்டிருந்தாற்போல் தோன்றியது. பக்கத்திலிருந்த வீரதாசும் அதேபோல் தோன்றினான்.

மார்பில் எரிச்சல் அதிகரித்தது. உடம்பு முழுவதும் வியர்த்துக் கொட்டியது. தான் சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வந்தன.

''நான் அவர்களை உயிரோடு விடப் போவதில்லை'' என்றான் அவன்.

இப்பொழுது அவர்களே அவனை உயிரோடு விட்டு வைக்கவில்லை.

காமினி சொன்னதுபோல் அவர்கள் தம் காரியத்தைச் சாதித்துக் கொண்டு விட்டார்கள். வீரதாசை விடுதலை செய்து வெளியே கொண்டு வந்து விட்டார்கள். இப்பொழுது அந்த விஷயமெல்லாம் வெளிப்பட்டு விடாதவாறு தன்னை மேலுலகத்திற்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

நரசிம்மன் அனுப்பியிருந்த ஸ்வீட்டில் விஷம் கலக்கப்பட்டிருக்கிறது. காமினியின் வீட்டில் அவள் வேலைக்காரன் இறந்து விட்டான். காமினி சொன்னது நினைவுக்கு வந்தது.

''எனக்கும் என் கணவருக்கும் ஒத்துப்போகவில்லை. விரைவிலேயே விவாகரத்து பெற்றுக் கொள்ளப் போகிறோம்.''

அப்படி என்றால்...

காமினியையும் சேர்த்துக் கொல்ல முயற்சி செய்திருக் கிறார்கள் போலும். தான் அங்கே போனால் சேர்ந்து சாப்பிடுவோம் என்று ஊகித்துக் கொண்டிருப்பார்கள். அதிலும் தனக்கு இனிப்பு என்றால் ரொம்ப பிடிக்கும்.

அவனுக்கு உயிர் போய்க் கொண்டிருப்பதுபோல் தோன்றியது. காமினியைப் பார்த்தான். அவளும் விஷயத்தை ஊகித்துக் கொண்டு வெளிறிய முகத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அரசியலை அரசியல் மூலமாகத்தான் வீழ்த்த வேண்டும்.

''அன்பார்ந்த மக்களே...'' என்றான். ''இன்னும் கொஞ்ச நேரத்தில் என் உயிர் போய் விடப் போகிறது. போவதற்கு முன்னால் சில விஷயங்களை உங்களுக்குச் சொல்ல வேண்டும்.''

கூட்டத்தில் திடீரென்று நிசப்தம் ஏற்பட்டது. யாருமே எதிர்பார்க்காத சூழ்நிலை அது. அவன் கட்சியைச் சேர்ந்தவர்களிடம் சலசலப்பு.

''வீரதாசை விடுதலை செய்வதற்கு ஹோம் மினிஸ்டரின் யோசனையின்படி என் மகளைக் கடத்திச் சென்றது நாங்களேதான். கேவலம் அரசியல் ஆதாயத்திற்காக சொந்த மகளையே கடத்தினேன்.''

வெள்ளம் பொங்கி வந்ததுபோல் ஆரவாரம்.

இரண்டு நிமிடங்கள் வரையில் யார் என்ன கத்தினார்கள் என்று புரியவில்லை. புலிராஜன் கையை உயர்த்தினான். திரும்பவும் சொல்லத் தொடங்கினான். இரண்டு கட்சிகளும் ஒன்று சேர்ந்து கொண்டதிலிருந்து தன் உயிரை எடுக்க முயன்றதுவரை...

அவ்வளவுதான்...

யார் யாரை அடித்துக் கொண்டிருந்தார்கள் என்று புரியவில்லை. போலீசாரும் இருந்தார்கள். ஆனால் அவர்களால் அத்தனை பெரிய கூட்டத்தை எப்படி அடக்க முடியும்?

புலிராஜனின் ஆட்கள் மேலும் ஆத்திரமடைந்தார்கள். போலீசார் எம்.எல்.ஏ. நரசிம்மனைச் சுற்றி வளையமாக

நின்று கொண்டு வெளியே அழைத்துச் செல்ல முயன்று கொண்டிருந்தார்கள். அதற்குள் புலிராஜன் ஆட்களின் கைகளில் ஆயுதங்கள் முளைத்து விட்டன.

ராணா காமினியை காருக்கு அருகில் அழைத்துச் செல்ல முயன்றான். கட்சித் தொண்டர்கள் அவளை அதிகமாக பொருட்படுத்தவில்லை. ஆனால் சினிமா நடிகை என்பதால் அரசியல் தொடர்பில்லாத மக்கள் அருகில் சென்று அவளைத் தொட்டுப் பார்ப்பதற்கும், பேசுவதற்கும் சூழ்ந்து கொள்ளத் தொடங்கினார்கள். ஒரு பக்கத்தில் ரத்த வெள்ளம். இன்னொரு பக்கம் இந்த பரபரப்பு.

அதற்குள் புலிராஜனுக்கு நினைவு திரும்பியது. பக்கத்திலேயே இருந்த டாக்டர் யாரோ இஞ்செக்ஷன் போட்டு விட்டு ''பெரிய ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போங்கள்'' என்று சொன்னார். அவன் வலியெல்லாம் துடைத்தெறிந்தாற்போல் பறந்துபோய் விட்டது. தொண்டர்கள் அனைவரும் வியப்புடன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே சரேலென்று போய் எம்.எல்.ஏ. நரசிம்மனின் கழுத்தைப் பிடித்துக் கொண்டான். இந்தத் திடீர் தாக்குதலுக்கு வியப்படைந்து விட்ட நரசிம்மனின் ஆட்கள், சட்டென்று விழிப்படைந்து புலிராஜனைக் கத்தியால் குத்த முயன்றார்கள். வீரதாஸ் அவர்களுக் கிடையே ஓடினான். தொலைவிலிருந்து யாரோ ''சார்ஜ்!'' என்று கத்தினார்கள். டி.எஸ்.பி.யின் குரலாகத் தோன்றியது அது.

''சுடு'' என்றாள் காமினி.

ராணா அவளை ஆச்சரியத்துடன் பார்த்தான்.

''மூவரும் ஒரே இடத்தில் சேர்ந்திருக்கிறார்கள். இந்த ரகளையில் யாருக்கும் சந்தேகம் வராது. சுட்டுத்தள்ளு'' என்றாள்.

அவனுக்கு இன்னும் புரியவில்லை.

அவள் சொன்னாள். ''போலீஸ் வர்செஸ் பாலிடிக்ஸ். அரசியல்வாதிகள் மீது போலீசாரின் கை உயர்ந்திருக்கும் தருணம் அரிதாகத்தான் வரும். அந்த மூவரும் மறுபடியும் உன் கைக்கு அகப்பட மாட்டாங்க. சுட்டு விடு.''

அப்பொழுதுதான் அவனுக்குப் புரிந்தது. ''சட்ட ரீதியாகச் சிறைப்படுத்துவது வேறு. தனிப்பட்ட விரோதத் திற்காக சட்டத்தை மீறுவது வேறு'' என்றான்.

''ஆனால் அவர்கள் உன் தந்தையை...''

''ஆனாலும் சரி'' உறுதியாகச் சொன்னான்.

அவனை கண்ணிமைக்காமல் பார்த்தாள் அவள். சிலபேர் ஏன் அவ்வளவு உயர்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்று அந்த நேரத்தில் அவளுக்குப் புரிந்தது.

தான் பார்த்த உலகிற்கு வெகு தொலைவில் வேறு உலகம் எப்படி இருக்கும் என்று அப்பொழுதுதான் கண்கூடாகப் பார்க்கிறாள்.

அவளைக் கார் வரையிலும் அழைத்துச் செல்வது அவனுக்கு ரொம்ப சிரமமாக இருந்தது. அவள் மட்டும் சுற்றிலும் இருந்த மக்களைப் பொருட்படுத்தவே இல்லை. ''நினைத்ததைச் செய்து முடித்து விட்டேன். அவர்கள் மூலமாகவே எல்லாவற்றையும் சொல்ல வைத்து விடணும் என்று நினைத்தேன். சொல்ல வைத்து

விட்டேன்'' என்றாள் நடந்து கொண்டே. அவள் கண்கள் இறுதி வெற்றியால் ஏற்பட்ட ஒளியால் மின்னிக் கொண்டிருந்தன.

''நான் போட்ட வலையில் சரியாக மாட்டிக் கொண்டு விட்டான். ரிஸெர்ச் லாபில் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் என் சிநேகிதி சரியான மருந்தைத்தான் தந்திருக்கிறாள். பாவம்... அவர்கள் அனுப்பிய ஸ்வீட்டின் பாதிப்பு என்று நினைத்துக் கொண்டு உண்மையை கக்கி விட்டான்.''

அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவள் சின்னப் பெண்ணைப்போல் பேசிக் கொண்டே இருந்தாள். ஏதோ மயக்கத்தில் ஆழ்ந்தவளைப் போல் பேசிக் கொண்டிருந்தாள். அதுவரை மாஃபியா கும்பலில் இருந்து, திடீரென்று போலீசாருக்கு அப்ரூவராக மாறி உண்மைகளை சொல்லும் நபர் எப்படி ட்ரான்ஸில் இருப்பானோ அந்த விதமாக இருந்தாள். வாழ்க்கையில் ஒரு கட்டத்தில் இரண்டு வெவ்வேறு கொள்கைகளின் சந்தி யுகத்தில் மனிதன் ஒரு அபூர்வமான சத்தியத்தைத் தெரிந்து கொண்ட பிறகு ஏற்படும் வைராக்கியம் கலந்த மகிழ்ச்சியை அவள் அனுபவித்துக் கொண்டிருந்தாற் போல் தென்பட்டாள்.

அவளைக் காரில் ஏற்றி விட்டு ராணா திரும்பி ஜனங்களுக்கிடையே வந்தான். புலிராஜனும், நரசிம்மனும் சேர்ந்து பேசிக் கொண்டிருந்ததாலும், புலிராஜன் சாதாரணமாக இருந்ததாலும் மக்களுக்கிடையே தற்காலிகமாக ஆவேசம் குறைந்து விட்டிருந்தது. தான் என்ன பேசினோம் என்றும், எல்லோரையும் எப்படி சிக்க

வைத்து விட்டோம் என்றும் புலிராஜனுக்குப் புரிந்தது. நிருபர்கள் அதற்குள் துரிதமாக செயல்பட்டுக் கொண்டிருந்தார்கள். அவன் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் தொலைக்காட்சி ரிகார்டில் ஏறி விட்டது.

அத்தனையும் நிசப்தமாக பார்த்துக் கொண்டிருந்தவன் வீரதாஸ் ஒருத்தன்தான். எரிமலையாக இருந்தான் அவன். வெடிக்கப் போவதற்கு முன்னால் நிசப்தமாகச் சலனமில்லாமல் இருக்கும் எரிமலை! அவன் மனம் எரிமலைக் குழம்பாக கொதித்துக் கொண்டிருந்தது. அந்த இடத்திலேயே புலிராஜனைக் கொன்று போட்டு விடவேண்டும் என்ற ஆத்திரத்தை கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டான். விடுவிடென்று போய் தன் காரில் ஏறிக்கொண்டு ''போ'' என்றான்.

''எங்கே சார்?''

''அட முட்டாளே! அந்தக் காரைப் பின் தொடர்ந்து போ. அவளை எப்படியாவது பிடித்து விடு'' என்று கத்தினான்.

கடைசியாக இரண்டு நிமிஷத்தில் காமினியின் காரை அவன் கார் மடக்கி விட்டது.

இரவு ஒன்பது மணியைத் தாண்டியிருக்கும்.

வீரதாசு காரிலிருந்து இறங்கி, அவளிடம் போய் காரிலிருந்து வெளியே இழுத்தான். அவன் கையில் கத்தி மின்னிக்கொண்டிருந்தது. காமினியின்டிரைவர்காரைவிட்டு விட்டு ஓடி இருட்டில் மறைந்து விட்டான். வீரதாஸ் காமினியின் தலைமுடியைப் பிடித்துக் கொண்டான். கண்மூடித் திறப்பதற்குள் தெரு நிர்மானுஷ்யமாகி விட்டது.

''இதுவரை நான் போட்ட எந்தத் திட்டமும் பாழான தில்லை. முதல் முறையாக உன்னால் நாசமாயிற்று. ரொம்ப பெரிய திட்டம் போட்டாய். உன் சாமர்த்தியத்தை நினைத்துப் பார்த்தால் எனக்கு தலை சுற்றுகிறது. இந்த நிமிஷத்தில் உன்னை இந்த நடுத் தெருவில் இப்படியே கற்பழிக்கணும் போல் இருக்கு. ஆனால் தற்சமயம் அந்த மூட் இல்லை.''

அந்தச் சூழ்நிலையை எதிர்பார்க்காத காமினி இன்னும் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவன் சிரித்தான்.

''புலிராஜனும் நரசிம்மனும் அரசியல் தலைவர்கள். திட்டத்திற்கு மேல் திட்டங்களாக போட்டுக் கொண்டிருப் பார்கள். உங்களுக்கும் அவர்களுக்கும் பொருத்தமாக இருக்கலாம். ஆனால் என்னுடையதெல்லாம் நேரடி தாக்குதல்தான். அதனால்தான் இப்படி'' என்று கத்தியைத் தூக்கினான்.

காமினி அந்தப் பக்கமாக போனதுமே வீரதாஸ் காரில் ஏறியதை ராணா பார்த்தான். அவனுக்குச் சந்தேகம் ஏற்பட்டு, தானும் பின் தொடர்வதற்காகக் கூட்டத்தை விட்டு வெளியே வந்து தன் வாகனத்தில் ஏறிப் புறப்பட்டு வருவதற்குள் இந்தச் சம்பவம் நடந்து கொண்டிருந்தது.

அவன் ஜேபியிலிருந்து துப்பாக்கியை வெளியே எடுத்து வீரதாசை சுடப்போனான். ட்ரிக்கரை அழுத்தினான். டப் என்ற சத்தம் கேட்டது. வெடிக்க வில்லை. நூறடி தொலைவில் இருந்தபோதிலும் அந்த நிசப்தத்தில் அந்தச் சின்னச் சத்தம் வீரதாஸைத் தாக்கியது. அவன் திரும்பிப் பார்த்தான்.

ராணா கையில் துப்பாக்கியுடன் தென்பட்டான். வெடிக்காத துப்பாக்கியுடன்.

வீரதாஸ் சிரித்தான். அவன் ஏன் சிரிக்கிறான் என்று ராணாவுக்குப் புரிந்தது. தன் டிபார்ட்மென்ட் மீதே கோபமும், இயலாமை உணர்ச்சியும் ஏற்பட்டன.

ஓடினான்.

பலத்தை எல்லாம் கால்களில் திரட்டிக் கொண்டு அவன் அவர்களை நோக்கி ஓடி வந்தான், இடையிடையே ட்ரிக்கரை அழுத்தித் துப்பாக்கியை வெடிக்கச் செய்வதற்கு முயன்றபடியே. வீரதாசுக்கு இது விளையாட்டாக தோன்றியது. ராணா உண்மையிலேயே புயல் வேகத்தில் வந்து கொண்டிருந்தான். ராணா தனக்கு எவ்வளவு தூரத்தில் இருக்கும்போது தன்னால் இவள் உயிரை எடுக்க முடியும்? கத்தியை எவ்வளவு வேகமாக குத்த முடியும்?

அவன் கத்தியால் ஒரு குத்து குத்தினால் போதும். அதற்குமேல் எந்த டாக்டராலும் அந்த உயிரைக் காப்பாற்ற முடியாது. பத்து முறை கத்தியால் குத்தியும் எதிரி பிழைத்துக் கொண்டு விட்டான் என்றால் அதைக் காட்டிலும் அவமானம் ஒரு ரவுடிக்கு இருக்க முடியாது.

ராணா இருபத்தைந்தடி தூரத்தில் இருந்தபோது வீரதாஸ் மின்னல் வேகத்தில் கத்தியைத் தூக்கினான். சரியாக கழுத்திற்கு இரண்டங்குலத்திற்குக் கீழே நரம்பு கொஞ்சம் வெட்டுப்படும் விதமாக.... பிறகு இந்த உலகத்தில் எந்த டாக்டராலும் காப்பாற்ற முடியாது.

கத்தி காற்றை சரேலென்று கிழித்துக் கொண்டு, இருட்டை பிளந்து கொண்டே இறங்கிக் கொண்டிருந்தது. அப்பொழுது வெடித்தது துப்பாக்கி.

அவ்வளவு அருகில் வெடித்ததால் வீரதாஸின் மண்டையோடு பிளந்து போய் மூளை வெளியே வந்து விட்டது. எந்தப் பூமியை அவன் தன் கைகளால் ரத்த வெள்ளமாக்கினானோ, அதே பூமி கைகளை நீட்டி ரத்த வெள்ளத்தில் இருந்த அவன் உடலை வரவேற்றது.

காமினி அப்படியே பார்த்துக் கொண்டிருந்தாள்.

ராணா அவளருகில் வந்தான்.

அது நன்றியாலா அல்லது அவன் வேகத்திற்கு வியப்படைந்ததாலா, அல்லது தன் உயிரைக் கடைசி தருணத்தில் காப்பாற்றியதால் ஏற்பட்ட திகைப்பா, அல்லது அவன் மீது ஆதியிலிருந்தே ஏற்பட்டிருந்த ஈர்ப்பா... எந்த உணர்ச்சிதான் உருபெற்றுக் கொண்டதோ தெரியாது. அவன் வேகத்தைத் தடுக்காமல் அப்படியே வரவேற்றவள் அவன் முகத்தைத் தன் கைகளில் ஏந்திக் கொண்டு முத்தமிட்டாள்.

பிறகு அவன் வேகத்தைக் காட்டிலும் தன் வேகம் அதிகம் என்று நிரூபித்துக் காட்டுவதற்காகக் கண்மூடி திறப்பதற்குள் அங்கிருந்து காரில் மாயமாகி விட்டாள்.

ராணா அவள் போன திசையையே ஒருமுறை பார்த்து விட்டு, மெல்ல முழங்காலில் அமர்ந்து கொண்டான். உயிர் போவதற்கு கொஞ்ச நேரத்திற்கு முன்னால் வரை பேசினால் தெரிந்து கொள்ள முடியும் என்பார்கள். அதனால்தான் அவன் சொன்னான்.

''நான் உன்னைச் சட்டரீதியாகத்தான் கொன்றேன்.''

முடிவுரை

"உன்னைப் போன்ற முட்டாள் இந்த உலகத்தில் வேறு யாருமே இருக்கமாட்டார்கள்'' என்றான் செளரஸியா. அவன் கையில் ஒயின் கிளாஸ் இருந்தது. ''சாய்ஸை உன்னிடமே விட்டு விடுகிறேன். சொல்லு, உன்னை எப்படிக் கொல்லட்டும்?'' கேட்டான் அவன்.

அவள் பதில் சொல்லவில்லை. அவளை நாற்காலியோடு சேர்த்துக் கட்டிப் போட்டிருந்தான். அவன் சாடிஸ்டாய் அவளை ரொம்ப நாழியாக துன்புறுத்தி வந்தான். அவனிடம் அவ்வளவு அரக்கத்தனம் ஒளிந்திருக்கும் என்று அவள் என்றுமே எதிர் பார்த்திருக்க வில்லை. அவள் கன்னத்திலிருந்து ரத்தம் ஒழுகிக் கொண்டிருந்தது.

''எங்கள் அரசியல் செட்அப்பை அஸ்திவாரத்தோடு வீழ்த்தி விட்டாய். அதுவரை நீ வெற்றி பெற்று விட்டாய். ஆனால் அத்துடன் அங்கிருந்து ஓடிப் போகாமல் திரும்பவும் வந்ததுதான் நீ செய்த தவறு. நீ என் காதலியானதால், நான் உன்னை விட்டுவிடுவேன் என்று எண்ணியிருந்தால், அது உன் இரண்டாவது தவறு. என் வழியில் குறுக்கிட்ட யாரையுமே நான் மன்னிக்க மாட்டேன். நீ எனக்குத் துரோகம் செய்த பிறகு எங்கேயாவது ஓடிப் போயிருந்தால், இந்த உலகத்தில் நீ எந்த மூலையில் ஒளிந்து கொண்டிருந்தாலும் சரி, உன்னைப் பிடித்து வந்து கொல்வதில் சந்தோஷமடைந் திருப்பேன். இப்பொழுது அந்த வேட்டைதான் இல்லையே? அதனால் உன்னை இப்பொழுது கொஞ்சம் கொஞ்சமாக கொல்வதில் சந்தோர்ஷம் அடையப் போகிறேன். முதலில் எங்கள் உரையாடலை டேப்பில் ரிக்கார்ட் செய்தபோதே உன் கதையை முடித்திருக்க வேண்டும். உன் டேப்பை அழித்து ஆனந்தமடைந்தேன். ஆனால் நீ அத்தனை பெரிய திட்டம் போடுவாய் என்று எதிர்பார்க்கவில்லை. புலிராஜன் மனதில் சந்தேகத்தை விதைக்கும் நாடகத்தில் நீ நன்றாகவே வெற்றி பெற்றாய்.

வீரதாஸின் மரணம்கூட என்னை வெகுவாக பாதிக்க வில்லை. நானும் சத்தாரும் சேர்ந்து இன்னொரு திட்டம் தீட்டியிருக்கிறோம். இந்தமுறை யாரால் தடுத்துவிட முடியும்? திட்டத்தைத் தடுத்து நிறுத்துவதற்குப் பாவம், நீதான் இருக்க மாட்டாயே? ஊம்... சொல்லு. எப்படி சாகணும் என்று நீ விரும்புகிறாய்?'' கத்தியை வெளியே எடுத்துக் கொண்டே கேட்டான். ''மணிக்கட்டு நரம்பை அறுத்து, தண்ணீரில் அமுக்கி விடட்டுமா? ரொம்ப எளிமையான மரணம் அது'' என்று சிரித்தான்.

அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள். அந்தக் கண்களில் அன்பு, இரக்கம், வேண்டுகோள் எல்லாம் கலந்திருந்தன. ''அரவிந்த்'' என்றாள். எப்பொழுதாவது ரொம்ப அரிதாகத்தான் அவள் அவ்வாறு அழைப்பாள். ''நீ என்னை இரண்டு கேள்விகள் கேட்டாய். இவ்வளவு துரோகம் செய்த பிறகு ஏன் திரும்பி வந்தாய்? நான் சும்மாயிருந்து விடுவேனா? என்று. நீ சும்மாயிருந்து விட மாட்டாய் என்று எனக்குத் தெரியும் அரவிந்த். என்னைக் கொன்று விடுவாய் என்றும் தெரியும். ஆனாலும் ஏன் வந்தேன் தெரியுமா? உன்னைக் காதலிக்கிறேன் என்று சொல்வதற்காக. உன் கைகளில் உயிரை விடுவதற்காக.''

அவன் அவளை சந்தேகத்தோடு பார்த்தான். ''இதோ பார். நீ ஒரு நடிகை. இப்படி காதல் வசனம் பேசினால் கரைந்து போய் உன்னை விட்டுவிடுவேன் என்று மட்டும் நினைக்காதே.''

''என்னை நம்பத் தேவையில்லை. ஒருமுறை என்னை முத்தமிடு... கடைசி முத்தம். பெண்ணின் மனதை என்றுமே ஆணால் புரிந்து கொள்ள முடியாது. நம் காதலில் கடுகளவாவது நேர்மை இருந்தே தீரும். இல்லாவிட்டால் இவ்வளவு காலம் சேர்ந்து வாழ்ந்திருக்க மாட்டோம். என் இறுதி விருப்பத்தை தீர்த்து வைக்க மாட்டாயா?'' அவள் கண்களில் ஈரம் பளபளத்தது.

அவனால் அதற்குமேல் தாளமுடியவில்லை. அவளை நெருங்கி வந்து இதழோடு இதழைப் பொறுத்தினான்.

அவள் கைகள் பின்னுக்கு சேர்த்துக் கட்டப்பட்டிருந்தன. அவள் மார்பு அவன் மீது அழுத்தமாய்ப் பட்டது. அவள் நாக்கு அவன் உதட்டைப்

பிளந்து கொண்டு அவன் பற்களை மென்மையாகத் தொட்டது. அவனிடம் மெல்ல மெல்ல ஆவேசம் அதிகரித்தது. அவன் நாக்கு அவள் நாக்குடன் பிணைந்து விளையாடியது.

அவள் தொலைவுக்கு விலகிக் கொண்டே சிரித்தாள். ''பெண்கள் காதலர்களுக்கு அதராமிருதத்தைத் தருவார்களாமே?'' என்றாள் தலையைப் பின்னால் சாய்த்துக் கொண்டே.

இந்த அசந்தர்ப்பமான பிதற்றலுக்கு அர்த்தம் தெரியாதவனாக ''அப்படி என்றால்?'' என்றான்.

அந்தக் கேள்விக்கு பதில் சொல்லாமல் ''உன் இரண்டாவது கேள்விக்கு என் பதில் என்னவென்று நீ கேட்கவே இல்லையே?'' என்றாள்.

''என்ன கேள்வி? என்ன பதில்?'' எரிச்சலுடன் கேட்டான்.

''அப்துல் சத்தாரோடு சேர்ந்து நான் போட்ட திட்டத்தை யாரால் தடுத்து நிறுத்திவிட முடியும் என்பது கேள்வி.''

''அதற்கு உன் பதில் என்ன?''

''என்னால் தடுத்து நிறுத்த முடியும். தடுத்து நிறுத்துவது என்ன? தடுத்தே விட்டேன்.''

''எப்படி?

''அதராமிருதத்தில் ஆலகாலத்தைக் குழைத்துத் தந்ததன் மூலமாக. இன்னும் ஐந்து நிமிஷத்தில் இருவரும் சாகப் போகிறோம் செளரஸியா'' என்று சிரித்தாள். ''நான்

கைதேர்ந்த நடிகை என்பதை மறந்து விடாதே. அந்தத் தைரியத்தில்தான் ஈறுகளுக்கிடையே பொட்டாஷியம் காம்பவுண்ட் காப்சூலை வைத்துக் கொண்டேன். உலகத்தில் எந்த மூலையில் ஒளிந்து கொண்டாலும் என்னைத் தேடிப்பிடித்து கொன்று விடுவாய் என்று தெரியும். அதனால் நானே நேராக வந்து உனக்கு சரண்டர் ஆகி விட்டேன். நான் தற்கொலை செய்து கொண்டு இறந்து போனாலும், நீ சத்தாருடன் சேர்ந்து உன் திட்டத்தைத் தொடர்ந்து கொண்டிருப்பாய் என்று தெரியும் எனக்கு. அதனால்தான் நானே நேராக உன்னிடம் வந்து விட்டேன். உன்னைக் கொன்று, அந்தத் திருப்தியோடு மரணமடைகிறேன்.''

அவன் சிலையாக நின்றபடி பார்த்துக் கொண்டிருந்தான். அதற்குள் இருவர் உடம்பிலும் மாறுபாடுகள் ஏற்படத் தொடங்கி விட்டன.

''எந்தச் சட்டத்தாலும் உன்னை ஒன்றுமே செய்ய முடியாது. அதனால்தான் நானே செய்தேன். அந்தத் திருப்தியோடயே ம...ர...ண...ம...டை...கி'' அவள் தலை சாய்ந்து விட்டது.

அவன் இன்னும் திகைப்பிலிருந்து மீளவில்லை. போன் வரையிலும் கையை நீட்டும் சக்திகூட இருக்கவில்லை. கடைசி தருணத்தில் அவன் யோசித்தது ''இவ்வளவு திட்டங்களையும் தீட்டி அரசியலில் புகழ் பெற்றவள், நாட்டைப் பிரிப்பதில் அவனுடன் ஏன் ஒத்துழைக்கவில்லை?'' என்றுதான்.

''அது ராணாவின் தூண்டுதலால்தான்'' என்ற பதில் மனதில் தோன்றுவதற்கு முன்பே அவன் உயிர் காற்றில்

கலந்து விட்டது. பக்கத்திலேயே காமினியின் உடல் விழுந்து கிடந்தது.

நம்பத்தகுந்தவர்கள் யாருமேயின்றி, வாழ்நாளெல்லாம் நடிப்பிலேயே கழித்துக்கொண்டிருந்த அந்தப் பெண், சாவதற்கு முதல் நிமிஷம் வரையிலும்கூட நடிப்பையே தழுவ வேண்டியிருந்தது. இதைத்தான் தலைவிதி என்பார்களோ?

இந்தக் கதையை முடிப்பதற்கு முன்னால் மேலும் இரண்டு விஷயங்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது.

புலிராஜன் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டான். தற்சமயம் ஜெயிலில் புதிய கட்சியைத் தொடங்குவதற்கான திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருந்தான். பெரிய பெரிய கட்சிகள் எல்லாமேகூட ஜெயிலில் தோன்றியவைதானே?

ராணா பிரமோஷன் கிடைத்து மலைவாழ் மக்கள் முன்னேற்ற இலாகாவுக்கு செக்யூரிடி சீஃப் ஆக அனுப்பப் பட்டான்.

-சுபம்-



கூவேர் புரம் போலிஸ் ஸ்டேஷன்

எண்டமூரி வீரேந்திரநாத்